# கனகதாசர் கீர்த்தனைகள்

31/50



பேராசிரியர் இரா. நடராசன், எம்.ஏ., எம்.லிட்.,

# கனகதாசர் கீர்த்தனைகள்

திருமலை, திருப்பதி, தேவஸ்தானத்தின்
நிதியுதவியால் பதிப்பிக்கப்பட்டது.

Printed 1000 copies 1st Edition. 1991.
"This book is published with the Assistance of **TIRUMALA TIRUPATI DEVASTHANAMS** under the scheme **AID TO PUBLISH RELIGIOUS BOOKS.**"

பேராசிரியர் **இரா. நடராசன்**, எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ்த்துறைத் தலைவர்,
முதனிலைக் கல்லூரி,
கோலார் தங்கவயல்.

Wrapper & Title Designed by **SUGI**

## நூல் விளக்கக் குறிப்பு

பதிப்பு : முதல்

வெளியீட்டு நாள் : நவம்பர் 1991

பதிப்புரிமை : ஆசிரியர்க்கு

பக்கம் : 208

எழுத்து : கலைஞர்

**விலை : ரூ. 25**

கிடைக்கும் இடம் :-

188, ஆங்கிலோ இந்தியன் காலனி,
இராபர்ட்சன் பேட்டை,
கோலார் தங்கவயல் - 563122.

Printed by :
**Focus Point**
**Advertisers & Printers**
32, Jayaram Chetty St., Saidapet, Madras - 600 015.

Sri Chandramouleeswaraya Namaha
Sri Sankara Bhagavadpadacharya Paramparagatha
HIS HOLINESS SRI KANCHI KAMAKOTI PEETADHIPATHI

**Jagadguru Sri Sankaracharya Swamigal**
**Srimatam Samasthanam**
Kancheepuram - 631 502.

Camp : Kancheepuram Date : 10.8.91

# காஞ்சி ஸ்ரீ சங்கர மடத்துப் பெரியவர்களின் ஆசியுரை

*மானிடரைத் தன்பால் ஈர்த்து உய்விப்பதற்கெனவே பரமன் கொண்டுள்ள பல்வேறு மூர்த்தங்களில் தன்மனம் ஈடுபடும் மூர்த்தத்தில் கொள்ளும் பத்தி திடம் பெறப்பெற வைராக்யம் உரம் பெறுவதுடன் உலகியலின் உண்மை நிலை "யாதும் அவனாய் - அவனுள் யாதுமாய்" உள்ளது புலப்படுகின்ற இன்னிலை வரை பக்தர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்களை மெய்மறந்து பாடி பரவசமடைவது பக்தர்கள் தம் இயல்பாகும். இவ்வாறு அமைந்தனவே கனகதாசர் கீர்த்தனைகள். உடுப்பி கிருஷ்ண பகவானிடம் ஈடுபாடு மிக்க கொண்ட இவரது கீர்த்தனங்கள் கன்னடத்தில் அமைந்து மிக பிரசித்தமானவை.*

*இவைகளை உரிய ராக தாளங்களுடன் தமிழில் மொழி பெயர்த்துள்ளார் கோலார் தங்கவயல் பேராசிரியர் இரா. நடராஜன் M.A. M. Litt. இது தமிழக இசை வாணர்களுக்கு பெரிதும் பயன்படவும், பக்தி வளர்ச்சிக்கு உறுதுணையாக வும் வேங்கடவன் அருள்கிட்ட அசீர்வதிக்கிறோம்.*

*நாராயணஸ்ம்ருதி*

# முன்னுரை

*கனகதாசர் இறைபணியையும் மக்கள் பணியையும் அடிப்படையாகக் கொண்டவர். பக்தராகவும், கவியாகவும், தத்துவ ஞானியாகவும், யோகியாகவும் வாழ்வாங்கு வாழ்ந்தவர். வாழ்வியலுக்குரிய அறங்களை அருளியவர். இக் கன்னட பக்தி இலக்கியக் கவிக்கோவின் கீர்த்தனைகளை மொழிபெயர்த்து வெளியிட எண்ணினேன். மொழி பெயர்ப்பை உரைநடையாக எழுதாமல், தமிழிலும் கீர்த்தனைப் பாடல்களாக எழுதினால் நலமாகும் என்று எண்ணி அவ்வாறே செய்துள்ளேன்.*

*கீர்த்தனைகள் எளிமை கருதி மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியங்களில் வரும் சிறந்த வரிகள் சில இடங்களில் மொழிபெயர்ப்பில் கையாளப்பட்டுள்ளன. ஆழ்வார்களின் கருத்துக்களும் கனகதாசரின் கருத்துக்களும் ஒன்றாக அமைந்த இடங்களில் ஆழ்வார்களின் அருள் மொழிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஒவ்வொரு கீர்த்தனையின் அடிக்குறிப்பிலும் மூலக் கீர்த்தனையின் தொடக்கமும், அதன் இராக தாளங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன மூலக்கீர்த்தனையில் அமைந்துள்ள சீர்களுக்குச் சமமான சீர்களையே மொழிபெயர்ப்பிலும் அமைந்துள்ளதால் இசையறிஞர்கள் அதே இராகத்தில் இப்பாடல்களையும் பாட இயலும். கீர்த்தனைகளில் பல திருமலையின் சிறப்பையும், வேங்கடேசுவரரின் அருளையும் நன்கு விளக்குகின்றன. கனகதாசர் வரலாற்றை விளக்கும் மூன்று கன்னட நூல்களிலிருந்து சிறப்பான நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கனகதாசர் வரலாறு எழுதப்பட்டுள்ளது.*

*இந்நூல் அச்சாவதற்குப் பொருளுதவி புரிந்த திருமலை திருப்பதி தேவத்தானத்தார்க்கு என் நன்றி உரியது. இந்நூற்கு ஆசியுரை வழங்கிய காஞ்சி ஸ்ரீ சங்கரமடத்துப் பெரியவர்களின் பொன்னார் திருவடிகளைத் தரைமேற்கொண்டு வணங்குகின்றேன்.*

என் கன்னடக் கல்வியின் தொடக்கக் கால ஆசிரியர்களாகிய பேரா. ஆ. இராமரெட்டி அவர்களுக்கும், பேரா. ஆ.பொ. பசவராஜ் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. பேரா. திரு. நரசிம்ம கௌடா அவர்கள் தம் சொந்த அலுவல்களைப் பொருட்படுத்தாது, ஆசிரியர் மாணவனுக்குப் பாடம் போதிப்பதுபோல் கீர்த்தனைகளின் நுண் பொருளை விளக்கியவர். அவர் புரிந்த பேருதவி நெஞ்சிருக்கும் வரை நினைவில் இருத்தத்தக்கது.

இவ்விலக்கியப் பணிக்கு ஊக்கமளித்த பேராசிரியர்கள் திரு.தா.கிருட்டிணமூர்த்தி, டாக்டர். வ. பெருமாள், திரு.ஆ. சுதாகர், திரு.மு.சுந்தரேசுவரன், டாக்டர். கு. வணங்காமுடி ஆகியவர்களுக்கு என் நன்றி. நிதி உதவி பெற உதவிய திருவேங்கடேசுவரர் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். பொன். சௌரிராசன் அவர்களுக்கு நான் செலுத்தும் நன்றி ஞாலத்தின் மாணப்பெரிது. இலக்கியப் பணியாற்ற இல்லத்திலும் துணை நின்றவர்கள் என் மனைவி திருமதி. சியாமளா, மகன்கள் திரு. ந.நாகராசன், B.A., திரு. ந. சுவாமிநாதன் ஆகியோர், அச்சுப் பிழை திருத்த உதவிய சென்னைப் பச்சையப்பன் கல்லூரியின் ஆங்கில முதுகலை மாணவர் திரு. சுகவனேசுவரனுக்கும், கனகதாசரின் திருவுருவப் படத்தை வரைந்து உதவிய ஓவிய ஆசிரியர் குல்கர்ணி அவர்களுக்கும், உரிய காலத்திற்குள் நன்கு அச்சிட்டு உதவிய அச்சகத்தார்க்கும் என் நன்றி உரியது.

இரா. நடராசன்.

கோலார் தங்கவயல்,
நாள் : 1.11.91

# கனகதாசர் கீர்த்தனைகள்

## 1. கணபதி

1. எங்கள் அன்னை கலைமகளே மலைமகளே!
உங்கள் உள்ளத்தில் உள்ளவர் யார்அம்மா?
மன்மதனை எரித்த மகாதேவனின் மகனாகிய
துதிக்கையும் பெருவயிறும் பெற்ற கணபதியே!

2. கருத்த முகமும் முறம்போன்ற காதும்
கோரை போன்ற தந்தம் பெற்றவன்
முக்கண்ணா னின்மகன் மதியை முறித்தணிந்த
தீரனாகிய கணபதியே!

3. நல்ல உடையின்மீது நன்குகட்டிய சிவப்புக் கச்சை
உறுதியான உள்ளம் உடையவன் யார்அம்மா?
பட்டத் தரசி பார்வதியின் பாலகன்
தொந்தியைக் கொண்ட கணபதியே!

4. பல்கலைச் செல்வன் பெண்டிரை விரும்பான்
பேச்சில் பெரியவன் யார்அம்மா?
பெருமுயற்சி இன்றிப் புவியோரைப் புரப்பவன்
காகெநிலை ஆதிகேசவனின் தாசனாகிய கணபதியே!

மூலம் :- செஞ்சுருட்டி இராகம், அட தாளத்தில் அமைந்த "நம்மம்ம சாரதெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 2. கலைமகள்

1. வரமளிப்பாய் எனக்கே வாக்கின் தேவியே
திருவடித் தாமரை களைத்தந் தருள்வாய்

2. திங்களொத்த முகமும் புன்னகையும் பெற்றவளே
ஒளிவிடும் குண்டலங்களைக் காதுகளில் அணிந்தவளே

பண்பின் பெட்டகமாய்ப் பொலியும் தேவியே!
தாமரைக் கண்ணியே. என்இதயத்தில் நிற்பவளே

3. சந்திர கிரணம்போலும் இனிய எழிலையும்
சிவந்த உதடுகளையும் மூக்கினையும் உடையவளே!
காமனின் முழுசக்தியாய் இருக்கும் பாவையே
சண்பகமலர் முடியிலணிந்த சாரதா தேவியே!

4. கோடி சூரியனைப் போன்று பிரகாசிப்பவளே!
பெருங்கவிஞரின் இதயத்தில் என்றும் வசிப்பவளே
வளம்முழுதும் உடைய காதெநிலை ஆதிகேசவனின்
மகனாவான். மனத்தில் மகிழ்ந்துறையும் அரசியே!

மூலம் : கல்யாணி இராகம், ஜம்ப தாளத்தில் அமைந்த "வரவகொடு எனகெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 3. சிவசிவ என்று சொல்வீர்

1. சிவசிவசிவ என்று சொல்வீர் - மூவலகத்தோர் எல்லாரும்
சிவசிவசிவ என்று சொல்வீர்

2. ஆகம சித்தாந் தங்களின் மூலசெபம்இது
பிணியின் மூலத்தை அழிக்கும் மருந்திது

3. மானிடப் பிறவியீர் உம்மை மறவாதீர்
உடல்உள் ளம்உயிரை வீண்செய் யாதீர்

4. செய்தகோடி பாவங்களைச் சிதைக்க வேண்டின்
சிறந்தோர் உளத்திருக்கும் சிவநாமம் செபிப்பீர்

5. காலனின் கொடுமையை வெல்ல விரும்பின்

உண்மையான குற்றமற்ற முத்திபெற விரும்பின்

6. புவிக்கண்பே ரறிஞரெனப் போற்றப்பட விரும்பின்இப்
பிறவியிலேயே பெரும்பதவி பெற்றிட விரும்பின்

7. குருலிங்கம் அடியாரை அறிய வேண்டின்
பரம்பொருள் இறைவனை இணைய வேண்டின்

8. உலகத்திற்குச் சத்குருவாக உயர வேண்டின்
தத்துவபதியாம் ஆதிகேசவனைக் கூட வேண்டின்
(சிவசிவ)

மூலம் : அரபி இராகம், ஆதிதாளத்தில் அமைந்த 'சிவசிவசிவ என்னிரொ" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 4. இராமானுஜரே வணக்கம்

1. இராமா னுஜரே வணக்கம் வணக்கம்
இலக்குவனின் அவதாரம் ஆனவரே வணக்கம்

2. தண்டத்தைப் பிடித்தீர் மெல்லியவேட்டி அணிந்தீர்
நீண்ட சடையையும் பூணூலையும் பெற்றவரே
பன்னிரு திருநாமமும் பொலியும் சந்தனமும்
அணிந்தஇரா மானுஜரே வணக்கம் வணக்கம்

3. தாமரை உந்தியன் வாமன உருவனை
ஐயமின்றி அகத்தில் நினைவோரைப் புரப்பீர்
வாதத்தில் வல்ல நாத்திகரை வென்றீர்
ஓங்கார மூர்த்தியே வணக்கம் வணக்கம்

4. கேசவனின் பாதத் தாமரையில் வண்டாகி
நாத்திகரின் அகந்தையை அகற்றிய ஐயனே
பாம்பணிந்த சிவனும் முனிவர்களும் போற்றும்
ஆதிகேசவ மூர்த்தியே வணக்கம் வணக்கம்

மூலம் : பந்துவராளி இராகம் திரிபுடை தாளத்தில் அமைந்த 'ராமானுஜரே நமோ நமோ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 5. அனுமன்

1. அரசியைப் போன்ற அடிமையோ - அனுமன்
அரசனைப் போன்ற சேவகனோ

2. அரசியைப் போன்ற அடிமை என்பதை
உன்னுளிருக்கும் அடையாளம் மூவுலகிற்கும் அறிவித்தது

3. கடலின் உள்ளே மூழ்கி எடுத்துவந்த
அறிவை ஆதவனுக் களித்தாய் அனும
ஆரவாரத்துடன் அருங்கடலைக் கடந்து சென்று
சூளாமணியை இராமனுக் களித்தாய் அனும

4. பெரிய மலையாம் கோவர்த்தன கிரியைப்
புவியிலிருந்து பெயர்த்து நின்றாய் அனும
கடலில் அணையைக் கட்ட மலைகளைக்
கொணர்ந்து நளன்கையில் கொடுத்தாய் அனும

5. செழித்த காகெறிலை ஆதிகேசவ ராயன்
தேவர்களுக் கமிர்தத்தை அளித்தான் என்பர்
மலைகளில் உறைபவனே இலக்குவ தேவனுக்காகச்
சஞ்சீவி மருந்தைக் கொணர்ந்தாய் அனும

மூலம் : கல்யாணி இராகம் அடதாளத்தில் அமைந்த 'அரசி னந்தெ பண்டனொ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 6. கிராமத்து அனுமன்

1. எனது மகனே கிராமத் தனுமனே
நலமாக உள்ளாரா இலக்குவ தேவர்
2. நெய்யும் பஞ்சாமிர் தமும்அன்று காட்டின்
கிழங்குகள் இன்று

கற்பூரம் மணக்கும் கறிவகைகள் அன்று
கீரைக்கறி இன்று
மெல்லிய பூஞ்சேக்கை அன்று புற்படுக்கை இன்று
சீதையின் கேள்வன் இராமன் நலமாக உள்ளாரா?

3. புத்தம்புது ஆடைகள் அன்று மரவுரி இன்று
பூமாலையால் பொலிந்த தன்று நீள்சடை இன்று
ஐவ்வாது கத்தூரி அன்று வெறும்புழுதி இன்று
சீதையின் கேள்வன் இராமன் நலமாக உள்ளாரா?

4. பொன்னான தேர்கள் அன்று நடப்ப தின்று
வெண்கொற்றக் குடைகள் அன்று வாட்டும்வெயில் இன்று
சனகாதி யோர்போற் றும்ஆதி கேசவன் நம்மையாள்
இராமன் நலமாக உள்ளாரா கிராமத் தனுமனே!

மூலம் : பந்துவராளி இராகம், திரிபுடை தாளத்தில் அமைந்த 'என்ன கந்தா ஹள்ளிய அனுமா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 7. அனுமன், வீமன், மத்வர்

1. பெரும்பேறு நல்கும் குருவே முக்கியமானவர்
நிலவுலக மனிதர்களே குருவைப் போற்றுவீர்

2. திரேதா யுகத்தில் அனுமனாக அவதரித்துத்
தசரதனின் மகனுக்குத் தொண்டனாகத் திகழ்ந்தாய்
கடலைக் கடந்து கணையாழியைக் கொடுத்தாய்
அசுரர்பதியை எரித்துச் சூளாமணியைக் கொணர்ந்தாய்

3. துவாபர யுகத்தில் வீமன்எனப் பெயர்பெற்றுக்
கண்ணனின் கழலிணையில் பற்று கொண்டாய்
கோபம்கொண்டு துச்சாதனனின் உடலைக் கிழித்தாய்
அரசர்களின் படைநடுவில் பரிகாசம் புரிந்தாய்

4. கலியுகத்தில் துரியாசிர மத்தில் தங்கிப்
பாவத்தை மாயத்தை மாளச் செய்தாய்
மேன்மைமிகு மாத்துவ மதத்தை நிலைநிறுத்திக்

காகெநிலை ஆதிகேசவனே மேலானதெய்வம்
என்றறிவித்தாய்.

மூலம்: காம்போதி இராகம் அட தாளத்தில் அமைந்த "பரமபத வியனீவ" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 8. போற்றி வளர்ப்பாய் கிருஷ்ணா

1. சென்ற பிறவியில் செய்த பாவத்தால்
செகத்தில் பிறந்தேனோ கிருஷ்ணா

2. கருணைக் கடலே என்னைக் காப்பாய்
தாமரை உந்தியனே முத்துக் கிருஷ்ணா

3. பிறந்ததி லிருந்தின் பத்தை அறியேன்
துன்பமே அனுபவித்தைக் கேளாய் கிருஷ்ணா
தொட்டில் குழந்தையைத் தாய்மறந்தது போன்று
கண்கெட்டு மனக்கலக்கம் கொண்டேன் கிருஷ்ணா
மனைவியும் மக்களும் உறவினரும் நெருங்காமல்
முண்டத்தை இழுத்துச் செல்வரோ கிருஷ்ணா
துன்பமும் வறுமையும் போக்கா திருப்பின்
உன்னையே பழிவந்து பற்றும் கிருஷ்ணா

4. காசியில் வசிக்க விரும்பிப் பன்னாளாக
ஆசைப் பட்டிருக் கின்றேன் கிருஷ்ணா
மோசம் செய்யாமல் குறையை நீக்குவாய்
ஆயிரம் பெயர்களைப் பெற்ற கிருஷ்ணா
வெட்கம் அற்ற இல்வாழ்க்கை என்னும்
பாசக் கயிற்றால் பிணிப்பரோ கிருஷ்ணா
கம்சனைக் கொன்றவனே கனிவுடன் காப்பாய்
அரியேவாசு தேவனே முத்துக் கிருஷ்ணா

5. உலகின்கண் என்னைப் போன்ற பாவியைப்
பார்க்க நீவல் லாயா கிருஷ்ணா
பட்டதெல்லாம் போதும் நற்கதியைக் காட்டி

நல்லறிஞ னாகச் செய்வாய் கிருஷ்ணா
உவாமதி போல்முகம் கொண்ட துரௌபதியின்
மானத் தைக்காத் தாயே கிருஷ்ணா
நினைத்ததும் ஓடி வருவாய் கிருஷ்ணா
இசைவல்ல ஆதிகேசவனே உடுப்பியில் உறைபவனே
என்னைப் போற்றிக் காப்பாய் கிருஷ்ணா

மூலம் :காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பூர்வ ஜன்ம தல்லி நாமாடித" எனத் தொடங்கும் கீர்த்தனை

## 9. மாயக்காரன் மன்மதன்

1. மேலுலகிற்குச் செல்கையில் தடங்கலுண் டையா
மன்மதனெனும் மாயக்காரன் தடங்கல்கள் செய்வான்
2. கிளிமயில் குயில் வசந்தம் வண்டுகள் ஆகியவற்றின்
ஆதரவால் மன்மதன் நல்வழியைத் தடுத்ததும்
வலிமிக்க பக்தர்கள் துறவிகள் யோகிகளில்
தாண்டிச்சென்றவர் சிலரே சிறைப்பட்டனர் பலரே
3. உடல்மயிர் செடிமரம் தளிர்கள் ஒளிவிடும்
வலிமிக்க சிங்கம்யானை வாழ்காட்டை யும்கடப்பர்
உடலழகிற் சிறந்த பெண்கள் எனும்காட்டில்
வனமுலைகளாம் பள்ளத்தில் வீழ்ந்துமிக அவதிப்படுவர்
4. தேவர்குழுவில் யாருமில்லை அவனெதிர் நிற்பதற்
காற்றல்மிக்க அனங்கன் வஞ்சகனெனும் விருதுடையான்
பாடத்தாதி கேசவனின் உண்மை அடியாரெனில்
வாட்டுகின்ற அச்சம்துன்ப மெதுவும் இல்லையே

மூலம்: முகாரி இராகம் ஜம்பதாளத்தில் அமைந்த "பதநடெயதய்ய" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 10. அரியின் அடியைச் சேர்தல் எளிது

1. என்றுமே எனக்கு டல்மீதுநம் பிக்கையில்லை
முன்பேயறியின் அரியடியைச் சேர்தல் எளிது.

2. எலும்புகளின் கூடு நரம்புகளால் பிணிக்கப்பட்டது
மேற்போர்வை யாகத் தோலால் மூடப்பட்டது
கலகலவென் றொலிக்கும் நாமணியை உடையது
சிலயாண்டுகட் கிவ்வுடல் நம்மைக்காக்கும் அன்றோ

3. மலஞ்சோருமொன் பதுவாயில்கள் கெடுக்கும்
ஐம்பகைவர்கள்
அவர்களுக் கடிமை செய்யுமாறு பகைகள்
மனம்மயக்கும் மன்மதனின் மனையாகும் இவ்வுடல்
தானழிவ தெப்போதென் றறியாத திவ்வுடல்

4. உடலலங்காரிக்கப் படுவதற் களவே இல்லை
சிவந்த நிறம்கொண்டு சிறந்து விளங்கிய
தினியவன் காகெநிலை ஆதி கேசவனை
ஒருமையுடன் நினைந்தே உயரின்பம் பெறுமனிதா!

மூலம் : காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "எந்தித்தரிகொம்பெ" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 11. தரும இந்திரிய வழிநடக்க இயலவில்லை

1. தரும இந்திரிய வழியே நடக்க இயலாமல்
அதரும இந்திரிய வழிச்செல்லத் தொடங்கினாய் பித்தனே!

2. தீயபுத்தி வழியில் செல்வதைக் காணின்
எமதேவன் தோலை உரியாதிரான் பித்தனே!

4. புத்தகங்களைப் பிரித்துப் புராண சாத்திரங்களை
விளக்கி அரியின் அரும்பெரும் பண்புகளை
அமைதியாக அமர்ந்து கேட்கும் இடத்திலும்
மனத்தில் உணர்ச்சியுடன் மனைக்குச் செல்வாய்
கையினால் பொருளும் உணவும் ஆடையும்

வழுங்கி உபசரியா தற்பஆசை கொண்டு
தீயோர் வீற்றிருக்கும் சதுரங்க ஆட்டத்தில்
பயனிற்றி அமர்வாய் எழுமனங் கொள்ளாய்

4. மந்திராக் சதைநெய் துவையல் கறியமு
தகலமான இலையில் இனிப்புக்களும் பதார்த்தங்களும்
பாசமுடன் பரிமாறித் தசமி துவாதசிகளில்
முகுந்தனுக் கர்ப்பித்து மனையில் உண்ணாது
வழியில் வருபவர் யாராவ தழைத்தால்
அவருடன் சென்ற வரது மனைக்கண்
மக்களுடன் அமர்ந்து வயிறார உண்டு
பசிநீங்கிக் காலத்தைக் கழிப்பாய் பித்தனே!

5. மரமல்லி செவந்தி மல்லிகைமுல்லை மகிழம்
பாதிரி தாமரை அரளிஅல்லி பச்சிலையால்
அரியின் அடியிணையை அருச்சித்த பின்னர்
மணம்பெறுக என்றால் மதித்துக் கேளாய்
செந்தாமரை நாகம் சம்பங்கி போன்ற
வாசம்மிக்க மலர்களைக் கொண்டு வனிதையரின்
கூந்தலில் வைத்து முடியழகைக் கண்டு
பயனற்ற மகிழ்ச்சியைப் பெறுவாய் பித்தனே!

6. ஆயிரம் இலட்சக் கணக்கிலுள்ள பசுநெய்
தீபங்களின் ஒளிமிக்க இரவிலே பாகவதர்களின்
பாடல்களை ஆடல்களைப் பாரா தேகாதசியில்
பயனற்ற நீண்ட துயிலில் மூழ்குவாய்
அழியும் அழகுடைய பொதுமகளிர் மனைகளில்
மனம்நிறையும் இன்பம் துய்க்கும் ஆசையால்
அங்காரகனின் நற்பயனை எதிர்பார்த் தங்கேயே
இரவுமுழுதும் எழாமல் வீற்றிருப்பாய் பித்தனே!

7. நற்சொற்களால் திருத்தும் வைணவரைக் கண்டால்
எழுந்துநின்று வணங்க மனத்தில் கருதீர்!
கண்ணாடிமேல் உளுந்துபோல் நிலையற்ற வாழ்க்கையீர்
பெண்ணாசை வெல்வீர்என்று வேண்டுவேன் உங்களை

நன்மையை நவில்வேன் காதுகொடுத்துக் கேட்பீர்
காசெநிலை ஆதிகேசவ ராயனை நாடொறும்
மறவாமல் தியானித்தெம பயத்தை வென்று
வைகுந்த வாழ்வைப் பெறுபவர் ஆவீரே.

மூலம் : கல்யாணி இராகம் அட தாளத்தில் அமைந்த 'தர்மேந்திரியக்கெ தட்டிய" எனத் தொடங்கும் கீர்த்தனை. இதில் "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையிற் பேதையா ரில்" என்னும் குறளின் கருத்து அமைந்துள்ளது.

## 12. எள்ளளவு பக்தி

1. எள்ளளவு பக்தியே எனக்குள் உள்ளது
கள்ளரைக் காட்டிலும் வஞ்சகன் நானே

2. மீன்குத்தியைப் போன்று குளங்களில் மூழ்கித்
தலைவலியை அன்றி முத்தியைக் காணவில்லை
தவளையைப் போன்று தடங்கரையில் அமர்ந்து
மூக்கைப் பிடித்துக்கொள்ளும் பித்தன் நானே

3. செக்குமாடு போன்று கண்மூடி வலம்வந்து
கண்ணிரண் டிருந்தும் காணாதவன் நானே
மாணிக்கக் குவியலில் குருடரைவர் கூடிப்
பிடித்துச் சிதறுவதுபோல் பித்தன் நானே

4. கிடுக்கியைக் கொண்டு காய்ந்தஇரும் பையெடுத்துத்
தீக்குள் விட்டெடுப்பது போன்றதென்கதி காண்பாய்
நாபிக்கம லம்கொண்ட பாடத்தாதி கேசவனே
அடைக்கலம் அடைந்த அடியேனை ஆட்கொள்வாய்.

மூலம்: கௌளிபந்துவராளி இராகம் திரிபுடை தாளம் அமைந்த 'எள்ளுகாளினஷ்டு பகுதியென்னொளகீ" எனத் தொடங்கும் கீர்த்தனை. இறைவனை வழிபடும்போது ஒருமையுணர்வு தேவை என்பதை இக்கீர்த்தனை வலியுறுத்துகின்றது.

# 13. அரி என்று கூறாமல் வருந்தினேன்

1. அரியென்று கூறாமல் வருந்தினேன் நானே
பிறப்பிறப் பென்னும் துன்பங்களில் வருந்தினேன்
ஐம்பொறிகள் தருகின்ற தொல்லைகளால் வருந்தினேன்
அறுவகைப் பகைகளால் பெரிதும் வருந்தினேன்.

2. ஒருகணம் நாற்றம்வரின் முகத்தைச் சுளிப்பர்
தந்தையின் உதிரத்தில் மூன்றுமாதம் தாயின்
வயிற்றில் ஐயமின்றி ஒன்பது மாதம்
மலமூத்திரங்களில் ஒன்றாகக் கலந்திருந்து பிறந்தேன்
எண்பத்திநான் கிலட்சம் பிறவிகளில் தோன்றினேன்
மூன்னூற் றறுபது - பிணிகளால் மனம்நொந்தேன்
எமவேதனை ஒருகணமும் பொறுக்க இயலேன்
அடைக்கலமாய் என்னையேற்றுக் காப்பாய் முராரியே!

3. எலும்புகளால் கூடுகட்டி நரம்புகளால் பிணைத்துப்பின்
அழுகுதோலால் மூடுவித்துச் சதைப்பிண்டம் நிரப்பிய
உடல்கொண் டுலாவி உன்மத்த நாயைப்போல்
வீடுகள் தோறும் திரிந்து திரிந்தலைந்து
மலமூத்திரம் எச்சிலென்று பாராமல் தின்று
களவுகாமம் ஆகியஐம் பெரும்பாவங்கள் புரிந்து
நிலையில்லா தலைந்து நரகில்விழும் என்னை
நளினம்போல் நயனம் கொண்டவனே காத்தருள்வாய்!

4. பலபிறவிக ளில்தாயர் பரிந்தளித்த முலைப்பாலை
விரும்பிப் பருகுகையில் கீழேசிந்திய பால்துளிகூடி
அளந்து பார்த்தால் பாற்கடலின் இருமடங்
கழுதுசிந்திய கண்ணீரை அளந்து பார்க்கின்
உப்புக் கடலைவிட மும்மடங் காகும்
எலும்புநரம்பு கூடினால் மேருமலையில் நான்காகும்
தோலை உரித்தால் அவனியைவிட ஐம்மடங்கே
இந்தவுடலுக்கு நிலைத்த வாழ்வு முண்டோ?

5. பிறந்தநாள் தொடங்கிப் பதினாறு விழாக்கள்
பெருமகிழ்வுடன் புரிகையில் உறவும்நட் பும்வருவர்

திருமணமும் செய்விப்பர் பெருவிருப் புடனே
உண்டும் உடுத்தும் உவகை கொள்வர்
பிராணன் போனால் பிணமென்று பெயரிடுவர்
மூலையில் கிடத்திவிட்டு வயிறடித் தழுவர்
சுடுகாட்டில் எரித்துப் பிண்டம் வைப்பர்
இவ்வாறு பல்வகையில் ஈமக்கடன் இயற்றுவர்.

6. தந்தைதாய் யாரோ யானிருந்த ஊரெதுவோ
வந்திருப்ப தெங்கோ மனைவிமக்கள் யாரோ
முன்புகுறித்த குலம்கோத்திரப் பெயர்கள் எவ்வளவோ
அனுபவித்த இன்பத் துன்பங்கள் எவ்வளவோ
முன்புகாத்தவர் யாரோ பின்புகொல்பவர் யாரோ
என்பதெல்லாம் நானறியேன் நீயேயறிய வல்லாய்
தந்தையாம் செல்வம்நிறை காகெநிலை ஆதிகேசவன்
இணையடியை என்றும் விடமாட்டேன் கண்டாய்.

மூலம் சாரங்கா இராகம் ஜம்பதாளத்தில் அமைந்த "நொந்தே நா ஹரியென்னதெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 14. தெளிந்தவன் பரமயோகி

1. நான்யார் என்னுடல் யாதென்று ஞானத்தால்
தெளிந்தவனே பரமயோகி

2. எலும்புக்கூடு நரம்பு தோல்ஆகிய வற்றால்
இறுகக் கட்டிய சதைநிறை பொம்மை
மூத்திரம் மலம்இரத்தம் சீழும்நிறை உடலென்
றாய்ந்து தெளிந்தவனே பரம யோகி

3. அழுக்குள்ள கருப்பையில் ஒன்பதுதிங்கள் உறைந்து
தாய்வயிற்றிருந் துதோன்றி மகிழ்வுடன் வளர்ந்தபின்
பாவங்கள் புரிவதற்கே பயனாவதிவ் வுடலென்று
நீதியால் தெளிந்தவனே பரம யோகி

4. கொடுமைநிறை இல்வாழ்க்கைக்கே இவ்வுடலென்
றுதெளிந்து
முந்திரிக் கொட்டைபோல் அதிலிருந்து வெளிப்பட்டு
மன்மதனின் தந்தை காகெநிலை ஆதிகேசவனின்
பாதத்தாமரை நம்புவனே பரம யோகி

மூலம் : ரேகுப்தி இராகம் ஜம்ப தாளம் அமைந்த "தானாரு தேஹவாரு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 15. யாரும் நம்முடன் வருவதில்லை

1. யாரும் நம்முடன் வருவதில்லை திருநிறை
நாராயணன் நினைவே துணையாகுமே அன்றி

2. ஒன்பது திங்கள் கருப்பையில் சுமந்து
மிகுந்த நோவால் நலிந்து பெற்றெடுத்து
பால்நெய் கொடுத்து வளர்த்த தாய்தந்தை
அழுதுபுலம்பு வரேயன்றி நம்பின்னால் வருவாரோ?

3. மக்கள் உமக்கே உரிமையர் என்றெண்ணி
ஆழ்ந்தநம் பிக்கையால் அருமையுடன் வளர்ப்பீர்
உடலைவிட் டுயிர்நீங்கின் அப்போது வீட்டில்
அரைக்கடிகை நேரம் பொறுமையுடன் வைப்பாரோ?

4. சுற்றும் முற்றும் அமர்ந்திருக்கும் உறவினர்
காலம் கடந்ததெழுந்துரு என்றே இயம்புவர்
கூட்டப்பட்ட குப்பைக்கும் இழிந்ததாம் இவ்வுடலைச்
சுமந்துசென்று சுடுகாட்டில் எரித்து மீள்வர்.

5. பூமியும் பண்டிதரும் அக்னியும் சாட்சியாகக்
கைப்பற்றித் தாரைவார்த்துத் தரப்பட்ட மனைவியும்
தனக்கினிய கணவனைத் தொடுவதற் கஞ்சியகன்
றெனைக்காப்பார் யாரென் றழுத லறுவாள்

6. மரணம் வருமுன் அரிக்குத் தொண்டுசெய்து
பரலோகம் அடையும் சாதனை செய்வாய்

கருணைகூர் காகெநிலை ஆதி கேசவனின்
பாதத்தாமரை நம்பி இனிதிரு மனமே!

மூலம்:மத்தியமாவதி இராகம் அட தாளம் அமைந்த "ஆரு சங்கட பாஹோரில்ல" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 16. பெயரினை நினைப்பாய்

1. கோவிந்தா கோவிந்தா என்றுகூற அறியாது
வீணில் துன்புறுதல் உயர்செயல் ஆகுமா?

2. அழியும் நூல்களை அனுதினம் படித்தாய்
ஆடு கோழிகளைத் தலைவெட்டிப் பலிதந்
துயிர்க்குத் துன்பம்தரல் நல்லறமோ நவில்வாய்
திருமகள் கேள்வனின் பெயரினை நினைப்பாய்

3. ஊனை எடுத்து மண்டி எரியும்
வேள்வித்தீ யிலிடுதல் உயர்செயல் ஆகுமா
ஆடை யின்றியலைந் தலற வேண்டா
தாமரை விழியனை மனமே நினைப்பாய்

4. மிகுந்த செல்வத்தைச் சேர்த்து வைக்காதீர்
பகைவளர்க்கும் பொருள்களை முரசம்சுமப் பதுபோன்று
முதுகில் சுமப்பது மேன்மை தருமா?
கோபாலன் பெயரை மனத்திற்குள் நினைப்பாய்

5. கழுத்தில் செபமாலை தொங்கவிட்டுக் கொண்
டல்லும் பகலும் உணவுநீர் பருகாமல்
பறவைகளின் எதிரிபோ லிருப்ப தெதற்காக?
மயங்கியவனே உலகத் தலைவனை நினைப்பாய்

6. மேன்மக்கள் மதுபானம் பருகித் தமைமறந்
திழிந்த சொற்களை இயம்புவ துண்டோ
செத்தவனைப் போல வீற்றிருப்ப தெதற்கோ?
ஆண்டகை இறைவனின் பெயரினை நினைப்பாய்

7. வேதவிதியில் பூசிப்பதால் மகிழ்வில்லை என்றால்
ஆவதென்ன அதனால் அடையும் பயன்யாது?
இசையைக் கேட்டு மான்போல் கெடாமல்
மதுசூதனன் பெயரை மறவாது நினைப்பாய்

8. மானாபி மானங்களைத் துறப்பதால் பயன் யாது?
உங்களால் முக்திபெற இயலுமா மொழிவீர்.
தந்தை காகெநிலை ஆதிகேசவன் பெயராம்
ஒன்றே வைகுந்தம் அடைவிக்கும் ஐயா!

மூலம்: சாவேரி இராகம் ஏக தாளம் அமைந்த "கோவிந்தா கோவிந்தா என்னலரியதெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 17. நியமம் அற்ற வேள்வி எதற்கு?

1. நியமம் அற்ற வேள்வி எதற்கோ
இராமநாமம் தவிர வேறொன்று வேண்டுமா?

2. நீரினுள் மூழ்குவதேன் நாரியரைத் துறப்பதேன்
வாரத்தில் ஒருநாள் உண்ணாமல் இருப்பதேன்
நரசிம்மனின் நல்ல நாமத்தை நினைத்தால்
தீய பாவங்கள் தீர்ந்து போகுமே.

3. ஆடையை அகற்றுவதேன் தாம்பூலம் விடுவதேன்
வஞ்சனை நீங்கள் புரிவதும் ஏனோ?
தாமரை உந்தியனைப் பக்தியுடன் நினைத்தால்
வைகுந்தத்தினிமையாய் இருக்கலாம் ஐயா.

4. பந்தத்தில் வீழ்ந்தும் அரியை நினைத்தால்
தீயபாவ மெல்லாம் வெந்து சாம்பலாகும்.
வந்த துன்பங்கள் நில்லாமல் நீங்கும்
காகெநிலை ஆதிகேசவனை அன்புடன் நினைப்பாய்.

மூலம்: முகாரி இராகம் ஜம்ப தாளம் அமைந்த "நேமவில்லத ஹோமவேதக்கய்ய" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 18. பெயரொன்றே போதும்

1. இல்வாழ்க்கை என்னும் கடலைக் கடக்கக்
கஞ்சனைக் கொன்றவனின் பெயரொன்று போதுமே.

2. முனிவராக வேண்டா வைராக்கியத்தால் எல்லா
விரதங்களைப் புரியும் நியமம் வேண்டா
வேதங்களின் விதிப்படி நடக்க வேண்டா
திருமகள் தலைவனின் பெயரொன்று போதுமே.

3. உடலை வருத்தி மலைமுகட்டில் நின்று
வனிதையரை விலகித் தவம்புரிய வேண்டா
நீரினுள் நாடொறும் மூழ்க வேண்டா
தாமரைக் கண்ணனின் பெரொன்று போதுமே.

4. தீர்த்த யாத்திரைக் கலைந்து திரிந்து
புனிதன் ஆனேனென்று பெருமைப்பட வேண்டா
அசுரரை அழித்த காகெறிலை ஆதிகேசவனின்
பெயர்கூறி வீடுபே றடைவாய் மயங்கியவனே!

மூலம் :- காம்போதி இராகம் அட தாளம் அமைந்த "சாம்சார வெம்ப சாகர" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 19. எவ்வாறு இருந்தாய், எவ்வாறு ஆனாய் ஆன்மா

1. எவ்வா றிருந்தாய் எவ்வாறானாய் ஆன்மா
யோகீசனின் ஆனந்தபுரத் திலிருப்பதை விட்டாய்.

2. கருவாகத் தோன்றிக் கருப்பையுள் நின்றாய்
அசைந்து கொடுத்து நிலத்திற்கு வந்தாய்
சிவப்பாடை உடுத்து மலமூத்திரத்தில் கிடந்தாய்
உலகில் நாட்களைக் கடந்தாய் ஆன்மா.

3. குழந்தைப் பருவத்திருந் திளமையூர்க்கு வந்தாய்
அழகுபொலி மனைவியின் நிழலைச் சார்ந்தாய்

புதல்வரைப் பெற்றாய் வறுமையூர் வந்தாய்
முன்னிருந்த ஊர்க்குத் திரும்புவாயோ ஆன்மா

4. வஞ்சனை வார்த்தைகளை இன்னமும் இயம்புவதேன்
முன்புசெய்த பாவத்தால் வந்தவுடல் இதுவெனில்
உன்னதமான காகெநிலை ஆதிகேசவன் என்னும்
நிறந்திகழ் மூர்த்தியைப் போற்றுவாய் ஆன்மா.

மூலம் :- முகாரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஹேகித்து ஹேகாதெயொ ஆத்மா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 20. அரியின் அடிமை ஆவாய், பிறவித்தளையை நீக்குவாய்

1. அடிமை ஆவாய் பிறவித்தளையை நீக்குவாய்
சிறந்தவன் ஆவாய்.

2. பலஉடல்களில் தோன்றி எண்பத்தி நான்கிலட் சமான
பிறவிவகை களைக்கடந்து வந்த
இவ்வுடல் உனதன்
நானிலைத்தல் நிலையான தன்று
முன்னேதொடர்ந்து வருவதில்லை
ஆசையென் னும்குற்றக் கடலில் மூழ்கி எமனின்
பாசத்திற்குள் வீழாமல் குற்றமற்றவனாய்
மகிழ்ச்சியுள் மூழ்குவாய்.
காசி வாரணாசி காஞ்சி காளத்தி இராமேசுவரம்
இன்னுமெத்தனைத் தலங்களுக்குச்
செல்வதால் வருவதென்ன ஆவதென்ன?
பாவம் போக்கும் கிருஷ்ணவேணி கங்கை
கோதாவரி பிறவிநீக்கும்
துங்கபத்திரை யமுனையில் நீராடல்
உபவாசம் இருத்தல்
தடங்கரையில் அமர்ந்து செபதவம் வேள்வி நியமம்
எவைசெயினும் பயனென்ன வருமோ

வஞ்சனையே அன்றோ
வாசுதேவன் என்னும் அழகிய அன்னத்தைச் சார்வாய்
ஆசைவலைப்பட் டழியாமல் றடையுமாற்றல் டெறுவாய்.

3. அங்கேயோ இங்கேயோ எங்கேயோ இந்த இல்வாழ்க்கை
பெருஞ்சுமை நிலையான தன்றுமற்றளவே அற்றது
காரிருளில் காண இயல வில்லையா உன்னால்
உண்மையான மெய்ந்நெறியைச்
சாரவில்லை தெரியவில் லைஉனக்
குத்தமமான ஆஉ என்னும் ஓங்கார விதையை
விதைக்க வில்லையே அதைவிடாதே
விட்டுவிட்டுக் கெடாதே
வைகறையோ மாலையோ அப்போதோ
இப்போதோ அழியுமுடலை
நிலையென்று நம்பாதே; வீணாக அலட்டிக் கொள்ளாதே.

4. உள்ளதா நீங்கிற்றா என்னவாயிற்றிந்த உடலுக்குத்
தாய்யாரோ இன்னும் தந்தை யாரோ
மாயத்தில் சிக்க நீண்ட காலமாக
ரகுராமனாம் பரம்பொருளின் நினைவகற்றி
உடல்மீது மோகம்வைத்து
நாயின்வாய் ஆடையைப் போல்பலவிதத்
துன்பங்களில் உழன்று
வாய்விட் டலறிநீ இறப்பதேன் நீஉழல்வ தெதற்காக
அருள்க அருள்க அருள்கவென்று
மூவுலகிற்கும் முதல்வனை வேண்டுவாய்.
புண்ணிய முதல்வனைச் சார்ந்துநீ
புனிதனாவாய் முத்தனாவாய்.

5. அன்றோ இன்றோவொரு முறையாவது
செல்வம்நிறை கமலேசனை
ஞாபகம் கொண்டு நினைத்து
மனவமைதி பெறவில்லை.
வந்துவந்து பிரமைமிகுந்து மாயா
மோகத்தில் சிக்கி

நொந்து நொந் தெதனாலும்
பிழைக்கவில்லை தளைகள் நீங்கவில்லை.
ஐயத்தை அகற்றி ஞானமெனும் விளக்கை ஏற்றுவாய்
அரியை ஒருமை யுடன்நினைப் பாய்அறி வோடு
முகுந்தனிடம் முத்தியை வேண்ட வேண்டுமென் றறிவாய்.

6. நூறு முறை சரணம்கூறி நீரில் மூழ்குவ தெதற்காகப்
பிறன்மனைமீது செல்லும் நாட்டத்தைத்
தடுத்து நிறுத்துவாய்
பானையில் கள்ளை நிரப்பியபின் கழுத்தில் மாலைசுற்றி
வாசனைத் திரவியமும் அட்சதையும்
இடுவது போன்ற துன்செயல்
இந்திரசாலம் இயற்றுவதை விட்டுப்
நாதப் பிரமனைப் பற்றுவாய்
நாமம் நவின்று முத்தியைப் பெறுவாய் நன்மனத்துடன்
நாராயணன் அச்சுதன் ஆனந்தன்
ஆதிகேசவன் என்னும்
அமிர்தத்தை உண்டின்ப மடைவாய்
அழிந்துவரும் உயிரே.

மூலம் :- நாதநாமக்கிரியை இராகம் ஏக தாளத்தில் அமைந்த "தாசனாகோ பவபாச நீகோ" எனத் தொடங்கும் கீர்த்தனை. இதில் வரும் உவமைகள் உள்ளத்தைத் தொடுவன.

## 21. அடியார்க்கு அடியான் ஆகவேண்டும்

1. நாடுகளுக்கெல் லாம்தலைவனாம் நரஅரியே உனது
திருவடிக்குத் தொண்டரின் அடியான் ஆக்குவாய்.

2. இராஜச தமோகுணங்களை மூலமாகக் கொண்ட
ஆண்டை என்பதால்வரும் அகங்காரம் பொருந்தேன்
தோளில்சக் கரம்கொண்ட அடியார்களின் திருவடிதொழும்
அடியார்க் கடியானாக ஆக்குவாய் என்னை

3. நன்மணச் சந்தனம் குங்குமம் ஜவ்வாது
கத்தூரித் திலகத்தை நெற்றியில் இடமாட்டேன்
திருசூரணத் தால்பன்னிரு திருநாமம் இட்ட
அடியார்க் கடியானாக ஆக்குவாய் என்னை

4. இனிப்பான தின்பண்டங்கள் உணவு வகைகளையும்
ஆர்வமுடன் உண்டு மகிழ்வதைநான் பொருந்தேன்
போதனைகளைப் பேசுகின்ற கேட்கின்ற அரிதாசரின்
பாததீர்த்தப் பிரசாதத்தைப் பருகுவிப்பாய் என்னை

5. காலத்தை வீணாகக் கழித்தரி அன்பாம்
சீலத்தைப் பெறாத பிராமணன் ஆகமாட்டேன்
மேலாம் அரியன்பைக் கொண்ட சண்டாளரின்
மனைகாக்கும் காவலனாக ஆக்குவாய் என்னை

6. தீயநூல்களைப் படித்துக் கோழிஎருமை பலியிட்டுக்
கொடிய நரகிடை வீழ்வதைநான் விரும்பேன்
தாமரை உந்தியாநின் திருவடித் தொண்டரைச்
சார்ந்து வாழ்பவன் ஆக்குவாய் என்னை

7. பருத்தி ஆடை பளபளக்கும் பட்டாடை
பாங்குடன் அணிவதை என்றும் விரும்பேன்
கவர்ச்சி அற்ற காவித் துணியை
அணிந்தவரின் அடியானாக ஆக்குவாய் என்னை

8. பொருளைப் பற்றிய செய்திகளை அறிந்து
புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதை விரும்பேன்
அசுரரை அழித்த பாடத்தாதி கேசவாஉன்
புகழ்பாடுபவரைப் புகழ்பவனாக ஆக்குவாய் என்னை.

மூலம் :- சாவேரி இராகம் அட தாளத்தில் அமைந்த "தேசாதிபதி நரஹரியெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 22. எவ்வாறு நீ அடியான் ஆனாய்?

1. எவ்வாறுநீ அடியான் ஆனாய் உயிரே
எவ்வாறுநீ அடியான் ஆனாய்.

2. எவ்வாறுநீ அடியான் ஆனாய் இந்த இல்வாழ்க்கைக்குக்
குரங்கைப் போலப் பிறவித் துன்பங்களில் உழல்கின்றாயே.

3. ஆசையை விடவில்லை காசைத் தேடுகின்றாய்
குற்றக் கொள்கலனாகிக் கெட்டவன் ஆனாயே.

4. உடலை உனதென்றும் மனைவி மக்களைக்
காக்கும் கதியென்றும் கருதும் கசடனே.

5. தலைகெட்ட நாயைப்போல் தெருக்களில் திரிந்து
மகிழ்வோடு மூலமலங் களைவென் றழிக்கவில்லை.

6. வயிற்றைக் காக்க வீம்புடன் அலைந்து
கெடுக்கும் கர்வத்தை வைத்துக் கொண்டாய்.

7. அரிஅடியார் என்றெண்ணாது பெரியோரை நிந்தித்தாய்
வயிற்றுப் பசிபோக்க வீதிதோறும் திரிந்தாய்.

8. காலில் சலங்கைகட் டிக்கையில் தாளம்பிடித்துத்
திருநிறை இறைவனின் பண்புகளைப் போற்றாய்.

9. கூத்தாடி மனவமைதி பெற்று நற்கதியை
அணுகி அட்டமா சித்திகளை நீஅடையாய்.

10. வேதசாத் திரங்களை விருப்புடன் ஓதாய்
பாதராயன் செய்த பாகவதம் கேளாய்

11. வயிற்றுக்கா கப்பிறர்முன் கைகட்டிக்கண்கெட்டுத்
துாசற்ற துாய இரும்பைப் போன்றே

12. நியமத்துடன் உபவாசம் பெரிய ஏகாதசி
காமன்தந்தை திருமாலுக்குச் செய்யாமல் வீணாக

13. எத்துணைநாள் வாழினும் மரணம் வருகையில்
நீந்திக் கடக்ககில்லாய் காசுக்காக வாழ்ந்தாய்.

14. அங்கத்தில் இருக்கும் மங்கல மூர்த்தியின்
பாதங்களைப் பற்றிப் புகழ்ந்து பாடவில்லை.

15. நதிநீர் வற்றியது வித்தியது விளையவில்லை
அழுவதால் பயனென்ன விளைவு தோன்றுமா?

16. விளையாடும் மக்களுக்குக் கடலைக்காய் கொடுக்காமல்
வேண்டாதவர்க்குக் கொடுத்தவருடன் கூடிஆடுவது போல்

17. பகட்டை விரும்பிப் பொன்னகை அணிந்து
திருத்துழாயை அரங்க நாதனுக் கர்ப்பியாமல்

18. சுற்றும் இருள்நிறைந்து பயப்பிரமந்தி மிகுந்தாய்
நல்லவனாம் இறைவனை அடையும்வழி யாதுளது?

19. ஆடம்பரம் விரும்பிப் பாவத்தில் மூழ்கிப்
பிதற்றும்போ தடைக்கலம் தருவதற்கு யார்உள்ளார்?

20. நாமத்தைத் தரித்தும் மோசங்கள் புரியலாமா
கலகத்தில் கோலெடுத்தவன் மனைவியைக் காப்பானோ

21. கருட வாகனக் கடவுளைப் போற்றாமல்
வியப்பிற் குரியவனாகி அரிசிக்காக அலைவானோ?

22. அரிதுயில் அமர்ந்தவனின் அடியை வணங்குவாய்
காகெநிலை ஆதிகேசவன் அடிமை ஆவாய்.

மூலம் :- சங்கராபரண இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "ஹேகெநீ தாசனாதெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 23. அடியார்க்கு அடியேன்

1) அடியார்க் கடியார்வீட்டின்
அடியார்க் கடியேன்நான்.

2) தானியதாசரின் வீட்டின் அடிமை நான்ஐயா
கீழான அடிமை சிறிய அடிமை
வாட்கண்ணாய் முன்னின்று போற்றும் தேவர்வீட்டின்
அடியார்க் கடியார்க் கடியேன்நான் ஆவேன்.

3) தாமரைக் கண்ணன் கோயிலின்
மந்தஅடிமை நான்ஐயா
கீழான அடிமை குருடான அடிமை
நல்லிசை பாடும் பக்தரின் வீட்டில்
முன்றிலையும் வாயிலையும் காக்குமேழை அடிமைநான்.

4) எண்ணற்ற அடியார்களின் எளியஅடிமை நான்ஐயா
குலமற்ற அடிமை நாயாகிய அடிமை
மணிமாலை அணியரங்கா நின்கோயிலின் அடிமைநான்
நன்முக்தி அளிப்பாய் ஆதிகேசவராயனே!

மூலம் :- சங்கராபரணம் இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "தாசதாசரமனெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 24. அடிமை ஆக வேண்டும்

1) அடிமை ஆக வேண்டும் - சதாசிவனின்
அடிமை ஆக வேண்டும்.
அடிமை ஆக வேண்டும் ஐம்பொறிப் பகைவென்
றாசையில் மனத்தைச் செலுத்தாமல் எப்போதும்

2) மனத்தின் மாசினை அகற்றி
மகேசனின் மகிமையைத் தெளிந்து
அகிலமெல்லாம் அரன்மயம் எனவறிந்து
கடுமோகத்தின் எல்லையைத் தாண்டுவாய்.

3) உடல்நிலை யற்றதெனத் தெளிந்து
சங்கரனை இதயத்துள் காண்பாய்
மோசமான இந்திரசால மாயையென்
றில்வாழ்க்கையில் உள்ளபற்றைத் துறப்பாய்.

4) ஆறு சக்கரத்தில் அலையும் அகண்டனின்
மூன்று குணங்களைத் தெளிவாய் நீயே
ஆறுமூன்று பதினாறு தத்துவங்களைக் கடந்தால்
காணலாகும் காகெநிலை ஆதிகேசவன் அடியிணையை

மூலம் :- கல்யாணி இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "தாசனாகபேகு சதாசிவன" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 25. பிரமன் விதியைமீறி வாழ்பவர் உண்டு

1) பிரமன் விதிவ்யமீறி வாழ்பவர் உண்டு
மாசற்ற வைணவரை மனம்பொருந்திப் போற்றுவாய்

2) பாவம்புரியக் கூசாதவே டன்வழியில் காத்திருக்க
அவ்வழியே நல்ல வைணவர் வந்தார்
பாவத்தை விடுவித் திராமநாமம் உபதேசிக்கத்
தீயவன் வால்மீகி முனியாக உயர்ந்தானே

3) பஞ்சமா பாவங்களைப் புரிந்த அஜாமிளனைக்
காலனின் தூதர்கள் கட்டியிழுத்துச் செல்கையில்
சிறிதள வரியின் நாமவமுதை நினைத்ததும்
அச்சம்அகற்றி அரியின்தூதர் அழைத்துச் சென்றார்களே.

4) பாலகன் தனது தாய்தந்தை முனிந்து
பல்லாண்டு வனத்தில் தவத்தைச் செய்ததும்
நீலமேக வண்ணான் மகிழ்ந்து பாலகனுக்கு
மேன்மையான துருவபதம் அளித்தான் அன்றோ?

5) பத்துத்தலை இராவணனிடம் சானகியை விடுகவென்றதும்
கோபம் கொண்டசுரன் அப்பால் அகற்றலும்
பெயர்கூறி வந்தே அடைக்கலமான வீடணனுக்
கிரவிதிங்கள் உள்ளளவும் பட்டம்கட் டினான்அன்றோ?

6) காலினால் நடுங்கார் காலன்செய் கொடுமைகளால்
பதைபதைத் தழச்செய்யும் துன்பங்கள் இல்லையாகும்
காகெநிலை ஆதிகேசவன் அருள்பெற்றோர் உய்வரே
நன்கு நம்பினோர் நன்முத்தி அடைவரே.

மூலம் :- காம்போதி இராகம் ஆதி தாளம் அமைந்த "பிரம்மலிகிதவ மீறி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 26. தொடாதே அடியார்களை

1) தொடாதே முரனைக் கொன்றோன் அடியார்களைக்
கட்டுப்பாடு விதித்துள்ளான் எமன்தன் தூதர்களுக்கு

2) திருமண் திருச்சூர்ணம் பன்னிருநா மம்தரித்துத்
திருமிகு துளசிமாலை கழுத்தில் அணிந்துத்
திருமந்திரம் ஓதித்தீர்த்தப் பிரசாதம் பெற்றுத்
திருப்பதி யாத்திரை சென்றவரைத் தொடாதே.

3) ஏழை யாயினும் செல்வ னாயினும்
கெட்டமூர்க்க னாயினும் கொடியபாதக னாயினும்
மாதவனின் மேன்மையை இடைவிடாது மொழிபவனைத்
தொடாதேஎன் றாணையிட்டான் எமன்தன் தூதர்களுக்கு

4) வாசுதேவா என்னும் பெயரை ஓதுபவரை
முனிவின்றி அரிநாமம் எப்போதும் நினைப்பவரை
பாம்பணை பள்ளிகொண்ட காகெறிலை ஆதிகேசவனின்
அடியார்க் கடியேன்என்று கூறுபவரைத் தொடாதே.

மூலம் :- காம்போதி இராகம் ஜம்பதாளம் அமைந்த, "முட்டபேடி முட்டபேடி முரஹரன தாசரனு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 27. அடியார் கூட்டத்தில் இருக்கச் செய்வாய் என்னை

1) பாம்பணையில் படுப்பவ னேஉனதடியார்
கூட்டத்துள் இருக்கச் செல்வாய்

2) தந்தையின் உடலைக் கிழிக்கச் செய்தவன்
தேவேந்திரன் தலைக்குத் தண்மை தந்தவன்
துர்நாற்றப் பெண்ணிற்குச் சந்தனமணம் தடவுவதுபோல்
அடியார்க்குள் இருக்கச் செய்வாய் என்னை.

3) தாமரை என்னும் பூவின் பெயரினைத்
தாய்மகள் மருமகள் மக்களுக்கு வைத்தவர்க்
காய்வுடன் துவாதசி விரதம் மேற்கொண்ட
அடியார்க்குள் இருக்கச் செய்வாய் என்னை.

4) கிளிநாயின் பெயர்களை இட்டு மேகத்தின்
வயிற்றில் உதித்த வஞ்சக் கள்வரின்
நட்பை உதறிவிட் டரியை வென்றபழ
வடியார்க்குள் இருக்கச் செய்வாய் என்னை.

5) போர்க்களத்தில் தேரை ஓட்டிச் சென்றவன்
ஐயமின்றி அறமே வெல்லச் செய்தவன்
இலங்கையை அனுதினம் அழகாக ஆண்ட
அடியார்க்குள் இருக்கச் செய்வாய் என்னை.

6) சோளக்கொண்டை கூடத் தின்னாதவர் அரசரின்
வரிசை யிலமர்ந் துண்பதைப் போல
நாடகம் நடத்தும் காகெநிலை ஆதிகேசவனே!
உனதாட்டத் திலிருக்கச் செய்வாய் என்னை.

மூலம் :- சாவேரி இராகம் ஆதி தாளம் அமைந்த "சேஷசயன நின்ன" எனத் தொடங்கும் கீர்த்தனை. அரியை வெல்லுதல், பக்தியால் அரியைத் தமக்குரியவன் ஆக்குதல்.

## 28. படைப்பவன் அரங்கனே

1) இந்நாள் வரைக்கும் இந்த வைகுந்தம்
எவ்வளவு தூரமோ என்றெண்ணி இருந்தேன்
கண்க ளால்நான் கண்டேன்
படைப்பவன் அரங்க நாதன் என்று.

2) எட்டையும் ஏழையும் அறிந்ததால்
அயோக்கியர் ஐவரை அழித்ததால்
துட்டன் ஒருவனைத் துரத்தியதால்
உறவாக வந்தானோ அரங்கநாதன்

3) வனங்கள் உபவனங்ளால்
நீர்நிறைந்த ஏரிகளால்
பொன்பொலியும் கோபுரங்களால்
பொலிவுபெற்றான் அரங்கநாதன்.

4) வைரவைடு ரியம்திகழும் கலசங்களைக் கண்டேன்
பொலியும் பெரிய வாயில்களைக் கண்டேன்
நின்மல மான முனிவர்களைக் கண்டேன்
துட்டரைக் கொன்றவனே அரங்க நாதன்

5) அரம்பை ஊர்வசியின் நடனம் கண்டேன்
தும்புரு நாரத முனிவர்களைக் கண்டேன்
தாமரையில் பிரமனை உருத்திரனைக் கண்டேன்
சம்பரா சுரனை அழித்தவனே அரங்காதன்

6) பாம்பணை படுத்த பரமனைக் கண்டேன்
பாம்பை அணிந்த சிவனையும் கண்டேன்
அன்பான அடியார்திருக் கூட்டத்தைக் கண்டேன்
காகெநிலை ஆதிகேசவனாம் அரங்கனைக் கண்டேன்

மூலம் :- நீலாம்பரி இராகம் ஆதி தாளம் அமைந்த "இஷ்டு தின ஈவைகுண்ட" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 29. வேண்டா, வேண்டா

1) 'வேண்டா வேண்டா தீயவர் களேநம்
பாடத்தாதிபன் அடியாருடன் பகைமை கொள்ளல்

2) யானை வலிகொண்ட சிங்கத்தை எதிர்த்துப்
போர்செய்தால் அச்சிங்கத் தைவெல்ல இயலுமா?
பெருத்த பூதங்களே பூமகள் கேள்வனின்
நாமங்கள் தரித்தவருடன் பகையாதென நானறிவேன்.

3) கோடி நாகங்கள் எரிவிழி கருடனோடு
முழுமுயற்சியால் போரிடினும் வெல்ல இயலுமா?
பேரண்டங் களில்உள்ள பல்லாயிரம் சிறுதெய்வங்கள்
கருணைக்கடலின் அடியார்களுக் கின்னல்செய்ய இயலாதே.

4) பசுக்கூட்டங்கள் ஒன்றாகிப் புலியின் மீசையைப்
பற்றித் திருகி அசைக்க இயலுமா?
பாடத்தாதி கேசவன் சக்கரப் படைஏவித்
தலைகளைப் பந்தாடுவான் காண்பீர் வேண்டா.

மூலம் :- ஸ்ரீஇராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பேடா பேடா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 30. யார் வாழ்ந்தால் என்ன?

1) யார் வாழ்ந்தால் என்ன யார்பிழைத்தால் என்ன?
நாராயணன் நினைவு நமக்கில்லாத போது?

2) உன்னை முடியாதவர்முன் ஊரார்க்
குணவிடுதல் நிகழினென்ன?
பழங்கள் கொடுக்காத பயனில்மரம் பாழானால் என்ன?
கண்ணில்லான் கையில் கண்ணாடியைக்
கொடுப்பதால் பயனென்ன?

3) பொறுப்பில் லாதவர்க்குப் பிள்ளைகள்
இருப்பதால் பயனென்ன?
வந்துநம் மைக்கண்டு களிக்காத உறவினரால் பயனென்ன?
செல்வமற்ற ஏழைகளுக் குறவினர் இருப்பதால் பயனென்ன?
குரங்கின் கையில் மாணிக்கம் இருப்பதால் பயனென்ன?

4) அற்பகுணக் கருமிகளுக் கெவ்வளவு
சேவைசெய்தும் பயனென்ன?
செயற்கருஞ் செயல்கள் செய்யாத
வாழ்க்கையால் பயனென்ன?
பல்லாண்டு வாழ்ந்தும் பரமனாம்
காகெதிலை ஆதிகேசவனை
அணுவளவு நேரம்கூட நினையாதார்
இருப்பதால் பயனென்ன?

மூலம் :- மோகன இராகம் ஆதி தாளம் அமைந்த "ஆரு பாளிதரேனு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 31. யாருக்கும் யாரும் இல்லை ஐயா

1) யாருக்கும் யாருமில்லை துன்பம் நேர்கையில்
தாமரை உந்தியனை நினைப்பாய் மனமே!

2) பசியால் வாடுகையில் பகைவர்கை பட்டமையில்
திசைதவறி ஓடுகையில் நோயால் நலிகையில்
மனவமைதி கெடுகையில் அச்சம்மிக அடைகையில்
ஆலம்உண்ட கண்டனை நினைப்பாய் மனமே!

3) கடன்கொடுத்தோர் துன்புறுத்துகையில்
கோள்சொல் லைக்கேட்
டின்னலைத் தருகின்ற கோபத்தோ டிருக்கையில்
பழியினைப் பெற்றுச் செய்வதறியாது திகைக்கையில்
நீலமேக சியாமளனை நினைப்பாய் மனமே!

4) பந்தங்களைப் பிடித்த கள்வரச் சுறுத்துகையில்
மதங்கொண்ட யானைபின் னால்துரத்தி வருகையில்
சிந்தை கலங்குவதேன் காகெநிலை ஆதிகேசவனைச்
சிந்தையில் தியானித்துச் சுகமடைவாய் மனமே!

மூலம் :- சங்கராபரண இராகம் ஆதி தாளம் அமைந்த
"ஆரிகெ ஆரில்லவய்ய" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 32. யாரும் சமயத்திற் குதவுவது இல்லை.

1) யாரும் சமயத்திற் குதவுவ தில்லை!
முகத்தை நோக்கியவாறு செயலின்றி நிற்பர்.

2) திருமகள் மகளாவாள் பேரன் பிரமதேவன்
கருட வாகனன்தன் மருகன் ஆயினும்
தன்னுள் அடக்கிக் கொள்ள மும்முறை
அகத்தியமுனி குடித்தபோது கடலையாரும் காக்கவில்லை.

3) திருமகளும் நிலமகளும் தாயராக இருப்பினும்
யாதவ ராயனன்புத் தந்தையாக இருப்பினும்

அண்ணன் பிரமனாக இருப்பினும் சிவபிரான்
சினங்கொண்டு பொடிசெய்கையில்
காமனையாரும் காக்கவில்லை.

4) தந்தை கடலரசன் தமக்கை திருமகள்
மிகவும் நெருங்கிய உறவினன் நாராயணன்
பிரமனும் மன்மதனும் சகலையராக இருப்பினும்
சாபம்பெற்றுக் குறைந்தசந் திரனையாரும் காக்கவில்லை.

5) கோடி தேவர்கள் அருகில் இருக்கையில்
பக்கத்தில் இந்திரன் உபேந்திரர் இருக்கையில்
மகள்பார்வதி பார்க்கையில் வீரேசன் தக்கனின்
தலையைத் துண்டிப்பதைப் பலரும்பார்த்து நின்றனர்.

6) இத்துணைப் பெரியவர்கள் இவ்வாறிடர் உறுகையில்
மயங்குமனம் கொள்மனிதரைக் குறித்துக் கூறுவதென்
காமன் தந்தை காகெநிலை ஆதிகேசவனை
மகிழ்வுடன் பாடி இன்புறுவாய் மனிதா!

மூலம் :- பைரவி இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "ஆரு சமயக் கொதகளில்ல" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 33. யாரையும் இனியார் என்று நம்பாதே

1) யாரையும் இனியரென்று நம்ப வேண்டா
யாரும் உதவார் ஆபத்து வரும்போது

2) தந்தை இனியனென்று நம்பாதே முன்பு
மகனாம் பிரகலாதனைத் தந்தை முனிந்தான்
தாயை இனியளென்று நம்பாதே அந்தக்குந்தி
மகனாம் கர்ணனுக் கிரண்டகம் எண்ணியதால்

3) மகனும் நல்லவனோ,r கம்சன் தந்தையைச்
சங்கிலியால் பிணைத்துச் சிறையில் அடைத்தானே.
உலகறிய உடன்பிறந்தான் உண்மை அன்பனோ
பகைகொண்டு வாலியைச் சுக்கிரீவன் கொல்வித்தான்.

4) தன்னுடலோடு தொடர்பானோர் உறவினர் என்றே
மனத்தில் உறுதியுடன் நம்ப வேண்டா
கருணை மிகுந்த காகெநிலை ஆதிகேசவனை
நாடொறும் நம்பி இம்மை மறுமையின்பம் அடைவாய்

மூலம் :- காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "யாரு இதவரு எந்து நம்பபேடா" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 34. அஞ்சாதிரு, பொறுத்திரு மனமே!

1) அஞ்சாதிரு பொறுத்திரு மனமே ஐயன்
நில்லாமல் வந்துகாப்பான் ஐயுற வேண்டா

2) மலையின் உச்சியில் வளரும் மரங்களுக்குப்
பாத்திகட்டி நீரைப் பாய்ச்சுபவர் யாரோ?
பிறப்பித்த ஐயன் பொறுப்பான காரணத்தால்
கருணையுடன் காப்பான் இதைஐயுற வேண்டா

3) அடவியில் அலையும் விலங்கு பறவைகளுக்
கடிக்கடி உணவை ஊட்டுபவர் யாரோ?
பெற்ற தாயைப்போல் பிரியா திருந்து
புரப்பான் இதனை ஐயுற வேண்டா

4) கல்லினுள் பிறந்து கூவும் தேரைக்
கருகுசென் றுணவை அளிப்பவர் யாரோ?
எல்லாம் வல்ல காகெநிலை ஆதிகேசவன்
நில்லாமல் வந்துகாப்பான் இதைஐயுற வேண்டா.

மூலம் :- காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "தல்ல ணிசதிரு கண்டெயா தாளு மனவெ" எனத் தொடங்கும் கீர்த்தனை. இதில் கடவுளின் காக்கும் தொழில் விளக்கப்பட்டுள்ளது.

## 36. அரியை நினைப்பதை மறவாதே

1) மறவாதே மறவாதே மயங்கும் மனிதா
நாராயணனை நன்கு நினைப்பாய் மனிதா

2) அரங்கநாதன் இருக்கையில் சிறுதெய்வங்கள் எதற்குத்
துங்கபத்திரை இருக்கையில் கிணறுமேரியும் எதற்கோ
அழகுமனைவி இருக்கையில் பொதுமகளிர் எதற்கு
மங்கலம் தருவோன் இருக்கையில் பிறதெய்வம் எதற்கு?

3) பால்பள்ளம் இருக்கையில் சிறுகுவளை எதற்கு
மேலாம்பெயர் இருக்கையில் வேறுபெயர் எதற்கு
வீரஅனுமன் இருக்கையில் வேறுகுரங் கெதற்கு
நன்மணத்துளசி இருக்கையில் கள்ளிச்செடி எதற்கு

4) பொன்மலை இருக்கையில் இரும்புக் குன்றெதற்
கிரத்தினம் இருக்கையில் கூழாங்கல் எதற்கு
நெய்யுணா விருக்கையில் மது பா னமெதற்
காதிகேசவன் இருக்கையில் சிறுதெய்வங்கள் எதற்கு?

மூலம் :- சாரங்கா இராகம் ஆதி தாளம் அமைந்த "மறெயதிரு மறெயதிரு மருளு மனுஜா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 37. தேவதேவா காப்பாய்

1) எந்தவகையில் உன்னை வணங்கித் துதிப்பேன்
அணுவளவும் தோன்ற வில்லையே

2) தேவதேவா உன்னையே நம்பி இருப்பதால்
கருணையுடன் நோக்கிக் காப்பாய் கடவுளே.

3) பாம்பரசன் படுக்கையாக இருக்கையில்
வெறுந்துணியால் ஆசனம் அமைக்கவா?
கங்கையைப் பிறப்பித்த உன்மீது
கலச நன்னீர் தெளிப்பதா?
இயல்பான நன்மண மிகுமுன்

உடல்மீது நற்சந்தனம் பூசுவதா?
எப்போதும் தாமரைஉந்தி பெற்றவுனக்கு
வேறு மலர்களை இடுவதா?

4) பளபளக்கும் பீதாம்பரம் உடுத்தவுனக்கு
வேறெந்த ஆடையை அணிவிப்பேன்?
கௌதுபமணி கழுத்தில் அணிந்தவுனக்கு
வேறெந்த அணியை அணிவிப்பேன்?
கோடிசூரியப் பிரகாசனாக உள்ளவுனக்கு
வேறெந்த விளக்கைக் காட்டுவேன்?
அருகிருந் தரவரசன் போற்றுமுன்னை
யாதுகூறிப் போற்றுவேன் தேவதேவா.

5) கோடியண்டம் வயிற்றடங்கும் உன்னை
எவ்வா றுண்பித் துவப்பேன்?
அமரர்க் கமுதம் அளித்தவுனக்
கெந்நீரை அளித்து மகிழ்விப்பேன்?
பணிந்துநின் றுபசாரங்கள் செய்கையில்
வேறெதற் காலவட்டம் வீசுவேன்?
எல்லா அணுவுள்ளும் நிறைந்தவுன்னை
எவ்வாறு வலம்வந்து வணங்குவேன்?

6) பாம்பரசன் குடையாக இருக்கையில்
வேறெந்தக் குடையைப் பிடிப்பேன்?
அல்லும்பகலும் சாமகானம் கேட்குமுனக்கு
வேறெந்தப் பாடலைப் பாடுவேன்?
உலகறிந்த திருமகள்கேள் வனாமுனக்குப்
பொற்காசைக் காணிக்கை தருவேன்?
வேதங்கள் காணாத புகழோயுனைப்
போற்றும்வகை அறிவேனோ தேவா.

7) உன்னை வணங்கும்வகை அறியேன்
புகழும் வகையும் அறியேன்
பதினாறுவகை உபசார பூசைகளில்
ஒன்றைக் கூடநான் அறியேன்.

வேதசாத்திரம் விளம்பும் பக்திகளில்
ஒன்றைக் கூடநான் அறியேன்.
அணில்சேவை யாகஎன்சே வைஏற்பாய்
காகெறிலை ஆதிகேசவனே காப்பாய்.

மூலம் :- ரேகுப்தி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஆவபரியல்லி நின்னெனாலிசி" எனத் தொடங்கும் கீர்த்தனை. இதில் இறைவனின் பேராற்றலும், நமது சிறுமையும் விளக்கப்பட்டுள்ளன.

## 38. பயில வேண்டுமா?

1) பயில வேண்டுமா குருவணக்கம் என்னும்
நாமங்களை விடாமல்

2) கேசவா நாராயணா மாதவா கோவிந்தா
பவநாசா பக்தரின் இதயகமலத் துள்ளவனே
குற்றமில்லா விட்டுணு மதுசூதனா திரிவிக்கிரமா
சுரேசா சர்வோத்தமா நாமங்களை விடாமல்

3) தாமோதரா அசுரரை அழித்தவா முராரி
வாமன சீதரா இருடிகேசா கேசவா
ராமா ரகுபுங்கவா நாமங்களை விடாமல்

4) பலராமா வாசுதேவா பிரத்தியும்னா எங்கும்
நிறைந்தவா தாமரை போன்ற கண்ணா
கிங்கரன் தந்தை அநிருத்ரா புருடோத்தமா
________ ________ நாமங்களை விடாமல்

5) நரசிம்மா அச்சுதா ஜனார்த்தனா உபேந்திரா
தாமரைமலர் பிரமன் வணங்கும்
________ ________ கிருஷ்ணா சிக்சேரனு வனமாலி
மூர்த்தியின் நல்ல நாமங்களை விடாமல்

6) காளிங்கனைக் கொன்ற பாதம்
தாமரைக் கண்ணன் காகெறிலை ஆதிகேசவனின்
________ ________ நாமங்களை விடாமல்

மூலம் :- "அய்யாசவ்னு மாபேகோ" எனத் தொடங்கும் பாடல். கோடிடப்பட்ட இடங்களுக்கு உரிய மூலபாடம் கிடைக்கவில்லை.

## 39. மேன்மை யானவன் அரிகோவிந்தன்

1) மேன்மை யானவன் அரிகோ விந்தன்
சீதர நாரா யணகோ விந்தன்

2) அமரரின் அரும்பசி அகற்றினாய்
மலர்க்கணை மன்மதன் தந்தையே
சுவைமிக்க சுருதியைக் கேட்பவனே
பிரமனைப் பெற்றவனே கோவிந்தா

3) பாற்கட லைக்கடைந் தமுதெடுக்க
மந்தரமலை யைநாட்டினாய் கோவிந்தா!
இந்திரன் செல்வம் பாழபவதைத்
தவிர்த்துநிலை பெறச்செய்தாய் கோவிந்தா.

4) பூமியைத் தூக்கிப் பாதாளம் சென்றவனுடன்
பாதாளம் சென்று போரினைச் செய்தாயே
இரணி யாக்கனை வென்ற பின்னர்
பூமியைக் கொண்டு வந்தாய் கோவிந்தா

5) தீய இரணியன் குடலைப் பிடுங்கிக்
கழுத்தில் மாலையாய் அணிந்தாய் கோவிந்தா
சிவன்முத லானதே வர்கள் புகழ்ந்ததும்
பாலகனுக் கருள்புரிந்து நின்றாய் கோவிந்தா

6) வாமன னாக்வந்து மாவலியின் கையில்
பூமியைத் தானமாய்ப் பெற்றாய் கோவிந்தா
தாமரை மலரைப் போன்ற திருவடியால்
ஆகாய கங்கையை அளித்தாய் கோவிந்தா

7) வரப்பசுவைப் பெற்ற தவம்செய் முனிவனின்
தாமரைக் கைகளில் இருந்தாய் கோவிந்தா

கல்லாய்க் கிடந்த அகலிகைக்குக் கற்பின்
பெருமையைக் கொடுத்தருள் புரிந்தாய் கோவிந்தா

8) முக்கண்ணன் சிவனின் முழுவருள் பெற்ற
இராவணன் செருக்கைச் சிதைத்தாய் கோவிந்தா
அரக்கர் ஒப்புமாறு விட்டண நம்பிக்கு
நிலையான அரசபதவி அளித்தாய் கோவிந்தா

9. வஞ்சனைகள் புரிந்த கஞ்சனின் கருத்தைப்
பிழைப்பித்து நெருப்பென நின்றாய் கோவிந்தா
மாபாரதப் போரில் அனைவரையும் நீறாக்கிப்
பூபாரம் தீர்த்த பெரியோய் கோவிந்தா

10. அழகுருவம் எடுத்து முப்புரப் பெண்களின்
மானத்தை அழியச் செய்தாய் கோவிந்தா
அரக்கரை அழித்தே அடைக்கலம் அடைந்த
அமரர் அனைவரையும் காத்தாய் கோவிந்தா

11. ஒளிமிகு மரகதக் குதிரைமீ தேறிக்
குதிரைச் சேவக னானாய் கோவிந்தா
குதிரை முதுகில் அமர்ந்தே மாசற்ற
அடியார் மனத்துள் இருப்பாய் கோவிந்தா

12. உலகைக் கெடுக்கக் கலகம் செய்யும்
பகைவராம் கள்வரைக் கொன்றாய் கோவிந்தா
நல்லோர்க் கின்பம் நல்கும் காகெநிலை
ஆதி கேசவ கிருஷ்ணா கோவிந்தா

மூலம் :- ஸ்ரீராகம் ஆதிதாளத்தில் அமைந்த "பரமபுருஷ ஹரிகோவிந்தா" எனத் தொடங்கும் கீர்த்தனை. இதில் பத்து அவதாரங்களின் பெருமைகள் விளக்கப்பட்டுள்ளன.

## 40. இராம கோவிந்தா அரி

1) இராம கோவிந்தா அரிகிருஷ்ண கோவிந்தா
தாமோ தராஅரி விட்டுனு முகுந்தா

2) மீனாக அவதாரம் எடுத்தவன்-மந்தர
மலையை முதுகில் சுமந்தவன்
வராக அவதாரம் எடுத்தவன்-கர்வம்
கொண்ட இரணியனுடல் கிழித்தவன்

3) மாவலியிடம் தானம் வேண்டியவன்-அசுரர்
குலத்தை வேருடன் அழித்தவன்
கடல்மீ தம்பு தொடுத்தவன்-அன்பு
வலைப்பட்டுக் கோபியருடன் ஆடியவன்.

4) மும்மூர்த்தி களைவென்ற திறத்தவன்-எதிர்த்துக்
குதிரைமீ தமர்ந்து திரிந்தவன்
உலகை வென்ற உத்தமன்-பாடத்
தாதிகேசவன் நமக்கே அருள்பவன்.

மூலம் :- சௌராஷ்டிர இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "ராமகோவிந்த அரி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 41. பிறவிநோய் போக்குபவனே வணக்கம்

1) பிறவிநோய் போக்குவாய் வணக்கம்
அடியார்க் கருள்வாய் வணக்கம்
பாவங்களை அழிப்பவனே வணக்கம்
பாடத் தரங்கனே வணக்கம்

2) அரியின் மகனுக் கபயம் அளித்தாய்
அரியின் மகனைக் கொன்றாய்.
அரியென்றதும் அரியுருவம் கொண்டாய்
அரியினுள் அடங்கினாய்
கோடி சூரியப் பிரகாச
முகத்தினன் என்பர்.

3) உலகை ஈரடியால் அளந்தாய்
தாமரை முறையிட்டதும் தாமரையில்
பேரண்டங் களைக்காட்டி னாயே
திருமகள் கேள்வன் நீயே.
சீதையைக் கவர்ந்த கள்வனைக்
கொன்று சீதையைச் சிறைமீட்டாய்.
தாமரைமுகத் துரௌபதியைக் காத்தவன்
காகெநிலை ஆதிகேசவன் என்பர்.

மூலம் :- பைரவி இராகம் திரிபுடை தாளத்தில் அமைந்த "பவபயவிநாசா" எனத் தொடங்கும் கீர்த்தனை. ஹரி என்பது இந்திரன், சூரியன் ஆகியோரையும் குறிக்கும். அரிமகனுக்கு அபயம்-இந்திரன் மகனாகிய அருச்சுனனைக் காத்தமை. அரியின் மகனைக் கொன்றாய்-அருச்சுனன் மூலமாகச் சூரியன் மகனாகிய கர்ணனைக் கொன்றாய். அரியென்றதும் அரியுருவம் கொண்டாய்-பிரகலாதன் அரி என்றதும் நரசிங்கமாக வெளிப்பட்டாய்.

## 42. போதும் போதும் மனிதர்க்காக உழைத்தமை

1) போதும் போதும் மனிதர்க் குழைத்தமை
திருவரங்கா போதும் மனிதர்க் குழைத்தமை

2) போதும் போதும் மனிதர்க்காக உழைத்து
வெந்து வாடினேன்
நினது திருவடியைப் போற்ற வேண்டும்
என்னும் விருப்பம் உடையேன் அரங்கா.

3) வைகறை எழுந்து பிறரின்
மனமகிழ்ச்சியை வேண்டிப்
பிணியா ளன்போல் பல்லைக் காட்டி
உழைத்துக் களைத்துப் பிறகுவெறுங்
கையுடன் வீடு சேர்வேன்-உடலுக்காகக்
கண்டகண்ட இடங்களில் அலைந்து-கடைசியில்
நடுஇரவில் உண்டுறங்குவேன்.

4) நீர்மூழ்கல் சந்திவந்தனம் நியமம்
நித்திய செபங்களை விடுத்துக்
கடையனாகித் தீயோர் மனைகளைச்
சேர்வேனோ ஓடித்திரியும்
நாயைப்போல் நாட்களைக் கழித்துத்
துராசையால் மானமழிந்து குதிப்பேனோ
கடைசியில் எள்முனை அளவு
சுகம்கூடக் காண வில்லை.

5) உடலின்பம் நாடித் தேனீக்கள்
நிறைந்த தேன்குடத்தில் விழுந்தேன்
பாசக் கயிற்றால் கட்டுண்டு
வாய்விட் டலறினேன்
என்பந்த பாசங்களைக் களைவாய்
பூமியை உடைய நரசிம்ம மாதவா
பிரமனின் தந்தையாம் பாடத்தின்
ஆதிகேசவ தேவனே!

மூலம் :- வராளி இராகம் ரூபக தாளத்தில் அமைந்த "சாகு சாகு மனுஜ சேவேயு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 43. பூவைத் தருபவர் வீட்டிற்குப் புல்லைத் தருவேன்

1) பூவைத் தருவபர் வீட்டிற்குப் புல்லைத் தருவேன்
எவ்வகையில் சேவிப்பேன் தேவா சின்மயனே

2) அரங்கநாத னேஉனது திருவடியைத் தொழுவேன்
அங்கங்களை உனது சேவைக்கே அர்ப்பணித்தேன்
அழகுருவம் காட்டிப் பிறவிப்பிணி போக்குவாய்
தம்பட்டம் அடிப்பேன் உனதடிமை என்றே

3) ஈரேழு பிறவிக்கும் உனதடிமை ஆவேன்
வேறுயாரை அடைவேன் என்செய்ய வல்லேன்
பாதகன் அஜமிளனைப் புரந்த அரங்கனே
நரசிம்ம னெனநவின்றால் குரல்கொடுப்பாய் கிருஷ்ணனே

4) கசட னாகிய நான்உன் வைணவரின்
சிறிய அடிமை. மகனோ பரதேசியோ
காகெநிலை ஆதிகேசவ உறுதியாக உரைத்தும்
விட்டுப்பிரி யினுனக்ஙரி தாசர்ம் தானைவைத்தேன்.

மூலம் :- காம்போதி இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "ஹீவுதருபவர் மனெகெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 44. எமதூதர் என்ன செய்வர்?

1) எமதூதர் என்ன செய்வர் புகல்வாய்
திருமகள் கேள்வநின் னறிமுகம் உள்ளோரை

2) பூமண்டலத் தில்பொதுமகள் ஒருத்தி தனது
கணவனின் அனுமதியுடன் விபசாரம் செய்தாள்
நகர்சோதனை செய்த அரசன் இழுத்துவந்
தவமானம் செய்தால் அஞ்சுவாளோ கூறாயரியே.

3) கள்ளத்தனம் புரிந்து தலைவற்குப் பங்குதரும்
கள்ளன் கன்னம் வைத்திடும் போதில்
கள்ள னென்றுபிடித் திழுத்து வந்தால்
காவலன்யாது செய்வான் கூறாய் அரியே.

4) மனவாக்கால் செய்த புண்ணிய பாவங்களை
உனக்கே அர்ப்பித்தேன் காலம் காலமாகப்
பெருங்கருணைக் கடலே காகெநிலை ஆதிகேசவ
யார்எத் தீங்கிழைக்க இயலும் அரியே?

மூலம் :- பந்துவராளி இராகம் அட தாளத்தில் அமைந்த "எமதூதரின்னேனு மாடுவரு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 45. பணியாளனாக வாயில் காப்பேன்

1) பணியாளனாக கவாயிலைக் காப்பேன் அரியே
வைகுந்த பதிநின தடியார் வீட்டில்

2) பிரகாரத்தைத் தூய்மைப்படுத் திச்சுற்றி வருவேன்
வந்தேகும் அடியாருடன் உரையாடி உவப்பேன்
கையில்கம் பிபிடித்துக் கடுஞ்சிறை இருப்பினும்
உளத்துன் திருச்சந்நிதி யிலிருப்பேன் அரியே

வேளைதவ றாதுனக் கூழியம் புரிவேன்
ஆலவட்டம் சாமரம் அன்புடன் வீசுவேன்
தாளம் தவறாது மேளம் முழக்கத்
திருமகள் தலைவனைக் கொண்டாடிப் பாடுவேன்.

எச்சில் தட்டுக்களைக் கழுவிக் கொடுப்பேன்
பதுமநாபனின் பாதத் தாமரைகளைத் தூய்மைசெய்வேன்
மணமிகு மலர்மாலை தொடுத்துத் தருவேன்
மாலையில் தீவட்டி தூக்கிப் பிடிப்பேன்.

வழிவழிவரும் ஆளாகி வாயிலைக் காப்பேன்
சத்திரம் சாவடிகளில் குப்பை கூட்டுவேன்
முத்தான கோலங்களை முகமலர்ந் திடுவேன்
இரத்தின கம்பளம் தரையில் விரிப்பேன்.

மனமகிழ் தொண்டினைச் செய்தவா றிருப்பேன்
எஞ்சிய எச்சிலுண வுண்டுயிர் தரிப்பேன்
பாம்புமலை உடையான் காகெநிலை ஆதிகேசவனின்
அடியார்க் கடியார்க் கடியாரின் வீட்டில்

மூலம் :- கேதாரகௌள இராகம் சாபு தாளத்தில் அமைந்த பண்டனாகி பாகிலகாய்வெ" எனத் தொடங்கும் கீர்த்தனை. னகதாசர் கருநாடகத்துத் தொண்டரடிப்பொடி ஆழ்வாராகத் திகழ்ந்தமைக்கு இக் கீர்த்தனை சான்றாக உள்ளது.

## 46. காட்சி தருவாய் அரியே

1) வாயிலைத் திறந்து காட்சிதருவாய் அரியே
கூவிய கூக்குரல் கேட்டிலையோ நரசிம்மமே.

2) பரம பதத்தில் விடநாகத் தின்மீதுநீ
திருமகளுடன் பாற்கடலில் பள்ளி கொண்டாயே
கசேந்திரன் துன்பத்தில் ஆதிமூலம் என்றலறி
அழைத்ததும் ஓடிவந் துதவினாய் நரசிம்மமே.

3) கடுங்கோபத் தால்அசுரன் ஒளிவாள் பிடித்தே
எங்குடையான் உனையுடையான் உரையென உறும
உறுதியுடன் பாலகன் விடாமல் உனைத்துதிக்க
விரைந்து தூணிலிருந்து வெளிப்பட்டாய் நரசிம்மமே.

4) எமன்மகனின் மனைவிக் காடையை அளித்தாய்
தக்க சமயத்தில் அஜமிளனைக் காத்தாய்
அடியார் அன்பனா முனக்குக்கால மென்பதுண்டா?
கமலக் கண்ணனே காகெநிலை ஆதிகேசவனே.

மூலம் :- அடாணா இராகம் ஜம்பதாளத்தில் அமைந்த "பாகிலனு தெரெது" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 47. நீ மாயையுள் உள்ளாயா?

1) நீமாயையுள் உள்ளாயா உன்னுள் மாயையா

2) வயல்ஆலயத் துள்ளா ஆலயத்துள் வயலா
வயலும் ஆலயமும் கண்ணினுள் உள்ளனவா?
கண்அறிவினுள் உள்ளதா அறிவுகண்ணுள் உள்ளதா
கண்ணுமறிவும் உன்னுள் உள்ளனவா அரியே

3) இனிப்பு சருக்கரையுள் உள்ளதா
சருக்கரைக் குள்ளினிப் புள்ளதா?
இனிப்பு சருக்கரை இரண்டும்
நாவினுள் பொருந்தி உள்ளனவா?
நாக்க றிவினுள் உள்ளதா

அறிவு நாக்கிற்குள் உள்ளது,
நாக்கும் அறிவுமா மிரண்டும்
உன்னுள் உள்ளனவா அரியே.

4) மலருக்குள் மணமோ மணத்திற்குள் மலரோ
மலரும் மணமும் மூக்கினுள் உள்ளனவா?
மணமிகு காகெறிலை ஆதிகேசவ ராயனே
உரைத்தெலனக் கியலாதெல் லாமுன்னுள் உள்ளனவா?

மூலம் :- காம்போதி இராகம் ஜம்ப தாளம் அமைந்த "நீ மாயெயொளகொ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 48. நீ என்ன செய்வாய் அரங்கனே

1) நீஎன்ன செய்வாய் அரங்கனே நான்முற்
பிறவியில் செய்த பாவப் பயனிதுவே.

2) பற்பல பிறவிகளில் தொடர்ந்து செய்துள்ள
எனக் கன்மங்களைக் களைவாயோ அரங்கா
நீயே உண்மையென் றுணைதியா னித்தால்
அஞ்ஞானம் வளரத்தடை செய்வாயா அரங்கா

3) சஞ்சிதம் பிராரப்த கன்மங்களிருந் தென்னைச்
சிறிதளவு காக்கநீ வல்லாயோ அரங்கா
ஐம்பொறியும் தங்கள் திசைகளுக் கிழுக்கையில்
வஞ்சமின்றித் தடைசெய்ய வருவாயோ அரங்கா

4) பிரமனுக் கறிவுரை புகன்று நெற்றியில்
எழுதிய எழுத்தைநீ துடைப்பாயோ அரங்கா
மேலாம் இறைவா காகெறிலை ஆதிகேசவனே!
வேறுநினைவு வரின்தடை செய்வாயோ அரங்கனே.

மூலம் :- பந்துவராளி இராகம் சாபு தாளத்தில் அமைந்த "நீனேமாடலாபெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 49. வேறு கதி யார் எனக்கு?

1) நீவிலக்கின் வேறுகதி யாரெனக்கு
வேதங்களின் உட்பொருளாம் முகுந்தனே!
இசைவிருப்பனே ஆகமப்பொரு ளேபக்தரைக்
காக்கும் கோபாலனாம் பாலகனே

2) தவமியற்றிச் செபங்களைச் செபித்தேனென்
றெண்ணினால் அவ்வறி வுதவவில்லை.
பலவரிய செயல்களை நிறைவேற்றும்
செயல்திறம் எனக்கமைய வில்லையே
தான தருமங்களைச் செய்வேனென்
றெண்ணினால் பெருஞ்செல்வம் இல்லையே
செயல்திறமும் அறிவுமற்ற சடமாம்என்னைத்
தூய்மைசெய நீயல்லால் கதியில்லை.

3) யானை முதலையிடம் அகப்பட் டலறுகையில்
மௌனமாக வந்து காத்தாய்
எதுவும் அறியாத அஜமிளனுக்குச் சாயுச்சிய
பதந்தந் தருள்புரிந் தாயே.
துருவனுக் கழிவற்ற பதவி கொடுத்துத்
தாழ்வுமனப் பான்மை தவிர்த்தாய்
அசுரரை அழித்தவனே தேவர்முனிவர்
தொழுபவனே நீஎனைக் காவாது விடுவாயோ

4) மூவேட ணைகளில் ஆசைகொண்டு மயங்கி
வெறுத்து மனம்நொந்
திகழ்ச்சிதரும் இல்வாழ்வுக் கடலில் மூழ்கி
இடர்ப்பட இயலவில்லை
ஆசையை அகற்றாமல் மோகவலை சிக்கி
நன்னிலை அடையாதின்
றடியவானன்று பறையறிந் தறிவிப்பேன்
ஆதி கேசவனே நினக்கென்று

மூலம் :- கல்யாணி இராகம் ஜம்ப தாளம் அமைந்து
"நீனுபேகூடிய மாடே" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 50. எல்லா உலகங்களும் காரணமா?

1) உன்பெரும் பெருமைக் கிவர்கள் காரணமா?

2) எல்லா உலகிற்கும் நீயாதாரம் என்பதைப்
புகழ்ந்துரைப்ப தென்னளவே பாம்பரசன் காரணமா?

3) அரியேநின் திருவடி தூய்மை என்பதற்குத்
தரணியில் வந்து பிறப்பது காரணமா?
அரிநீ என்பதற்குக் கௌத்துப மணியும்
பட்டுப் பீதாம்பரமும் பாற்கடலும் காரணமா?

4) அடியார்வேண்டி யாங்குநீ இருப்பதற்குத் துரௌபதி
கசேந்திரன் சம்பு அம்பரீசன் காரணமா?
கருணைநிறை பெருந்தகைநீ என்பதற்குத் துருவன்
அனுமன் சாந்தீபன் காரணமோ கிருஷ்ணா

5) எளிதில் அடியரைக் காப்பாய் என்பதற்
கருச்சுனன் விதுரன் அக்ரூரன் காரணமா?
கபடநாடகன் என்பதற்கு வாணாசுரன் இரணியன்
பத்துத்தலை இராவணன் கார்த்தவீரியன் காரணமா?

6) உன்னைத் துதித்து முத்தியைப் பெறுவதற்கு
வேதமும் மலைமகளும் அஜமிளனும் காரணமா?
தாமரைக்கண்ணா சத்துவகுணம்
உனக்குண் டென்பதற்குப்
பிரமனும் பிருங்கி முனிவனும் காரணமா?

7) தன்னிக ரற்ற பரமன்நீ என்பதற்குத்
தனியேநீ தங்கிய ஆலிலை காரணமா?
உலக மெங்கும் விஷ்ணுமயம் என்பதற்கு
வாக்கிற் கதிபதியாம் சத்துவகுணம் காரணமா?

8) நீகொடுக்கும் வரமே நிலையான தென்பதற்
கிந்திரசித்தின் தந்தைதம்பி வீடணன் காரணமா?
காகெறிலை ஆதிகேசவனே பக்தரைப் புரப்பவன்
என்பதற் கெல்லா உலகங்களும் காரணமா?

மூலம் :- காம்போதி இராகம் ஐம்ப தாளத்தில் அமைந்த "நின்ன மகாமகிமைக் சிந்தவரு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 51. நாராயணா வணக்கம்

1) நாராயணா வணக்கம் நாராயணா

2) கொடிய வாழ்வில் பிறப்பதைத் தவிர்ப்பாய்
முனிவர் உள்ளம் கவர்கின்ற கள்வனே
சமயத்தில் நல்ல உதவிகள் புரிபவனே
திருமகள் கேள்வனே அழகனே வணக்கம்.

3) உத்தானபா தன்மகனுக்குத் துருவபதவி
விருப்பமுடன் அளித்தாய் நாராயணா
கருங்குழலி துரௌபதியின் மானத்தை
அவைநடுவில் காத்தாய் நாராயணா
முதலையைக் கொன்று மகனைமுனி
சாந்தீபனுக்குக் கொடுத்தாய் நாராயணா
அம்பரீசன் என்னும் நல்லரசனைத்
துன்பத்திருந்து காத்தாய் நாராயணா.

4) நீர்நடுவில் முதலையால் பிடியுண்ட
கசேந்திரனைக் காத்தாய் நாராயணா
சத்குருசொல் சிறிதுதவறிய வைணவரையும்
பொறுமையுடன் காத்தாய் நாராயணா
இராவணன் தம்பி வீடணனுக்கு
நிலையான அரசளித்தாய் நாராயணா

5) தீமைகள் என்னும்மத யானைகளை
அடக்கும்வீர சிங்கமே நாராயணா
தீமைகளைத் திருத்தி அமைப்பவனே
தீயோரின் தலைமுடி உலுக்குபவனே
தீயோரை அழிக்கும் காகெநிலை
ஆதி கேசவனே நாராயணா

மூலம் :- மத்யமாவதி இராகம் அட தாளம் அமைந்த "நாராயணா நமோ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 52. மற்றொரு பெயர் எதற்கு?

1) நாராயணா என்னும் நின்பெயர் இருக்கையில்
மற்றொரு பெயரேன் இன்னும் ஐயா

2) நெடும்பாதை யாகிய நல்வழி இருக்கையில்
மலையைச் சுற்றுவ தெதற்காக ஐயா
எண்வகைப் பேற்றால்வரும் நல்லுண விருக்கையில்
எச்சில் கூழைஉண்ப தெதற்காக ஐயா.

3) புகழுறு நல்சலவைக் கல்தரை இருக்கையில்
தெருவிலுறு வெறுங்கல்லைக் கழுவுவதே னையா
தங்கத் தட்டில் அமிர்தம் இருக்கையில்
திரிந்த கூழைக் குடிப்பதே னையா.

4) வெல்லக்கட்டி கையில் இருக்கையில் காட்டிலுறு
கல்லைக் கடிப்ப தெதற்காக ஐயா
எல்லாம் வல்ல காகெநிலை ஆதிகேசவன் இருக்கையில்
சிறுதெய்வ வணக்கம் எதற்காக ஐயா.

மூலம் :- ஆரபி இராகம் அட தாளத்தில் அமைந்த "நாராயணா நின்ன நாம ஒந்திருதிரெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 53. நம்பு நாராயணனை

1) நம்பு நாராயணனை நம்பு நரஅரியை
நம்பும் அடியாரின் குலத்தைக் காப்பவனை

2) மகாபலி நம்பி பாதாளத் தரசானனான்
குலத்தோன்றல் பிரகலாதன் உண்மை உணர்ந்தான்
வீடணன்நம்பி இலங்கையின் நிலைத்த அரசானான்
அருச்சுனன் நம்பி விசுவரூபம் கண்டான்

3) அம்பரீசன் நம்பி வைகுந்தம் அடைந்தான்
திங்களணி சங்கரன் தீயிலிருந்து பிழைத்தான்
கும்பிணி தேவி கட்டினைத் தவிர்ந்தாள்
தாமரைக்கண் துரௌபதி மானம்காத்துக் கொண்டாள்.

4) பக்திமிகு அடியார்க்கு மோட்ச மளித்தாய்
மதியற்ற அஜமிளனை மேன்மைபெறச் செய்தாய்
பாற்கடலுள் இருக்கும் காகெநிலை ஆதிகேசவ
பாவங்களைப் போக்குவாய் பரம்பொருளே ஆண்டகையே.

மூலம் :- நாட்டை இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "நம்பு நாராயணனை" எனத் தொடங்கும் கீர்த்தனை. கும்பிணிதேவி பூமிதேவி.

## 54. உன் தவறா என் தவறா

1) நானாகப் பிறந்து வளர்ந்தேனோ தேவா
நின்னாணை வழிநடப் பேனென்று நவின்றபின்
உன்தவறா என்தவறா உரைப்பாய் பரமனே

2) தாயின் கருவில் ஒன்பது திங்களும்
தயையுடன் நீகாத்திரா விடிலின்று நானும்
பிறந்திருக்க மாட்டேன் பிறப்பாயென் றென்னைப்
பிறப்பித்தவன் நீயவல்லவா பகராய் தேவா.

3) குருடனின் கையில்கோல் கொடுத்து வழிநடத்தும்
வழிகாட்டி தவறிப் பள்ளத்தில் விழச்செய்யின்
குருடனின் தவறா வழிகாட்டியின் தவறா
பின்னின்று பேசாதே தவறன்றோ தேவா

4) பெற்ற பாலகன் ஆடிக்கொண் டிருக்கையில்
பாழுங் கிணற்றை எட்டிப் பார்ப்பின்
ஓடிவந் தெடுத்துத் தடுக்கா திருப்பது
பாலகன் தவறா தாயின்தவறா பரமனே

5) காக்கும்கடன் நின்னதோ அவதாறு நின்னதோ
மனைவிமக்கள் உடலுள்ளம் உனக்கே தந்தேன்.

நீரினுள் அழுத்துவாய் பாலினுள் அழுத்துவாய்
உடைமையெலாம் தந்தபின் சுங்கவரிக் கஞ்சுவனோ?

6) நீதிவழி நடந்தால் நின்னதே பொறுப்பு
நீதிதவறி நடந்தால் நவில்பவர் யாரோ
காமனின் தந்தை காகெறிலை ஆதிகேசவனே
குற்றங்களைக் கருதாது காப்பாய் ஐயனே!

மூலம் :- முகாரி இராகம் அட தாளத்தில் அமைந்த "நன்னிந்தெ நானே ஜனிசி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 55. உன்னைத் துறந்து வாழ இயலுமா அரியே

1) அரிஉன் திருவடியைத் துறந்து வாழ இயலுமா
முறைத்துப் பேசுவ தெதற்கோ உண்மை உரைப்பேன்

2) தாய்தந்தையைப் பிரிந்து தவத்தைச் செய்யலாம்
தாயாதி பந்துக்களை விட்டு விடலாம்
அரசன் முனியின் நாட்டைவிட் டோடலாம்
காமன் தந்தைஉன் திருவடியே விடுகில்லேன்.

3) உடம்பு பசித்தாலும் உணவின்றி இருக்கலாம்
வாழும் ஊரைவிட்டு விலகிச் செல்லலாம்
மனைவி மக்களை மறந்தே விடலாம்
கடலிலிருப் பவனேநின் னடிகளையும் விடுகில்லேன்

4) உயிரைப் பிறர்வேண்டின் கொடுக்க இயலும்
மானத்தால் மனத்தை அடக்க இயலும்
உயிர்த்தலைவ னாகிய ஆதிகேசவ ராயனே
ஞானவுருக் கண்ணனே நின்னடியே விடுகில்லேன்.

மூலம் :- கேதாரகௌளை இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "தொரெது ஜீவிச பகுதே" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 56. கோவிந்தா அரி கோவிந்தா

1) கோவிந் தோஅரிகோ விந்தா
கோவிந்தா கேசவா கிருஷ்ணா ஜனார்த்தனா

2) மீனாக அவதாரம் எடுத்தானே
மந்தரமலை முதுகில் சுமந்தானே
ஆமையாக அவதாரம் எடுத்தானே
ஆணவமிகு இரணியனுடல் கிழித்தானே.

3) பூமியைத் தானமாக வேண்டினானே
அரசர் குலத்தை அழித்தானே
கடல்மீ தம்பை விடுத்தானே
கமலமுகக் கோபியருடன் ஆடினானே

4) வசுதேவன் மகனாகப் பிறந்தானே
இடையர்குல மகனாக வளர்ந்தானே
சீறிய காளிங்கனைக் கொன்றானே
வஞ்சகரை எமபுரத்திற் கனுப்பினானே.

5) பூதனை மெய்யைத் தொட்டானே
முலைப்பாலை உண்டு திளைத்தானே
தீயரைக்கா லனுலகிற் கனுப்பினானே
பசுக்கூட்டம் கோபியர் காத்தானே.

6) முப்புரம் வெல்லும் சாதனை புரிந்தானே
கடையரைக் கொன்று குதிரை ஏறினானே
எல்லாச் செய்தியும் அறிந்த பெரியோனே
பாடத்தாதி கேசவன் அடியார்க் கெளியவனே.

மூலம் :- பூர்வி இராகம் ஆதி தாளம் அமைந்த, "கோவிந்தா ஹரி கோவிந்தா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 57. இன்பதுன்பம் உன்னதே ஐயா

1) உடலும் உன்னது வாழ்வும் உன்ன தரங்கனே
அனுதினம் அனுபவிக்கும் இன்பதுன்பம் உன்ன தையா.

2) இனியன இயம்பும் வேதபுராண சாத்திரங்கள்
காதினால் கேட்கும் கதைகள் நின்னுடையன
மனங்கவர் மங்கையர் அழகைக் கண்கள்
இமைக்காமல் பார்க்கும் பார்வை நின்னதே

3) சந்தனம் கத்தூரி மணம்தரு பொருள்களை
இடைவிடாது பூசி மகிழ்வது நின்னதே
அறுசுவை அறிந்து களிக்கும் நாவிற்
கறுசுவை யுண்டி அளிப்பது நின்னதே

4) மாயையாம் கயிற்று வலைக்குள் சிக்கிய
உடலும் ஐந்து பொறிகளும் நினக்குரியன
கனகனை ஆண்டானே ஆதிகேசவ ராயனே
நீயன்றி மனிதர் சுதந்திரர் ஆவரோ

மூலம் :- கேதாரகௌள இராகம் ஆதி தாளம் அமைந்த "தனது நின்னது" எனத் தொடங்கும் கீர்த்தனை. அவனன்றி அணுவும் அசையாது என்பதை இது நன்கு விளக்கியுள்ளது.

## 58. உலகின் உள்ளுயிர் நீயே

1) உலகிற் குயிரானாய் என்றே உன்னை
வேதம் விளம்பிய வார்த்தை பொய்யோ

2) வேற்றுமை இன்றிஎல்லா உயிர்களையும் பெற்ற
பூதேவி என்பவள் உனது மனைவியோ
எல்லாம் செய்யவல்ல பொருளும் பேறும்தரு
கருணைநிதி இலக்குமிநின் மனைவியோ தேவா

3) எண்பத்து நான்கு இலட்சம் வகைகளில்
பொம்மைகள் செய்து பிறவி என்பதில்

தள்ளி நெற்றியில் விதியை எழுதும்
பிரமதேவன் நின்முதல் மகனோ தேவா.

4) எல்லா உயிர்களையும் உடலின்பம் என்னும்
சுகமுண்டாக்கி மாயையால் பெண்ணினக் கருக்குள்
பிண்டங்களை உருவாக்கி அண்டங்களைக் கட்டும்
மன்மதன் என்போன்நின் இளையமகனோ தேவா

5) அசைகின்ற ஆசையா உயிர்கட் காதாரமாய்
நின்று மக்களின் பாவம் போக்கி
உலகனைத்தும் தூய்மைப் படுத்தும் புண்ணிய
கங்கை என்போள்நின் மகளோ தேவா

6) அணுவினுள்ளும் புல்பூண்டு மரத்தி னுள்ளும்
மகிழ்வோ டிருப்பதுநின் நினைவே ஐயா
எல்லாம் செய்விப்பவன் என்பதுனக் கேபொருந்தும்
காமன் தந்தையாம் காகெநிலை ஆதிகேசவனே!

மூலம் :- முகாரி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஜகதந்தர்யாமி எந்தெந்து நின்ன" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 59. காப்பாய் கருணைக் கடலே

1) காப்பாய் கருணைக் கடலே பெரும்பாவி நானே
நேர்மை என்ப தென்னிடம் சிறிதும் இல்லை

2) கொதிக்கும் எண்ணெய்க்குள் வீழ்ந்து
துதிப்பவன் அல்லேன்
தந்தையால் துயருற்ற சின்னஞ்சிறு பாலகன் அல்லேன்
ஆசையெலாம் துறந்து காட்டில் அலைபவன் அல்லேன்
பெண்ணாசை துறந்த அனுமனும் அல்லேன் ஐயா.

3) வேண்டியதை வழங்கும் மகாபலி அல்லேன்
விருப்புடன் அளிக்கும் விதுரனும் அல்லேன்
வீரராம் துரோணன் அருச்சுனன் வீடுமன் அல்லேன்
இன்முகத்துத் துரௌபதி அகலிகை அல்லேன்

4) ஆதிசேடனைப் போலப் படுக்கையாக வல்லேன் அல்லன்
கருடனைப் போல முதுகில் சுமக்க வல்லேன் அல்லன்
திருமகள் தலைவ காகெறிலை ஆதிகேசவ உனது
நல்லடியார் குழுவில் சேர்த்துக் கொள்வாய் என்னை

மூலம் :- மோகன இராகம் ஐம்பதாளத்தில் அமைந்த "காயோ கருணாகரனே" எனத் தொடங்கும் கீர்த்தனை. இது பட்டினத்தாரின் "வாளால் மகவரிந்து" எனத் தொடங்கும் பாடலோடு ஒப்புநோக்கத்தக்கது.

## 60. வேண்டிக் கொள்வேன் நான்

1) துன்புறுத்தும் தொல்லைகளை விடுவிப்பாய் என்றே
உன்னை நான்வேண்டிக் கொள்வேன் ஐயா

2) திருவடிக் கடிமை என்னும்
உறுதியான அறிவற்ற றவனாய்
மனைவிமக்களென்னும் கடலில் வீழ்ந்தேன்
கடைசியிலெனை ஆண்டவன்நீ யானாய்.

3) ஆசையெனும் கயிற்றால் கட்டுண்
டெமனின் பாசத்தால் பிணிப்புண்டேன்
வாழ்க்கையைத் தொண்டிற் கர்ப்பிக்காமல்
தொல்லைக்குள் அகப்பட்டேன்.

4) பாடுவேன் உன்பெயரைச் சீதா ராமா
ஆடு வேன்மனம் குளிர்ச்சி பெற்று
வேண்டுவேன் அடியார்க் கடிமை செய்யப்
பாடத்தாதி கேசவா அடியார்க் கன்பனே.

மூலம் :- கல்யாணி இராகம் அட தாளத்தில் அமைந்த "பேடிகொம்பெனு நானு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 61. பொறுப்பாய் எனது தவறுகளை

1) பொறுப்பாய் எனது தவறுகளை ஐயா
பொறுக்க வேண்டுவதுன் அடிமைநான் என்பதால்

2) அயனும் அரியும் உருத்திரனும் பிறதேவரும்
சமமாகார் உனக்கென்னும் வேதவாக்கு கேட்டேனே

3) கடலினுள் வாழும் உயிர்களின் பண்புகளை
ஆராய்ந் தறிந்து கூறலும் எளிதே
திருமகள் தலைவனே உள்ளுள் உள்ளவுன்னை
இன்னனென்று தெளிதல் மனிதர்க் கியலுமோ?

4) வானத்தைப் பார்த்து விளங்கும் விண்மீன்களின்
எண்ணிக்கை யைஎண்ணிக் கூறவும் கூடும்
உலகுடைய உன்சேவை புரியும் முத்தரின்
இணையில்லாப் புகழை எவர்கூற வல்லரையா?

5) இவ்வுடலில் உள்ள மயிர்களை யெல்லாம்
முனிவின்றி எண்ணி மொழியவும் கூடும்
பாம்பணைப் பள்ளியாய் காகெநிலை ஆதிகேசவ
அடியார் பெருமையை அறிதல் அரிதையா

மூலம் :- கானடா இராகம் அட தாளத்தில் அமைந்த "சமிசுவதென்ன தப்புகள" எனத் தொடங்கும் கீர்த்தனை. இது தொண்டர்தம் பெருமை சொல்லிடிற் பெரிதே என்பதை விளக்கியுள்ளது.

## 62. கடைதேற்றுவாய் கமலக் கண்ணனே!

1) கடைதேற்றுவாய் என்னைக் கமலக் கண்ணனே
கரையேற்றுவாய் கோடி சூரியப் பிரகாசனே!

2) கெட்டஇந் திரியங்களாம் துட்டரிடம் நான்சிக்கி
ஆட்டினைப் போன்று வாய்விட் டலறுகின்றேன்
சமயத்தில் உதவுவோம் எல்லாம்வல்ல உத்தமனே
கருணைக்கடல் நீயென்னும் பெருமை உண்டாகுமா?

3) பல்பிறவிக ளில்செய்த பாவமெனும் மதயானை
துதிக்கையில் எனைச்சுற்றித் துன்புறுத்து கின்றதே
மதயானை அடக்கும் சிங்கம்நீ என்னும்
மொழியை உரைக்கப் பெறுவேனோ தேவா

4) வழிகாணா துகலங்கிச் செல்கையில் அஞ்ஞானாப்
புழுதிக்குள் மூழ்கி மறைவேனோ ஐயா!
ஆமை அவதாரத்தில் அவனியை முதுகில்
சுமந்த பாடத்தாதி கேசவ ராயனே.

மூலம் :- நாதநாமக்கிரியை இராகம் அட தாளம் அமைந்த "கடெஹாயிசோ கமல லோசனேனி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 63. எவ்வாறு துதிப்பேன்

1) எவ்வாறு கொண்டாடித் துதிப்பேன் தேவா
நானறிய வல்லனோநின் பெருமைகளை மாதவா

2) அரிமுகுந் தன்நீ மனிதப் புழுநான்
பரமான் மாநீ பாமரன் நானே
கருடவா கனன்நீ மருளும் பாவிநான்
மேலாம் ஒளிநீ இருள்நிறைந் தவன்நான்

3) அணுவுள்ளும் புல்லுள்ளும் நிறைந்தவன் நீயே
கணந்தொறும் தீயவை புரிபவன் நானே
கலைமகள்கண வனைப்பெற்ற வைகுந்தபதி நீயே
நிலையற்ற உடல்கொண்ட பொம்மை நானே.

4) தூணிலிருந்து வெளிப்பட்ட ஆனந்தவுருவன் நீயே
நம்பிக்கை இல்லாத உலகினன் நானே
அம்பரீசனுக் குதவிய அக்ரூரநண் பன்நீயே
வஞ்சகன் நானே வெலற்கரியோன் நீயே

5) பாற்கடல் பள்ளிகொண்ட கருணாநிதி நீயே
கோரமான காமமும் கோபமும் கொள்பவன்நான்

பதினான் குலகிலும் நிறைந்தவன் நீயே
உன்னை இகழ்ந்துரைக்கும் தீயவன் நானே.

6) திருப்பதியில் உறைபவனாம் வேங்கடேச நினது
திருவடித் தொண்டர்க் கடிமை நானே
விருதுகள் உடையோய்நீ முறையிட்டேன் நானே
செல்வம்நிறை காகெநிலை ஆதிகேசவன் நீயே.

மூலம் :- காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஏனெந்து கொண்டாடி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 64. ஏன் நீ இங்கே பள்ளிகொண்டாய்

1) ஏன்நீ இங்கே பள்ளிகொண்டாய் உலகப்புகழ்
பெற்ற மேற்கிலுள்ள அரங்க நாதனே.

2) இருளை எதிர்த்து மலையை முதுகில் சுமந்துபின்
அழகுற நிலத்தைக் கொண்டு வந்த களைப்போ
அமரர் பகையை விரைவாகக் கொன்று வீழ்த்தி
உலகை அளந்ததால் பாதத்தாமரை நொந்தவோ அரங்கனே

3) உலகவரசர் மரபை ஒருவனே கொன்று
கோடரியை வீசியெறிந்து படுத்த பாவனையோ
மனைவியைக் கவர்ந்த மாபாவியின் தலையரிந்தோ
ஆயிரம் கோபியருடன் ஆடிய களைப்போ

4) திரிபுரத்தில் பத்தினியரின் விரதத்தை அழித்துச்
சபலத்துடன் படுத்துக் கொண்டுள்ள பாவனையோ
எண்ணற்ற அடியார்க்குக் காட்சி தருவதற்குத்
தூய்மையுடன் படுத்துக் கொண்டுள்ள பாவனையோ

5) நான்கு யுகங்களின் கடையில் குதிரையேறிக்
களைப்பாறப் படுத்துக் கொண்டுள்ள பாவனையோ
அடியராம் தேவரையும் மனிதரையும் காப்பதற்குக்
கருணையுடன் படுத்துக் கொண்டுள்ள பாவனையோ

6) இவ்வாறு நீண்டகாலம் மெய்ம்மறந்து படுத்திருப்பின்
உன்னை எழுப்புபவர் யாரென்று காணேன்
உன்னதமான காகெநிலை ஆதிகேசவ ராயனே
அழகிய திருவரங்க நகரத் தரங்கனே!

மூலம் :- சாவேரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஏகெநீனில்லி பவடிசிதெ" எனத்தொடங்கும் கீர்த்தனை. இது அருணாசலக் கவிராயர் இயற்றிய "ஏன் பள்ளி கொண்டீர் ஐயா" என்னும் கீர்த்தனையோடு ஒப்பு நோக்கத்தக்கது.

## 65. ஈசனே நின் திருவடியைப் புகழ்வேன்

1) ஈசனே உன்திருவடிப் புகழை ஆசையுடன்
பாடுவேன் குற்றங்களைக் களைவாய் கேசவனே

2) அடைக்கலம் அடைந்தேன் ஐயாஎன்னை
இறக்கும் தருணத்தில் உனது
திருவடிகளை நினைக்கச்செய் நாரணனே!

3) என்குறைகளைச் சோதித்துப் பார்ப்பாய்
ஞானத்தைப் போதிப்பாய் என்னை
அச்சுறுத்தும் எமவேதனை யிலிருந்து
விடுவிப்பாய் மாதவனே.

4) முன்பேபல் பிறவிகளை எடுத்துப்
பிறந்து பிறந்து நொந்தேனே
இன்று பிறவித்தளை போக்குவாய்
தந்தையாம் கோவிந்தா

5) தவிர்க்கத் தக்கவனென் றெண்ணாதே
இவ்வளவே வேண்டிக் கொள்வேன்
நல்லடியார் குழுவில் சேர்த்துத்
துன்பங்களை விடுவிப்பாய் திருமாலே.

6) முதலில் உன்பாத பூசையை
விருப்புடன் செய்வேன் நானே
இதயத்துள் அடங்குவாய் மதுசூதனனே!

7) சூழ்ந்துகொண் டிருக்கும் பாவங்களை
அழிந்து போகுமாறு செய்வாய்
எமவேதனை அகற்றுவாய் திரிவிக்கிரமனே

8) காமன்தந் தையுனது பெயரைப்
பெருவிருப் புடன்பாடப் பணிப்பாய்
நியமத்துடன் காப்பாய்தலைவ வாமனனே

9) அன்புடைய நினது பெருமை
முகத்தெதிரில் நிற்கும் வண்ணம்
இதயத்தி லிருத்துவாய் சீதரனே

10) பொய்புகன்று வயிறு வளர்ப்பேன்
பேரறிஞன் எனப்புகழ்ந்து பேசுவதை
ஏற்கா திருப்பாய் இருடிகேசனே

11) பிறவிக்கடலில் மூழ்கிய வனாம் நான்
கரைகாணாது தவிப்பேன் பிழைக்கும்
வழியை விளம்புவாய் பதுமநாபனே

12) காமம்கோ பம்அகற்றி உனது
நாமம்நாவில் நிலைக்கச் செய்வாய்
புரக்கும் பெரியோய் தாமோதரா.

13) தாமரைக் கண்ணனே என்னுடைய
அறியாமை அகற்றி யேஉன
தடியானாக் கித்துன்பம் துடைப்பாய்

14) எத்துணை பிறவியெடுத்தும் பயனென்ன
அடியான் ஆகவில்லை இனியென்னை
வஞ்சியா திருப்பாய் வாசுதேவனே!

15) அறிவற்ற பேதையாகி வஞ்சக்
கள்வனாம் என்னைத் திருத்தி
இதயம்தூய் மைசெய்வாய் இறைவனே.

16) தாயும் தந்தையும் நீயேயென்
றியம்புவேன் ஐயா எனக்கு
முத்தியைத் தருகஏழை பங்காளனே!

17) பெருவிருப்புடன் நினது நாமத்தை
நினைக்கச் செய்துநின் திருவடிக்
கன்பன் ஆக்குவாய் புருடோத்தமனே

18) அடியார் கூட்டத்தில் சேர்த்துனது
திருவடியைப் போற்றுபவன் ஆக்குவாய்
வேற்றுமை காட்டாதே விட்டுணுவே.

19) சரணகமலம் காட்டிக் கடையில்
காப்பாய் ஐயா என்னைக்
காக்குங்கடமை உன்னதே நரசிம்மா

20) சஞ்சிதம் என்னும் பாவத்தைச்
சிறிதள வாயினும் களைந்திட
வேண்டுவேன் தலைவனாம் அச்சுதா

21) அறிவுநிறை பக்தியைக் கொடுத்துன்
தியானத்துள் இருத்துவாய் எனது
கெட்டபுத்தியை விடுவிப்பாய் சனார்த்தனா

22) செபதப அனுட்டானம் நீநான்
ஒப்பும்வகை செய்யவில்லை என்றுகூறாதே
கோடிகுற்றம் பொறுப்பாய் உபேந்திரனே

23) முறையிட்டேன் உன்னிடம் பிறவிச்சிறை
போக்கி அடியார் கூட்டத்தில்
இருத்துவாய் என்னை அரியே.

24) என்னைப் பிறப்பிக்க வேண்டா
பிறப்பித்தால் என்னைக் காப்பாய்
இவ்வளவே வேண்டினேன் கிருட்டிணனே

25) உண்மையான உனது நாமங்களை
நாடொறும் பாடி மகிழும்
அடியேனைக் காப்பாய் கேசவனே

26) மறக்காமல் அரியின் நாமத்தை
எழுதிப்பாடிக் கேட்போரை அழைத்து
முக்திதருவன் பாடத்தாதி கேசவனே.

மூலம் :- சாவேரி இராகம் ரூபக தாளத்தில் அமைந்த "ஈச நின்ன சரண பஜனெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 66. யார்யாரைக் காத்தாயோ தேவா

1) அந்தவேளை யார்யாரைக் காத்தாயோ தேவா
இந்தவேளை என்னைக் காத்த துண்மையே

2) அழைத்ததும் தூணிலிருந்து வெளிப்பட்டிர
ணியகசிபைக் கொன்றாய்
அடைக்கலம் அடைந்தோனைக் காத்தாய் ஐயா
யானையரசன் அரியென் றழைத்தவுடன் வந்து
கருணையுடன் காத்தாய் அன்றோ அரியே.

3) நாடாளும் அரசனின் தொடைமீ தேறவியலாது
துன்பப்பட்ட துருவனைக் காத்தாய் அன்றோ
துட்டன் துச்சாதனன் துரௌபதி துகிலுரிகையில்
இளையவளுக் காடையளித்துக் காத்தாய் அரியே

4) அன்றிராவணன் விடணனை அகற்றியது கண்டு
சீதையின் கணவனாம்நீ காத்தாய் அன்றோ
மலையைச் சுமந்தவனே மதுசூதனா மாதவா
கோவிந்தா காப்பாய் பாடத்தாதி கேசவராயா.

மூலம் :- பூர்வி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஆரார காய்தெயொ தேவ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 67. என்ன செருக்கால் என்னை மறந்தாய்

1) என்ன செருக்கால் என்னைநீ மறந்தாய்
சீதையின் கணவனே ரகுபதியே கூறுவாய்

2) தேவரைச் சிறையிலிருந்து விடுவித்த செருக்கோ
யானை முறையிட்டதும் காத்த செருக்கோ
கடலில் அணைகட்டினேன் என்னும் செருக்கோ
உறுதியாக உரைப்பாய் ரகுபதியே எனக்கே.

3) கடல்நடுவில் வீடுகட்டிப் பள்ளிகொண்ட செருக்கோ
சிவன்நின் நண்பனாக இருக்கும் செருக்கோ
துரௌபதி மானத்தைக் காத்த செருக்கோ
உறுதியாக உரைப்பாய் தேவகி மைந்தனே!

4) புவியைமூன் றடியாகச் செய்த செருக்கோ
மன்மதன் நினது மகனாகிய செருக்கோ
மகாலக்ஷ்மி நினது மனைவியாகிய செருக்கோ
அன்போடெனக்குக் கூறுவாய் ஐயா அச்சுதனே.

5) மனிதரெல்லாரும் நின்னைத் துதிக்கும் செருக்கோ
அனுமன் நினதடிமை என்னும் செருக்கோ
சிறுதெய்வங் கள்நினக்கிணை யாகாத செருக்கோ
ஐயத்திற் கிடனின்றிக் கூறுவாய் நரஹரியே.

6) இன்று செருக்கால் என்னைநீ மறத்தல்
அகந்தையோ ஐயா உனக்கிதுநன் னடத்தையோ
காமன் தந்தையே காகெநிலை ஆதிகேசவனே
துன்பமெலாம் துடைத்து மகிழ்விப்பாய் அரங்கனே!

மூலம் :- கானடா இராகம் அட தாளத்தில் அமைந்த "ஆவ சிரியல்லி நீனு என்ன மறெதெ" எனத் தொடங்கும் கீர்த்தனை. நிந்தா துதிக்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

## 68. எது நல்லதோ

1) உனதங் கங்களில் எதுநல்லதோ அழகிய
தேவனே பங்காபுரத் திலக்கமி நரசிம்மனே!

2) உலகில் தந்தையின் சொல்லைக் கேட்காத
மகன்இக பரவின்பத்துப் பாத்திரம் ஆவானோ?
தந்தைசொல் கேளாப் பிரகலாதன் தந்தையுடலை
நின்கூரிய நகத்தால்கிழித் துமுத்தி அளித்தாய்

3) உலகில் அண்ணன் ஆணைமீறி நடக்கும்
தம்பி நலம்பெறத் தக்கவன் ஆவானோ

வீடணன் அண்ணனுடல் அம்பால் துளைத்துக்
கிடத்தியபின் நிலையான அரசுப்பட்டம் கட்டினாய்

4) உலகவழக்கில் குருத்துரோகம் செய்தவன் முகத்தைப்
பார்த்தவனுக்குப் பாவம்போக்கும் கழுவாய் உண்டா?
பார்க்கும் பொழுதுபிரு கத்பதிக்குத் துரோகம்
செய்தவ னுடன்நட்பு செய்துள்ளாய் அன்றோ

5) நாட்டிலோர் குடும்பத்தை அடியோ டழித்தவருடன்
உரையாட ஒப்புவரோ அறமறிந்த உத்தமர்
கௌரவரைக் கொன்ற பாண்டவருடன் வெறுப்பின்றி
நட்பூண் டவர்பக்கம் சார்ந்தாய் அன்றோ

6) உலகத் தலைவனாம் ஆதிகேசவ கேட்பாய்
புழக்கடையில் ஓரறை கட்டிக்கொள்ளக் கூடாதா
நாணமின்றி அவையின் நடுவில் மனைவியைத்
தொடைமீ தமர்த்திக் கொண்டிருப்பது பெருமிதமா?

மூலம் :- சாவேரி இராகம் அட தாளத்தில் அமைந்துள்ள "ஆவுதொள்ளெயதொ நின்னங்க" எனத் தொடங்கும் கீர்த்தனை. இதிலும் நிந்தாதுதி அமைந்துள்ளது.

## 69. திருவடிக்கு அடியானின் விண்ணப்பம்

1) செல்வச் செருக்கோ முகுந்தா நினது
திருவடிக் கடியானின் விண்ணப்பம் கேளாமை

2) எல்லார்ச் செல்வமும்பெற்ற இலக்குமி நின்மனைவி
உலகில்பல் லுயிரையும் படைக்கும் பிரமன்
நினது பெரியமகன் உயிர்களுக் குணர்வூட்டி
மதிமயக்கும் மன்மதன் நினதுசிறிய மகனன்றோ?

3) பாம்பணையில் படுத்தாய் கருடன்நின் வாகனம்
பீதாம்பரம் உடுத்தாய் கழுத்தில் வைஜயந்தி
வாடாத பூமாலை அணிந்தே உலகிற்குத்
தலைவ னென்று புகழப் பெற்றாயே.

4) எட்டுத்திக்குப் பாலகரின் நடுவில் வைகுந்த
நகரத்தில் செல்வநிறை அவையில் நாடோறும்
விருப்புடன் பாடலைக் கேட்டு நிற்கின்றாய்
பாடும் தும்புரு நாரதரால் மகிழ்ந்தே.

5) வல்லவர்க் கெல்லாம் வல்லவனாக விளங்கி
இதயத்தில் வீரமும் சாகசமும் நிறைந்தாய்
உனக்கு யாரும் இணையில்லை என்னும்
செருக்கால் என்சொல் கேளாயோ அரியே.

6) அடியாரை விரும்புபவன் எனும்விருதை வேண்டினால்
விரைந்து வந்தென்னை எளிதில் காப்பாய்
நல்லடியார் நின்னை நினைப்பர் பாம்பு
மலையில் இருக்கும் ஆதிகேசவா வேங்கடேசா.

மூலம் :- கேதாரகௌள இராகம் சாபு தாளத்தில் அமைந்த "சிரிய மதவெ முகுந்தா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 70. யாரை இடைவிடாது பாடுவேன்?

1) யாரைப் பாடுவேன் இடைவிடா தன்புடன்
அடியாரை ஆட்கொள்ளும் ஆண்டவ னென்று

2) கல்லை இளம்பெண் ஆக்கியதார் பாதம்?
பிரம தேவனைப் பெற்றவன் யாரோ?
கலியுக மக்களுக்கு யார்பாதம் கதியாகும்?
பூமியின் பாரத்தைக் குறைத்தவன் யார்ஐயா?

3) துருபதன் மகளின் மானம்காத் தவன்யார்?
அரசதருமம் நினைவில் நிறுத்தி யவன்யார்?
கருணையுடன் விதுரன் மனையிலுண் டவன்யார்?
துன்பத்தில் கசேந்திர னைக்காத் தவன்யார்?

மூலம் :- சங்கராபரண இராகம் அட தாளத்தில் அமைந்த "ஆதன பாடுவெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 71. அணுவிற்குப் பெரியதான தேவா

1) அணுவிற்குப் பெரியதான தேவா

2) அணுவிற்குள் அணுவாய் பெரியதான
பொருட்குப் பெரியதாய்
எல்லாப் பண்புகளும் பெற்ற தூய பெரியோனே
நரகத்தை நணுகும் சமயத்தில் உன்னை நினைத்தே
அரியே அரியே என்றலறச் செய்தென்னைக் காப்பாய்.

3) பார்த்து நடக்காமல் முன்புபல பிறவிகளில்
செய்த பாவங்கள் நோயாய்வந்து துன்புறுத்தவன
உடலை அடிமையாக்கி நிலத்தில் கிடத்தி
நினைவை அழிக்கும் சமயத்தில் காப்பாயே.
நரம்புகள் தன்னிலை தடுமாறி உயிரானது
நெஞ்சில் நில்லாது ஊசலாடும் பொழுதில்
அரியின் பெயரைப் பாடிப் பாடிப்
புகழும் பேற்றை அருள்வாய் ஐயனே.

4) மகனே வாவென் றழைத்து வளர்த்த
தாயும் தந்தையும் அண்ணனும் தம்பிகளும்
பிள்ளைகளும் உறவினரும் நண்பரும் அழுவர்
மனைவி இருளிலாழ்ந்தே னெனக்கதறி அழுவாள்
பெற்ற செல்வத்தால் அமைதி அடையாது
பேராசை கொண்டு பிருந்தாவன வாசவுனை
மறந்தவெனக்கு முகுந்தாவை குந்தவாசா
தரிசனம் காட்டி முத்தியைத் தருவாயே.

5) முன்செய்த பாவங்கள் பிடித்ததால் ஐம்பெரும்
பாவங்கள் புரிந்தபா வியின்தோல் உரிமினென்
றுரைக்கும் எமதூதரின் செங்கண் கண்டே
அஞ்சி நடுங்குமெனைக் காப்பாய் அரியே
அறிவழிந்து நாவடங்கி இறக்கும் சமயத்தில்
பாடத்தாதி கேசவனே அச்சுதனே முராரியே
அநாதைகளைக் காப்போனே ஆசைகளை அகற்றி
அரியென்று கூறச்செய்து முத்தியைத் தருவாயே.

மூலம் :- பைரவி இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "அணு மகத்தாத தேவா" எனத் தொடங்கும் கீர்த்தனை. இக்கீர்த்தனை "அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத் தரவணைப் பள்ளி யானே" என்னும் ஆழ்வார் பாடலை நினைவுப்படுத்துகின்றது.

## 72. சோதிடம் கூற வந்தேன்

1) நான்சோ திடம்கூற வந்ததை அறியவில்லையா?

2) சோதிடம்கூற வந்தேன்நான்
நாராயணன் அன்றியில்லென்
றற்பவழிகளில் சென்று
நாசமடை யாதிரென்று

3) எக்குநாதி கொடிய இயக்கி சலசயர்
கர்வத்தால் நிமிர்ந்த முரகா மைலாரதேவர்
கோபம்மிக்க மாரிமசணி சௌடிபைரவ தேவனாகிய
கெட்டவரோடு சேர்ந்தால் நரகை அடைவீர்

4) குளத்தின் கரையில் பொய்யர் கூடி
விடியும்வரை நீரைக் கொண்டு தருவரோ?
வெல்லம்காய்ச்சி தின்று குடம்கள் குடித்துக்
கெட்டதேவரை வழிபட்டால் நரகை அடைவீர்

5) தீயவரோடு சேர்ந்து அறிவற்ற சொற்கேட்டுப்
பொன்னையும் பொருளையும் பாழாக் காதீர்
வாழும் ஆடுகள் எருமைகளின் தலைவெட்டிப்
பலியிட்டால் கொடிய நரகை அடைவீர்

6) அருகிருப்போர் சொற்கேட்டுக் குத்தியஎல் லம்மனைவேண்டி
ஆடையின்றி வந்தவளைப் பார்த்த எல்லோரும்
வேப்பம்தழை உடுத்தித் தாங்கள் முத்தியை
அடைவோம் என்றால் சீதுா என்பீரே.

7) உலகபதி காகெநிலை உடைய வேங்கடேச
நினதடியைத் தந்து காப்பாய் கனகனை

நம்மை யாளும் பாடத்தாதி கேசவனின்
திருவடிகளைத். தியானிப்பின் முத்தியைப் பெறுவீர்!

மூலம் :- கௌரி இராகம் ஆதி தாளத்தில் அமைந்துள்ள "கணிய ஹேளபந்தெ நானு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 73. வல்லவர் என்போர் வல்லவனை அறிவதில்லை

1) வல்லவர் என்போர் வல்லவனை அறிவதில்லை
மலர்ந்த கண்ணனே முழுமுதற் கடவுளென்று

2) மன்மதன் அறிவான்- அக்கினி அறிவான்
யானைத்தோல் அணிசிவனும் கருடனும் அறிவர்
ஆதிசேடன் அறிவான் இந்திரன் அறிவான்
மூவுலகிற்கும் தலைவன் திரிவிக்கிரமன் என்பதை

3) சுகமுனிவன் அறிவான் நற்குண நாரதன் அறிவான்
பத்திநிறை பிரகலாதன் அறிவான் மகாபலி அறிவான்
உருக்மாங்கதன் அறிவான் பராசர முனிவன் அறிவான்
மகர குண்டலம் அணிந்தவனே பெரியோன் என்பதை

4) வசிட்டமுனி அறிவான் வரம்பெற்ற வீடணன் அறிவான்
அம்பில்படுத்த வீடுமன் அறிவான் விதுரன் அறிவான்
வால்மீகி அறிவான் விதேகநாட் டரசன் அறிவான்
சந்திரன் நண்பனாம் அரியே சர்வோத்தமன் என்பதை

5) அரசன் அம்பரீசன் அறிவான் ஆதிபுண்டரிகன் அறிவான்
நீதிதவ றாமனு அறிவான் சகாதேவன் அறிவான்
நம்பிய உத்தவனு அறிவான் துர்வாசன் அறிவான்
சங்குசக்கர மணிந்தவனே பாவங்களைப்
போக்குவான் என்பதை

6) ஞானத்தால் அக்குரூரன் அறிவான் சௌனகன் அறிவான்
யோகி அனுமன் அறிவான் துருவன் அறிவான்
தியாகிதருமன் அறிவான் போர்க்களத்தில்
அருச்சுனன் அறிவான்

காசெநிலை ஆதிகேசவனே முத்தியைத்
திருபவன் என்பதை.

மூலம் :- சங்கராபரண இராகம் அட தாளத்தில் அமைந்த "பல்லவரெனிபரு பல்லவனறியரு" எனத் தொடங்கும் சீர்த்தனை.

## 74. அவனே பரமான்மா

1) அவனே பரமான்மா பரதத்துவன் பிரணவனென்று
வாழ்த்தி வணங்க வேண்டாமோ
அவனது திருவடி தீர்த்தத்தைத் தலைமேற்கொண்டு
பருகினவர் உயர்ந்தனர் மனிதா.

2) மாவலியிடம் தானம் பெற்றுப் புவியை
ஓரடியால் அளந்தவன்
அபிமானம் என்னும் அசுரனை அழித்து
மனிதரைக் காத்தவன்
இராவணனைக் கொன்ற பிரமகத்திப்
பாவத்தை அசுவமேதத்தால் போக்கியவன்
கதிரோன் முதலான பேரண்டங்களெல்லாம்
ஓரடியால் அளந்தவன்

3) அசுரர் பெற்ற வரங்களை அழித்தவரை
வென்றவன் யாரோ?
கெட்டவரை அழித்ததுடன் முனிவர்க்கும்
தேவர்க்கும் பட்டத்தர சானவன்யார்?
மலைமகள் இடைவிடா துள்ளத்தின் உள்ளே
தியானிப்பது யாரை?
கௌதமமுனி சாபத்திலிருந் துபெண்ணாம்
அகலிகையை விடுவித்தவன் யாரோ?

4) வேதமுகப் பிரமனை அன்புடன் பெற்ற
ஆதிமூர்த்தி யாரோ?
நாதத்தால் அண்டமெலாம் ஆட்டுவிக்கும்
பெருமைமிகு சாத்துவிகன் யாரோ?

ஆதியில் ஆலிலைமேல் துயின்றகில மீன்ற
ஆதிமூலம் யாரோ?
ஆதிகேசவ னன்றிவேறு தெய்வமிலை
யென்றாகமம் உரைப்பது யாரை?

மூலம் :- சாவேரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஆதனே பரமாத்மா பரதத்துவா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 75. இவனே இப்போது வாசுதேவன்

1) இவனே இப்போது வாசு தேவன்
எல்லா உலகங்களும் உடையவன்
அடியவனை விரும்பித் தேரிலேறிக்
குதிரையைச் செலுத்திய வீரனே.

3) இடும்பியின் கணவன் வீமனையும் அவனுடன்
பிறந்தவரையும் கௌரவரி டமிருந்து காத்தவன்
மனைவியைக் கவர்ந்தவன் தலையை வீழ்த்தியவன்
உருக்குமணி அண்ணனைத் தீயிலிருந்து காத்தவன்.

4) சிவனின் திசையை நான்குல கிற்கும்
காட்டியவன் யானைமேல் அமர்ந்த பகைவரைத்
தடுத்துத் தன்னடியரைக் காத்த அருளிளன்
திங்கள் குலத்தரசரைக் காத்த தேவன்.

5. மிகக்கொடிய நாக பாணம்
பேரொலி செய்து வீரனாம்
அருச்சுனனைக் கொல்லவரு வதைக்கண்டதும்
தேரைநிலத் திலமுந்தச் செய்தே
அருச்சுனனைக் காத்த திருமாலாம்
ஆதி கேசவனைக் காண்பீரே.

மூலம் :- வராளி இராகம் ரூபக தாளத்தில் அமைந்த "ஈதனீக வாசுதேவனு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 76. நாராயணா என்பீர்

1) நாராயணா என்பீர்
நாரதர்க்குவரம் தருபவனை
நாராயணா என்பீர்
வேதங்கள் புகழ்பவனை
யானையைக் காத்தவனை
நாராயணா என்பீர்.

2) சிவனோடு சேர்ந்து
சிவன்நிறம் பெற்றவனை
நாராயணா என்பீர்
சிவன்விடம் பருகுகையில்
சிவனைக் காத்தவனை
நாராயணா என்பீர்.
சிவனைஅரி யாக்கியவனை
மருமகளைத் தந்தவனை
நாராயணா என்பீர்
சிவனைத் தரிசித்துச்
சிவனேதான் ஆனவனை
நாராயணா என்பீர்.

3) கருடவாக னத்தில்வந்து
யானையைக் காத்தவனை
நாராயணா என்பீர்.
கருடனனின் மூக்கினால்
கடலைத் தந்தவனை
நாராயணா என்பீர்.
கருடனின் மாமன்
முகத்தைப் பிடித்தவனை
நாராயணா என்பீர்
கருட கந்தருவ
நகரங்களில் திரிந்தவனை
நாராயணா என்பீர்.

4) பொன்னின் வாகனமாகிக்
காதில்குண்டலம் அணிந்தவனை
நாராயணா என்பீர்.
பொன்விசிரி, வீசப்படுபவனை
சிவனால் தழுவப் படுபவனை
நாராயணா என்பீர்
பொன்மயமாக விளங்கும்
தேரிலேறி அமர்ந்தவனை
நாராயணா என்பீர்.
மனத்தில் உறுதிபூண்டு
காகெறிலை ஆதிகேசவனை
நாராயணா என்பீர்.

மூலம் :- சங்கராபரண இராகம் அட தாளத்தில் அமைந்த "நாராயணா என்னி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 77. நம் தேவர் வந்துள்ளார், வருவீர்.

1) நமது தேவர் வந்துள்ளார் வருவீர்

2) செங்கண் மீனாகி நம்மரங்கன்
கெட்ட சோமனைக் கொன்றானே
கெட்டசோ மனைக்கொன்று வேதத்தைப்
பொன்னிற்குள் பொதிந்து வைத்தானே.

3) பெரிய குளத்தில் நம்மரங்கன்
மலையைச் சுமந்து நின்றானே
மலையைச் சுமந்து நின்று
தேவரைப் பெரியராகச் செய்தானே.

4) அழகுகாட்டில் பன்றியாகி நம்மரங்கன்
இரணியாட் சனைக்கொன் றானையா
இரணியாட் சனைக்கொன்று பூமியைப்
பிரம தேவனுக் களித்தானே.

5) கோபத்தில் சிங்கமான் நம்மரங்கன்
வயிற்றுக் குடலை எடுத்தானே
வயிற்றுக் குடலை எடுத்துப்
பிரகலாதனுக் குவரங்கள் கொடுத்தானே.

6) வாமன னாகவந்த நம்மரங்கன்
வானத்துமே கம்முட்ட வளர்ந்தானே
வானம்முட் டவளர்ந்து மகாபலியை
அடியமுத்திப் பாதலத்திற் கனுப்பினானே.

7) தாயின்சொற் கேட்டாயிரம் தோளுடைக்
கார்த்தவீரி யார்ச்சுனனைக் கொன்றானே
கார்த்தவீரி யார்ச்சுனனைக் கொன்று
பூமியைத் தேவர்கட் களித்தானே.

8) செங்கண் குரங்குகளுடன் சேர்ந்து
விரைந்தே இலங்கை சென்றானே
விரைந்து சென்ற நம்மரங்கன்
மனைவியைத் திருடியவனைக் கொன்றானே.

9) யமுனைக்கரை மாடுகளை மேய்த்து
பாம்பு மடுவில் குதித்தானே
பாம்புத் தலையில்குதித் தாடினானே
கோபியர்க்கு வரங்கள் கொடுத்தானே.

10) கண்டவிடங்களில் தொடையை ஆட்டிக்கொண்
டாடை யின்றிநின் றானையா
ஆடை யின்றிநின்று திரிபுரத்தின்
பெண்டிர் மனத்தைக் கவர்ந்தானே.

11) அழகிய மனைவியைக் குதிரையாக்கிக்
நற்குதிரை வீரனானா னையா
நற்குதிரை வீரனாகி மிலேச்சரின்
பெருவயிற்றில் உதைத்தா னையா.

12) பிரமன் தமருகம் இசைத்தான்
சிவபிரான் தாளத்தை இட்டான்

நற்பதங்கள் அனுமன் பாடினான்
அழகுகன கப்பன்குதித் தாடினான்.

மூலம் :- ஆனந்தபைரவி இராகம் ஏக தாளத்தில் அமைந்த "தேவி நம்ம தேவரு பந்தரு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 78. நீ எத்தகைய உறவினனோ?

1) நீஎத் தகைய உறவினனோ யாதவர்க்குள்
மானாபி மானம் சிறிதளவும் நினக்கில்லையே

2) தேவகி தேவியின் வயிற்றிருந்து பிறந்தாய் அப்போ
தன்புடன் முலைப்பால் ஊட்டவந்த
பூதனையுயிர் உண்டாய்
மாமன் கம்சனைக் கொன்றாய் மானிட வேடத்தில்
காண்டீவம் பிடித்தவனின் தேர்க்குச் சாரதி யானாய்.

3) கங்கையின் மைந்தன் பாண்டவர்க் கன்பன் நின்னிடம்
பரமபக்தி பூண்டோன் தன்னிச்சை
யில்மரணம் அடைவோன்
போரில் முற்பிறவி எதிரியாம் சிகண்டியைக் காட்டி
அம்புப் படுக்கையில் படுக்கச் செய்தாய் உபாயத்தால்

4) அத்தைக்கு மருமகளின் மகனாவான் நின்னுடன்
பிறந்தோன் மருகன் மூவுலகும் வெல்ல
வல்லானைச் சக்கர வியூகத்தில் புகச்செய்
தவனை அறுவர் கைகளால் கொல்வித்தாயே.

5) குருபதியின் மைதுனனைக் கொல்வேன் அன்று
பகல்பொழு திற்குளெனும் சாபமொழி கேட்டு
சக்கரத்தை விட்டுச் சூரியனை மறைத்தே
அருச்சுனன் கையால் சயத்ரதனைக் கொல்வித்தாயே.

6) போரின்கண் அரசனைப் பிடிப்பேன் என்றுசப தம்செய்யத்
தவசிகளை அனுப்பித் தத்துவங்களை நன்குபோதித்துக்

கபடமறியாத் தருமனின் வாயால் பொய்வரச் செய்துத்
தந்திரத்தால் போரில்வல்ல ஆசான்
துரோணனைக் கொன்றாயே

7) மறுமுறை அம்பை விடேனென்று தாய்க்குக் கர்ணன்
நம்பிக் கைதரும் சொற்கூறிய பின்போர்க் களத்தில்
தரையில் புதைந்த தேர்ச்சக்கரம் தூக்கும் வேளையில்
அருச்சுனன் கையால் கருணையின்றிக்
கர்ணனைக் கொல்வித்தாயே.

8) நகுல சகதேவரின் மாமன் உலகிலுள்ள
வீரர்களில் தலையானோன் அஞ்சா நெஞ்சனைக்
கர்ணனின் தேர்க்குச் சாரதி யாக்கி
எமன்மகன் கையால் அவனைக் கொல்வித்தாயே

9) மக்கள் அறியாது நீருக்குள் மறைந்தவனைக்
கோபம் கொள்ளும் சொற்கூறி வெளிப்படுத்தித்
தொடையில் உயிரிருப்பதைக் குறிப்பில் காட்டி
வாயுமகன் கையால் கௌரவனைக் கொல்வித்தாயே.

10) நெருப்பில் தோன்றிய துரௌபதியின் மக்கள்
ஐவரும் அரண்மனைக்கண் உறங்கிக்கொண் டிருக்கையில்
தருமன்வீமன் முதலான ஐவரை அகல்வித்துக்
குருமகனின் கையால் பாலகரைக் கொல்வித்தாயே.

11) இவ்வாறு கௌரவரைச் சுவர்க்கத்திற் கனுப்பி
மைதுனர் ஐவரை அன்புடன் காத்தே
உலகில் நற்புகழ் பெறச்செய்தான் வரம்தரும்
நம்தேவன் காகெநிலை ஆதிகேசவ ராயன்.

மூலம் :- முகாரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "நீனாவ பாந்தவனோ நிகிள யாதவரொளகெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 79. பொம்மையாட்டம் ஆட்டுவித்தான்

1) மகாபாரதப் பொம்மை யாட்டம் ஆட்டுவித்தான்
பிரமன் முதலாம் தேவரைக் காப்பதற்கே

2) குருசேத்திரம் என்னும் இடத்தில் நேர்த்தியான
மாயை என்னும் திரையை இட்டே
உலகாளும் அரசராம் பொம்மைகளை ஆட்டுவித்
தருச்சுனன் தேரமர்ந்து குதிரைக்கயிறு பிடித்து

3) நாரதன் பாட்டிசைப்பான் சிவன்முழவம் முழக்குவான்
வியாசன் கதைக்கு விளக்கம் தருவான்
உலகின் அரசரெல்லாம் இறப்பைத் தழுவ
வேத சாத்திரங்கள் நிலைபேறு பெற்றிட

4) பதினெட் டக்குரோணி பதினெட்டு நாட்கள்
கடும்போர்க் களியாட்டம் நிகழ்ந்திடச் செய்தே
அன்போ டைவரைக்காத் தவனிபாரம் இறக்கித்
திரும்பவும் பிரமகபாலம் சித்தப் படுத்தி

5) உலகின் ஐந்தாம் வேதமிக் கதையென்
றிந்திர சபையில் புகழுமாறு செய்தாய்.
இக்கதை கேட்டசன மேசயனை மேம்படுத்திக்
கபடநாடகச் சூத்திரதாரி தானென்று நிறுவி

6) இத்தகைய இனிய திருவிளை யாடல்களால்
உலகில் உள்ளார் உள்ளம் உவப்ப
நாடொறும் பக்தரைப் புரக்கும் பெரியோன்
வேதத்தலைவன் காகெநிலை ஆதிகேசவ ராயன்

மூலம் :- முகாரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பொம்பெயாடவனாடி சித மகாபாரதவ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 80. கிருஷ்ணா என்பீர்

1) தாமரை முகத்தியர் விரும்பியதை
அளிப்பவனைக் கிருஷ்ணா என்பீர்
மனத்துள் தியானிப்பார்க்கு வேண்டியன
வழங்குபவனைக் கிருஷ்ணா என்பீர்

2) நாவல்பழம் கொய்த தம்பிக்
குதவியவனைக் கிருஷ்ணா என்பீர்
அழகாடை அணிந்து மோகினியுருக்
கொண்டவனைக் கிருஷ்ணா என்பீர்
அண்ணன் எதிரியின் மக்களைக் கொன்றவனைக்
கிருஷ்ணா என்பீர்
விரித்துரைக்க அறியேன் நானிவன்
பெருமைகளைக் கிருஷ்ணா என்பீர்

3) முத்தையனின் பேரனுக்குப் பட்டம்
கட்டியவனைக் கிருஷ்ணா என்பீர்
ஒருத்திமகனாய்ப் பிறந்தொ ருத்திமகனாய்
வளர்ந்தவனைக் கிருஷ்ணா என்பீர்
சிற்றன்னை ஏவலால் வனவாசம்
சென்றவனைக் கிருஷ்ணா என்பீர்
இரணியனை வதம்செய்யத் தூணிருந்து
வெளிப்பட்டவனைக் கிருஷ்ணா என்பீர்.

4) நகத்தின் நுனியால் மலையைத்
தூக்கியவனைக் கிருஷ்ணா என்பீர்
மலர்ந்த கண்கொள் மங்கையரை
மகிழ்வித்தவனைக் கிருஷ்ணா என்பீர்
மகளின் கணவன் தலையைச்
சிதைத்தவனைக் கிருஷ்ணா என்பீர்
நற்குண நம்பியாம் காகெநிலை
ஆதிகேசவனைக் கிருஷ்ணா என்பீர்.

மூலம் :- சௌராஷ்டிர இராகம் அட தாளத்தில் அமைந்த "வனஜமுகியர மனதிஷ்டார்த்தனீவ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 81. இராமா என்பீர்

1) இராமா என்பீர் மூவுலகிலும்
வாழ்பவரே இராமா என்பீர்
பதினான் குலகினையும் தன்வயிற்றுள்
அடக்கியவனை இராமா என்பீர்.

2) சிந்தையே துமின்றி வனவாசம்
சென்றவனை இராமா என்பீர்
மக்கள்மகிழ்ந் துபோற்றும் பிள்ளைகளைப்
பெற்றவனை இராமா என்பீர்
கொம்பில் தூக்கி அவனியைக்
கொணர்ந்தவனை இராமா என்பீர்
கதிரோன் மறைவதற்குள் பகையை
அழித்தவனை இராமா என்பீர்

3) பகதத்தனின் தந்தையைப் பெற்றவளை
அளந்தவனை இராமா என்பீர்
தோள்வலியால் உலகத் தரசர்களை
வென்றவனை இராமா என்பீர்
முனிவர்களின் வனத்திருந்து மைந்தர்களைத்
தந்தவனை இராமா என்பீர்
சிவபிரான் கையில் ஆயுதம் தந்தவனை இராமா என்பீர்

4) பிணங்களைத் தின்னும் அரக்கரை
அழித்தவனை இராமா என்பீர்
புல்லைத் தின்னும் குதிரைமீது
வருபவனை இராமா என்பீர்

அணுவிலும் புல்லிலும் எங்கும்நிறைந்
திருப்பவனை இராமா என்பீர்
பிரணவத்தில் வெளிப்படும் காகெநிலை
ஆதிகேசவனை இராமா என்பீர்.

மூலம் :- பைரவி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஸ்ரீராமா என்னிரி மூஜகதவ ரெல்லா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 82. யார் அறிவார் அரிஅரனின் பெருமை?

1) யாரறி வோர்அரி அரனின் பெருமை
பிரமனாதி தேவர்க்கும் அளவிட இயலாது.

2) திரிபுரத்தை வெல்லும் சமயத்தில் தாமதித்து
நாராயணாஸ்த் திரத்தைப் பெற்றான் சிவபிரான்
கௌரியின் உள்ளம் கவர்ந்தானை அருச்சித்துச்
சங்கும் சக்கரமும் பெற்றான் திருமால்.

3) மகாபலி பக்தியைப் பாராட்டி அவன
தரண்மனை வாயிலைக் காத்தான் திருமால்
வலிய தோளுடைய வாணாசுரன் வீட்டு
வாயிலை அன்புடன் காத்தான் சிவபிரான்

4) பாம்பணை படுத்தானும் பாம்பணிந்து கொண்டானும்
பிரமனுமாகிப் படைத்தல் காத்தல் அழித்தலுக்குக்
காரண காரியமாகி யாகமாதி செயல்களுக்குக்
காகெநிலை ஆதிகேசவன் மகிமையே காரணம்.

மூலம் :- காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஆருபல்லரு அரிஅரர மகிமெயன்னு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 83. எத்தகைய பெருமை பெற்றன!

1) எத்தகைய பெருமை பெற்றன இருபாதங்கள்
சிரிகாந்தா பாடத்தரங்கா தேவதேவா அருள்புரிவாய்.

2) குட்டைப் பிராமணனாகி உலகை ஈரடியால்
தாவி அளந்த பாதம்

3) அருச்சுனன் தலையை அம்பிலிருந்து காக்கத்தேரை
நிலத்தில் அழுத்திய பாதம்.

4) சாபத்தால் பல்லாண்டு கல்லான அகலிகைக்
குயிரைத் தந்த பாதம்.

5) யசோதை கட்டியவ்ரல் இடையர்சேரி இழுத்துப்
பாம்புத்தலை மீதாடிய பாதம்.

6) குருராயன் எழாமல் அமர்ந்திருந்த அரியாசனம்
உருளச்செய்த. உன்னத பாதம்.

7) வளம்நிறை பாடபுரத் தரசாய் அடியரைக்
காக்கும் ஆதிகேசவன் பாதம்.

மூலம் :- சங்கராபரண இராகம் அட தாளத்தில் அமைந்த "எந்த கீருதி பொத்தெரடு பாத" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 84. கண்டேன் நான் பயங்கர நரசிம்மம்

1) கண்டேன் நான்கூட்ட மாய்வரும் தேவர்களில்
புயல்காற்றாம் பகைவர்க்குப் பயங்கர நரசிம்மம்

2) கிடுகிடு வெனத்தூண் நடுங்க வெளிப்பட்
டசுரனின் வேகவுரை யடங்கமயிர் பிடித்துக்
கடகட வெனநடுங்கி அவையோர் அஞ்ச
இரணியனை இழுத்துத் தொடைமேல் கிடத்தியே.

3) மார்பி லணைத்துத் தலையைப் பிளந்து
தோலை உரிக்க எலும்பும் நரம்பும்
வெளிப்படுத்தி இரத்த. வெள்ளம் பாயக்
குடலைப் பிடுங்கிக் கழுத்தில் அணிந்தானே.

4) ஊரவர் ஆவென்றலறத் தேவர்பூ மழைபொழிய
விதவித இன்னியங்கள் இனிது முழங்க
அரியே அடைக் கலமென்று பிரகலாதன் முறையிடக்
கருணைநிறை காகெநிலை ஆதிகேசவ நரசிம்மம்.

மூலம் :- நாட்டை இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "கண்டெ நா தண்ட தண்டத" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 85. மனம் மகிழச் செய்வாய்.

1) பார்ஐயா, நின்னடியார்க் கருளைச்.
செய்ஐயா, மனம்மகிழச் செய்வாய்
பிறவிநோயும் பாவங்களும் அழிப்பாய்
வாடாக்குன்றம் திருமலையின் தலைவனே!

2) ஆதியில் வேதங்களைத் திருடிச் சென்றவனை
அக்கணமே அழிப்பே னெனச்சூள் உரைத்துச்
செல்வ தெங்கேயென் றம்புமழை சொரிந்தே
அவனது செருக்கை அழித்தாய் அன்றோ
நீகருணை நிறைந்தோ னெனநான் கேட்டறிந்தேன்
உலக மக்களையும் தேவரையும் காத்திடக்
கவரப்பட்ட வேதங்களைத் திரும்பக் கொணர்ந்தாய்
முதலில்மீனா யவதரித்தானுக் கடைக்கலம் என்பேன்.

3) அமரரும் அசுரரும் பாற்கடலைக் கடைய
மந்திரமலை மத்தாக்கி வாசுகியைக் கயிறாக்கி
இழுக்க வலியைப் பொறாத அரவரசன்
கரும்புகை ஆலால விடத்தை உமிழ்ந்தான்
கர்வம் கொண்டோரையும் கருணையுடன் காக்கும்
நற்குண மிகுந்த நம்பியா சியநீ

மலையை முதுகில் சுமந்தாய் அன்றோ
ஆமையாய் அவதரித்தானுக் கடைக்கலம் என்பேன்.

4) இரணியாக்கன் என்னும் கள்ளன் பூதேவியாம்
கன்னியைக் கவர மனத்துக் கோபம்கொண்
டவனை வெல்வோரைக் காணோம் என்றதும்
உன்னுடல் மயிர்க்கூச் செறிய வராகமாகி
அசுரனைப் பின்தொடர்ந் துன்முன் பற்களால்
பற்றியிழுத் துக்கடித்துக் கொன்று வீழ்த்தினாய்.
நன்னிலையில் பூதேவியைக் கொண்டுவந்து காத்தாய்
பன்னிருபெயர் பெற்றவனுக் கடைக்கலம் என்பேன்.

5) ஏமகாசிபன் என்பானின் மகனா மொருவன்
எல்லாரினும் பெரியவ னென்று செருக்குடன்
கடுங்கோபம் கொண்டு மகனை நடுங்குவித்
தெங்குளான் நின்னரி யென்று கேட்கையில்
நெருப்புச் சுடரோடு கூடிஇடி இடித்தாற்போல்
அப்பாதக அசுரன் உடலைக் கிழித்தபின்
அன்புடன் பிரகலாதனுக் குப்பட்டம் கட்டிய
நரசிம்மமாய் அவதரித்தானுக் கடைக்கலம் என்பேன்.

6) மகாபலி வீட்டுவாயிலில் வேடம் தரித்து
மூன்றடி மண்வேண்டும் என்றுகூறி யாசிக்க
உடன்பட்டவன் தாரைநீர் வார்க்கும் போதே
குலகுரு துவாரத்தில் தடைசெய்து நிற்கக்
குருவை ஒற்றைக் கண்ண னாக்கி
வானமும் பூமியும் அளந்தபின் தலைமீது
கால்வைத்துப் பாதலத்துக் கனுப்பிவாயில் காத்தாய்
வாமனனாய் வந்தானுக் கடைக்கலம் என்பேன்.

7) இரேணுகை வயிற்றில் தோன்றித் தந்தையின்
ஆணையை மீறக்கூடா தென்னும் கொள்கையால்
ஐயமின்றித் தாயின்தலை தரித்துத் தந்தையைக்
கொன்ற அரசர் குலத்தைக் கருவறுத்துக்
கார்த்த வீரியனைக் கொன்றபின் நிலத்தைப்
பூசுரரை அழைத்துத் தானமாகத் தந்தாய்

மலர்க்கணை யோன்தந்தை திருமாலின் அவதாரம்
ஆகியபரசு ராமனுக் கடைக்கலம் என்பேன்

8) சீதையைக் கவர்ந்த கள்வனைக் கொல்ல
உலகத்துக் குரங்கனைத்தும் சேர்த்துக் கொண்டு
பாலத்தைக் கட்டிக் கடலைக் கடந்துசென்று
பூதகணங்கள் நடுநடுங்கிக் கலங்கும் வண்ணம்
வீரராம் இராவணன் கும்பகருணன் முதலா
எண்ணற்ற அரக்கரை எதிர்த்துக் கொன்றாய்.
சொல்மாறாது வீடணனுக் குப்பட்டம் அளித்த
அருள்வள்ளல் இராமனுக் கடைக்கலம் என்பேன்.

9) சகடன் குக்குடன் தேனுகாசரன் பூதனை
பகாசுரன் வத்சககன் விருசாசுரன் முதலான
வல்லசுரரை வீழ்த்தி வல்லானை யைக்கிழித்துத்
தன்னை எதிர்த்த மல்லரை வென்று
வஞ்சம் மிகுமாமன் கஞ்சன் கருத்தைப்
பிழைப்பித் தவன்மீது பாய்ந்து கொன்றாய்
செல்வம்நிறை மதுராபுரி யைஉக்கிர சேனனுக்கு
வழங்கிய கிருட்டிணனுக் கடைக்கலம் என்பேன்.

10) முப்புர மகளிரின் விரதத்தை அழிக்க
வேறொ ரரச மரமாக ஆனாய்
மகளிரின் விரதத்தைக் கெடுக்கும் நோக்குடன்
முப்புர முழுவதும் சுற்றித் திரிந்தாய்
நீரைக் குடத்தில் நிரப்பிய நாரியில்லை.
நாரிய ரிடையே நாராயணராத் திரமானாய்
செருக்கு மிகுந்த திரிபுரத்தின் மதத்தை
அழித்த புத்தனுக் கடைக்கலம் என்பேன்.

11) மதம்கொண்ட அரக்கர் மேதினியில் மிகுந்திட
தேவர்கள் நடுநடுங்கி அச்சம் கொண்டிட
அஞ்சாதீர் என்றே அபயம் அளித்துப்
பூவுலகில் வந்தவ தரித்தாய் அன்றோ
குதிரை வாகன னாகி உலகில்
தன்னை எதிர்த்த அரக்கரைக் கொன்று

முதல்நல் வார்த்தை தேவர்க் களித்த
அவதாரமாம் கல்கிக் கடைக்கலம் என்பேன்

12) தசாவ தாரம் எடுத்தரக் கரையெல்லாம்
சந்ததியுடன் அழித்துல கின்சுமை இறக்கிய
காமன் தந்தை திருவேங்க டேசன்
திருநிறை திருமலையில் நின்றகோலத் திருந்துச்
சிந்திக்கும் அடியாரைச் சிறப்புடன் காக்கின்றாய்.
யானை அரசனை அன்புடன் காத்தாய்
அரக்கரை அழித்தே அன்பரைக் காக்கும்
காகெநிலை ஆதிகேசவனுக் கடைக்கலம் என்பேன்.

மூலம் :- பூபாள இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "நோடைய நின்ன தாசர மேலே கிருபெகளனு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

1) கௌரவரைப் போரில் கொன்றனர் என்னும்
வீண்பழி வந்ததே பாண்டவர்க்கு

2) மனத்தில் பழைய பகைமை மறைத்துத்
துரியோதன னின்நெருங்கிய நண்பனாக நடித்துப்
பாண்டவரைச் சூதில் வென்று கௌரவரைத்
திட்டமிட்டுக் கொன்றவன் சகுனியோ பாண்டவரோ

3) மரணம்தன் விருப்பம் போல்எய்த வல்ல
காங்கேயன் பேடியைக் காரணம் காட்டி
அம்பில் படுத்தான் ஆருயிரை நீக்கினான்
துரியனைக் கொன்றவன் வீடுமனோ பாண்டவரோ

4) மகன்மீது மோகத்தால் போர்க்களம் விடுத்துத்
தேவர் உலகை அடைந்தான்வை ராக்கியத்தால்
உலகறிய குருகுலத்திற் குக்கேடு வருமாறு
செய்து கொன்றவன் துரோணனோ பாண்டவரோ

5) விடுத்த அம்பைத் திரும்ப விடேனென்று
தாய்க்குத் தந்த வாக்கால் ஐவரைக்
கொல்லாது போரில் தன்னுயிர் நீத்துக்
கௌரவனைக் கொன்றவன் கர்ணனோ பாண்டவரோ

6) சாதிமீது பற்று வைத்துக் கர்ணனைத்
தேர்ப்பாகன் மகனென் றிகழ்ந்து வைது
தேரிலிருந்து குதித்தோடிக் குருகுலத்தைக் கொன்றவன்
நட்புவேடத் திருந்த சல்லியனோ பாண்டவரோ.

7) நீருள் மூழ்கி இருக்கும் வேளையில்
குலத்தை அழிப்பேன் என்னும் வீமனின்
சபதம் கேட்டதும் கோபித்து வெளிப்பட்டுக்
குலம்கொல்லச் செய்தவன் துரியனோ பாண்டவரோ

8) கௌரவர் பாண்டவரிடை வேற்றுமை வளர்த்துக்
குருசேத் திரத்தில் கடும்போர் நிகழ்த்திக்
குருகுலத்தை அழித்தவன் ஐயத்திற் கிடமின்றி
இன்னல் தரும்ஆதி கேசவனோ பாண்டவரோ.

மூலம் :- ஆனந்தபைரவி இராகம் அட தாளத்தில் அமைந்த "பந்திதெ தாரு பரிதெ பாண்டவரிகெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 87. எங்கள் அன்னை செயலக்குமி

1) உன்னைவிடக் குறைந்தவளோ எங்களன்னை செயலக்குமி

2) மீனாக அவதரித்தவன் நீயாயின் அவள்
மீன்போலும் கண்களைக் கொண்டவள்
நீபேர்மிகு சங்கினைப் பிடித்தால்அவள்
சங்குக் கழுத்தைக் கொண்டவள்

3) கரிய வண்ணன் நீயா யின்அவள்
கரிய கூந்தலைக் கொண்டவள்
தாமரை உந்தியன் நீயா யின்அவள்
தாமரை முகத்தாள் ஐயா.

4) மலையொன்றை எடுத்தவன் நீயா யின்அவள்
முலைகளாம் இருமலைகளைச் சுமப்பவள்
விடநாகம் மிதித்தழித்தவன் நீயா யின்அவள்
நாகத்தைத் தன்சொல்வழி நிற்கச் செய்தவள்.

5) கஜேந்திர வரதன் நீயா யின்அவள்
கஜலக்குமி யாக விளங்குகிறாள்
*நீசிங்கமாக அவதாரம் எடுத்திருப் பின்அவள்
உன்னைத் துதித்துச் சிங்கம்மேல் வீற்றுள்ளாள்

6) பல்வே றவதாரம் எடுத்தாய்
வளம்மிகு பாடத்தில் நின்றாய்
கோபியர் மோகம் ஏற்றாய் அழகிய
திருமகள் கணவனாய் ஆதிகேசவா திகழ்கின்றாய்.

மூலம் :- காம்போதி இராகம் அட தாளத்தில் அமைந்த
" நினகிந்த குந்தேனொ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 88. கோவிந்தா என்னைக் காப்பாய்

1) கோவிந்தா என்னைக் காப்பாய் சதானந்தனே
கோவிந்தா என்னைக் காப்பாய்

2) கோவிந்தா என்னைக் காப்பாய் கமலக்கண் ணனேநின்
அடியார் திருவடிக் கடிமை ஐயா அரியே.

3) அரக்கனை அழித்து வேதத்தைக் கொணர்ந்தாய் கோவிந்தா
அமரர் வாழ அமிர்தம் அளித்தாய் கோவிந்தா
வராக மாகிப் பூமியைக் கொணர்ந்தாய் கோவிந்தா
தூணைப் பிளந்து நரசிம்மமாய் வந்தாய் கோவிந்தா
பூமியை அளக்கப் பிரமசாரி யானாய் கோவிந்தா
அமரில் அரசர்கள் அனைவரையும் கொன்றாய் கோவிந்தா
சீதைக்காகக் கடலிற் கணையைக் கட்டினாய் கோவிந்தா
அவனியில் அன்புடன் ஆக்களை மேய்த்தாய் கோவிந்தா
மகளிரின் மமதையகல நிர்வாணமாய் நின்றாய் கோவிந்தா.

4) குதிரை வாகனனே கோவிந்தா - நிந்திப்போர்க்கும்
அமைதி அளிப்பாய் கோவிந்தா - பாற்கடலில்
பள்ளி கொண்டவனே கோவிந்தா - அறியவியலா
தூய ஒளியே கோவிந்தா - அச்சுதா
சர்வோத்தமா சின்மயா கோவிந்தா - முக்தி பெறும்
நெறியைப் போதிப்பவனே கோவிந்தா - எப்போதும்
திருமகளைத் தழுவுவனே கோவிந்தா - பக்தியால்
வணங்குவேன் தசாவ தாரனே கோவிந்தா

5) மனம்என் சொல்லைக் கேட்பதில்லை கோவிந்தா
மனத்தை வெல்லும்வலி எனக்கில்லை கோவிந்தா
கனவைப்போல் உடல்நிலை யானதன்று கோவிந்தா
அரக்கரின் முடிபோல் உள்ளேன் கோவிந்தா
உடலை நீரினுள் முக்கினேன் கோவிந்தா
கமலக்கண்ண நான்நினக் குரியவன் கோவிந்தா
நாள்தோறும் வயதுவளர் கின்றதோ கோவிந்தா
கடும்பாவங் களுக்குநான் புகலிடம் கோவிந்தா
உனக்கில்லாப் பெரும்பழி என்னதோ கோவிந்தா

6) பிறவிநோய் போக்குபவனே கோவிந்தா - நின்னடியைத்
தியானிக்கும் பேறுதருவாய் கோவிந்தா - தீயன
சிந்திப்பதை விடுவிப்பாய் கோவிந்தா -துன்புறுத்தும்
கெட்டவுடலைக் கண்டிப்பாய் கோவிந்தா - நற்பண்பாம்
நிதியை நிரப்புவாய் கோவிந்தா - இதுவொரு
சுமையா உனக்குக் கோவிந்தா - கைப்பற்றி
நடத்திச் செல்வாய் கோவிந்தா - அடைக்கலமென்று
சனகாதியோர் வணங்கும் அச்சுதாகிருஷ்ணா கோவிந்தா

7) மனிதபொம்மைசெய் தாட்டுவிப்பாய் கோவிந்தா
மனிதரைப் பார்த்துச் சிரிப்பாய் கோவிந்தா
அறியாவகை அகிலமெங்கும் நிறைந்திருப்பாய் கோவிந்தா
மிக்கதூயோ னென்னும் சிறப்புடைய கோவிந்தா
பரமான்மா கரியமேகம் போன்றவனே கோவிந்தா
பரம புருடோத் தமனே கோவிந்தா
யானையரசன் அழைத்ததும் உதவினாய் கோவிந்தா

அடைக்கலம் அடைந்தாரைக் காப்பாய் கோவிந்தா
அறியாதவன் நான்நினக் குரியவன் கோவிந்தா

8) கருட வாகனனே கோவிந்தா - நின்பெருமை
அறியாதவ னானேன் கோவிந்தா - நாள்தோறும் நின்
தியானித்தில் இருப்பேனோ கோவிந்தா -ஆயிரம்கோடி
சூரியனைப் போல்பவனே கோவிந்தா - கங்கைபிறந்த
பாதத்தாய் நிர்க்குணனே கோவிந்தா - முத்தியென்பது
நின்னடி யன்றோ கோவிந்தா - வைகுந்தப்
புரத்தில் இருப்பவனே கோவிந்தா - அடைக்கலம்
செல்வம்நிறை காகெநிலை ஆதிகேசவா கிருஷ்ணா

மூலம் :- கன்னட காம்போதி இராகம் அட தாளத்தில் அமைந்த "கோவிந்தா சலகென்னன்னு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 89. கடுநரகம் வேறு யாருக்கு?

1) கடுநரகம் வேறு யாருக்குக்
கோவிந்தனை நிந்திப்பவர்க் கன்றி

2) ஐயமில்லை பன்முறை காற்றின்
மைந்தனை வணங்காதவர்க் கன்றி

3 பேசும்போ தெல்லாம் அரியை நிந்தித்துச்
சர்வோத் தமன்சிவ னென்று வாதித்
தாதார மாகச் சாத்திரங்கள் காண்பித்து
வேதப் பிரமாணம் தேடித் திரிந்து
தோற்று வஞ்சனை மனத்துள் வைத்து
நீதியைப் போதிக்கும் நீசருக் கன்றி.

4) மூலஅவ தாரங்களிடை வேற்றுமை விளம்பிப்
பண்புநிறை பண்டிதருடன் பெருவாதம் புரிந்து
காமக் களியாட் டம்பல புரிந்து
வீணில் நாடெங்கும் சுற்றித் திரிந்து
மூலகுரு கிருஷ்ண னென்றே எண்ணாது
சீலம்கெட் டழியும் தீயவர்க் கன்றி

5) வியாசரைப் பற்றிப் பேசும்போதே
நன்றிகொல்லும் பாவத்தைப் புரிபவர்
தீச்செயல் என்றால் கேளாமல்
பிறர்மகிழ்வு கண்டு வாழாமல்
பாம்பணையான் ஆதிகேசவ ராயனது
தாசர்களின் மாத்துவமதம் பழிப்பவர்க்கன்றி.

மூலம் :- பைரவி இராகம் அட தாளத்தில் அமைந்த "அந்தந்தமசு இன்னாரிகெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 90. வாசுதேவா வணக்கம்

1) வாசுதேவா வணக்கம் பாம்பணையா வணக்கம்
வாத்திய இசையுடன்தே வர்வணங்கும் பாதத்தாய்
பூசுரரால் போற்றப் படுவாய் புரப்பாய்
கேசவா நரசிம்மா எங்களை நயந்து

2) அத்தினா புரியில் தீயன் துரியன்
பாண்டவரை வஞ்சனையால் சூதில் வென்று
கணவர் ஐவரின் முன்பேதுரு பதன்மகளின்
சேலைமுந்தானை பிடித்தான் துச்சாதனன்

3) சேலையைப் பிடித்திழுத்துத் துன்புறுத்த துரௌபதி
அஞ்சி மனத்துள் பரமான்மா பரிபூர்ணா
தாமரைக் கண்ணனே காப்பாய் என்றே
முறையிட் டாளந்த வட்டாடும் அரங்கத்தில்

4) தீயின் சுவாலைக்குள் புகுந்து வெளிவரலாம்
பாம்பின் படம்பற்றி இழுத்து வரலாம்
ஆழமான நீர்நிலை யில்குதித் தெழலாம்
உயிர்குடிக்கும் கடுவிடம் குடிக்கவும் இயலலாம்

5) சாவிற் கஞ்சாமல் கழுத்தை அரியலாம்
உயிருள்ள போதே மானமிழக்க இயலேன்
எவ்வா றுன்னையே நம்பி இருக்கின்றேன்
அநாதை யாமென்னை அன்புடன் காப்பாய்.

6) கணவர் ஐவரும் சத்திய விரதத்தால் சும்மா இருக்கின்றனர்
மிகத்துன்பம் கொண்டனர் வீடுமன் விதுரன்
துரோணன் ஆதியோர்
மகன்மீது வைத்த மோகத்தால்
வாயைத் திறவா திருக்கின்றான்
ஊனக் கண்ணோடு சிந்தனைத் திறமும் இழந்த மாமன்.
7) கர்ணன் சகுனி ஆதியோர் சாபம் பெற்றனர்
நிறைந்துள்ள அவையில் நலம்நினைப்போர்
யாரும் இல்லை
கதியற் றோர்க்குநற் கதிநீயே ஆவாய் தேவா
இரதியின் கணவனைப் பெற்றவனே என்னைக் காப்பாய்.
8) காந்தாரி எனக்கே அத்தை ஆகாரோ
சாவைப்போல் பற்றியவனைத் தடுக்கக் கூடாதோ
உத்தமப் பெண்ணாம் பானுமதி நீயும்
இந்தப் பக்கம் கருணையுடன் காப்பாய்.
9) அரங்கைச் சுற்றி அமர்ந்த அனைவரும்
என்னனைய பெண்களைப் பெற்ற தில்லையா
புற்றி லுள்ள பாம்பு இறக்குமா
நல்ல தத்துவங்களை மீறியவர் ஆகாதீர்.
10. யாரிடம் உரைத்தா லுமென்முறை
யீட்டைக் கேட்பவர் யாரோ?
என்னைக் காணாது பாராமுகமாகச் செல்வர் அன்றோ?
அழைத்தால் வந்து புரப்பாய் கஞ்சனைக்
கொன்றநின் னையன்றி
வேறு யாரெனக்கு நெருங்கிய உறவாய் உள்ளவர் ஐயா.
11) தரும தேவதைக ளாம்கணவர் என்னைப்
பணயம் வைத்தனர்
காக்கும் சுமையுன் னதேயென்று நம்பும்
அநாதை யானவளை
நீருள் அழுத்துவாய் பாலினுள் அழுத்துவாய்
உன்னிச்சை வழியே
நீயே எனக்குக் கதியாவாய் நாராயணா
என்னைக் காப்பாய்.

12) அசுரன் பின்தொடர்ந்து துரத்தும்போது
பசுபதியைக் காத்தாய்
முனிவனின் சாபம் நீக்கி அம்பரீசனைக் காத்தாய்
நிலமிசைக் கல்லாய்க் கிடந்த அகலிகையைக் காத்தாய்
பத்திநிறை பாலனாம் பிரக லாதனைக் காத்தாய்.

13) சிறுவன் துருவனுக்குப் பெயர்பெற்ற பதவி தந்தாய்
பத்துத்தலை அரக்கன் தம்பிக்குப் பட்டம் அளித்தாய்
மகனின் பெயரைக் கூவிய அஜமிளனைக் காத்தாய்.
வசுதேவன் மகனே விரைந்துவந் தென்னைக்காப்பாய்.

14) இலக்குமி உள்ளம் கவர்ந்தாய் கரும்பு
வில்லோன் தந்தையே
இயக்கர் கந்தருவர் அமரர் இந்திரன்
முனிவருனை வணங்குவரே
திருவிளை யாடல்பல புரிபவனே உலகை
விரும்பிக் காப்பவனே
தூல சூக்குமப் பொருள்களில் எங்கும்
நிறைவாக இருப்பவனே.

15) பதினான்கு புவனமும் பாலித் தருள்பவனே
அனுமனுக் கயன்பதம் அன்புடன் அளித்தவனே
பார்வதி கணவனின் நண்பனே கருட
வாகனனே தேவா அநாதையைக் காப்பாய்.

16) தந்தை தாய்நீயே உறவும் நட்பும் நீயே
குலதெய்வம் குலகுரு பாட்டனாய் உள்ளவன் நீயே
இன்றென் மானம் அபிமான மனைத்தும் தந்தையாம்
முகுந்தனே நின்னிடம் தந்தேன் என்னைக் காப்பாய்.

17) கொன்றாலும் நன்மையே காத்தாலும் நன்மையே
என்றெண்ணிக் கண்களை மூடிகை களைக்குவித்
தின்றிறப்பதே நன்றென்று நிச்சயித் துறுதியுடன்
கோவிந்தா என்றாள் மான்கண்ணாள் துரௌபதி

18) இவ்வகை துரௌபதி முறையிடு வதைக்கேட்
டுள்ளுயிராம் கண்ணன் துவாரகைப் பதிக்கண்

தேவியர் உருக்குமணி சத்திய பாமையுடன்
அரண்மனை இருந்தவன் அதனைத் தெளிந்தான்.

19) பத்தினி துரௌபதி உடுத்தும் ஆடைகளாகி
மகிழட்டு மென்று வரமீந்தான் கண்ணன்
தன்னை நினைப்பவர்மீது செலுத்தும் கருணையே
எண்ணற்ற ஆடைகளாய் வந்து வளர்ந்ததே.

20) இழுத்தவா நிருந்தான் கள்ளன்
வளர்ந்தவா நிருந்தனஆடைகள்
வெள்ளை நீலம் முதலான பலநிற விசித்திர வண்ணங்களில்
கடலைத் தூர்க்கும் வகையில்
வந்தவா நிருந்த போதுபற்றி
இழுத்தவா நிருந்த பாவி மூர்ச்சித்துத்
தரைமேல் விழுந்தான்.

21) சகுனி துரியன் ஆதியோர் முகவொளி குன்றினர்
அருகு நின்ற பணியாளரை அழைத்தாணை இட்டான்
ஆடைகளை எடுத்துச்சென்று பண்டக
சாலையில் வைப்பீர்
என்றிடும் போதுணர்வு பெற்றனள் மென்கண் துரௌபதி

22) கோபத்துடன் துரௌபதி கண்திறந்து பார்த்ததும்
மலைபோல் குவிந்திருந்த ஆடைகள் அனைத்தும்
சட்டென நெருப்புபற்றி நகரெங்கும் ஒளிபரப்பும்
அப்பெரு நெருப்பில் ஆகுதி ஆயினவே.

23) கொடுத்தாள் சாபத்தைக் கமலக்கண்ணாள் குருபதிக்கு
வல்லவன் வீமன் வன்போர்க் களத்தில்
கதையால் அடிக்கையில் தொடைகள் பிளக்கவென்
றிட்ட சாபம் தவறுவ துண்டோ?

24) கதிரவன் மறைந்தான் தூமகேது தோன்றியது
கழுகுகளும் காக்கைகளும் ககனத்தில் வட்டமிட்டன
விலங்குகள் போரிட்டன சிலைகள் அசைந்தன
அஞ்சிய அவனியும் கடகடவென நடுங்கியதே.

25. விண்மீன்கள் கூடித் தீமையை அறிவித்தன
அசரீரி வாக்குகளும் தீமைகளை அறிவித்தன
நகரமாந்தர் கௌரவர்க்குக் கேடு வருமென்று
நிச்சயித் தோடி வீடுசென்று புகுந்தனரே

26. விதுரனும் வீடுமனும் மனத்துள் மகிழ்ந்தனர்
தேவர்கள் ஒன்றுகூடி வானில் நிறைந்தனர்
சயசயவென் றுவாழ்த்தித் துரௌபதி முடியின்மீது
மணம்மிகு மலராம் மழையைப் பொழிந்தனரே

27. அரியின் நாமங்களை நவின்றவாறு தேவேந்திரன்
தன்னுடைய அரண்மனைக்குத் திரும்பிச் செல்கையில்
அரியின் நாமத்தை நினைப்பவர் புண்ணியரே
துரௌபதியைக் காத்த தென்றே எண்ணினனே.

28. பெரும்புலர் காலையி லெழுந்து பக்தியுடனும்
மனத்தூய்மை யுடனும் ஓதுபவர் கேட்பவரின்
பாவங்களைப் போக்கி மேலாம் ஞானத்தை
நல்கி நலங்கள் தருவான்நா ராயணனே.

29. வாசுதேவன் இயம்பினான் உருக்குமணி தேவியிடம்
என்வார்த்தை கேட்பாய் நடக்கவிருக் கும்போரில்
பார்த்தனுக்குச் சாரதியாய்த் தேரை ஓட்டுவேன்
பாண்டவர் என்னுடைய இன்னுயிர் ஆவாரே.

30. மீன்ஆமை வராகம் நரசிம்மத் திற்குமங்கலம்
பரசுராமன் இராமன் கிருஷ்ணனுக்கு மங்கலம்
புத்தகல்கிக் குமங்கலம் பிரமருத்திரர்க்கு மங்கலம்
மதுவென்னும் அரக்கனை மாய்த்தானுக்கு மங்கலம்

31. ஆனையைக் காத்த அருள்நிதிக்கு மங்கலம்
துரௌபதி மானத்தைக் காத்தானுக்கு மங்கலம்
காகெநிலை ஆதிகேசவ ராயனுக்கு மங்கலம்
மலைமீது வாசம்செயும் மாயனுக்கு மங்கலம்

மூலம் :- பூபாள இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "வாசுதேவாய நமோ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

# 91. உன்னை நான் என்ன சொன்னேன்? அரங்கனே!

1) உன்னை நான்என்ன சொன்னேன் அரங்கனே
உன்னை நான்என்ன சொன்னேன்
உன்னை நான்என்ன சொன்னேன் சின்மய மூர்த்தியே
பாம்பில் படுத்தவனே பாற்கடல் உடையோனே கிருஷ்ணா!

2) வேதத்தைக் கவர்ந்த அரக்கனைக் கொன்றாய்
பாற்கடலில் இட்ட மந்தரமலை சுமந்தாய்
அரக்கனைக் கொன்ற வனியைக் கொணர்ந்தாய்
நரசிம்மா உனக்குவணக் கமென்றே னேயன்றி

3) நீருள் புகுந்தவன் என்றேனே - முதுகின்மீது
மலையைச் சுமந்தவன் என்றேனே - நிலத்தை
அகழ்ந்து சென்றவன் என்றேனே - அரக்கரைப்
போரிட்டுக் கொன்றவன் என்றேனே அன்றி

4) நிலத்தைத் தானமாகப் பெற்று மூவடியாக அளந்தாய்
கோடரி கைக்கொண் டரசர் அனைவரையும் அழித்தாய்
திருவடியால் தீண்டிக் கல்லைப் பெண்ணாகச் செய்தாய்
யாதவ பதியே வணக்கம் என்றேனே அன்றி

5) வாமனனாய் வந்தவன் என்றேனே - பெற்றதாய்
தலையைத் துண்டித்தவன் என்றேனே - காட்டில்
போர்க்கு நின்றவன் என்றேனே - பூதனைமுலை
பருகிக் கொன்றாயெனப் புகழ்ந்தேனே அன்றி

6) சித்தம் கவரும் அழகுள்ள முப்புர
உத்தமப் பெண்களின் விரதம் கெடுத்தாய்
கல்கியாய் அவதரித் தரக்கரை அழித்தாய்
உத்தமன் இராமனெனப் புகழ்ந்தேனே அன்றி

7) நிர்வாணமாய் நின்றவன் என்றேனே - குதிரையில்
அமர்ந்து வருபவன் என்றேனே - அடிக்கடி
அவதரிப் பவன்என் றேனே - ஆதிகேசவா
தசாவதார அரியெனப் புகழ்ந்தேனே அன்றி

மூலம் :- சாரங்கா இராகம் அடதாளத்தில் அமைந்த "நின்ன நானேனெந்தேனொ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 92. இன்றுநீ அழைத்து வருவாய்

1) இன்றுநீ அழைத்து வருவாய்-வரக்கூடாதா
கோவிந்தன் கோபம் கொண்டானா
விரக தாபத்தால் வாடுகின்றேன்
அவனை அழைத்துக் காண்பிப்பாய்.

2) நொந்தவென் மனத்திற் கவன தொப்புதலைத்
தந்தமைதி உண்டாக்கி ஆனந்தப் படுத்துவாய்
என்றுமே நானவனைப் பிரிய கில்லேன்
அவனைக் கூட்டுவிப்பாய் அன்புத் தோழியே.

3) காலின்றி அசைந்து வேதத்தைத் தந்தான்
காலில்லாதா னைப்பெற்றான் அமிர்தத்தைத். தந்தான்
காலைத் தூக்கி மதம்கொண்ட யானையை
உதைத்துக் கொன்ற உத்தம் வீரன்

4) காலின்கண் கங்கை பிறந்தாள்
காலால் நடந்தான் பரசுராமன்
காலால் காளிங்கனைக் கொன்றான்
காலால் நடந்துதிரி புரம்வென்றான்
குதிரைவா கனன்காலை வணங்குவேன்.

5) கண்ணிமையாது பார்த்தான்-தலைகுனிந்து
குறுக்குப் பாதையில் அலைந்தான்-தூணிலிருந்து
விரைந்து வெளிப்பட்டான் அரசரை அழித்தான்
சிவனது வில்லை முறித்தான்-தேவகி
மைந்தனாய்ப் பிறந்தான் குதிரைமே லேறினான்
கடலின் அடியிருந்து மலையைச் சுமந்தான்
அமிர்தத்தை அமரர்க் களித்த ஐயன்
வாமன உருவன் கோடரி பிடித்தவன்
பத்துத் தலையனைக் கொன்றான் வெண்ணெய்

திருடினான் இளமகளிர் விரதத்தை அழித்துக்
குதிரை மீதேறி அமர்ந்தானே.

6) மீன்ஆமை வராகம் நரசிம்மம்
தாயைக் கொன்ற பரசுராமன்
சபரிக்கு வரமளித்த இராமன்
கன்றினை மேய்த்த கண்ணன்
நிர்வாண மாய்நின்ற புத்தன்
குதிரை வாகனனாய் வந்தவன்
அரக்கன் மார்பைக் கிழித்தவன்
அறிவுநிறை பிரமசாரி யானவன்
உலகை வென்ற கிருஷ்ணன்
முப்புரத்தில் திரிந்த புத்தன்
நீரில்திரி யும்ஆமை வராகம்
நரசிம்மன் அரக்கன் கழுத்தை முறித்தவன்
மானிடர்க் கரசன் யதுவீரன் புத்தன்
குதிரை மேலேறிய ஆதி கேசவன்

மூலம் :- மத்யமாவதி இராகம் திரிபுடை தாளத்தில் அமைந்த "இந்துநீ கரெது தாரெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 93. அழைத்து வருவாய் பிரமன் தந்தையை

1) அழைத்துவா தோழி அயனின் தந்தையை
ஆயிரம் பேர்கொள் அரியை அழைத்துவா
உயிரான வனைநான் மறக்க இயலேன்
கோடி சூரிய ஒளியாய் விளங்குவோன்.

2) இந்திராதி தேவர்க் கினியன செய்வோன்
மலையை முதுகில்சுமந் தவனியைப் புரப்போன்
கைலையை எடுத்தவனின் தலைகளை வீழ்த்தியவன்
பார்வதி பதியை உடற்கண் கொண்டோன்.

3) பாதலத்திற் குச்சென்று பூமியைக் கொணர்ந்தவன்
அரக்கனைக் கொன்று மனைவியை அடைந்தவன்

வேதத்தைக் கவர்ந்தவனின் மார்ப்பைப் பிளந்தவன்
தாய்க்குநற் சொற்கூறிய அபிமன்னன் மாமன்.

4) கட்செவிப் பகையாம் கருட வாகனன்
கண்ணால் அறிந்து கற்பனைகள் புரிபவன்
கண்ணைக் காட்டித் தானம் கேட்டவன்
அண்ணனின் கண்களைக் காலால் தொட்டவன்

5) மந்தர மலையை நகத்தால் தூக்கியவன்
ஆக்களை அழியாது காத்த கண்ணன்
மந்தை மேய்த்தவன் மன்மதனைப் பெற்றவன்
தந்தையாம் பாடத் தாதி கேசவன்.

மூலம் :- ஆனந்த பைரவி இராகம் அட தாளத்தில் அமைந்த *கரெதாரெ காமினி கமலஜபிதன எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 94. தோழியே விரைந்து காட்டுவாய்

1) காண்பிப்பாய் விரைந்து தோழியே பெரிய
முத்துமாலை எனக்குச் சுமையாக உள்ளதே
பதினான் குலகையும் புரக்கும் அருள்நிதி
மனைக்கு வாராமல் இருப்பதேன் தோழியே.

2) எமதர்மன் மகனாம் உதிட்டிரன்
வாயிலிருந்து பொய்புகலச் செய்தவனைக்
கதிரோன் மகன்விடுத்த அம்பிலிருந்து
காக்கத் தேரழுத்திய தேவனைக்
கதிரோனை மறைத்துச் சயத்ரதன்
தலைதுணிக்க அருச்சுனற் கறிவித்தவனைக்
கதிரோனுடன் சபதம்செய்து திரிந்தவனின்
மகனைக் கொன்றவனைக் காண்பிப்பாய்.

3) அபிமன்னன் மாமன் ஆகிய தேவனை
இருட்டில்சென் றரக்கனை உடல்நசுக்கி வதைத்தவனைத்
தத்துவங்கள் அறிந்த நன்மொழிகள் நவின்றவனைக்
கங்கையைப் பெற்றவனை அழைத்துவா தோழியே!

4) தவமுனிவ ரெல்லாரும் சர்வோத்தமன்
யாரென்று சோதிப்பீர் என்னலும்
வந்து கோபித்த பிருகுமுனியின்
திருவடியை விரைந்து தொழுதவனைப்
பரம பக்தரையும் தேவரையும்
அடைக்கலம் தந்து காப்பவனைக்
காகெறிலை ஆதிகேசவனை என்றென்றும்
மறக்க இயலேன் தோழியே!

மூலம் :- கேதாரகௌளை இராகம் அட தாளத்தில் அமைந்த "தோரெபேகனெ சகி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 95. நல்லவனை அழைத்துக் காண்பிப்பாய்

1) தாமரை முகத்தாளே விரகதாபம்
தாங்க இயலவில்லை.
வல்ல மல்லரை வென்ற
நல்லவனைத் தருவாய் தோழியே!

2) பாம்புப் பகைகருடனில் வரும்உலகத் தலைவன்
பார்வதியின் கணவன் சிவனுறை
கைலையை எடுத்தவனை அழித்தவன்
பகலில் மோகம் கொண்டவன்
தம்பியருடன் பகைமை கொண்டவனைச்
சிறுவனாய் இருந்தபோதே மாமனை
மாய்த்தவனைக் காண்பிப்பாய்.

3) குருட்டரசன் மைந்தரைக் கொன்றே ஐவரைக் காத்தவனைத்
தந்தையினும் பெரியனென் றெண்ணி அகந்தை மிகக்கொண்
டன்ற வையில் வைதவனை விரைந்து வதைத்தவனைப்

பாற்கடல் கடைகையில் பிறந்தவளை
மணந்தவனைக் காண்பிப்பாய்.

4) மங்கல வேதத்தைத் திருடி நீரினுள் புகுந்தவனைப்
பின்தொடர்ந்து சென்றவன்
உடல்பிளந்து வேதம் தந்தவனை
மங்கலம் நிறைந்தோன் பாம்பணையான்
பெண்மானம் காத்தவனைத்
தாமதியாது காகெறிலை ஆதிகேசவனை
நரசிம்மனைக் காண்பிப்பாய்.

மூலம் :- மோகன இராகம் அட தாளத்தில் அமைந்த "குல்லவதனெ கேளெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 96. தாமரை முகத்தாளே நீ காண்பிப்பாய்

1) தோழியே கேட்பாய் மோகன உருவன்
அமரர்கள் வணங்குபவன் நூறுகோடி சூரியவொளியன்
தூய சரிதம் கொண்ட கண்ணனைத்
தாமரை முகத்தா ளேநீ காண்பிப்பாய்

2) நாவில் கலைமகளை இருத்திய பிரமனையும்
மன்மதனையும் பெற்றவனைத் தந்தையின் சொற்படித்
தாயைத் தடிந்தவனின் சாபம் பெற்ற
சூரியன்மகன் கன்னன் விடுத்த நாகாத்திரம்
மிகவேகமாக வருகையில் தேரை அழுத்திப்
பூமியில் பதித்துத் தன்னன்பன் பார்த்தனைக்
காத்தவனை அழைத்துத் தோழியே காண்பிப்பாய்.

3) நாக்கிரண்டுடை நாகத்தைப் புசிப்பவனின்
மேலேறி வருபவனைச்
சிவனுறை கைலைமலை பெயர்த்தவனைப்
போரில் கொன்றவனைச்
சீதையின் தாயாம் பூதேவி யின்மகனை வதைத்தவனைத்
தன்னவரைக் காக்கும் தேவனைத் தோழியே காண்பிப்பாய்.

4) தீயிலுதித்த துரௌபதி துகிலைப்பிடித்
திழுத்தவனின் தங்கையை
மணந்தவன் தலையைத் துண்டித்தவனைக்
குருமகன் அம்பிலிருந்து
பாண்டவரைக் காத்தவனை அடியார்க்கு
வரம்தந் தருள்பவனைப்
பாம்புமலை காகெநிலை ஆதிகேசவனை
நீஅழைத்து வருவாய்

மூலம் :- பைரவி இராகம் அட தாளத்தில் அமைந்த "ரமணி கேளௌலெ மோகன சுபகாயன" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 97. அடியாரை மன்னித்துக் காப்பவன்

1) அழகுமுகம் கொள்தோழி தேவர் உலகில்
திருமகளை விரும்பிய தேவனைக் காண்பிப்பாய்.

2) சிவனின் தலையிருந் திறங்கிய கங்கையின்
மகனாம் வீடுமனின் பேரர்களைக் காத்தவன்
பாம்பைப் பிடித்துப் பலதுண் டாக்கும்
கருட வாகனத்தில் உலகைச் சுற்றுபவன்
இருளாம் அஞ்ஞானத் தையெதிர்த் ததனை
முற்றும் அழியச் செய்த தீரன்
இறந்த மகனைப் பிழைக்கச் செய்த
இறைவனை என்னிடம் அழைத்து வருவாய்.

3) பன்னிரண்டாம் விண்மீன் பெயர்பெற்ற உத்தரையின்
பெற்றோர் வீட்டில் மறைந்து வாழ்ந்த
அரசியாம் துரௌபதி மானம் காத்தவன்
பாம்பில் படுத்த வேலாபுரத் தரசன்
தன்னை நினைக்கும் அடியாரை மன்னித்துக்
காக்கும் ஆதி கேசவனைக் காண்பிப்பாய்.

மூலம் :- காம்போதி இராகம் அட தாளத்தில் அமைந்த "ராஜவதனெ சுர ராஜன புரதொளு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 98. அரியை நீ அழைத்துக் காண்பிப்பாய்

1) திங்கள் முகத்தாளே மான்கண் மங்கையே
அகோபலத் தரியைநீ அழைத்துக் காண்பிப்பாய்

2) திங்களுடன் பிறந்த திருமகளை மோகித்துப்
புளகாங் கிதம்கொண்டு மணந்த பெருமாள்

3) வேதத்தைக் காத்தவன் பன்றியாகி உலகைக்
காத்தவன் சிற்றன்னை ஏவலால் காட்டில்
திரிந்தவன் நரசிம்மனும் வாமனனும் ஆனவன்
அறம்காக்க அவதரித்துக் கோவர்த்தனம் தூக்கியவன்
முப்புர மங்கையர் மானம் அழித்தவன்
குதிரைச் சேவகனு மானவன் பாடத்
தாதி கேசவனை அழைத்துக் காண்பிப்பாய்.

மூலம் :- மோகன இராகம் அட தாளத்தில் அமைந்த "ஹரிமுகி ஹரிவாணி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 99. இரகுவீரனை அழைத்துக் காண்பிப்பாய்

1) மான்கண் மங்கையே திங்கள் முகத்தாளே
சிவன்நண் பனரியை அழைத்துக் காண்பிப்பாய்

2) ஒளிபடைத்த கண்ணாள் ஊர்வசியின் சாபத்தால்
பேடியின் உருவம் பெற்ற அருச்சுனன்
ஓராண்டு மறைவாழ்வு நீங்கும்வரை காத்திருந்
ததன்பிறகு பேரொலியுடன் பகைவரை வென்று
பசுக்களை மீட்டுக் கொணரச் செய்த
ஆண்டவன் அரியை அழைத்துக் காண்பிப்பாய்.

3) வசுதேவ னுடன்பிறந் தவளின் மகனாம்
சிசுபாலனை விரைந்து வதம்செய் யாமல்
நூறுமுறை அவன்பிழை பொறுத்த பின்னர்
வதைத்த தீரனைப் போரில் பகைவரது
கொடிகளை வீழ்த்தி அழித்த வீரனை

பார்வதி தேவியின் அண்ண னான
அண்ணல் அரியை அழைத்துக் காண்பிப்பாய்.

4) நான்கு வேதங் களையும் கவர்ந்து
கடலில் புகுந்த கள்வனை மீனாய்
அவதாரம் எடுத்துக் கொன்ற வீரனை
உலகைத் தேவர்க்குத் தந்த தீரனாம்
காகெநிலை ஆதி கேசவனை
இரகுவீரனை அழைத்துக் காண்பிப்பாய்.

மூலம் :- சாவேரி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஏன நயனெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 100. சீதாபதி இரகுநாதன்

1) சீதையின் கணவன் இரகு நாதன்
இவனோ தோழி இவனோ

2) அழிவில்லா தென்றும் அவனியைக் காப்பவன்
கதிரோன் மகனைச் சாபம்பெறச் செய்தவன்
வனத்தில் வாழ்ந்த பாண்டவர்க் குதவியவன்
அமைதியாகப் பாற்கடலில் பள்ளி கொள்பவன்

3) முப்புரத்தின் மானம் அழித்தவன் குதிரைமீது திரிந்தவன்
பாற்கடலில் பிறந்த பெண்ணின்மேல் மோகம் கொண்டவன்
பெருமை மிகுவீரன் அகோபலத் தரசன் கனக்னுக்கு
நற்கதி தந்திடும் காகெநிலை ஆதி கேசவன்.

மூலம் :- சாரங்கா இராகம் அடதாளத்தில் அமைந்த "சீதாபதி ரகுநாத" எனத் தொடங்கும் கீர்த்தனை. 91-வதிலிருந்து 100-வது கீர்த்தனை வரை நாயகநாயகி பாவத்தில் பாடப்பட்டுள்ளன.

# 101. கோகுலத்தில் ஒரு கள்வன்

1) கோகோகோ என்பீர் ஆயர்கள் அனைவரும்
கோகோகோ என்பீர் - நமது
கோகுலத்திற் கொருகள்வன் 'வருவா னென்று.

2) பூதனை முலையில்பா லுண்டவளைக் கொன்ற
முத்தான கள்வன் கோகோ
களவுசெய் தோடிய அரக்கர் அனைவரையும்
காலால் உதைத்த கள்வன்கோ.
கருடனின் பகையாம் பாம்பை மிதித்தாடிய
முத்தான கள்வன் கோகோ
மாதோர் பாகனின் கையிலிருந்த தலையைத்
தந்திரத்தால் எடுத்த கள்வன்கோ.

3) செம்பருத்தி மல்லிகை மாலையின் அழகினை
வென்ற கள்வன் கோகோ
சோழி மாலையும் பீதகஆடை யும்அணிந்த
மேகவண்ண மெய்யனாம் கள்வன்கோ
அஞ்சாமல் ஆயர்கள் மனைகளில் பாலை
எச்சில்படுத் தியகள்வன் கோகோ
மாலையில் கணவரை அழைக்கும் பெண்டிரை
அச்சுறுத்திய கள்வன் கோகோ
கேசரி முதலாம் அரக்கரைக் கொன்ற
வேடதாரி கள்வன் கோகோ
வஞ்சத்தால் மாவலியிடம் தானம் வேண்டிய
நாடொறும் குறும்புசெய் கள்வன்கோ.
மிகுதியான உணவைக் குழந்தையாய் இனிதுண்ட
வேடதாரி கள்வன் கோகோ.
ஆயிரம் பெயர் பெற்றோன் ஐம்பத் தாறு
நாடுகளின் நாயகனாம் கள்வன்கோ.
மிகுதியான உணவைக் குழந்தையாய் இனிதுண்ட
வேடதாரி கள்வன் கோகோ.
ஆயிரம் பெயர்பெற்றோன் ஐம்பத் தாறு
நாடுகளின் நாயகனாம் கள்வன்கோ.

5) ஆக்களுடன் விளையாடி மேலுலகத்திற்கு நடந்த
சூரனாகிய கள்வன் கோகோ.
பூமகளின் மருமகனை எடுத்துத் தூரத்தில்
வீசியெறிந்த கள்வன் கோகோ
கோகுலத் தில்பிறந் தாயர்களின் கைகளில்
வளர்ந்த கள்வன் கோகோ
துன்பத்திற்குத் துணையாகி உலகம் அனைத்தையும்
கவர்ந்த கள்வன் கோகோ.

6) பாற்கட லிலுள்ள வைகுந்த நகரை
அடைவிக்கும் கள்வன் கோகோ
துவாரகைப் பதியைக் கடலில் மூழ்கச்செய்த
ஊர்க்கள்வன் வந்தான் கோகோ
துவாரகை ஆண்ட உபய தாசரைத்
தன்னூர்க்குக் கொணர்ந்த கள்வன்கோ
காரணத் திற்காகக் காகெநிலை ஆதிகேசவன்
பால்வெண்ணெய் திருடிய கள்வன்கோ.

மூலம் :- சௌராஷ்டிரா இராகம் அட தாளத்தில் அமைந்த "கோகோகோ என்னிரொ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 102. தொடாதே அரங்கனே

1) தொடாதே என்னை அரங்கனே
என்னைத் தொடாதே.

2) தொடாதே எனதுமுன் கைவளையிலுள்ள
முத்துக்கள் சிதறுமே முத்தான அரங்கனே.

3) அங்கே ஒருத்தியுடன் ஆடிவருவது கண்டேன்
இங்கே பொய்சத்தியம் செய்யா திருப்பாய்
அங்கை யிலுள்ள பாயசப் பானையைக்
கண்டதும் பிடுங்கிச் சென்றாயே துட்டா.

4) குளத்தின் கரையில் மணலை அளைந்து
தோழியரோ டாடுகையில் கற்றாயோ குறும்பினை

துடுக்குத்தனம் புரிவோய் விடுஎன் முந்தானையை
காகெநிலையில் வசிப்பவனே கனகனுக் கருள்பவனே.

மூலம் :- ஆனந்த பைரவி இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "முட்டதிரோ என்னன்னு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 103. கூடினர் கோபியர் எல்லோரும்

1) கூடினர் கோபியர் எல்லோரும்
கண்ணனின் கையைப் பிடித்துக்கொண்டு
மனச்சுமை யோடுவந்து யசோதையிடம்
முறையிட்ட டனர்மிக வேகமாக

2) பெருங்கள்ளன் நின்மகன்
மிகுதியான வெண்ணெய் திருடித் தின்றான்
பானையி லிருந்த பால்தயிர் முழுவதும்
பருகி விட்டான் துளியளவும் இல்லாமல்

3) அம்மா யிவள்பொய் பகர்கின்றாள்
வெறுமனே புகார்செய் கின்றாள்
மூடிமுத்திரை இடப்பட்ட பானையைத்
திறக்கும் வல்லமையுடை யவனோநான்

4) சிறுகுழந்தை யென்றெண்ணி அம்மாநான்
மோரைக் கடைந்துகொண் டிருக்கையில்
ஓசையின்றி வந்துதழுவிக் கொண்டான்
தனங்கள் இரண்டும் பிடித்தான்.

5) கூறுவேன் அம்மா கேட்பாய்
இவளேவே தாளமாக விளங்குகின்றாள்
பாலகனா கியநானிவள் உயரத்திற்
கெட்டித் குதித்துத்தொட இயலுமா?

6) வீட்டில் பிள்ளைகள் படுத்திருக்க நான்நீர்
எடுத்துவரக் குடத்துடன் சென்றபோது

பிள்ளைகள் வாயெல்லாம் வெண்ணெயை அப்பினான்
துடுக்குத் தனமான செயலிது வன்றோ?

7) பெண்களில் பாதகியிவள் பிள்ளைகளுக்கு
வயிறுநிரம்ப உணவளிப்ப தில்லையே
கனிகாய் கண்டாலும் விடாதவர்கள்
வெண்ணெயை விட்டு விடுவரோ

8) களைப்புடன் மஞ்சத்தில் படுத்திருக்கையில்
படமெடுத்த பாம்பைக் கொணர்ந்தான்
அறியாவகை வந்துகாலின் கீழ்விட்டு
விரைந்தோடிப் போனான் அங்கிருந்து

9) நடுங்கச்செய் நாகத்தைப் பிடிப்பேனோ
சீற்றத்தைத் தடுக்க இயலுமா?
வேண்டுதலை நிறைவேற்றாக் காரணத்தால்
நினைவுறுத்த வந்திருக்கும் அம்மா!

10) மக்களைப் பெற்றோர் கண்ணன்மேல்
இத்தகு குறைகளைக் கூறலாமா?
கையும்களவு மாகப்பிடித்து வந்தால்
தக்க தண்டனைநான் வழங்குவேன்.

11) அணுவினி லுள்ளான் நின்மகன்
சின்மய உருவன் காண்பாய்.
உடலால் மாயங்கள் பலசெய்த
காகெநிலை ஆதிகேசவன் அம்மா.

மூலம் :- சங்கராபரண இராகம் அட தாளத்தில் அமைந்த "நெரெது கோபியரெல்லரு" எனத் தொடங்கும் கீர்த்தனை. இதில் குழந்தைக் கண்ணன் தன்மீது குற்றம் இல்லை என்று தக்க காரணங்களைக் கூறுவது சுவை மிக்கதாய் உள்ளது.

# 104. சரியோ இதுசரியோ கோபி

1) சரியோ இதுசரியோ கோபி இதுசரியோ
நினது மகனுக்கு நன்னடத்தை கற்பிக்கக் கூடாதா?

2) மாலையில் வந்த கள்ளன் வீட்டினுள் நின்றான்
மலர்க்கொடியே வாவென் றியம்பி
முன்கூந்தலைத் திருத்தினான்
மதிப்புறு சால்வை எனக்கணி வித்துமுத்தம் இட்டான்.
தாமரைக் கண்ணியே சட்டையை அவிழ்ப்பாய் என்றானே.

3) விரித்த குடுமியுடன் கணவன் மெய்ம்மறந்
துறங்குவதைக் கண்டு
விரித்த குடுமியை மஞ்சத்தின்
சட்டத்தில் சுற்றிக் கட்டினான்
மாட்டுத் தொழுவம் எரிகின்ற
தென்றோலமிட அதனைக் கேட்டு
விரைந்தெழுந் தவன்குடுமி அறுபட்டு
நிலத்தின்மேல் விழுந்தான்ன்றோ.

4) கோலா கலத்துடன் பண்டிகையைச்
செல்வச் செழிப்போடு கொண்டாடப்
பெரும்பாத் திரம்நிரம்பப் போளியைச்
செய்துவைத்து நீரெடுக்கச் சென்றேன்
திரும்பியபின் ஒருபோளி கூட இல்லை
குடம்நிறை பால்மோர் முழுதும்
கள்ளத் தனத்தால் குடித்தபின் வந்தசுவடு
தெரியாவகை ஓடினானே

5) ஊரினுளிவ் வாறாயிற் றென்று மூவர் மொழிந்தோம்
காட்டி னுள்பல பெண்கள் நின்றுகொண் டிருந்தோம்
நூறுபெண் களாகிய நாங்கள் பால்விற்றுத் திரும்பி
வரும்வழி யில்குழல் ஒன்று கிடப்பதைக் கண்டோம்.

6) பெண்களாம் நாங்கள் ஆடையை
அவிழ்த்துக் கரையில் வைத்துவிட்டு
நீரில் விளையாட லுக்கென்று
அனைவரும் நீரில் குதித்தோம்
கள்ளனாம் நின்மகன் கண்டான்
ஆடைகளை எடுத்துச் சென்றே
உயரமான மருத மரத்தின் மேலேறி எங்களை நோக்கினான்.

7) நீராடிய பின்னர் நான்கு திக்குகளிலும் நோக்கினோம்.
ஆடைகள் வைத்த இடத்திலின்றி மாயமாய் மறைந்திருந்தன
கிருஷ்ணனைத் தவிர இல்லை
என்றெண்ணி எட்டுத்திக்கும் ஓடினோம்
மரத்தின் நுனிக்கொம்பர் நின்ற நின்மகனைப் பார்த்தோம்.

8) கைகளை மூடிக்கொண்டு தலைவணங்கிக் கேளிர்
வணங்கியதும் ஆடைகளை வழங்குவேன் உங்கட்கென்றான்
ஒருகையை மூடியதும் மறுகையை மூடுமென்றான்
கட்டுண்டோ மென்றவ்வாறு நாங்கள் செய்தோம்.

9) மலர்களைப் பறித்துச் சென்றும் எதுவும் ஆகவில்லை
கைகளைத் தட்டியவாறு வலமாக வருவீர் என்றான்
எவ்வளவோ நேரம் தடையின்றிச் சயசய வென்றே
கைகளைத் தட்டியவாறு மரத்தைச் சுற்றித் திரிந்தோம்

10) இளம்பெண்களே சீழ்க்கை எழுப்பியவாறு
சுற்றிவருவீர் என்றான்
விதவிதமான ஆடைகளை இழந்து விட்டோம் நாங்கள்
நகைப்பிற் கிடமா னோமென் றெண்ணிப்
பீபீஎன்றே சீழ்க்கை ஒலிசெய்து சுற்றிவந்தோம்

11) கடையாட்டம் கமலமுகத் தியரேவி தென்றான்
மற்றவர் காணாவகை ஒவ்வொருவரா
கத்தருவேன் என்றான்
குறவனிடம் சிக்கியவர் போன்றே ஆடினோம் நாங்கள்
பின்பற்றி ஓடினோர்க் கெல்லாம் ஆடைகளை அளித்தான்.

12) சிறியபெரிய வண்ண ஆடைகளை அணிந்து கொண்டு
குனிந்த தலைநிமிரா வாறு திரும்பி வந்தோம்
கள்ளன் நின்மகன் காகெறிலை ஆதிகேசவ ராயன்
பிள்ளைத் திருவிளையாடல்
புரிந்தெங்களைத் திருப்பி அனுப்பினான்.

மூலம் :- சங்கராபரண இராகம் சாபு தாளத்தில் அமைந்த "சையோ இது சையோ" எனத் தொடங்கும் கீர்த்தனை. இது கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளையாகத் திகழ்ந்ததை விளக்கியுள்ளது.

## 105. இன்று பொறுப்பீர்

1) இன்று பொறுப்பீர் கண்ணன் தவறை
இனிமேல் உங்கள் வீட்டிற்கு வாரான்

2) மகவு சிறிதளவு வெண்ணெய் திருடினால்
கயிற்றால் இறுகக் கட்டுதல் சரியோ
அளவற்ற புகழோனை அச்சுறுத்தல் எதற்கம்மா?
உங்கள் குழந்தையாகப் பாவித்தல் கூடாதா?

3) சிறுகுழந்தை யைக்கண்டு முத்தளித்துக் கொஞ்சாமல்
வெண்ணெய்க் கள்ளனென்று கூறுகின் றீர்களே
உலகத்தில் எனக்கு மட்டுமா அவன்மகன்?
உங்கள் குழந்தையாகப் பாவித்தல் கூடாதா?

4) எத்தனையோ முறைகள் வேண்டா என்றேன்
கேளாது துட்டருடன் விளையாடு கின்றான்
கெட்டியான வெண்ணெய் நானே தருவேன்
விடுவித் தனுப்பம்மா ஆதி கேசவனை

மூலம் :- சங்கராபரண இராகம் ஏக தாளத்தில் அமைந்த "இந்துசைசிரிசிரி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 106. வீடுவரை வருவாய்

1) வீடுவரை வருவாய் காவேரி அரங்கனே
வராவிடின் என்னுயிர் நிலைக்குமோ அரங்கனே

2) அத்தையின் மைதுனனே என்மகளை மணப்பவனே
அத்தை பெரியஅத்தை எனக்கூறி முத்தளித்து

3) மைதுனா வருக மாமனே மருகனே தம்பியே
மாமன் மனைவி மருகியின் மகளை மணந்தவனே

4) பிரமனைப் பெற்ற ஆதிமூர்த்தி அரங்கனே
தூணைப்பிளந் துதோன்றிய் ஆதிகேசவ அரங்கனே.

மூலம் :- சாரங்கா இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "பாரோ நம்ம மனெதனக" எனத் தொடங்கும் கீர்த்தனை. 101-லிருந்து 106-வரை கீர்த்தனைகள் கண்ணனின் லீலைகளை விளக்கியுள்ளன.

## 107. முற்பிறவி வினை விடலறியாது

1) முற்பிறவி வினையிது விடலறி யாது
சிந்தித்துக் கலங்குதல் எதற்கோ மனிதா?

2) கடலைத் தாண்டி இலங்கை சென்ற அனுமன்
இராவணனின் இலங்கையை எரித்துப் புகழைப் பெற்றான்
சீதையைக் கண்டு வந்ததை இராமனிடம் இயம்பினான்
ஆயினும் அழகுருவைக் கொடுக்க வில்லை அரியே.

3) பதினான்கு புவனமும் திரிபவன் சூரியன்தேர்
ஒற்றைச் சக்கரமும் ஏழுகுதிரை களுமுடையது
வான்வழி சுற்றித் திரியும் அருணனுக்கு
வேண்டிய கால்களைக் கொடுக்கவில்லை அரியே

4) ஆயிரம் பெயர்கொள் பாடத்தாதி கேசவனைச்
சலிப்பின்றித் தோளில் சுமந்து கொண்டு

நாடெல்லாம் பறந்து சுற்றிவரும் கருடனின்
மூக்கின் வளைவை நீக்கவில்லை அரியே.

மூலம் :- கல்யாணி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பிராசீனகர்மவிது" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 108. முன்வினை விடாது

1) யாராக இருப்பினும் முன்வினை விடாது
பிரமன் எழுதியபடி எதுவும் நடக்கும்

2) வீர பைரவ னென்பர் ஆடையின்றி இருக்கும்
மாரி மசணி என்பர் கூழைக் குடிக்கும்
சூரிய சந்திர னென்பர் இராகுவால் விழுங்கப்படுவர்
ஆறுதலை யான்கையில் பிச்சை எடுக்க ஓடிருக்கும்.

3) சத்திய அரிச்சந்திரன் சுடுகாட்டில் அடிமையானான்
படைக்கும் பிரமன் தலையை இழந்தான்
எண்திக்குப் பாலர்கள் சிறையில் உள்ளனர்
வானாள் இந்திரனின் உடலெல்லாம் கண்களே.

4) பதினொன் றக்குரோணி வலிஞுள்ள கௌரவன்
போர்க் களத்தில் தொடைபிளந்து வீழ்ந்திருந்தான் அன்றோ
கமலக்கண்ணன் மாவலியிடம் தானம் வேண்டினான்
தருமராய னின்தாய் பிச்சை எடுத்தாளே

5) தரும ராசன் கங்கபட்ட னானான்
சூரனாம் வீமன் பாணசிக னானான்.
வீரன் அருச்சுனன் கையில் வளையணிந்தான்
நகுலசக தேவர்குதி ரைக்காவலர் ஆயினரே.

6) அரனின் வாகனன் புல்லைத் தின்பன்
பிரமனின் வாகனன் தாமரையைத் தின்பன்
அரியின் வாகனன் பாம்பைத் தின்பன்
காகெநிலை ஆதிகேசவன் வெண்ணெய் திருடினானே.

மூலம் :- காம்போதி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஆரிகாதரு பூர்வ கர்ம" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 109. காரணம் ஆவாய் நீயே

1) யாராக இருப்பினும் முன்வினை தவறாது
வேறொன்று சூழினும் தான்முந் துறுமே.

2) இராம பிரானுக்குத் தொண்டு செய்தவன்
அரக்கனின் ஆணவத்தை அடக்கித் திரும்பிய
உடலெல்லாம் இலிங்கம் உடைய அனுமனுக்குக்
கிராமங்களைக் காப்பதே கதியாக ஆயிற்று

3) இந்திரனை வென்றமிர்தம் கொணர்ந்து தாயின்
துன்பத்தைத் தவிர்த்துப் பரம பக்தனாய்
அரியின் வாகனமாகிப் பதினான்கு புவனமும்
பறந்துதிரி கருடனுக்கு மரமேமனை ஆயிற்று.

4) உலகச்சுமை தாங்கி அரனின் ஆபரணமாகிப்
படத்தினுள் மாணிக்கம் மறைத்துக் கொண்டு
அரியின் படுக்கை யாகியபாம் பரசனுக்குக்
காட்டிலுள்ள புற்றே வீடாக ஆயிற்று.

5) மூன்றுலகம் உடையான் முக்கண்ண னென்றே
பழமறைகள் சொல்தோறும் பகர வில்லையா
பார்வதியின் பதியாம் கைலாய நாதனுக்
கூர்ப்புறத்துச் சடுகாடே வீடாக ஆயிற்று.

6) முன்செய் வினையிலிருந்து மீள முடியுமா?
யாருமே இன்றுவரை வெல்லவில்லை அன்றோ
காமன்தந்தை காகெுநிலை ஆதிகேசவ ராயனே
காரணம் ஆனவன்நீ எம்மைக் காப்பாயே.

மூலம் :- காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஆரிகாதரு பூர்வ கல்பனெயு தப்பது" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 110. மறுப்பதால் ஆவதுண்டா?

1) மறுத்தால் ஆவதுண்டோ அங்கிருந்து கொணர்ந்த
அனைத்தையும் தின்றுதீர்க்க வேண்டும் மனமே.

2) தந்தைதாய் கருவில் தோன்றிப் பிறந்தோம்
சிறிதள வின்பமும் அடைய வில்லையே.
வருவ தனைத்தும் அனுபவிக்க வேண்டும்
வீணாசை வைத்து மருள்கின்றாய் மனமே.

3) எம்பொருள் எம்வீடு எம்மக்கள் என்னும்
பெரும்பற் றெதற்கோ பகையான வாழ்வே
பிரமன் நெற்றியில் எழுதியது தவறுமா?
வீணாசை எதற்குப் பாழான வாழ்வே.

4) அந்தரங் கத்தொன்று உடலில் ஒன்று
சிந்தனையில் ஒன்றோ ஐவர் இருக்கையில்
காமன்தந்தை காகெநிலை ஆதிகேசவன் திருமகள்
நாயகன் அழைக்கும்வரை அமைதியாக இருப்பாய்.

மூலம் :- நீலாம்பரி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஒல்லெனெந்தரெ ஆகுவுதெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 111. இடர்ப்படினும் இல்லை

1) இடர்ப்படினும் இல்லை பழவினை போக்குதல்
பிரமைபிடித்த மனிதனே தலைவிதிப்படி நடக்கும்

2) செல்வனின் நட்பைப் பெற்றுநடப் பவரில்லை
படிப்படி யாகக்கல்வி கற்றவ ரில்லை
நரிபோல் வஞ்சனை செய்தவ ரில்லை.
அறியா தாசை வைத்தவ ரில்லை.

3) புகழுரை புகன்றுபின் நடந்தாலு மில்லை
கண்டகண் டவரெதிர் கைகுவித்து மில்லை
கூரியகத்தி கழுத்தில் வைத்தாலு மில்லை
பலபேசினு மில்லையிதில் வேடிக்கை இல்லை

4) உடல்வலி அறிவுவலியு டன்பிறந்தவ ரில்லை
மலைகளைப் பெயர்த்தெடுத் தவரு மில்லை
பிறந்தோரில் காகெநிலை ஆதிகேசவ ராயன்
கொடுத்தார்க் குண்டு கொடாதார்க் கில்லை.

மூலம் :- முகாரி இராகம் சாபு தாளத்தில் "கஷ்டப்பட்டரு இல்ல களவரிசிதரில்ல" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 112. தன்விதிப்பயனை அறியாமல்

1) தன்விதிப் பயனைத் தானறி யாமல்
பிறர்க்காக ஆடுவ தவகுணம் பித்தனே!

2) தாமரையில் இருப்போன் நெற்றியில் எழுதி விதித்த
விதியைத் தவிர வேறொன் றில்லையென் றறியாது
கண்டவரின் பின்னால் கைகுவித்து நடந்து செல்லின்
அனுபவித் தற்குரிய மிகுதுன்பபம்
உன்னைவிட்டுத் தொலையுமோ?

3) வறுமை போதுமென்று செல்வனாக விரும்பின்
தொல்லை விதிதான் முதுகின்பின் இருக்கும்
அடிக்கடி அந்நியரிடம் குறைபட்டுக் கூறினால்
வறுமை உனைவிட்டு விலகுமோ பித்தனே.

4) திசைகெட்டுச் சிறுதெய்வங்
களுக்கு வேண்டுதல் செய்யின்
நெற்றியின் எழுத்தைத் துடைக்க இயலுமா?
வளம்நிறை காகெநிலை ஆதி கேசவன்
திருவடி யைக்கண் டின்புறுவாய் மனிதா!

மூலம் :- முகாரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "தன்ன பிராப்திய பலவ தானறியதெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.
107-முதல் 112வரை உள்ள கீர்த்தனைகள் ஊழின்வலிமையை விளக்கியுள்ளன.

# 113. இருக்க விரும்பும் வகையில் இல்லை இல்வாழ்க்கை

1) இருக்க விரும்பும் வகையில் இல்லை இல்வாழ்க்கை
இதனை அறிந்துகொண் டரியை நினைப்பாய் மனிதா

2) உலகை ஆண்ட திரிசங்கு எங்கே
அரிச்சந்தி ரன்முதலான அரசர்கள் எங்கே
ஆண்டகை இராமனின் ஒளிமுகம் எங்கே
கடல்நடுவி லிருந்த இராவணன் எங்கே
செல்வம்மிகு பாண்டவரும் கௌரவரும் எங்கே
தேவரை எதிர்த்த மாவலி எங்கே

3) தசரதன் முதலான பேரரசர்கள் எங்கே
அசகாய சூரன் விக்கிரமன் எங்கே
உலகனைத்தும் வென்ற இரணியாக்கன் எங்கே
உலகை ஆண்டபதி னாறாயிரவர் எங்கே
மலர்க்கணை கொண்ட மன்மதன் எங்கே
சிறுவயதில் தீரனான அபிமன்னன் எங்கே?

4) இவ்வகையில் தரணியை ஆண்டழிந்தவர் எத்தனையோ?
இவ்வா றழிந்த யுகங்கள் எத்தனையோ
இவ்வாறான அரனும் பிரமனும் எத்தனையோ
பிரளய வெள்ளம் பாய்ந்த தெத்தனையோ
அவனியை நெறிப்படுத்த அவதாரங்கள் எடுத்த
திருமகள்நாதன் ஆதிகேசவனை இடைவிடாது நினைப்பாய்.

மூலம் :- முகாரி இராகம் அட தாளத்தில் அமைந்த "இருபந்துதில்ல சம்சார" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 114. இரண்டு நாள் இல்வாழ்க்கை

1) எப்பயனும் இல்லாத இரண்டுநாள் இல்வாழ்க்கை
அறிவுடன் தானதர்மம் செய்வீர்

2) பசியுடன் வந்தவர்க் காசனமிட வேண்டும்
குழந்தை கட்குப்பால் வெண்ணெய் தரவேண்டும்
வளம்நிறை நிலத்தைத் தானம் தரவேண்டும்
வாக்கு தந்தால் அதன்படிநடக் கவேண்டும்.

3) கள்ளத்தால் உடலை வளர்க்க வேண்டா
தருக்கு கொண்டு திரிய வேண்டா
கற்றோர் அவையில் அறிஞன்போல் பேசவேண்டா
உள்ளவன் நானென் றுன்மத்தம் கொளவேண்டா

4) அதிகாரி யானபோது தீயசொல் பேச வேண்டா
நற்பேறு வரும்போது பெருமிதம்கொள வேண்டா
செல்வம் நிறைந்த காகெநிலை ஆதிகேசவனின்
திருவடித்தா மரைநினைந் தின்புறுவாய் மனிதா.

மூலம் :- ரேகுப்தி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஏனு இல்லத இரடு தினத சம்சாரி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 115. செல்வத்தை நம்பாதீர்

1) செல்வத்தைத் தனதென்று நம்பாதீர்
செல்வத்தைத் தனதென்று நினைக்கும்
நேரத்திற்குள் அதற்கென்ன நேருமோ?
ஆடம்பரம் எதற்கோ அரியின்
திருவடியைப் புகழ்வீர் மனிதரே!

2) கடலைக் குடித்த முனிவன்
தாயின் பெயரைக் கேட்டான்
கள்ளனின் வலிமையை நம்பாதே
தலையைச் சிதைத்தடைந்த செல்வம்
கணப்பொழுதில் கைநழுவிப் போகும்

தெய்வத்தின் திருவருளை இழந்ததும்
எல்லாம் இழப்பீர் என்பதைக்
கேட்டறிந்து கொள்வீர் மக்களே.

3) குருட்டரசன் மைந்தர்கள்
மதமான பேய்பிடித்துப்
பங்காளிகட்கு மதிப்பளிக்கா.
தரசாண்ட கௌரவரின்
அரசச்செல்வம் அழியவில்லையா?
அளவற்ற படையிருந்தும்
உறவுநட்பு களிருந்தும்
திருமால் முனிந்தபோது
அவன்பதம் இழந்தானே
கேட்பீர் மனிதர்களே.

4) உலகாண்ட நகுஷன்
சகரராம் பேரரசர்கள்
செல்வத்தை வெல்லவில்லையே.
மனிதர்பா டென்னவோ
வீண்பிரமை கொள்ளாதீர்
என்றென்றும் செல்வம்
நிலையற்ற தெனத்தெளிமின்
காகெநிலை வரதகேசவனைப்
போற்றுவீர் போற்றுவதைக்
கேட்பீர் மனிதர்களே.

மூலம் :- பந்துவராளி இராகம் ரூபக தாளத்தில் அமைந்த "நம்பபேடி சிரியு தன்னதெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 116. விரும்பாதே இல்வாழ்க்கையை

1) விரும்பாதே இல்வாழ்க்கையை இவ்வுடல் நிலையற்ற
தச்சுதன் நாமத்தை நினைந்தின் புறுவாய்

2) பூமியைப் பெறாதே பொருளைப் பெறாதே
தீயவழிகளைப் பின்பற்றிநீ அவைகளைப் பெறாதே
தாமரை உந்தியனின் அழகுப்பெயர் நினைந்துநினைந்து
நிலையான பரமபதத்தை அடைவாய் மனமே!

3) பிறர்மனைவி நோக்காதே தீயவருடன் சேராதே
செருக்கு மிகுந்த சொற்களைப் பேசாதே
உள்ளத்தைக் கரப்போரிடம் கைநீட்டி வேண்டாதே
வீதியில் கூழுண்ணும் தெய்வங்களைப் போற்றாதே.

4) நானாவகைப் பிறவியெடுத்த நாடகப் பதுமை
இதன்மீது பற்றுவைத்து மனம்மிக மயங்கினாய்
ஞானத் திறத்தால் காகெநிலை ஆதிகேசவனை
மனத்துள் நினைந்து மகிழ்வாய் மனமே.

மூலம் :- கல்யாணி இராகம் சாபு தாளத்தில் அமைந்த "நெச்சதிரு சம்சார" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 117. இறப்பு தவறாது

1. உடலினுள் உயிராடுவது கயிற்றின் மேலாடும் பொம்மை போன்ற
தென்றோ ஒருநாள் இறப்பு தவறாது வந்து பற்றும்.

2. பிறக்கும் போது கொடு வந்ததில்லை
இறக்கும்போது கொடு போவதில்லை
சுடப்பட்டுச் சுடப்பட்டுச் சுண்ணாம்புக் காளவாயானதிந்த உடலே
கொடிய வயிற்றை நிரப்புதற்கெத்தனை பாடுபட்டாலும்
உயிர்பிரிந்த பின்னர்க் கோவணத் துணிகூட உடல்மீதிருப்பதில்லை.

3. பெண்ணும் பொன்னும் மண்ணும் இம்மூன்றும் இன்றில்லை
அண்ணன் தம்பி தாய்தந்தை யெனப்பற்று கொள்ளாதீர்
உணவும் ஆடையும் போகம்தரும் பொருள்களும் இன்றில்லை.
உடலை மண்ணால் மூடியதுமது யாருக்குப் பயனாகும்?

4. வெள்ளியும் தங்கமும் நிறைந்து நல்லாடைஅணிந்துகொண்
டலங்கரிக்கப் பட்ட பொம்மைபோல் ஆடிவிட்டோய்ந்தது
குளத்து நீரின்மேலிருந்த குமிழி உடைந்ததே
நீர்க்குமிழி உடைவது போன்ற திவ்வாழ்க்கை யெனஅறிவீர்.

5. எட்டு பத்தென இலட்சம் சேர்த்தும் போதாதென
எண்ணிப்
பிறர திடைமைக் காசைப் பட்டு நீதிமன்றம் செல்வரோ?
செல்வம் பெருக்க வேண்டுமென வீணாசை சிந்தையில்
வைத்தவரே
இறந்த பின்னர் உமது செல்வம் யாருக்குப் பயன்படுமோ?

6. நற்சொல்லும் புகழுமே இறந்தபின் உறவாகி உள்ளன
உடைமையும் உறவினரும் அப்போதுறவாவ தில்லை
காரணன் காகெறிலை ஆதிகேசவன் நாராயணன் என்றே
பொருளுணர்ந்து பாடி நீங்கள் மகிழ்வுடன் வாழ்வீரே!

மூலம் :- சங்கராபரண இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "டிம்பினொளு பிராண இரலு" எனத் தொடங்கும் கீர்த்தனை. 113-லிருந்து 117 - வரை உள்ள கீர்த்தனைகள் இல்வாழ்க்கையின் துன்பங்களை விளக்கியுள்ளன.

## 118. வீணாசை விடாது

1. என்னசெய்வேன் ஐயா வீணாசை விடாதே
நரசிம்மனே இராமச்சந்திரா காப்பாய்.

2. விளக்கின் பேரொளி பார்த்து மயங்கி
அதில் விழுந்திறக்கும் விட்டில் பூச்சிபோல்
அறிவு கெட்டு வெள்ளி தங்கம்
போன்றவை களைப்பார்க்கும் கண்ணாகிய பொறியே.

3. தாமரை சண்பகம் அரளியில் தேனுண்டு
முன்செல்வ தறியாது மயங்கிவிழும் வண்டுபோல்
திலகமிட்ட பெண்கள் கூந்தலில் வைத்திருக்கும்
பூமணத்தை மலரும் மூக்காகிய பொறியே.

4. தூண்டிலில் இருக்கும் மண்புழுவைப் பற்றி
உயிரை இழுக்கும் மீன்களைப் போன்றே
மான்கண் மங்கையர் செங்கனி வாயமிர்தம்
பருகி இன்புறும் நாவாகிய பொறியே.

5. திமிதிமி கணகண வெனும்இசை கேட்டு
மயங்கி வலைப்படும் மான்களைப் போன்றே
காரிகையரின் கன்னல் மொழியைக் கேட்டுப்
பிரணவ மௌனமகிழும் செவியாகிய பொறியே.

6. மெய்வாய் கண்மூக்கு செவியாம் ஐம்பொறிகளின்
வலை யிலிருந்துநீ விடுவிப்பாய் ஐயா
தடையேதும் கூறாமல் காகெறிலை ஆதிகேசவனே
திக்காசி வந்தென்னைத் திருவடிக்கீழ் வைப்பாய்.

மூலம் :- முகாரி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஏனு மாடலய்ய் பயலாசெபிடது" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 119. நல்லோர் கூட்டத்துள் இருத்துவாய் என்னை

1. தீயோர் சேர்க்கையை என்றுமே விரும்பேன்
நல்லோர் கூட்டத்துள் இருத்துவாய் என்னை.

2. உண்ட வீட்டிற் கிரண்டு நினைப்போர் தொடர்பு
செய்த உதவியைச் சொல்லித் துன்புறுத்துவோர் தொடர்பு
தந்தை தாயை வையும் தீயோர் தொடர்பு
நிந்திப்போர் தொடர்பு மிகுந்த தொல்லை அரங்கனே.

3. தன்னை நம்பினவர்க்குக் கேடு நினைப்போர் தொடர்பு
தேவையின்றிச் சண்டை செய்வோர் தொடர்பு
பிறவியை மகிழ்வாகப் பேசும் பித்தர் தொடர்பு
பெண்களைப் பார்த்ததும் மோகம் கொள்வோர் தொடர்பு.

4. கூடியிருக்கும் அவையில் குதர்க்கம் பேசுவோர் தொடர்பு
கடுகளவும் கொடாத கொடிய உலோபியர் தொடர்பு
குடிப்பெருமை குலைத்தாரோடு நட்பு கொண்ட
வர்தொடர்பு

போதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையர்
தொடர்பு.

5. குருமனைவிக்கும் பிறன் மனைவிக்கும்
இரண்டெண்ணியவர் தொடர்பு
குருவையும் பிறரையும் நிந்தனை செய்தவர் தொடர்பு
பிறர்க்குதவும் பேரறம் செய்யப் பெறாத வர்தொடர்பு
பறிவற்றோர் தொடர்பு மிகுந்த தொல்லை அரங்கனே!

6. ஆகமங்களின் பெருமை அறியாதவர் தொடர்பு
யோகியைக் குருவை நித்திப்போர் தொடர்பு
விருப்பு வெறுப்புக்களில் மூழ்கியவர் தொடர்பு
காகெறிலை ஆதிகேசவ இத்தொல்லை களைநீக்குவாய்.

மூலம் +- கேதாரகௌள இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "துர்ஜனர சங்கவனு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 120 குலம் குலம் என்று கூறுகின்றீரோ

1. குலம் குலம் என்றுகூறு கின்றீரோ
சத்தியம் தறாதவர்க்குக் குலமுண்டோ

2. சேற்றில் தாமரை தோன்றினு மதனைப்
பதும நாபனுக் கர்ப்பிப்ப தில்லையா
பசுவின் புலாலில் சுரந்துவரும் பாலை
உலகத்தில் பூசுரர் பருகுவ தில்லையா?

3. சாண்டில்யன் பராசரன் என்போரும்
வேசிமகன் வசிட்ட முனியும்
தாசிமகன் நாராத முனியும்
காசிய முனியும் எக்குலத்தவர் ஐயா?

4. ஆன்மா என்னகுலம் உயிர்க்கென் னகுலம்
தத்துவ இந்திரியங் களின்குலம் கூறுமையா
பரமான்மா காகெறிலை ஆதிகேசவன் விரும்பும்
அடியாரின் குலம்யாதெனக் கூறுவீர் ஐயா.

மூலம் : ரேகுப்தி இராகம் அடதாளத்தில் அமைந்த "குலகுல குல வென்னுகிஹரொ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 121. குலத்தின் நிலைபற்றி எதாவது அறிவீரோ?

1. குலம்குலம் என்றியம்பிப் போராடா தீர்நும்
குலத்தின் நிலைபற்றி எதாவ தறிவீரா!

2. பிறவாப் பிறப்பில்லை செல்லாத நாடில்லை
சமைத்துண் ணப்படாத உண்பொருள் இல்லை
இரகசியம் வெளியானது பெரிதென்ன சிறிதென்ன
எல்லாம்வல்ல இறைவனை விரைத்துநினை மனிதா

3. நீர்தான் அனைத்திற் கும்தாய் அன்றோ
நீரின் குலம்யா தென்பதை அறிவீரா
நீரின்மேல் குமிழிபோல் நிலையில்லா இவ்வுடல்
உள்ளபோதே பார்உய்ய அரியை நினைந்து

4. அரியே உத்தமன் அரியே முதல்வன்
எல்லாம் அரிமயம் என்பதைத் தெளிவாய்
வளம்நிறை காகெநிலை ஆதிகேசவன் திருவடித்
தாமரையைப் புகழ்பவ னேநற் குலத்தவன்.

மூலம்: பந்துவராளி இராகம் அட தாளத்தில் அமைந்த "குலகுலகுலவெந்து ஹொராடதிரி" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 122. எத்தன்மையது என்பேன் ?

1. எத்தன்மை யதென்பேன் உலகத் தலைவன்
தந்த மனித உடலைப் பற்றி

2. பிறக்கும் போதுநான் ஆடையின்றிப் பிறந்தேன்
அதன்பின் அரையில் ஆடை உடுத்தேன்
அருகிருந்த உறவினரை அறியாது மயங்கிக்
கிடந்த வெனக்கெ தற்குக் குலமோ

3. இந்திரிய சுகத்தில் தோன்றி மலமூத்திரக்
குகைக்குள் ஏதுமறி யாதிடர்ப் பட்டேன்

யோனிவழி வெளிவந்து முலைசுரக் கும்பாலைப்
பருகிய வெனக்கெ தற்குக் குலமோ?

4. மலம்சோரும் ஒன்பது வாயிலை உடைய
இவ்வுடல் வளர்ந்துவளர்ந்து பெரிய தாகியது
இனிய தன்று புழுக்களின் கொள்கலம்
இத்தகைய வெனக்கெ தற்குக் குலமோ?

5. எலும்புகள் மிகுந்த நரம்புக் கூண்டழியும்
காலத்து நமது குலத்தைக் கேட்பரோ
உரியும் தோலும் இரத்தமும் சுமக்கின்ற
இழிந்த வெனக்கெ தற்குக் குலமோ?

6. பூக்குவி யலின்மீது மீன்கூடை வைத்தாற்போல்
குறைமிக்க உலகப்பொருள் மீதுபித்துக் கொள்ளாமல்
நிலையான காகெநிலை ஆதிகேசவன் மீதுபித்துக்
கொண்ட வெனக்கெ தற்குக் குலமோ

மூலம்: பூர்வி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஏதரவெனந்து பேளலி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 123. செபம் புரிந்தால் பயனென்ன?

1. செபம்புரிந் தாலென்ன தவம்புரிந் தாலென்ன
கபடகுணம் மிகுந்து தீமை புரிபவர்கள்

2. ஆதிகுருவை அறியாமல் அங்குமிங்கு ஓடி
வேதசாத்திர திரம்ஒதி வாய்புண் ணாகிக்
கடவுளைக் காணும் வழியை அறியாது
வாதித்துப் பலவழியில் வேற்றுமை வளர்ப்போர்

3. பேச்சுள்ள போதே தானதர்மம் செய்யாமல்
காட்டிலுள் ளகுளம் நிரம்புவது போன்று
மனைவிமக் களுக்காக ஆடையாபரணம் சேர்த்துத்
தவறாத காலன் கையில் அகப்படுவோர்

4. குளிரும் மழையும் மிக்கவிருள் நிறைந்த வைகறையில்
குளத்தில் மூழ்கி எழுந்து செபதவம் செய்து

நூற்றெட் டெண்ணிக்கை மந்திரத்தை முணுமுணுக்க வேண்டா
தாமரைக் கண்ணன் ஆதிகேசவனைநினை மனமே

மூலம்: காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஜபமாடிதரேனு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 124. வாய்மையாளர் தொடர்பு இருக்கையில்

1. வாய்மையா ளர்தொடர் பிருக்கையில் தீர்த்த மெதற்குத்
தினமும் அன்னதானம் செய்யின் அச்ச மெதற்குப்

2. குருபெரி யோரை மதிக்கா தவனினறி வெதற்குப்
பிறர்க்கு தவிபுரி யாதவ னினுடல் தானெதற்
கரியைப் பூசை புரியாதவனின் பிறவி எதற்குச்
செழுங்கிளை தாங்காத மனிதனின் செல்வ மெதற்கு

3. சொல்லைக் கேளாது நடக்கும் மக்கள் எதற்குப்
பயங்கொண்டோடி வருகின்ற காவலானதற்
குபசரித் துண்மை பேசியூட்டாவுண வெதற்குத்
தோற்றுப் பெண்ணிற் கெதிர்நடக் குமொருவன் எதற்கு?

4. தானு முண்ணான் பிறர்க்குத வான்செல்வம் எதற்கு
மானம் இழந்து வாழும் மனிதன் எதற்குக்
குற்றம் பார்க்கும் சுற்றத்திடை இருப்ப தெதற்குப்
பார்த்துண் ணும்குணம் இல்லாதா ரின்பே றெதற்கு

5. தன்னைத் தானறியப் பெறாத ஞானி எதற்கு
நீராடல் சந்திகளைச் செய்யாதான் சீலம் எதற்கு
ஞான மின்றி நூறாண்டு வாழ்வ தெதற்குத்
தியானத்தில் கண்ணனை நினையா தவுடல் எதற்கு?

6. குறிப்பறிந்து நடக்காத மனைவி இருப்ப தெதற்குத்
துன்பம் அறிந்துத வாத நண்பன் எதற்கு
முன்பிறவியில் கொடுக்காத திப்பிறவியில் எடுக்கநினைப் பதெற்குச்

சிறந்தோன் ஆதிகேசவன் இருக்கையில் பிறதெய்வம் எதற்கு?

மூலம்: காம்போதி இராகம் ரூபக தாளத்தில் அமைந்த "சத்யவந்தர சங்க இரலு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 125. ஆதிகேசவனைத் தவிர தெய்வம் உண்டா?

1. நல்லோர் நவிலும் உண்மைக் கிணையுண்டோ
ஆதிகேசவ னைத்தவிர தெய்வம் உண்டோ?

2. வாய்மை விரதனுக் கிறப்பு பற்றிப் பயமுண்டோ
மனத்துாய் மையுள்ள வனுக்கு மறுபிறப் புண்டோ
கல்வி யைக்கற் பதற்கு முடிவென்ப துண்டோ
உத்தமர் சங்கத்தை விடமே லாம்அறம் உண்டோ

3. மக்களின் ஒண்மையான பொருளும் உண்டோ
மனைவி இல்லையேல் மனைவிளக்கம் உண்டோ
பதிசேவையை விடப்பெரியது மனைவிக் குண்டோ
மதிநலம் இல்லானிடம் சதுரப்பா டுண்டோ

4. தனலாபத் தைவிடவே றிலாபம் உண்டோ
கரவாடும் வஞ்சகர்க்கு மேலுலகம் உண்டோ
வழங்கும் வள்ளலுக் கிணையானவர் உண்டோ
பணிமொழி பேசும் நண்பர்க்குள்பிரி வுண்டோ

5. கரப்பவனை விடமிகவும் இழிந்தவன் உண்டோ
மனம்கலங்கிய மன்னனிடம் நீதி உண்டோ
ஆசையகற் றியமுனிவர்க் கச்சம் உண்டோ
உண்டிகொடுக்கும் அறத்திற்கிணை உலகில் உண்டோ

6. அரிபக்தி இல்லாதார்க்கு வைகுந்தம் உண்டோ
அடக்கத்திற் கிணையா னவறம் உண்டோ
புறங்கூறலுக் கிணையா னமறம் உண்டோ
வரதனாதி கேசவனைத் தவிரதெய்வம் உண்டோ?

மூலம் : முகாரி இராகம் சாபு தாளத்தில் அமைந்த "சாதுசஜ்ஜன" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 126. ஆர்க்கும் அடைதல் அரிது ஆன்மயோக சித்தி

1. ஆர்க்கும் அடைதலரி தான்மயோக சித்தி
நன்ஞானம் பெற்றதைப் பகிர்ந்துண் போர்க்கன்றி

2. இராசசம் தாமசமாம் பயனில் குணம் அகற்றி
மதயானை அனைய ஐம்பெரும் பூதங்களின்
ஆதிக்கத்தில் சிக்காது பரம்பொருள் உண்மையைத்
தெளிய வல்ல பற்றற்றோர்க் கன்றி

3. தன்னின் வேறானவன் என்னும் ஐயத்தை அகற்றித்
தாரகப் பிரமனைத் தன்னுள் ளேதான் அறிந்துபின்
அழகுக் கண்களால் ஆழ்ந்து பார்த்து மகிழும்
ஞானத் தீயினுள் இருக்கும் உயர்ந்தோர்க் கன்றி

4. அகாரம் உகாரம் மகாரமும் சேர்ந்த
ஓங்காரம் உணர்ந்தே இரண்டின்றி நினைந்துமிக
அன்போடுதவும் காகெநிலை ஆதி கேசவனின்
உருவை எப்போதும் நினைவோர்க் கன்றி

மூலம்: சங்கராபரண இராகம் அட தாளத்தில் அமைந்த "ஆரி களவல்ல ஆத்மயோக சித்தி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 127. பார்த்து மயங்காமல் இரு

1. பிறன்மனை வியரைப் பார்த்துமயங் காதிரு
நாட்டில் கெட்டோர் சரிதத்தை நீயறிந்து

2. யாகங்கள் நூறுசெய் தமராவதி அடைந்த
நகுஷன் சசிதேவியைக் கண்டு மோகித்து
மிகவிரைந்து செல்வீரென அதட்டி முனிவரின்
சாபம் பெற்றுப் பாம்பானதை நீயறிவாய்

3. அமரர்தலை வன்கௌத மன்மனைவி யையடைய
கா॥ வேடத்தோடு காலையில் வந்து

மேலாம் முனிவனின் சாபத்தை அடைந்தே
ஆயிரம் கண்ணோன் ஆனமை நீயறிவாய்

4. மன்மதன் மலர்க்கணை தாங்க இயலாது
கொடிய கீசகன் துரௌபதியிடம் மயங்கிக்
காற்றின்மகன் வீமனால் கொல்லப் பட்டான்
மனிதனாம் நின்கதி யாதென நீயறிவாய்

5. அரனின் வரம்பெற்றுக் கடல்நடுவி லிருந்த
அரக்கன் சீதைமேல் மையல் கொண்டு
போர்க்களத்தில் இராமன் அம்பினால் பத்துத்
தலைகளை இழந்திறந்து கிடந்ததை நீயறிவாய்

6. இன்னோ ரெல்லாம் இறந்தமை நீயறிந்து
காமத்தை வென்று பத்தி கொண்டு
காமன் தந்தை காவெறிலை ஆதிகேசவனை
நாடொறும் புகழ்ந்து மகிழ்பவன் ஆவாய்.

மூலம்: பைரவி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "நோடி மருளாகதிரு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 128. பெற்ற தாயினும் உயர்ந்த தெய்வம் உண்டா?

1. பெற்றதாயினும் உயர்ந்த தெய்வம் உண்டா?
உத்தமகுதி ரைகழுதை யைப்போல்வ துண்டா?
2. கல்வியில் வல்லோன் குலம்பற்றிக் கருதுவ துண்டா
தன்னலம் கொண்டோ னிடம்நீதி என்றாவ துண்டா
3. மாமி வீட்டில் வசிப்போனுக்கு மானம் உண்டா?
ஆடை யின்றித் திரிபவனுக் கச்சம் உண்டா
4. காவெறிலை ஆதி கேசவனுக் கிணையான தெய்வம்
இவ்வுல கத்திலும் தேவருல கத்திலும் உண்டா?

மூலம் : மோகன இராகம் அடதாளத்தில் அமைந்த "ஹெத்த தாயிகிந்த" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 129. பெண்களிடம் பெருமிதம் இருப்பது உண்மை

1. பெண்களிடம் பெருமிதம் இருப்ப துண்மை
கண்கட்டு வித்தையன்று கவிசெய்யும் கபடமன்று

2. இரதிக் கொப்பனையா ஒப்பனையில் இரதியா
இன்பத்தின் முதலேது முதலின் நுனியேது
காழ்ப்புணர் வெதற்குக் காழ்ப்பில் சுவையென்ன
சுவையில் காண்பதென்ன காண்பதில் பலனென்ன

3. மனத்திற்கு மறைப்பெதற்கு மறந்தபின் நினைவெதற்கு
நினைவில் நம்பிக்கையேன் நம்பிக்கையின் அளவென்ன
அளவில் கலக்கமேன் கலக்கத்தில் கனவேன்
கனவில் காண்பதென்ன காணும்போ தஞ்சுவதேன்

4. பொருளின் முதலென்ன முதலின் நிலையெது
நிலையில் சுவையேன்சுவையில் சுகமேன்
மன்மதனுக்குத் தளர்வுண்டா தளர்வில் மறைவுண்டா
ஆதிகேசவ வுனக்குத் தோல்வி யுண்டா?

மூலம்: நாதநாமக்கிரியா இராகம் அட தாளத்தில் அமைந்த "ஹெண்ணுகளொளு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 130. கலி மிகுந்து வந்தது

1. கலிமிகுந்து வந்ததே நான்கடை தேறுவ தென்றையா
தாமரைக் கண்ணன் அருளைப் பெற்றவரே கேட்பீர்

2. அத்தை மருகியாகி மருகி அத்தையாகி
மகன்தந் தையாகித் தந்தை மகனாகிக்
கணவனுக்கு மனைவி கணவ னாகி
நடந்துகொள்வர் ஐயா தமக்கெதிர் இல்லையென்று

3. உறவென்னும் பாசநீங்கிப் பகைவர் பெருகிப்
பிராமணர் குருபெரி யோரை அவமதிக்கும்
சுயவர் எல்லாரும் செல்வத்தில் திளைப்பர்
துறவிகள் நல்லோரைக் காப்பவரார் இப்போது

4. ஆண்டைக் கிராண்டகம் நினைக்கும் பாவிகள்
மாடுமனை தனதானியம் பெற்று மகிழ்வர்
குறிப்பறிந் தின்புறுத்தும் நன்மனைவி இருக்கையில்
பொதுமகளை நம்பியழிவர் ஈனமான ஆடவர்

5. தத்துவங்கள் நிறைந்த நன்மதம் அழிகையில்
ஆதரித்துக் காக்கும் அரசர்கள் இல்லையே
பூமிமே லுள்ளசுமை தாங்கவியலா பூதேவி
இராமராம வென்றுதலை தூக்குவள் ஐயா

6. அல்பசிந் தனைகட்கு வேகம் அதிகம்
பயிர்கள் மிகுந்தும் சமயத்திற் குதவா
கற்பனைக் கதைகளில் காலத்தைக் கழிப்பர்
அழிதல் அரிதாகிய உறுதியுரை உண்டோ

7. பத்தினிகள் நூறாயிரத் திலொருவர் இருப்பர்
கட்டுப்பாட்டை யிழந்தவர் பிறபெண்கள் எல்லோரும்
மதிகெட்டு மனமழிந்து அந்நியரைக் கூடிக்
காமத்தில் கட்டுண்பர் அழகிய பெண்களே

8. உணவும் உடையும்பெற் றுயர்வாக வாழ்வர்
வேற்றுமை வளர்த்துக் கெடுக்கும் கயவரே
கள்ளத்தனம் போன்ற தீமைகளைக் கற்ற
கொடியோர் மிகுவர் கொடியபாம்பைப் போன்றே

9. உண்மை முதலா அறங்களெங் கொளிந்தவோ காணேன்
உத்தமர் வாழ்வதற்கு வழியே இல்லை
நாள்தொறும் களவும் காமமும் செய்வோர்
செல்வம் நிறைந்தவராய் இன்பத்தில் திளைப்பர்

10. வேதவிற் பன்னர்கள் ஓதுவதை மறந்துபின்
ஆதர வின்றித் திரிந்திரந் துண்பர்
போராடும் வீரனுக்குப் பொருள்தரு வோரில்லை
மேதினிமேல் விழும்மழை பயனின்றி ஒழியும்

11. அரிஅரரின் பூசைகள் அழிந்து நீங்கும்
உரிமாரி சாமுண்டி துர்தே வதைகட்

காடெருமை பலியிட்டுத் தூபதீபம் காட்டிப்
பரம பக்தியுடன் பூசிப்பர் ஐயா.

மூலம்: மத்யமாவதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "கலியேறி பந்து" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 131. அது நல்லது என்பீர்

1. அதைநல் லதெனநவில் வீர்நல்லல்லதாயின்
அவ்வாறே நவில்வீர்
பலமக்கள் ஒன்றுகூடித் தெளிந்து கொண்டபின்
அதனை நவில்வீர்

2. தேவ ரில்லாத கோயில் பாழான அங்காடி
பாவனை இல்லாத பக்தி வஞ்சனை உத்தி
நாணம் இல்லாத பெண்பட லம்மறைக் கின்றகண்
உதவுதல் இல்லாத செல்வன் கல்லாலா கியசிலை

3. அறத்தை அறியா அரசன் காலில்லைத் துள்ளமுள்
தூய்மை அறியாத மனம்பிணி வகைகளில் ஒன்றாகும்
இன்பத்தை அறியாத மனிதன் உலக்கைத் துண்டு
தொனிப்பொரு ளறியாத வார்த்தை மட்கலத் துள்ளதுளை

4. மக்களைப் பெறாத தாய்உள் ளீடற்ற தேங்காய்
இன்பம் விளையாார் புணர்ச்சி விடத்தொடு புணர்ச்சி
உறவினர் இல்லாத ஊர்தூர் நாற்றம் வீசும்குளம்
மயக்கி நடக்கும் மடந்தை கொடுமையின் கொள்கலம்

5. கண்டும் அழைக்காத உறவினன் முனைஒடிந்த ஊசி
உண்டபின் மகிழாத முகமே கசக்கும் சுரைக்காய்
படைகண் டஞ்சும் வீரன் வழியில்பர வியமுள்
கணவனுக் கஞ்சாத காரிகை பெரிய மாரி

6. விட்டோ டுகின்ற நண்பன் கிழிந்த வலையே
வழங்கியதை விளம்பும் அவனே இழிந்த மனிதன்
உலகில் காகெநிலை ஆதி கேசவன் அடியை
விடாமல் நினைக்காத நரனே காட்டி லுள்ளமரம்

மூலம்: முகாரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "அகுதாத ரகுதென்னி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 132. ஆதிகேசவன் அடியவன் சீவன் முக்தன்

1. அதைநல் லதெனநவில் வீர்நல் லல்லதாயின் அவ்வாறே நவில்வீர்
நல்லோர் மனத்திற் கொப்புதல் ஆவதிக் கொள்கை யாமே

2. குற்றம் இல்லாத வாழ்க்கை கரிவரதன் அருளெனக் கேட்பாய்
அறிஞர் வீட்டினுள் இருப்பது சுவர்க்கமெனநீ கேட்பாய்
கணக்க னுடன்நல்ல நட்பு பொருள் நிறைந்த பெட்டி
குருவின் வாக்கில் நம்பிக்கை மறுபிறவி யில்அது முக்தி

3. செழுங்கிளை தாங்காச் செல்வன் பணம்படைத்த ஏழை
பெறுமவற்றுள் மக்கட்பேறே நற்பேறென் றறிவாய் அண்ணா
உண்டி கொடுப்பதே உயர்ந்தவறம் மறுபிறவியில் உதவும்
விக்கலைத் தோற்றுவிக்கும் பிணிகாலன் உலகைக்காட் டும்வழி

4. கண்டதும் புணராத மனைவி கனலைக் கக்கும் மாரி
பொருளை விரயமாக் கும்மகன் நமது பகைவரின் நண்பன்
உண்கையில் அருகிருந் தூட்டாதாய் பாம்பிருக்கும் கொடியில்காய்
கூட்டத்தை விட்டுவில கியபசு புலிக்குணவாகும் இரையே

5. பிறன்மனை வியருடன் கூடுதல் எட்டிக்காயைச் சமைத்துண்ணல்
கணக்கு பாராமல் செலவழிப்பது கடைசியில் துன்பம் தருவது
புலியைக் கண்டஞ்சும் யானை

குரங்குக் குட்டியே யாகும்
அழைப்பதை அறியாத கணவன்
நாணம் நிறைந்த நாரியே

6. சமயத்திற் குதவாத செல்வம் ஆயிரம் இருப்பினும் வீணே
பொதுமக ளிருடனுற வாடல்
இளநாகத் துடனுறவு கொள்ளல்
அமரர்க் குதவாத யாகம் ஆட்டின் மேலுள்ள பிணியே
ஆதிகேசவ னருள்பெற்ற அடியவன்
அவ னேசீவன் முக்தன்

மூலம்: சாவேரி இராகம் மட்ட தாளத்தில் அமைந்த "ஆகுநாதடகுதென்னி அல்ல வாதடல்லவென்னி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 133. எந்த வலிமை இருந்தும் என்ன?

1. எந்த வலிமை இருந்தும் என்ன
வாசுதேவன் வலிமை உண்மையில் இல்லார்க்கு

2. நெற்றிக் கண்வலிமை நான்குதலை வலிமை
திரிசூலம்தமருகம் அனலின் வலிமை
பசுபதியி னுருவம் பெற்ற சிசுபாலன்
தலையை அசுரவைரி கண்ணன் துண்டித்தான்

3. அரனினருள் பெற்ற வலிமை தேவரை வென்ற வலிமை
வயிரம் பாய்ந்த தனது தோள்களில் தங்கிய வலிமை
பூமியைத் தூக்கிச் சென்ற அரக்கன் இரணி யாக்கன்
மார்பை வராக மாகி அரிபிளந்து கொன்றா னன்றோ

4. முன்பேபல ரைவென்ற வலிமை முக்கண்ண
னினருள் வலிமை
தன்குலத் தரக்கி இலங்கிணி காவல் புரியும் வலிமை
தன்னைச் சார்ந்த அரக்கரின் வலிமையும் பெற்ற
இராவணன்

தலைகளை அம்புகளை விடுத்தே
இராமன் துண்டித்துக் கொன்றானே
5. இலிங்கபூசை செய்த வலிமை
சிந்தனையின்றி இருக்கும் வலிமை
முன்பொரு காலத்தில் அரனே
வாயிலைக் காத்த வலிமை
வயிரம் பாய்ந்த தோள்கள் ஆயிரம் பெற்ற வலிமையன்
வாணாசுர னைவீரன் கண்ணன் தோள்களை
வெட்டிக் கொன்றானே

6. பிறதேவரின் வலிமை இருப்பதால் பயனென்ன
வாசு தேவனின் வலிமை இல்லார்க்
குலகத்தில் உயர்ந்த காகெநிலை ஆதிகேசவன்
திருவடியைத் தொழுபவர் வலிமை வாய்ந்தவரே.

மூலம்: முகாரி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஆவ பலவித்தரேனு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 134. பக்திக்காக மேலாம் முக்திக்காக

1. எல்லாரும் தொழில்புரிவது வயிற்றுக்காக ஆடைக்காக

2. நெல்முட்டை சுமந்து விறகையும் சுமந்து
கூலிவேலை செய்வது வயிற்றுக்காக ஆடைக்காக

3. நான்குவேதம் புராணசாத்திரம் பஞ்சாங்கம் கூறிக்கொண்டு
காலத்தைக் கழிப்பது வயிற்றுக்காக ஆடைக்காக

4. அடித்தடித் திரும்பைக் காய்ச்சி துப்பாக்கி செய்து
துளைக்கும் குண்டைச் செய்வது வயிற்றுக்காக ஆடைக்காக

5. வீரர்கள் கத்தியும் கேடயமும் பிடித்துப்
பகைவரைப் பிளப்பது வயிற்றுக்காக ஆடைக்காக

6. மாபெரும் குதிரையேறி வாள்பிடித்த வீரனாகப்
போராடி இறப்பது வயிற்றுக்காக ஆடைக்காக

7. நுகத்தடியில் காளைபூட்டிக் கலப்பையால் மண்கட்டிகளை

உடைத்துவயலை உழுவது வயிற்றுக்காக ஆடைக்காக

8. கள்ளத்தனம் முதலான தீமைகள் செய்து
கொள்ளை யடிப்பது வயிற்றுக்காக ஆடைக்காக

9. துறவிசங்கமன் யோகி தலைமழித்த பைராகிப்
பல்விதவேடம் தரிப்பது வயிற்றுக்காக ஆடைக்காக

10. உன்னத தெய்வம் காகெநிலை ஆதிகேசவனை
நாள்தோறும் நினைப்பதுயர் பக்திக்காக முக்திக்காக

மூலம்: சௌராஷ்டிர இராகம் ஏக தாளத்தில் அமைந்த "எல்லருமாடுவது" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 135. எங்கிருந்து வந்தாய் எங்குச் செல்வாய்

1. எங்கிருந்து வந்தாய் பிறகெங்கே செல்வாய்
இங்கேநீ எத்துணைநாள் இருப்பாய் பித்தனே

2. தாயின் வயிற்றுள் ஒன்பது மாதங்கள் மலமூத் திரங்களுள்
வேதனை அனுபவித்து யோனியின்
வழியே வெளியே வந்து
பூதலத்தில் பிறந்ததால் முன்பிருந்த
என்ன நிலைநீ இழந்தாய்
நின்சாதி யாது நின்பெயர் யாதெனக் கூறுவாய் பித்தனே

3. பின்னால் எப்பதம் பெறுவாய் பித்தனே போதும்
முன்புநின் உறவுயார் உற்ற நண்பர் உளரோ
நின்னொா டிருந்த மனைவி மக்களை நீங்கினாயே
நின்று பயனின்றிப் பேசுவதைப் பழகினாய்ப் பித்தனே

4. இங்கேன் வந்தாய் இடம்யாது முன்புநீ நிலையாக
இருந்த வீடுயா தென்பதை எனக்குக் கூறுவாய்
நிலவுலகில் வரம்தரு கடவுள் காகெநிலை ஆதிகேசவன்
திருவடித் தாமரையில் முழுநம்பிக் கைகொண் டின்புறுவாய்

மூலம்: காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த

"எல்லிந்த பந்தெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 136. என்ன இது எப்பக்கம் ஆசை

1. என்னவிது எப்பக்கம் ஆசை குரங்கலே
நீயறியின் உண்மை யையெனக் குரைப்பாய்

2. பத்து வாயுக்கள் பக்கங்களில் வருகையில்
நண்பர் ஐவர்கூடி ஆக்கிரமிக் கின்றனர்
இவ்விரண்டு வலையிருந்து தப்புவ தெளிதோ
துன்பம்பல தந்து வன்மையாகத் தாக்குவர்

3. இரண்டு யானைகள் வழியில் நின்றுள்ளன
ஒன்பது குதிரைகள் வழியைத் தருவதில்லை
ஐந்துடன் ஆடித் தோன்றுவ தெண்ணானை
என்றதை என்ன வென்றுநீ அறிவாய்

4. பிறரைப் பழிக்காத சான்றோன் நீயாகிப்
பிறரது பாவங்களை நீகட்டிக் கொள்ளாமல்
பரமன் காகெநிலை ஆதிகேசவ ராயன்
பிறர்க்கினிய நண்பனெனப் புகழ்வாய் மனிதா.

மூலம்: முகாரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஏனிதெத்தண- பயகெ எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 137. நம்முடன் வருவது யாது ?

1. வருவது யாது நம்முடன் வருவதி யாது
தான தருமம் செய்துநல் வழிதேடு மனிதா

2. மனைவியில்லை மக்களில்லை
வண்டி நிறைந்த செல்வமில்லை
வீடுநிறைந்த உறவும் நண்பரும் இருப்பரோ
காலதூதர் பாசத்தால் கட்டி இழுக்கையில்
காப்பரோ புகழும் இகழுமே உடன்வருவன

3. யானென்றும் எனதென்றும் மண்பெண்

பொன்னை நம்பி
ஆசைப்பட்டு வாய்விட் டலறிய வாறே இருப்பீர்
இப்பிறவியில் பிறர்க்குதவி அறத்தின் பயனை அடைவீர்
பாம்பின் வாய்தேரை போன்று பாழாகா தேமனிதா

4. ஆடையின்றிப் பிறந்தீர் ஆடையின்றிச் செல்வீர்
இரவுபகல் என்றெண்ணிக் காலத்தைக் கழிக்கின்றீர்
இறந்தோரில்லை அழுதோரில்லை
சுமந்துகொண்டு செல்கையில்
பயனின்றி உடலைமண்ணில் கூடச்செய்யா தேமனிதா

5. கட்டவில்லை பிரிக்கவில்லை இடர்ப்பட்டுப் பழகவில்லை
சுட்டுச்சுட்டுச் சுண்ணாம் பறையாயிற் றிவ்வுடல்
செல்கையில் செருப்பும் ஆடையுமுடன் இருப்பதில்லை
கடையில் வெறும்வய லாவதை உணர்வாய்

6. செருக்கோடு காலத்தை வீணாகக் கழிக்காதே
மானிடராய்ப் பிறத்தல் அரிதெனநீ அறிவாய்
நம்மையாள் பரமன் பாடத்தாதி கேசவனின்
அடிபுகழ்ந்து துன்பம்நீங்கி வரம்பெற் றின்புறுவாய்.

மூலம்: தன்யாசி இராகம் ரூபக தாளத்தில் அமைந்த "ஏனு பருவுதோ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 138. இவர்கள் பாகவதர்களா?

1. தீர்த்தபாத் திரம்பிடித்தோர் திருமண்ணை அணிந்தோர்
பிறவிப்பயன் பெறாவிடின் பாகவதர் ஆவரோ

2. பட்டைநாமம் தரித்துப் பாத்திரம் கைப்பிடித்
துட்பொரு ளுணராது மந்திரம் முணுமுணுத்துத்
தீயசொற் களைக்கூறி வயிற்றை நிரப்பும்
பொட்டை மனிதர் பரம வைணவரோ

3. மூக்கைப் பிடித்தவாறே நீருள்மூழ்கிச் செபித்துப்
பாகவதம் சாத்திரம் மட்டுமே படித்துப்

பிறன்மனைவியை விரும்பிக் கண்விரித்துப் பார்க்கும்
யோகநிலை இழந்தோர் தேவப்பிரா மணரோ

4. அல்லாகுதா வென்றுட் பொருளை அறியாமல்
முல்லா சாத்திர நிலைமை அறியாமல்
கபடமாகக் கூவி வாய்திறந்து குரைக்கும்
கள்ளர்க்கு வீர சுவர்க்கம் கிட்டுமோ?

5. இலிங்காங் கத்திருக்கும் உட்பொருள் தெளியாமல்
இலிங்காங் கங்களின் நிலைமை உணராமல்
தாவர சங்கமங்களின் தன்மை தெரியாமல்
மயங்கி வாழ்வோர் இலிங்கபக்தர் ஆவரோ?

6. வேடேமிடக் கற்றுக் கோஷங்கள் கூவி
ஆசையை அறுக்காமல் தவத்தைச் செய்து
நன்ஞான வாசனை உணரப் பெறாத
வேட தாரிகள் துறவிகள் ஆவரோ?

7. ஆறுசக்கர நிலையத்துள் அட்டாங்க யோகத்துள்
மூன்று மூர்த்திகளை மூன்றிடத்தில் நிறுத்திக்
கருணை நிதியாம் காகெநிலை ஆதிகேசவனைச்
சார்ந்து புகழ்ந்தோர்க் கெமன்கொலை உண்டோ?

மூலம்: காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "தீர்த்த பிடிதவரு" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 139. தானதருமம் செய்து மகிழ்பவன் ஆவாய்

1. தானதருமம் செய்து மகிழ்பவன் ஆவாய் மனமே
இழிந்த தொழிலைச் செய்துகெட் டழியாதே மனமே

2. எக்கநாதி எல்லம்மா மாரிதுர்க்கை சௌடியரை
அக்கறை கொண்டு பூசிப்ப தெதற்கு?
திடீரென் றெமதூதர் இழுத்துச் செல்கையில்
சிறுதேவதை கள்வந்து விடுவிப்பரோ பித்தனே

3. சிரத்தையுடன் ஒருபொழுது நியமத் திருந்து
தூபதீபம் காட்டித் தொழுவ தெதற்கு?
ஆடெருமை முதலான விலங்குகளைப் பலிகொள்ளும்
கொடுமைத் தெய்வங்களைத் தொழாதிரு மனமே

4. இளந்தளிர் வேப்பங் காய்தின்று வாழைநார் உடுத்தி
வகைவகை யான அலங்கா ரம்செய்து கொண்டே
ஆரவாரத் துடன்கூவிக் குதித்துக் குதித்தா டுவதால்
உனக்கு மேலாம்முத்தி உண்டோ
பித்துகொண்ட மனமே

5. தான தருமங்களால் பிறர்க்குதவி புரிவாய்
கடையவ னாகிநீ கெட்டழிய வேண்டா
ஞான மின்றி ஈனதெய்வம் வணங்குவதால்
என்னபயன் உனக்குண்டு பித்துகொண்ட மனமே.

6. நரகத்தில் எமன்தரும் வேதனையைக் களைவதற்கு
வரம்தரும் புண்ணிய கதைகளைக் கேட்பீர்
செல்வன் ஆதிகேசவனை முழுதும் நம்பி
நிலையான பதம்பெறு பித்துகொண்ட மனமே.

மூலம்: கேதாரகௌள இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "தானதர்மவமாடி" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 140. நான்நீ என்று பேசாதே

1. நான்நீ என்று பேசாதே இழிந்த மனிதா
ஞானத்தால் உன்னை நீயே தெளிந்து கொள்வாய்

2. பெண்ணும் பொன்னும் மண்ணும் நின்னதோ
உணவால் வந்த காமம் நின்னதோ
செயலால் வந்த தீமை நின்னதோ
உன்னைவிட் டுப்பிரிந்த உயிரும் நின்னதோ

3. பல்வேறு பிறவிகளில் உழன்றவன் நீயோ
மலம்மிக்க கருப்பையில் கிடந்தவன் நீயோ

நீர்வரும் வழியில்வெளிப் பட்டவன் நீயோ
சாதிகுலம் கோத்திரம் உள்ளவன் நீயோ

4. காலகருமம் சீலம் நியமம் நின்னதோ
சால வித்தை மாயை நின்னதோ
வண்ணம் பூசிய மரப்பொம்மை நின்னதோ
திருவிளை யாடல்புரி ஆதிகேசவன் அன்பனாவாய்

மூலம்: பைரவி இராகம் ரூபக தாளத்தில் அமைந்த "நானு நீனு என்னதிரோ" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 141. நரசிங்கத்தை நினைப்பாய் மனமே

1. நாராயணா என்பாய் நரசிங்கத் தைநினைப்பாய் மனமே!
கொடிய பாவங்களை நடுங்கி யோடச் செய்யுமே
2. குருவின் உபதேசத்தால் மேலாம்மறை உணர்ந்து
மறவாமல் அதற்கே அதிகாரி ஆவாய்
திருமந்திரம் ஓதித்திரு விலச்சினை அணிவாய்
பரமவைணவர் வரிசை சேர்வாய் மனமே

3. குலவாசா ரம்விட்டுப் பற்றுக்களைத் துறந்து
பற்பல கிளைகட்கு நீதாவ வேண்டா
திருவடித் தீர்த்தப் பிரசாதம் பெற்றே
எளிதில் ஆன்மாவை நிலையின்பம் பெறச்செய்வாய்

4. சேடம் விசேடமெனும் பரமானு பவங்களுள்
பாவம் சிறிதுமின்றிப் போகச் செய்வாய்
அண்ட நாயகன் காகெநிலை ஆதிகேசவனின்
அடியார்க் கடியாரின் அடிமைநீ ஆவாய்

மூலம்: காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "நாராயணெனு மனவெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 142. பக்தி இல்லாத மனிதனுக்கு முக்தி உண்டா

1. வாய்நா றியபிற கேகாந்தமா
தாய்இறந் தபிறகு பிறந்தகமா?

2. கண்ணொளி இழந்தபின் மிகப்பெரும் அழகியா
வண்ணம் குறைந்த பிறகு பரிசா
புண்ணியம் குறைந்த பிறகு சுவர்க்கமா
சுண்ணமிலா வெற்றிலை சுவையமய மாகுமா?

3. களிம்பேறிய தட்டில்புளிக் குழம்பை உண்ணலாமா?
சளிமிகக் கொண்டோர்க்குச் சந்தனம் நலம்தருமா?
முலையில்லாப் பெண்ணிடம் காமசுகம் உண்டா?
விலையிறங்கிய பொருளால் இலாபம் உண்டா?

4. பத்தியம் மேற்கொண்டால் நித்தியசுகம் உண்டா
சத்துவகுணம் நீங்கினால் சாமர்த்தியம் பயன்தருமா?
உலகில் காகெநிலை ஆதிகேசவ நின்னிடம்
பக்தியில்லா மனிதனுக்கு முக்தி உண்டா?

மூலம்: காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பாயி நாரித மேலெ ஏகாந்தவெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 143. செருக்கு எதற்கோ

1. கொள்ளாதே கொள்ளாதே செருக்கை மனிதனே
செருக்கு கொள்வது நின்தகுதிக் காகுமோ?

2. உருவில் மன்மதனோ சாபத்தில் கௌதமனோ
கோபத்தில் துருவாச முனிவ ரோநீ
தவத்தில் வியாசனோ கருணையில் பலீந்திரனோ
சதுரப்பாட் டிலும்பேச்சிலும் நாரத ரோநீ

3. தானத்தில் கர்ணனோ நன்னடத்தையில் தருமனோ
உறுதிகொண்ட மனத்தில் உருக்குமாங் கதனோநீ
படைபலத்தில் கௌரவனோ வாய்மையில் காங்கேயனோ
பெண்ணின்பம் திளைப்பதில் அமரர்பதி யோநீ

4. மனவுறுதியில் இராவணனோ வலிமையில் வாலியோ
ஒருமை உணர்வில்நீ துரோணன் ஆவாயோ
குலத்தில் வசிட்டனோ வெற்றியில் பார்த்தனோ
வில்வித் தையில் பரசுராம னோநீ

5. உடற்கட்டில் வீமனோ அம்புவிடுவதில் இராமனோ
கோபம் கொள்வதில் சிசுபால னோநீ
போர்க்களத்தில் சுரேந்திரனோ குணத்தில் சுதன்மனோ
போராடு வதில்நீ இந்திர சித்தனோ

6. போரில் தாரகனோ வித்தையில் கார்கெயனோ
தூய்மையில் மாண்டவ்ய முனிவ னோநீ
சித்தியில் கபிலனோ புத்தியில் விநாயகனோ
போரணி வகுப்பதில் கேசவ னோநீ

7. சக்தியில் அனுமனோ பக்தியில் வீடணனோ
புகழில் அரசன் அரிச்சந்திர னோநீ
உத்தியில் சுகனோ விரக்தியில் சூரியனோ
முக்தி சாதனையில் பிரகலாத னோநீ

8. முனிவரில் அகத்தியனோ அஞ்சாமையில் சாம்பவனோ
வாதம் புரிவதில் கண்ண னோநீ
விரதத்தில் இலக்குவனோ துதியில் காசியபனோ
கடமை தவறாமை யில்எம னோநீ

9. அங்கத்தில் அஜமிளனோ சிருங்காரத்தில் துருவனோ
பளபளக்கும் உடலழகில் மன்மதன் ஆவாயோ
கங்கையைப் படைத்த ஆதிகேசவனின் அழகிய
திருவடிகளைப் புகழ்ந்து தூயோனாவாய் பித்தனே!

மூலம்: காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பெரியதிரு பெரியதிரு எலெ மானவா" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 144. வேண்டுமென்றால் வராது

1. வேண்டு மென்றால் வராது வேண்டா என்றால் போகா
திதற்கேன் அஞ்சுவாய் அரியின்
கருணையின்றி எதுவும் நடக்காது.

2. இன்பம்வரு வதைக்காணில் முகம்தா மரைபோல்
மலர்கின் றதுதிரு மாலின் அருளால்
துன்ப நிலையில் கண்களி லிருந்து
நீர்த்துளி களைமிகச் சிந்துவ தெதற்கோ
இன்பமும் துன்பமும் இரவு பகல்போல்
நாள்தொறும் நரர்க்கு வருவன அல்லவோ
காசி பீதாம்பரம் மகரகுண்டல மணிந்த
மாதவனை நினைத்தால் காப்பான் மனமே

3. செல்வம் வந்தால் மகிழ்ந்தாடு கின்றீர்
வறுமை வந்தால் மதிகெட் டழிவீர்
தாது கெட்டு மயக்கம் மிகுந்து
மாயும் நிலையை அடைவ தெதற்கோ
செல்வமும் வறுமையும் தெய்வத்தால் வருவன
என்பதை அறிந்தபின் இடர்களை நீக்கும்
பரமான் மாவான முரனைக் கொன்றோனை
மனத்தில் விடாமல் நினைப்பாய் மனமே.

4. பிறந்தால் பாடி வாழ்த்துவ தெதற்குச்
சாவினைக் கேட்பின் அழுவ தெதற்குப்
பிறப்பும் இறப்பும் எல்லார்க்கும் இருப்பன
விதிவழி வருவன என்பதை அறிவாய்
மரணம் என்ற காரணத்தால் பிரித்துத்
தேவருள் இருந்தும் தேவ தேவனாம்
காகெறிலை ஆதிகேசவ னேபரம் பொருளென்னும்
வேதவாக் கியத்தை மறவாதிரு மனமே.

மூலம்: "பேகெந்தரெ பாரது" எனத் தொடங்கும் கீர்த்தனை

## 145. மகனால் கதியுண்டா?

1. மகனால் கதியுண்டா - உலகில்
ஆழ்ந்துஞான நல்லுரை கேட்பதேகதி

2. முக்குணம் கடந்த பரமனின் தியானத்தில்

இரவும் பகலும் இருந்தின் புறுவாய்
உலகப் பற்றினைத் துறந்த உத்தமர்க்கு
மகனிருந்தா லென்ன மகனில்லா விடிலென்ன?

3. வளையோரும் இளையோரும் தங்கள் காமத்தால்
கூடுகை யில்சுக்கில சோணி தம்சேர்ந்
துண்டானம னிதப்பிண்டம் முன்செய் வினையால்
நிலத்தில் பிறந்தபின் நம்மைக் காக்குமோ?

4. மிகவும் தீயவனாக வளர்ந்து நல்லறத்தைக்
குருவைப் பெரியோரை துறவிகளை நிந்தித்து
வேறுசாதிப் பெண்களை விருப்புடன் கூடி
முதியோரை அவமதித்து நரகில் வீழ்வான்

5. சத்தியம் ஒருமகன் சாந்தம் ஒருமகன்
தீநடத்தை இல்லாமை மகன்சமநிலை ஒருமகன்
உத்தமராம் நான்கு மக்கள் இருக்கையில்
மகனைப்பெற் றாலென்ன பெறாவிடி லென்னவையா?

6. மகனைப் பெறாததற்குக் கதியில்லை என்பது
நூல்கள் நுவலும் தவறான கருத்தே
உலகத் தலைவனாம் பாடத்தாதி கேசவனைத்
தியானிப்பார்க் குநற்கதி இல்லை ஆகுமா?

மூலம்: தன்யாசி இராகம் அட தாளத்தில் அமைந்த "மகனிந்தெ கதியுண்டே" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 146. மாமனார் மனையில்

1. மாமனார் மனையில் கற்றோன்
இருக்க இயலுமா?

2. பாம்பைப் பிடிக்கலாம் துன்பத் திருக்கலாம்
பயங்கரத் தீயின் கட்டியைத் தின்னலாம்
மாமனார் மனையில் வாழ்வதைக் காட்டிலும்
சாவதேஎளிது மானம்மிக் கோர்க்கே

3. பிறரைச் சேரலாம் சுயவரோ டிருக்கலாம்
கொலையா தகரை வேண்டினால் பிழைக்கலாம்
மனைவிதந்த மனையில் வாழ்வதைக் காட்டிலும்
மரம்மலைக் குகைகளில் தங்கிவாழ்வ தெளிதே

4. மாமன் மாமியரிடைக் கலவரம் உண்டாகி
மாமிமா மனைவைது மானத்தை வாங்க
தனக்கிதம் தருவோர் யாருமில்லை யென்று
மாமன் சிறுசிறு சொற்களைக் கூறுவன்

5. ஒருமாதம் வரையில் அன்பளிப்பு தருவர்
இருமாதங் கள்வரையில் இன்னுரை இயம்புவர்
இருமாதங் களுக்குப்பின் சுடுசொல் முணுமுணுப்பர்
இருக்காதே இவ்வீட்டில் என்பதற் கையமுண்டே

6. மாமன் வீட்டில் மானமிழந் துண்பதிலும்
மாடுமேய்ப் பதுநன்று மானமிக் கோர்க்கே
திருமகள் தலைவன் காகெநிலை ஆதிகேசவன்
திருவடியைப் புகழ்ந்து மகிழ்வாய் மனமே.

மூலம்: காம்போதி இராகம் அட தாளத்தில் அமைந்த "மாவன மனெயொளகெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 147. அடைக்கலம் அடைந்தால் என்ன அடையாவிடின் என்ன?

1. தீண்டத் தகாதவர் வீட்டில்

2. தீண்டத்தகா தவர்வீட்டில் பாயசம் இன்பண்டம்
சமைத்தா லென்ன சமைக்கா விடிலென்ன?

3. ஏணிகோல் செய்யப் பயன்படா மரங்கள்
நாளுக்கு நாள்செழித்து வளர்வதால் பயனென்ன
உசித மானதை அறியா அரசன்
போற்றினால் என்ன போற்றாவிடில் என்ன?

4. வறுமை தீர்க்கப் பயன்படாத பொருள்கள்
நிலத்திருந் தாலென்ன மலையிருந் தாலென்ன
உடலுறவுக் குதவாத அழகான மனைவி
உன்னோடிருந் தாலென்ன பிறந்தகத்திருந்த தாலென்ன;

5. பாம்புமலை யில்வசிப்பவன் நாராயணன் ஆதிகேசவன்
அடித்தா மரைகளை அடைக்கலம் அடையாமல்
வரமும் சாபமும்தர இயலாச்சிறு தெய்வங்களை
அடைக்கலம் அடையிலென் அடையா விடிலென்?

மூலம்: பூர்வி இராகம் அட தாளத்தில் அமைந்த "முட்ட பாரதவர மனெய" எனத் தொடங்கும் கீர்த்தனை

## 148. செருக்கு கொள்ளாதே மனிதா

1. செருக்கு கொள்ளாதே செருக்கு கொள்ளாதேநின்
செல்வச் செருக்கினைச் சொல்வேன் மனிதா

2. திருவில் மாதவனோ பெரியோரில் உரோமசனோ
அரக்கன் இராவணனின் செல்வம் நினக்குளதோ
துரியோ தனன்போல் மகுடம்அணிந் தவனோ
செல்வச் செருக்கினைச் சொல்வேன் மனிதா

3. வலிமையில் வாலியோ அழகில் மன்மதனோ
சதுரப் பாட்டில் நாரதனோ நவில்வாய்
வீடுமதுரோணா அருச்சுனரைப் போன்ற வீரனோ
குலத்தில் வசிட்டனோ கூறுவாய் மனிதா

4. தியாகத்தில் கர்ணனோ போகத்தில் இந்திரனோ
பாக்கி யத்தில் தசரதனோ பகர்வாய்
இசையில் தும்புருவோ யோகத்தில் சனகனோ
யாவரைப் போன்றுள்ளாய் உரைப்பாய் மனிதா

5. முனிவர்களில் அகத்தியனோ
இனவொற்றுமையில் அனுமனோ
விரதத் தில்சுக முனியோ விளம்புவாய்

வேத வித்தகரில் பிரம தேவனோ
நின்னறிவு நிலையென்ன மொழிவாய் மனிதா

6. கல்வியறிவில் தேவகுருவோ மதியில் மனுமுனியோ
கடமை உணர்வில் யாரைப்போான் றுள்ளாய்
சித்தியில் நவகோடி மனிதர்களில் ஒருவனோ
மதிகெட்ட மனிதனே செல்வநிலை செப்புவாய்

7. வெற்றிதோல்வி பற்றியேன் விளம்பு கின்றாய்
பற்றனைத்தும் துறப்பாய் செருக்குநினக் கெதற்கோ
வல்லவ னாயின் ஆதிகேசவன் பெயரைப்
பேசும்தொறும் புகழ்ந்து பேரின்புற்று வாழ்வாய்.

மூலம்: முகாரி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "மெரெயதிரு மெரெயதிரு எலெ மானவ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 149. உலகில்

1. இயற்கையி தியற்கை பொய்யுரை அன்றென்
றுலகிற் குரைப்பேன் எதிரான சொற்களை

2. வேதசாத்திர புராணம் ஓதுபவனே சூத்திரன்
விருந்து புரப்பவனே மிகுந்த கருமி
தினமும்சந் தியாவந்தனம் செய்பவன் பாவி
பதிசொல் வழிவாழ்வோள் பெரிய பாதகி

3. தானதருமம் செய்யா திருப்பவன் அறவோன்
மானாபி மானங்களைத் துறவாதான் யோகி
உயிர்களுக் கின்னல்தரு வோன்நல்ல ஞானி
அறிவுடைப் பெரியோரை அவமதிப்பவன் நல்லோன்

4. ஏரிகுளம் பூந்தோட்டம் அமைப்பவன் துரோகி
குருதெய்வம் பெரியோரை வைபவன் சான்றோன்
வளம்நிறை காகெநிலை ஆதிகேசவன் திருவடியை
நிரந்தரம் நினைப்பவன் கேள்வியறி வற்றோன்

மூலம்: காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "சகஜவிது ஈநுடியு" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 150. வல்லவர் விளக்குவீர்

1. வல்லவர் விளக்குவீர் குறிப்புப்பொருள் இருப்பதை
எல்லார்க்கும் ஒப்புதலா யிருக்கும் பெயரை

2. சித்திரை நாளில் பிறந்திருக்கும் மருகியை
இறப்பிற்குக் காரணமாக வெண்ணிவெளியே விரட்டினான்
உத்தராயண மாமனின் மகளைக் கொன்றனர்
பொழுதுபோ காதவெனக்குக் காட்டுவாய் தடங்கண்ணி

3. அங்கே அண்ணனின் மகனின் கையால்
ஆடை யிழந்தடி பட்டுக் கொண்டான்
உழுத வயற்கண் திருமால் தங்கையை
மணம்செய் வித்து மருகனைப் பெற்றான்

4. ஆரழலாய்ப் பொங்கி அரக்கரை அழித்துத்
தரைக்கண் மூவரை வென்று
பெரும்பெயரைப் பெற்ற
வரம்தரும் காகெநிலை ஆதிகேசவன்

மூலம்: கல்யாணி இராகம் ஆதிதாளத்தில் அமைந்த "பல்லவரு நீவு பேளிரய்ய" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 151. வந்தோம் ஐயா கோவிந்த செட்டி

1. வந்தோம் ஐயா கோவிந்த செட்டி
இன்றுன தருட்பிர சாதம்வுண் டென்றே

2. உவந்த பால்நெய் அதிரசம் கலந்துபின்
உவந்த ஏலக்காய் சுக்குமிளகாய் கலந்துமிக
அபூர்வ மானதின் பண்டங்கள் செய்தே
ஐம்பத்தாறு நாடுகளில் விற்கும் செட்டி

3. உடைந்த பானையை எறியாமல் நாமமிட்டுக்
காசுக்காக விற்பாய் ஒன்றன்பின் ஒன்றாய்
உடல்நிரம்ப மிக்க உணவை விற்றே
உடைமைகளைச் சேர்க்கும் உலோபியான செட்டி

4. பாம்புமலை மேலிருக்கும் திம்ம செட்டி
நாட்டிற்குப் பிரசாதம் நல்கும் செட்டி
ஆசையால் பணத்தை ஆக்கும் செட்டி
ஆதிகேசவ நாராயண னென்னும் செட்டி

மூலம்: பூர்வி இராகம் அட தாளத்தில் அமைந்த "பந்தெவய்ய கோவிந்தசெட்டி" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 152. நம் தேவர் வீரய்யா

1. நாங்கள் இடையர்கள் நமது தேவர் வீரய்யா
காப்பான் பாட்டன் மனிதராம் ஆட்டு மந்தையை

2. அறிவென்னும் மனிதஆடு மறதியால் இழிவடைந்தது
மறைவில் காலனாம் ஓநாய் துரத்துகின்றதே
மறைவில் யானையை முறிப்பதைக் கண்டாலும்
அறிந்தும் அறியாதது போல்இருப்பான் நம்பாட்டன்

3. எண்மதம் பொறாமை என்னும் ஆடுகள்
படைப்பில் பரமான்மா என்னும் ஆடு
முதியோர் சித்தர் முனிவராம் செம்மறிகள்
கட்டிக் கோல்கொண்டு காப்பான் நம்பாட்டன்

4. பிறப்பிற்கு முதலில்லை இறப்பிற் கிறுதியில்லை
பிறப்பிறப்பு பற்றி அறிவான் நம்பாட்டன்
அத்தனை நரப்பசுக்கள் நம்மனையில் இருந்தாலும்
வயிற்றிற் குணவிட வேண்டுவதுநம் பாட்டனிடம்

5. வேதம் சாத்திரம் புராணம் சுருதி தருக்கம்
சாதனமாம் நாய்கள் நம்பாட்டன் கூட்டத்தில் உள்ளன
பேதமின்றிக் குரைத்து வாய்சலித்துக் கால்கள் தளர்ந்தபின்

காப்பாற்றிக் கஞ்சியை வார்ப்பவன் நமது பாட்டனே

6. மூவுலகும் உடையான் சங்கதி இவனமைச்சன்
மூவுலகோரும் இவனைப் புகழ்ந்து பாடுவர்
காமன் தந்தை காகெநிலை ஆதிகேசவன்
பாதத் தாமரையை நம்பாத வனேயிடையன்

**மூலம்: காம்போதி இராகம் ஐம்ப தாளத்தில் அமைந்த "நாவுகுருபரு நம்ம' தேவரு பீரய்ய" எனத்தொடங்கும் கீர்த்தனை.**

## 153. காக்கும் ஐயனை அனுப்பு

1. காக்கும் ஐயனை அனுப்புவாய் தோழி
கற்றவர் காமுறும் பாடத்தாதி கேசவனை

2. சந்திரகுலத் தரசனின் தம்பிக்குத் தோழன்
சந்திரனின் பகைவன் பாம்பின்மீது படுத்தவன்
சந்திரனின் சோதரியைக் கைத்தலம் பற்றியவன்
சந்திரனிருந் தவீட்டிற் கனுப்புவாய் கமலக் கண்ணி

3. தாமரை உந்தியன் கோடிதாமரை தேசினன்
தாமரையில் உதித்த பிரமனின் தந்தை
தாமரையில் பிறந்தவளைக் கைப்பிடித்த வனைவிரைவில்
தாமரை முகத்தான்மனைக் கனுப்புவாய்கம லக்கண்ணி

4. பாலக னாய்ப்பல அசுரர்களை வதைத்தவன்
திருவிளை யாடலால் அடியரைக் காப்பவன்
நீலமேக வண்ணன் பாக்கிய புரத்தில்
நிற்கும் திருமகள் கணவன் ஆதிகேசவன்

மூலம்: காம்போதி இராகம் ஐம்ப தாளத்தில் அமைந்த" காவவனய்யன கஞகு ரமணி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 154. ஏன் மனம் மயங்கினாய் இளங்கொடியே

1. ஏன்மனம் மயங்கினாய் இளங்கொடியே
உனக்குச் சமம் ஆகாத இடையனிடம்

2. மகனுக்கு மைதுனனாகி மகளிற்குப் பதியாகி
மகளிற்கு மருகனாகி மருகனின்மரு கனானான்

3. மகளின் மகனுக்கு மைதுனனாகி மாமனை
உலகறியக் கொன்றானைக் குலங்கெடுத்த கோவலனிடம்

4. அத்தைக்குக் கணவனாகி அரக்கரை அழித்தானைச்
சித்தத்தில் நிறைந்த சீர்மிகுமாதி கேசவனிடம்.

மூலம்: யதுகுலகாம்போதி இராகம் திரிபுடை தாளத்தில் "ஏனெ மனவித்தெ லலிதாங்கி" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 155. அகோபல

1. என்னகாரணம் வாயைத் திறந்தாய் கூறுவாய்
அரக்கரை அழித்த அகோபல நரசிம்மா

2. வேதத்தைக் கவர்ந்தவனைக் கொல்ல வாயைத் திறந்தாயோ
மலையைமுது கில்சுமந்து நடுங்கி வாயைத் திறந்தாயோ
பூமியைக் கவர்ந்தானைக் கொல்ல வாயைத் திறந்தாயோ
இரணியன் மார்பைப்பிளக்க உலகறிய வாயைத் திறந்தாயோ
பாலகன் பிரகலாதனைக் காத்தவனே அகோபல நரசிம்மா

3. மாவலியிடம் தானம் வேண்டுவதற்கு வாயைத் திறந்தாயோ
வஞ்சனைபுரி அரசரை அழிப்பதற்கு வாயைத் திறந்தாயோ
இற்பிறப்பினள் சீதையைத் தேடியலைந்து வாயைத் திறந்தாயோ
மலைந்த மாமனைக் கொன்றுநின்று வாயைத் திறந்தாயோ
செய்யத்தகா தனசெய்யப் புவியில்வந் தவதரித்த நரசிம்மா

4. கோபியர் அழகைக்கண்டு மயங்கி வாயைத் திறந்தாயோ
குதிரை மீதேறி அயர்ந்து வாயைத் திறந்தாயோ
காமன் தந்தை காகெநிலை ஆதிகேசவ அரங்கா

திருமகள் தலைவனே பிறவியைப் போக்கும் பரமனே
வாயைத் திறந்து கூறுவாய் அ கோபல நரசிம்மா

மூலம்: காம்போதி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஏனு காரண பாய தெரதி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 156. யானையைக் காண்பீர் ஐயா

1. யானையைக் காண்பீர் ஐயா கண்டபின்
ஆனந்தப் படுவீர் ஐயா

2. தங்களை அவனுக் குரிய ரென்று
கருதும் மனிதரைக் காப்பான்

3. பேரரசன் பாண்டுவின் புதல்வனுக்கு
நண்பனான யானை
ஆண்மை அற்ற மாகதனை அழித்த யானை
கோவலர் கூட்டத்தில் லீலைகள் புரிந்த யானை
அறச்சிந்தை அற்றோரைக் கொல்லும்
பொல்லாத யானை

4. சிறுவனின் சொற்கேட் டசுரனைக் கொன்ற யானை
மனையில் உணவுண்டு விதுரனுக் கருளிய னானை
தடங்கண்ணி துரௌபதியின் மானம் காத்த யானை
தருக்கு கொண்ட சிசுபாலனைக் கொன்ற யானை

5. அர்ஜுனனுக் குயர்ந்த பதவியைக் கொடுத்த யானை
கரவாடும் வன்னெஞ்சக் கள்வரைக் கூடாத யானை
காமன் தந்தை காகெநிலை ஆதிகேசவ யானை
மூவுலகிற்கும் வல்லவனாய்ப் பாடுவோர்
வயப்பட்ட யானை

மூலம்: கல்யாணி இராகம் அடதாளத்தில் அமைந்த "ஆனெய நோடிரய்ய" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 157. பழம் தின்ன வருவீர்

1. பழம்தின்ன வருவீர் அரியின் அடியோரே
பழம்தின்ன வருவீர்

2. பதினான்கு உலகிலும் தேவர் விளைவித் தபழம்
பக்தர்கள் வாயினால் புகழ்ந்து பாடப் படும்பழம்
ஆசை உள்ளவர் வந்து தின்பீர் தினமும்
மாதவன் என்னும் நல்ல மாவின் பழத்தை

3. அயனைப் பெற்றபழம் ஆனையைக் காத்தபழம்
உண்மை முனிவரால் உணரப்படு கின்றபழம்
மூவுலகும் போற்றப் பாற்கடலில் உள்ளபழம்
நன்மன அடியவரே பழந்தின்ன வருவீர்

4. மாடுகளை மேய்த்தபழம் பாம்பினை மிதித்தபழம்
நம்பியழைத்தால் தூணினுள் ஒவென் றலறும்பழம்
மனம்மறுகிய துருவனுக்குப் பட்டம் அளித்தபழம்
கருணைநிறை காகெநிலை ஆதிகேசவ னாம்பழம்

மூலம்: சங்கராபரண இராகம் அட தாளத்தில் அமைந்த "ஹண்ணு கொம்புவ பன்னி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 158. ஒருசேர விழுங்கிற்று

1. பல்லுயிர்களை ஒருசேர விழுங்கிற்று
நிபுணனாம் காகெநிலை ஆதிகேசவ நீஅறிவாய்

2. அரியை விழுங்கியது பரபிரமனை விழுங்கிற்றுத்
தேவர் உலகத்துத் தேவர்களை விழுங்கிற்று
நுதல்விழி நாட்டத்துச் சிவனை விழுங்கிற்
றரியின்நண்பர்களை ஒருசேர விழுங்கியது

3. எட்டுத்திக்கு யானைகளை எளிதில் விழுங்கிற்றுச்
சிகரங்களைக் கொண்டகுல கிரிகளை விழுங்கிற்
றெழுத்தாணி பிடித்த பிரமனை விழுங்கிற்று

நாற்பத்தெட் டுலகங்களை ஒருசேர விழுங்கிற்று

4. செடியை விழுங்கிற்றுத் தோட்டத்தை விழுங்கிற்றுச்
செடியின் தாயைத் தந்தையை விழுங்கிற்றுச்
விடுகதை உட்பொருள் அறிந்தவர் விளம்புவீர்
கனகதாசனை ஆளுடை ஆதிகேசவன் அறிவான்

மூலம்: பூர்வி இராகம் அட தாளத்தில் அமைந்த "ஹலவு ஜீவவை ஒந்தெளி நுங்கித்து" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 159. பொய் பேசுவோன் அல்லேன்

1. பொய்யைப் பேசு வோன்நான் அல்லேன்
விட்டலனின் பெயரை மறந்து விட்டேனே!
2. பாம்பு மலைமீது வெள்ளரிக்காய் வளர்த்துத்
தேவ மலைமீ தவதார மெடுத்துப்
பாழூரில் வாழுமோர் குயவன் இறந்தான்
கோகர்ணத் திலொரு பரதேசி அழுதான்
3. ஒரேசமயத் தில்நான் மூன்றரசரைப் பார்த்தேன்
பாம்பின்படம் பிடித்த கோழியைப் பார்த்தேன்
கொக்கையும் சாணியையும் வயிலில் பார்த்தேன்
நரைபொது மகளுக்கிருப் பதைக்கண்ணால் பார்த்தேன்

4. சிறுபுழு ரொட்டியைச் சுடுவதைப் பார்த்தேன்
ஆடொன்று மத்தளம் அடிப்பதைப் பார்த்தேன்
தவளைதா தையென்று குதிப்பதைப் பார்த்தேன்
பாடத்தாதி கேசவனைக் கண்ணால் பார்த்தேன்.

மூலம்: மோகன இராகம் அட தாளத்தில் அமைந்த "லடபட ணாசடெயாடுவெனல்ல" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 160. தேவகி மைந்தன் அறிவான்

1. மூவர் ஏறிய வண்டிபாரம் நிரம்ப வில்லை
தேவகி மைந்தனே அறிவான் இதனுட் பொருளை

2. புகழ்ந்து சுமந்தவ னொருவன் பார்த்துத்
திரிந்தவ னொருவன்
ஓடி யாடியவன் மற்றவன் ஆகியவர் இம்மூ வர்களே
புகழ்ந்தோனுக்குக் காதில்லை பார்த்தவனின்
மகனே பாவியாவான்
ஓடி யாடியவன் ஒருதோணி ஆவதை அறிவாய் ஐயா

3. மாயக் காரன் ஒருவன் உடலைக் காப்பவன் ஒருவன்
உடலாம் மலையை எடுத்தவன் மூன்றாவது மனிதன்
ஆவான்
மாயக் காரன் நல்லுருவன் உடலைக் காப்பவன் அழகன்
உடலாம் மலையை எடுத்தவன் அறச்சிந் தனைமிக
உடையோன்

4. அரிக்கும் மாமனானான் அரிக்கு மருகனு மானான்
அரியே அவனுள் இருக்க அவனும்
அரியனுள் இருப்பான்
அரியின் உருவம் கொண்டே இருளில் இராக்கதரைக்
கொன்றான்
திருமகள் நாயகன் காகெநிலை ஆதிகேசவ ராயனே.

மூலம்: காம்போதி இராகம் ஐம்ப தாளத்தில் அமைந்த "மூவரேறிதபண்டி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 161. மரத்தை விழுங்கும் பறவை

1. மரத்தை விழுங்கும் பறவை மனைக்குள் வந்ததே
இதைப்பற்றி விளக்கத்தை இங்குள்ள மக்களே இயம்புவீர்

2. ஒரேகிளையில் உள்ளபறவை உடலினுள் குடலில்லை
கழுத்து மூன்றுண் டாயினும் மூக்கில்லை
நொண்டி மனிதன்போல் வீற்றுள்ளது வீட்டினுள்
எட்டுக் கைப்பிடி உணவை உண்பது

3. பேசும்போ தேஉண்பது நெற்றிநடுவில் வாயுள்ளது

கடுங்குரலில் பாட்டைப் பாடிக்கொண் டுள்ளது
காட்டில் பிறப்ப தகன்றால் இரண்டாவது
வறுமை வந்தால் உதவிநம்மைக் காப்பது

4. தாமரை முகத்தியர் கையில் மகிழ்ந்தாடுவது
மூவுல கிற்கும் உணவை ஊட்டுவ
தொளிமிகு மாணிக்கச் சிங்காதனத் திருப்ப
தானையின் அருந்துயர் தீர் ஆதிகேசவனே அதையறிவான்.

மூலம்: காம்போதி இராகம் அட தாளத்தில் அமைந்த "மரநுங்குவ பக்ஷி மனையொளகெ பந்ததெ" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 162. அரிதாசன் கனகனின் புதிர்

1. விதைகள் மூன்றுவித்தி உண்மை வாழ்வைக் காட்டுவீர்
அரசர்க் கொருபழ மாகும்நாட்டிற் கிரண்டே

2. கரிய விதைக்குக்காலும் வெள்ளை விதைக்கு முகமும்
மற்றொரு விதைக்குப் பதினெட் டுக்கண் களாகும்
சுவைதரு வேருக் கிராகம் முப்பத் திரண்டு
யானை வாகனத்தில் வருபவளே பண்டிதரின் அரசியே!

3. ஐந்து வார்த்தைமேல் வைதீகன் என்பர்
ஐந்து தீபங்கள் காற்றில் அணையுமென்று
காற்றில் பறக்கும் மண்புழுதிமேல் நீர்தெளித்துத்
திருவிளை யாடல்கள் புரிகின்ற கருணை

4. இரண்டுகாளைகள் சேர்ந்து கருடவா கனமாயிற்று
வரும்போ தோலமிடு கின்றதே அளவுகடந்தே
அரிதாசன் கனகன் விடுக்கும் புதிரிது
ஆதிகேசவ னாணையை வல்லவர் விளக்குவீர்

மூலம்: சௌராஷ்ட்ரா இராகம் மட்ட தாளத்தில் அமைந்த "பீஜ மூரனுபித்தி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 163. அறிய வல்லவர் விடுவிப்பீர்

1. பல்வகை ஆற்றல்கள்பெற்ற அறிஞரே விடுவிப்பீர்
எல்லாராலும் விரும்பப் படுவதன் றேகாந்தம்

2. வளையலின்தொடக்கமெது கார்முகலின் முடிவெது
சங்கரன் பேரனின் முகத்துள் ஒளியாது
தாமரைஒளிகுன்றுமா அற்பரின் தவமெது
புனைபெயர்க் கடையாளமெது கயவனுக்குக் குணமேது?

3. கல்லிற்குக் கண்ணேது காமனின் உருவே
திளங்கொடி யனையாரை மனத்திருப்தி செய்வதெது
நிலத்திற்குச் சாட்சியாது நியாயத்தின் வழியாது
வன்மையை நிறுத்துவதெது நற்பேறென் றால்யாது?

4. உண்மைக் கழிவுண்டோ உலகிற் கிறுதியேது
மனத்தை மயக்கும் கபடம் என்பதியாது
உலகில் காகெநிலை ஆதிகேசவன் அடியை
அடைக்கலம் அடையின்நாம் அடையும் பயன்யாது?

மூலம்: பந்துவராளி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பல்லவரு பேளிரை" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 164. வல்லவர் கூறுங்கள்

1. வல்லவர் கூறுங்கள் உலகிலுள்ள இந்நிலையை
தருப்ப சயனன் அரங்கன் பெருமையை

2. சிறகுண் டாழ்ந்து பார்ப்பின் பறவையன்று
தரையின் முதுகுமேல் தலையை மடக்கியிருப்பது
வெறுங்காலின் சுமையால் நடக்கவிய லாதுமேலும்
இரண்டுடல்கள் ஒன்றாகக் கூடிக்கொண் டிருப்பது

3. பூமிமேலொரு பாதம் வானின்மே லொருபாதம்
குலப்பகைவரைக் கொன்று குதித்தாடிக் கொண்டிருப்பது
நிலத்தில் நிகரின்றித் திரிந்துகொண் டிருப்பது

களத்தில் அரக்கரை அழித்துக்கொண் டிருப்பது

4. பிறந்த வுடனேயே நாணத்தோ டிருப்பது
குதிரைமீ தேறியதால் அரியின்தலை மகிழ்ந்தாடியது
கனகனை ஆட்கொண்ட காகெநிலை ஆதிகேசவனின்
அடியார்க்கு நாடொறும் அருளைவாரி அளிப்பது.

மூலம்: காம்போதி இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பல்லவரு பேளிரி லோகத ஈபதனு" எனத்தொடங்கும் கீர்த்தனை.

## 165. தன் குழந்தைகளின் எதிரி

1. பறவை எதுவெனப் பகர்வீர் - தனது
குழந்தைகளுக் கெதிரியானது மூவுலகில் எங்கிலும்

2. பன்னிறப் பறவை அதில்துளை களுண்டு
கண்ணை மூடுவதில்லை திறப்பது மில்லை
தண்திங்களின் ஒளியில் வாழ்கின்ற வொன்று
தண்ணிய வேளையில் காத்திருக் கின்றது

3. சிவப்புநிறப் பறவை கொள்வது சாறுகளை
மகிழ்ச்சி மிகுந்த குதித்தாடு கின்றது
வண்டின் நிறத்த தெட்டுச் சிறகுடைய்
தறிஞரால் அறிந்துரைக் கும்அள வில்லாதது

4. உண்டாலும் மகிழாது ஊரைச் சேராது
தலைமேல் இரண்டு கொம்புகள் உண்டே
இதயத்தின்நடுவில் மலத்துவாரம் உண்டு
கணவனைத் தின்னும் யானைமுகப் பறவை

5. அடர்ந்தமீசை உண்டு கருடனெனக் கூறாதே
ஒன்றாக இணைவது வருடத்தில் ஒருமுறை
குன்றில் இருப்பது துரைகளுக் கஞ்சாது
மூடர்கள் அறியாப் பொன்னிறப் பறவை

6. விரிந்த தோகை அதற்குண்டு மேலும்

[illegible]

அன்பர தன்பில் அகப்படுவ துண்டு
காகெறிலை ஆதி கேசவனை அறிந்தது
முக்கண்ணன் அவதாரமாம் அனுமன் அறிவான்.

மூலம்: சங்கராபரண இராகம் அட தாளத்தில் அமைந்த "பக்கிய குருஹ பல்லரு பேளிரி" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 166. இந்த அதிசயம் கண்டதில்லை

1. என்றைக்கு மிந்த அதிசயம் கண்டதில்லை
2. கடைத்தெரு வொன்றில் பசுவைக் கன்று தின்றது
   புலியைக் கண்ட நரியும் புலியைத் தின்றது
3. புற்றில் ஆடும் பாம்புமத யானையைத் தின்றது
   வடக்குத் திசைக்கண் வெண்திங்கள்
   தோன்றியதே அம்மா
4. யோக வழியின் காகெறிலை ஆதிகேசவ ராயனின்
   அடியாரின் புதிரிது வெண்திங்கள் ஆயிற் றம்மா

மூலம்: சங்கராபரண இராகம் ஏக தாளத்தில் அமைந்த "எந்தெந்து இந்த சோத்ய" எனத் தொடங்கும் கீர்த்தனை. 158 முதல் 166வரை உள்ள கீர்த்தனைகள் புதிர் போடுவனவாக உள்ளன.

## 167. அழகுபொலி திருமகள் தலைவனே

1. அழகுபொலி திருமகள் தலைவனே
   நஞ்சுண்ட சிவனின் நண்பனே
   கங்கையைப் பாதத்தில் பெற்றவனே
   சேஷகிரியில் உறையும் அரங்கனே
   அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே
2. பூமணக்கும் தென்றல் வீசுகின்றதே

பறக்கும் வண்டினி தொலிக்கின்றதே
திங்களும்மீன் களும்ஒளி குன்றினவே
நீலவான் நிறத்தவனே பீதாம்பர
ஆடையணிந்து பள்ளியெழுந் தருள்வாயே

3. கண்டகர்ணன் பக்தியில் சிலைபோல்
மனவுறுதி கொண்ட துருவன்
உலகப்பற்று துறந்த அம்பரீசன்
பெண்பித்தை வென்ற உருக்மாங்கதன்
நற்சயல் புரியும் எமன்மகன்
வீமன்அருச் சுனன்நகுல சகாதேவன்
முதலான பக்தர்கள் வந்தனர்
அரக்கரை அழித்த அரங்கனே
அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே

4. கதிரவன் குணதிசைச் சிகரம்வரப்
போரில் வல்லவருணன்
போர்க்களத்தில் பகைவரை அழிக்கும்
யானை வாகனன் வியாக்ரானு
சர்மனின் மகனும் வந்தனர்
திருமகள் தலைவனே மனம் ஒப்பி
அருள்புரியப் பள்ளி யெழுந்தருள்வாயே!

5. வால்மீகீ துர்வாசன் விதுரன்
அத்திரி சாண்டில்யன் கோபமிகு
கௌசிகன் உறுதிகொள் மார்க்கண்டன்
கடல் நீரைக் குடித்த மாமுனிவன்
நற்குண வசிட்டன் பராசரன்
சுகமுனிவன் நினைக்காண வந்தனர்
அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே.

6. வேதத்தைத் திருடிய கள்வனை வென்றாய்
மேதினியை எடுத்துச் சென்ற இரணியாக்கனின்
கழுத்தை நகத்தால் கிழித்தாய் பாதத்தால்
தரணியை அளந்தாய் வீரமிகு அரசரைக்
கொன்றாய் சுவைமிகு உணவைத் துறந்து

காட்டிற்குச் சென்றாய் ஆக்களை மேய்த்தாய்
முப்புர மங்கையர் மானம் அழித்தாய்
குதிரை வாகன னானாய் இவ்வகை
திருவிளை யாடல்கள் புரிந்த பிறகு
சேஷ கிரிமேல் பள்ளி கொண்டாய்
நரசிம்ம காகெநிலை ஆதி கேசவனே
அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே

மூலம்: பூபாள இராகம் ஐம்ப தாளத்தில் அமைந்த "சிங்கரத சிரிதரனெ" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 168. பிரமனின் தந்தையே

1. பிரமனின் தந்தையே நூறு கோடி
சூரியப் பிரகாசனே எண்ணில் அடங்கா
அண்டங்கள் நாயகனே இந்திரன் முதலான
தேவர்கள் வணங்கும் வேங்க டேசனே
அரியே அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே

2. புவிமேல் இருளைப் போக்கு வதற்குக்
குணதிசை கதிரோன் உதயம் செய்தான்
தண்கயத்தில் கமலங்கள் மலர்ந்தன வண்டுகள்
இன்னொலி எழுப்பு கின்றன வானில்
பறவைகள் பறக்கத் தொடங்கின ஐயா
மண்ணவர் மகிழ்வுடன் வந்தனர் ஐயா
பிரமன் முதலாம் தேவர்களும் வந்தனர்
அனைவர்க்கும் அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே

3. இன்னியங்கள் இயம்ப மேளங்கள் முழங்க
நன்வீணை பிடித்த சனகாதியோர் வந்தனர்
ஏழுசுரங்களில் பதினைந் திராகம் பாடுகின்றனர்
யமுனை கௌதமி கிருஷ்ணா கோதாவரி
கங்கை ஆகியோர் வாழ்த்த வந்தனர்
நீராடல் புரிய வந்தருள் செய்வாய்
மன்மதன் தந்தையே பள்ளியெழுந் தருள்வாயே

4. விதுரன் பிரகலாதன் உருக்மாங்கதன் வீடணன்
அஜமிளன் வரம்பெற்ற மார்க்கண் டேயன்
போஷில் வல்ல அனுமன் சுக்கிரீவன்
சாம்பவான் சபரி துரௌபதி வந்தனர்
நதியின் மகனாம் வீடுமன் அக்ரூரன்
பாண்டவர் ஐவரும் பாகவதரும் வந்தனர்
தேவதைகள் இரத்தினத் தட்டில் ஆரதி
ஏந்தி வந்தனர் எல்லாம் வல்ல
அரியே அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே

5. சுகமுனி வியாசன் துர்வாசன் கும்பமுனி
கௌசிகன் பராசரன் அம்பரீசன் கௌதமன்
புண்டரீகன் வால்மீகி பிருகுமுனி காசியபன்-
வசிட்டன் காப்பாயென வேண்டி வந்தனர்
சந்தனத் திலகம் அணிந்தோய் தேவர்கள்
தங்கத் தட்டில் சுவைமிகு உணவுகள்
ஏந்தி வந்தனர் உருக்குமணி நாயகனே
அரியே அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே

6. வேதம் கவர்ந்தானை வென்று பூமியைக்
கவர்ந்தானை வென்று வாமன னாகி
வந்து பூமியை அளந்தர சர்களின்
தலைகளை வெட்டிய இரகுபதி கிருஷ்ணனே
வைகுந்தம் நிகரான சேஷகிரியில் உறைபவனே
பக்தரைப் புரக்கும் காகெநிலை ஆதிகேசவனே
உலகத்தை உடையோனே திருவேங்க டேசனே
அரியே அருள்புரியப் பள்ளியெழுந் தருள்வாயே

மூலம்: பூபாள இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "பூசரன ஜனகனே" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 169. நரசிம்மனே விரும்பிப் பள்ளியெழுவாய்

1. தண்கதிர்த் திங்களும் தாரகைகளும் ஒளிகுன்றின
கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்

செங்கண் பொடிக்கூறை உடுத்த தவத்தவர்
அரிஅரி யெனப்பே ரரவம் செய்கின்றார்
நரசிம்மனே விரும்பிப் பள்ளியெழுந் தருள்வாயே

2. மேற்கில் மேகங்கள் முழங்கு கின்றன
சோலைக் குயில்கள் கூவு கின்றன
தவத்தவர் வைகறையில் மெள்ள எழுந்து
வீட்டை விடுத்து நாட்காலே நீராட
வந்தனர் ஐயா எல்லாம் அறிந்த
ஐயனே விரும்பிப் பள்ளியெழுந் தருள்வாயே

3. குமுதங்கள் கூம்பின சகோர முதலான
பறவைகள் வானில் நிறைந்து பறந்தன
வண்டுகள் ஒலித்து மலரினுள் நுழைந்தன
வரகவிகள் இதயம் இனிமையில் மிதந்தது
உலகின் மீதுள்ள குலவரை களின்மேல்
பானுவின் கதிர்கள் பரந்து படிந்தன
அரியே விரும்பிப் பள்ளியெழுந் தருள்வாயே.

4. அஞ்சனை சிறுவன் அரவரசன் கருடன்
கஜேந்திரன் பிரகலாதன் மாவலி வீடணன்
துருவன் மோகினியர் மாயையை வென்ற
உருக்மாங்கதன் தனஞ்சயன் விதுரன் அக்ரூரன்
வைகறையில் எழுந்து முத்தியை விரும்பும்
முனிவருடன் சேர்ந்து வந்தனர் அருள்நிறை
பரம்பொருளே விரும்பிப் பள்ளியெழுந் தருள்வாயே

5. வெள்ளானை எருமை மனிதன் முதலை
குதிரை காளை வாகனங்களில் வருகின்ற
தேவர்கள் மனுமுனி பிரமனுடன் சேர்ந்து
புகழ்மிகு துந்துபிகள் ஒலித்துக் கொண்டே
அறிவு மயனேவுனக் கருகில் வந்தனர்
உலகத் தலைவன் ஆகிய அரியே
அருளாள விரும்பிப் பள்ளியெழுந் தருள்வாயே

6. தாளமும் வீணையும் பிடித்ததும்புரு நாரதர்
பூபாளம் தேசாட்சி நாராயணி குஞ்ஜரி
மாளவி ஸ்ரீதேவி காந்தாரி மலஹரி
சாளக செளராஷ்ட்ரா முதலா இராகங்களில்
இன்குர லெழுப்பி நாமகீர்த்தனை பாட
அரம்பையர் மகிழ்ந்தாடு கின்றனர் பசுக்களை
மேய்த்தவனே விரும்பிப் பள்ளியெழுந் தருள்வாயே

7. பரத்துவாச ரோமசா அத்திரி கார்கேயா
ஜயஜயாசன சுகமுனி பராசர ரிபுமான்யா
போஜா பிருகு கபிலா மார்க்கண்டா
கௌதம கௌசிக வசிட்டர் முதலான
முனிவர்கள் மேன்மைமிகு மந்திரங்கள் கீர்த்தனைகள்
பாடியவாறு வந்தனர் கோடி சூரியனின்
ஒளிமிக்கோய் விரும்பிப் பள்ளியெழுந் தருள்வாயே

8. பிரமனும் தேவகுருவும் முன்றிலில் நின்று
முறைப்படித் துதித்துப் பாடு கின்றனர்
நாக கன்னியர் நடனமிடு கின்றனர்
தேவருலக மாதர் இரத்தினத் தட்டுகளில்
ஆரதி ஏந்திய வாறுநிற் கின்றனர்
காகெநிலை ஆதிகேசவ ராயனே தேவர்க்
கருள்வோய் விரும்பிப் பள்ளியெழுந் தருள்வாயே!

மூலம்: பூபாள இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "தண்கதிரன நிமிஷ தாரகெளு" எனத் தொடங்கும் கீர்த்தனை 167,168,169 - ஆம் கீர்த்தனைகள் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களாக உள்ளன. இவை தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருப்பள்ளியெழுச்சியுடன் ஒப்புநோக்கத்தக்கன.

## 170. கமலக் கண்ணனே மங்கலம்

1. கமலக் கண்ணனே மங்கலம் எல்லா
உயிரையும் காப்பவனே மங்கலம்

2. கடல்நீரில் ஆமையான தந்தைக்கு மங்கலம்
குலவரைகளைத் தாழ்த்திய வனுக்கு மங்கலம்
நிலம்கவர் அசுரனை வென்றோனுக்கு மங்கலம்
எளிவரும் நரசிம்மனுக்குச் சுபமான மங்கலம்

3. உலகை ஈரடியால் அளந்தானுக்கு மங்கலம்
உலகத்தின் அரசர்களை அழித்தானுக்கு மங்கலம்
பத்துத்தலை அரக்கனை வென்றானுக்கு மங்கலம்
பசுக்களை மேய்த்தானுக்குச் சுபமான மங்கலம்

4. முப்புரப் பெண்களை வென்றானுக்கு மங்கலம்
குதிரை வாகனத்தில் வருவோனுக்கு மங்கலம்
வரம்தரும் காகெநிலை ஆதிகேசவ னுக்குமங்கலம்
திருமகள் நாயகன் அரிக்கு மங்கலம்.

மூலம்: பூர்வி இராகம் ஏக தாளத்தில் அமைந்த "அம்பு ஜதளாக்ஷகெமங்களா" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 171. வெற்றி மங்கலம், சுபமங்கலம்

1. வெற்றி மங்கலம் சுபமான மங்கலம்

2. வாயுவின் மகனாகி மேன்மை பெற்றவன்
கடலில் அணையக் கட்டிய தீரன்
சீதையைக் கண்டு கணையாழி கொடுத்தவன்
அரக்கன் ஊரைத் தீக்கிரை ஆக்கியவன்

3. குந்தி தேவியின் மகனாய்ப் பிறந்தவன்
பாரிசாத மலரைத் துரௌபதிக்குத் தந்தவன்
போர்த்திற மையால் கௌரவரைக் கொன்றவன்
வீரன் எனப்பட்ட வீம சேனன்

4. நற்குணத் தம்பதிக்கு மகனாய்ப் பிறந்தவன்
பௌத்த சார்வாகரின் மாயையை வென்றவன்
மத்துவ மதத்தை நல்லோர்க்கு நல்கியவன்
முத்தான ஆதி கேசவனை வணங்கியவன்.

மூலம்: ஸ்ரீ இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "ஜயமங்களம்" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 172. மங்கலம், வெற்றி மங்கலம்

1. மங்கலம், வெற்றி மங்கலம்

2. தேரிலேறி உலகைச் சுற்றும் சூரியனின்
மகனாம் கர்ணனைச் சாபம்பெறச் செய்தவன்
கோபம் கொள்ளாமல் அனைவரையும் ஆட்கொள்ளும்
சதுரனாம் இறைவனுக்கு வெற்றி மங்கலம்

3. பூதேவி மகனாம் நரகாசுரனை அழித்தவன்
நல்லோரை நாடொறும் நன்கு காப்பவன்
காளிங்கன் தலையில் நடனம் புரிந்தவன்
வரம்தரும் காகெநிலை ஆதிகேசவ ராயன்

மூலம்: பூர்விஇராகம் ஆதி தாளத்தில் அமைந்த "மங்கலம், ஜயமங்கலம்" எனத் தொடங்கும் கீர்த்தனை. 17, 171, 172 ஆம் கீர்த்தனைகள் மங்கல வாழ்த்துக்களாக உள்ளன.

## 173. அரியின் மேன்மையான அருள்

1. அரியே உனதுமேன்மை யாம்அருள் நாடகத்தால்
குருவின் திருவடி கிடைக்கப் பெற்றேனே

2. மூலமந்திரம் உபதேசிக்கும் குருவாக நீவந்து
முத்திக் கரையைச் சேர்ப்பிப்பாய் அரியே

3. மனிதனென் றெண்ணா தழியும்பொருட் செல்வத்தை
அகற்றி நிலையான வழிகாட்டினாய் அரியே
அகந்தை நிறைந்தவன் என்ப தறிந்தும்
நினதன்பர்க் குரியவன் ஆக்கினாய் அரியே
உலகில் நாலாயிரம் அடியவர் நிற்கையில்
எனைவந் தாண்டருள் புரிந்தாய் அரியே

பிறராக்கம் காணில் பொறாமையால் எரிமனத்தைத்
தணிவித்து நல்வழிப் படுத்தினாய் அரியே

4. பொற்பதிக்கு வந்து சேர்வ தென்பது
கோடிய மனத்தனுக் காகுவதோ அரியே
ஆரவாரித் தின்புறும் மனத்தின் கெட்ட
குணங்களை யெல்லாம்களைந்தாய் அரியே
மதயானை போன்று மதங்கொண்ட மனத்தை
அடக்கி ஆள அறிவித்தாய் அரியே
பெருஞ்செல் வெனனும் அகந்தை அகற்றித்
தொண்ட னாக்கிக் கொண்டாய் அரியே!

5. பலர்போற் றும்புகழ் செல்வம் விரும்பி
உலகாள் வேந்தரின்பின் நின்றேன் அரியே
அகந்தை அறியாமைபோன்ற தீக்குண
இருளை யெல்லாம் அகற்றினாய் அரியே
மிகுந்த மூர்க்கனாய் உனதடி யார்க்குச்
சரணெனக் கூறா திருந்தேன் அரியே
ஆணவம் அகற்றித் தேவர்க்கும் கிடைக்காத
நன்ஞானம் நாவில் வைத்தாய் அரியே

6. நின்புகழ் அறிந்து பாடாமல் அலைந்து
திரிந்தவனை நல்வழிப் படுத்தினாய் அரியே
உண்மை உணர்ந்து கொண்டேன் இன்றே
உனது திருவடி பெற்றேன் அரியே
மதமானபேய் அகற்றி மென்மை ஆக்கிய
இதயத்தில் இதமாய் நின்றாய் அரியே
இனிமை தரும்நின் நாமங்களைப் பாடி
வாழ்ந்தேன் வாழ்ந்தேன் நானே அரியே

7. வெண்குடை சூழப் பேரிகை நகாரிகை
பேரொலிசெயப் பவனி வந்தேன் அரியே
குதிரை வீரர்கள் புடைசூழப் புவிமேல்
ஆணவத்துடன் திரிந்ததை அகற்றினாய் அரியே
நீர்போன்ற சிறியவர் கூட்டத்தை விலக்கி

முத்தான அடியைச் சேர்ப்பித்தாய் அரியே
காகெநிலை ஆதிகேச வனருள் இருக்கையில்
யாருக்கும் அஞ்சேன் நானே அரியே.

மூலம்: சாவேரி இராகம் ஐம்பதாளத்தில் அமைந்த "ஹரி நின்ன பரமார்த்த" எனத் தொடங்கும் கீர்த்தனை.

## 174. அடிமை ஆக்கினாய்

1. நினது பெயரொன்றே போதாதா - அந்த
அகால மரணமாம் கயிற்றை அறுத்திட

2. களத்தில் உடல்களைக் கண்டதுண்ட மாக்கிப்
பிணங்களைப் பெருக்கும் போரிட்ட வெனக்குத்
திருவிளை யாட்டால் காட்சி தந்தாய்
பிணத்திற் குயிர்தந்த பேரரு ளாளனே!

3. புண்படு குருதிப் பெருகி யோடப்
பயங்கரப் போர்செய்த வெனக்கருள் செய்தாய்
புளியமரத் தடியில் பாம்பு தீண்டியவனை
மந்திரித்து விடம்நீக்கி மனையை அடைவித்தாய்

4. தம்நிலை அறியா ஆணவப் பிசாசுகள்
எம்மனம் பிடித்தெமை யாட்டின அரியே
அவைகளைப் பிடித்து விரட்டி எமைவிட்
டோடச் செய்தருள் புரிந்தாய் நரஅரியே

5. வெந்துவிழும் உடல்களை நீக்குவோம் என்றே
நினைத்ததை மாற்றிநிலை நிறுத்தி னாயே!
புல்லாங்குழல் தருமினிய இசையைக் கேட்டதும்
சக்திபெற் றுயர்ந்தோம் சீர்மிகு அரியே

6. ஒதியன கேட்டன கதையாய் ஆனவே
அதி மூர்த்தியே காகெநிலை ஆதிகேசவனே
பரிந்த உயிர்க்கு நினைவை ஊட்டி
வாதகுணம் நீக்கி அடிமை ஆக்கினாய்

மூலம்: நாட்டை இராகம் ஜம்ப தாளத்தில் அமைந்த "சாலதெ நினதொந்து திவ்யநாம" எனத் தொடங்கும் கீர்த்தனை. 173, 174, - ஆம் கீர்த்தனைகளில் கனகதாசர் தம் வாழ்க்கையைப்பற்றிக் கூறியுள்ளார். பிறவிப்பயன் அரிக்கு அடிமையாதல் என்பதை விளக்கியுள்ளதால் இது இறுதியில் வைக்கப்பட்டது.

## கனகதாசர் வரலாறு

### தாச சாகித்தியம் :

கன்னட இலக்கிய வரலாற்றில் தாச சாகித்தியம் சிறப்பிடம் பெற்றுள்ளது. தாச சாகித்தியத்தை அருளிய தாசர்கள் தமிழ்நாட்டு ஆழ்வார்களைப் போன்றும் மகாராட்டிரத்துச் சந்தர்களைப் போன்றும் திருமால் பக்தியில் ஆழ்ந்தவர்கள். கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டினரான நரஹரிதீர்த்தரே தாச சாகித்தியத்தின் முதல்வர் ஆவார். அவர் மாத்துவாசாரியார்க்கு அடுத்ததாக மத்துவமதப் பீடத்தில் அமர்ந்தவர். மத்துவ மதக் கொள்கைகளை விளக்கும் பல கீர்த்தனைகளை அருளிச்செய்துள்ளார். அவர் தொடங்கிய தாச இலக்கியத்தைப் பின்னால் வந்த தாசர்கள் நன்கு வளர்த்துள்ளனர்.

நரஹரிதீர்த்தரைத் தொடர்ந்து நல்ல கீர்த்தனைகளைப் பாடியவர் ஸ்ரீபாதராயர் ஆவார். சூளாதி என்னும் பாவகையில் பாக்களை இயற்றிக் கருநாடக இசைக்குப் புதிய விளக்கைத் தந்தவர். அவரைத் தொடர்ந்து தொண்டு செய்தவர் வியாசராயர் (கி.பி 1447-1539) ஆவார். அவர் விசயநகர அரசர் கிருட்டிண தேவராயரின் குருவும் ஆவார். தம் தலைமையில் "தாசகூடம்" அமைத்துத் திருமால் பக்தியை

வளர்த்துள்ளார்.

தாச கூடத்துத் தாசர்களில் மிகச் சிறந்தவர் புரந்தரதாசர். அவர் அரியைப் போற்றியதோடு நில்லாது சமூகத்திற்கும் பல நீதிபோதனைகளைத் தந்துள்ளாா. அவருக்கு அடுத்ததாகக் கருதப்படுபவர் கனகதாசர். இவர்களுக்கு எண்பதாண்டுகள் பின்னால் வந்த தாசர்களில் முதன்மையானவர் விஜயதாசர். அவர் பல தத்துவங்கள் செறிந்த கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். அவர்க்குப் பிறகு சிறந்திருந்தவர் அவர்தம் சீடராகிய கோபாலதாசர் (கி.பி.1721-1762). அவர்க்குப் பிறகு அவர்தம் சீடராகிய ஜகந்நாத தாசர் (கி.பி. 1728-1809) பல கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். மேலும் அரி கதாம்மிருத சாரம் என்னும் காப்பியத்தையும் எழுதியுள்ளார். பிறகு பிரசன்னவேங்கட தாசர், மகிபதிதாசர், ஹௌவனகட்டெ கிரியம்மா ஆகியோர் அரியின் பெருமைகளை விளக்கும் அரிய கீர்த்தனைகளைப் பாடியுள்ளனர். இவ்வாறு நரஹரிதீர்த்தர் காலத்திலிருந்து கிரியம்மா காலம் வரை தாச இலக்கியம் சிறப்பாக வளர்ந்து கருநாடக மக்களுக்கு நல்ல தொண்டினைச் செய்துள்ளது.

## கனகதாசர் பிறப்பும் இளமையும்

### பிறந்த ஊர்

இப்போது தார்வார் மாவட்டத்திலுள்ள ஊராகிய பங்காபுரம் பெரிய நகரமாக இருந்தது. கல்யாண சாளுக்கியர், ஹளெபீட்டின் ஹொய்சளர், விசயநகரத்து அரசர்களின் காலத்தில் அது சிறந்த நகரமாகத் திகழ்ந்தது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் அங்குச் சமணர்கள் பலர் வாழ்ந்தனர். குணபத்திராசாரியார், அஜிதசேனாசாரியார் ஆகிய சமணப் புலவர்கள் இவ்வூரில் வாழ்ந்தனர். ஹொய்சளர் காலத்தில் இது இரண்டாவது தலைநகராக இருந்தது. இந்தப் பங்காபுரத்தை அடுத்த சிற்றூராகப் பாடஎன்னும் ஊர் இருந்தது. இதுவே கனகதாசர் அவதரித்த ஊராகும்.

## பெற்றோர்

பாட என்னும் சிற்றூரில் பீரேகௌடா என்பவன் இருந்தான். அவன் விசயநகரத்து அரசர்களின் ஆளுகையின்கீழ் 28 சிற்றூர்களைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தான். அவன் உண்மை உரைப்பவனாகவும் அறச்சிந்தனை உள்ளவனாகவும், வீரனாகவும், ஆதிகேசவ சுவாமியின் பக்தனாகவும் விளங்கினான். பீரே கௌடாவின் மனைவி பச்சம்மா கற்பில் சிறந்தவளாக, கணவனுக்கு ஏற்றவளாக விளங்கினள். எல்லாப் பேறுகளும் பெற்றிருந்த அவர்களுக்கு மகப்பேறு இன்மை பெரும் குறையாகத் தோன்றியது.

பல ஆண்டுகள் வரை மகப் பேறு இல்லாமல் வாழ்ந்த அவர்களது கனவில் திருப்பதி வேங்கடரமண சுவாமி தோன்றித் தன்னூர்க்கு வருமாறு சைகை செய்தார். ஆண்டவனின் கட்டளைப்படி இருவரும் திருப்பதி நோக்கிச் செல்லத் தொடங்கினர். காடு மலைகளைக் கடந்து ஒரு மாதகாலம் சென்ற பிறகு திருவேங்கட மலை அவர்கள் கண்ணிற்குத் தோன்றியது. உடனே கீழே விழுந்து வணங் கினர். திருப்பதியில் நாற்பத்தெட்டு நாட்கள் நாட்காலே நீராடி, நெய்பால் இன்றி உண்டு, பூசைகள் புரிந்து வழிபட்டனர்.

பாடத்திற்குத் திரும்பத் தொடங்கிய நாளின் இரவில் வேங்கடாசலபதி பழங்கள் தரத் தானும் தன் மனைவியும் உண்ட தாகப் பீரே கௌடா கனவு கண்டான். சுவாமியிடமிருந்து புறப்பட்ட ஒளிக்கற்றை ஒன்று தன்னுள் கலந்ததாகப் பச்சம்மா கனவு கண்டாள். சுவாமி தனக்கு வரம் தந்தார் என்று மகிழ்ந்த அவள் கணவனிடம் தான் கண்ட கனவைக் கூறினாள். இருவரும் வேங்கடாசலபதியை வணங்கிப் புறப்பட்டனர். வழியில் பல தலங்களைத் தரிசித்த பிறகு தமது ஊர்க்குத் திரும்பினர். கி.பி. 1508-ஆம் ஆண்டு (ஆனந்தவருடம் கார்த்திகை மாதத்தில்) பச்சம்மா ஓர் ஆண்

மகவை ஈன்றாள். (அக்குழந்தையே பிற்காலத்தில் கனகதாசர் என்னும் பெயரோடு புகழ்பெற்று விளங்கியது) அக்குழந்தை கவர்ச்சியான முகத்தைப் பெற்றிருந்தது. உதடுகள் பவளம்போன்று இருந்தன. மல்லிகை மொட்டு மலர்வதைப் போன்று சிரித்தது. திருப்பதி திம்மப்பனின் அருளால் பிறந்த அக்குழந்தைக்குத் திம்மப்பா என்னும் பெயரை இட்டனர். அக்குழந்தை வளரத் தொடங்கியதும் தன் குறும்புகளால் காண்போரை மகிழ்வித்தது.

## இளமைப்பருவம்

திம்மப்பாவிடம் ஐந்து வயதிலேயே தெய்வ பக்தி, வளரும் பயிர்போல் தழைக்கத் தொடங்கியது. அவன் பாடத்து ஆதிகேசவன் எதிரில் நேரம் அறியாமல் அமரத் தொடங்கினான். தனக்குத் தெரிந்த துதிப்பாடல்களைப் பாடினான். பங்காபுரத்திலும் அதை அடுத்த ஊர்களிலும் உள்ள மடங்களில் நடந்த இராமாயண, மகாபாரத, பாகவதக் கதைகளைத் தந்தையுடன் சென்று கூர்ந்து கேட்கத் தொடங்கினான். வீட்டிற்குத் திரும்பியதும் தாயிடம் தான் கேட்ட கதைகளைக் கூறுவான். சில பாத்திரங்களைப் போல் நடித்தும் காட்டுவான். சில சமயங்களில் தானே பாடல்களை இயற்றிப் பாடத் தொடங்கினான். அதனைக் கேட்டவர் மிகவும் மகிழ்ந்தனர். அவன் பெரிய கவியாவான்என்று சிலரும், பெரிய அடியார் ஆவான் என்று சிலரும், அவதாரப் புருடன் ஆவான் என்று சிலரும் கூறினர்.

இவ்வாறு வயதை மீறன அறிவும், தெய்வபக்தியும், கவிதை இயற்றும் சக்தியும் கொண்ட தன் மகனுக்கு யாரைக் கொண்டு கல்வி கற்பிப்பது என்று பீரேகௌடா கவலை கொண்டான். அக்காலத்தில் பங்காபுரத்தில் வாழ்ந்த கல்வியாளரில் ஒருவராகிய சீனிவாசாசாரியார் திம்மப்பாவின் பெருமைகளைக் கேட்டு அவனைத் தம் மாணவனாக ஏற்க எண்ணினார். பீரேகௌடாவின் வீட்டிற்குச் சென்று தம் கருத்தைக் கூறினார். பிராமணர் ஆகிய அவர் தன் மகனை மாணவ

னாக ஏற்க எண்ணியதைக் கேட்ட பீரெகௌடா வியப்புற்றான். இதுவும் இறையருள் என்று எண்ணிக் குருவிற்கு உரிய காணிக்கை கொடுத்து அவருடன் தன் மகனைக் கல்வி கற்க அனுப்பினான்.

ஆசிரியர் திம்மப்பாவிற்குக் காப்பியம், நாடகம், அலங்காரம், இலக்கணம் ஆகியவைகளைக் கற்பித்தார். பிறகு இராமாயணம், மகாபாரம், பாகவதம் போன்ற புராணங்களைக் கற்பித்தார். பத்து வயதிலேயே வடமொழி, கன்னடம் ஆகிய இரு மொழிகளிலும் உள்ள இலக்கிய இலக்கணங்களில் வல்லவனான திம்மப்பாவைப்பார்த்த ஆசிரியர் வியந்தார். "திம்மரசு" என்று அன்போடு அழைக்கத் தொடங்கினார். திம்மப்பா எழுதிய கவிதைகளைப் படித்து மகிழ்ந்தார். திம்மப்பாவிற்கு இனி கற்பிக்க வேண்டிய தேவையில்லை என்பதை உணர்ந்து அவனைப் பெற்றார்களிடம் அனுப்பினார். மகனின் பேரறிவைப் பார்த்த பெற்றோர் மிக மகிழ்ந்தனர்.

திம்மப்பா பல ஊர்களைக் காக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்கும் குடும்பத்தில் பிறந்ததால் அவன் ஆளும் திறமையும் பெறவேண்டியவன் ஆனான். அதற்காக மற்போர், குதிரை யேற்றம், விலவித்தை, நீந்துதல் ஆகியவற்றில் சிறந்த பயிற்சி பெற்றான். அவன் உடல்வலிமையில் வளர்ந்தது போலவே பக்தியிலும் வளர்ந்தான். நாள்தோறும் கோயிலுக்குச் சென்று ஆதிகேசவனின் விக்கிரகத்தைப் பார்த்தவாறு நீண்ட நேரம் அமர்வான். அதே நேரத்தில் "எங்கிருந்து வந்தாய், எங்கே செல்வாய்" என்று தன்னைத் தானே வினவிக் கொண்டான். காணும் பொருள்களிலெல்லாம் ஆதிகேசவனைக் கண்டான். ஒருமுறை அவன் பாடிக்றொண்டிருக்கையில் நாகப் பாம்பு வந்தது. அவனைச் சுற்றி வீற்றிருந்த மக்கள் அலறி ஒடினர். ஆனால் எதையும் உணராது அவன் பாடிக் கொண்டிருந்தான். நாகம் அவன் பாட்டைக் கேட்டுப் படமெடுத்து ஆடியது. பின் அமைதியாகச் சென்றுவிட்டது. மனத்தில் மங்கலமூர்த்தி இருக்கையில் எந்தத் தீங்கும் வராது என்று திரும்பி வந்த மக்களிடம்

மொழிந்தான். இவ்வாறு தெய்வபக்தி நிறைந்து மகன் இருப்பது திருமலைத் தெய்வத்தின் கருணை என்று பெற்றோர் பேருவகை எய்தினர்.

## தந்தையின் மறைவு

திம்மப்பா தனது பதின்மூன்றாவது வயதிலேயே தந்தை இறப்பதைக் கண்டான். தன்னைத் தவம் செய்து பெற்று, அருமையாக வளர்த்து, கல்வியறிவு பெறச்செய்த தந்தை இறந்ததும் கண்ணீர் சொரிந்தான். ஆனால் இரண்டு மூன்று மணித்துளிகளில், எல்லாம் கடவுளின் விளையாட்டு என்று மனம் தெளிந்தான். மனம் கலங்கி அழுதுகொண்டு இருந்த தாயை, "இவ்வுலகில் யாருக்கு யாரும் உதவ இயலாது. எல்லாரையும் அடைக்கலம் தந்து ஆள்பவன் ஆண்டவன் ஒருவனே" என்று கூறித் தேற்றினான். உறவினர்களின் உதவியுடன் தந்தையின் ஈமக்கடன்களைப் புரிந்தான்.

## ஊராளும் உரிமை இழத்தல்

பீரேகௌடா வாழ்ந்த போதே ஊராளும் உரிமையைப் பறிக்க மல்ல நாயகா என்பவன் பெரிதும் முயன்றான். விசயநகர அரசரிடம் பீரேகௌடாவைப் பற்றிக் கோள் கூறினான். ஆயினும் அவன் எண்ணம் ஈடேறவில்லை. பீரேகௌடா இறந்ததும் அரசரிடம் சென்று இல்லாத பொல்லாதுகளைப் புகன்று 28 ஊர்களை ஆளும் உரிமையைப் பெற்றான். அத்துடன் நில்லாது பெரும் பகைமை கொண்ட அவன் திம்மப்பாவின் செல்வங்களைக் கவர்ந்து கொண்டான். "தாய் ஓ" என்று அழுதாள். மேலும் தொடர்ந்து தந்த தொல்லைகளைப் பொறுக்காமல் தாயும்மகனும் பாடத்தை விட்டு வெளியேற நேர்ந்தது.

## காகெறிலைக்கு வருதல்

பதினான்கு வயது மகனுடன் பாடத்தை விட்டுக் காகெறிலைக்கு வந்த பச்சம்மா உறவினர்களின் ஆதரவில் தங்கினாள். திம்மப்பா உறவினர்களின் ஆடுமாடுகளை மேய்த்தான். உழவுத்தொழிலில் உதவி புரிந்தான். காகெறிலையின் கவின்மிகு இயற்கை மனத்தைக் கவர்ந்தது. கவிதைஇயற்றும் திறன்வளர உதவியது. அங்கிருந்து அருகிலுள்ள ஹாவேரிக்குச் சென்று கல்வியில் வல்ல பெரியோர்களைச் சந்தித்துப் பல செய்தி களை அறிந்து வந்தான். சில இரவுகளில் மாறுவேடம் புனைந்துகொண்டு 20 மைல் தூரத்திலிருந்த பாடத்திற்குச் சென்று தனது வழிபடுதெய்வமாகிய ஆதிகேசவனை வணங்கிப் பிரிய இயலா மனத்துடன் திரும்பி வந்தான்.

பதினாறாவது வயதில் இருபத்தைந்து வயது இளைஞனைப்போல் வளர்ந்துவிட்டான். மீசை கருகரு என வளர்ந்தது. இனிய பேச்சு, தெய்வச் சிந்தனை, அறத்தில் நாட்டம், ஏழை எளியவர்க்கு உதவுதல் உடையவனாகக் காட்சி தந்தான். காகெறிலையில் வாழ்ந்த இளைஞர்களின் உள்ளம் கவர்ந்தான். மாடு மேய்க்கும் போதே கவிதைகளை இயற்றிப் பாடினான். இரவு நேரங்களில் இளைஞர்களுக்குப் பக்திப்பாடல்களையும், பக்தி நடனங்களையும் கற்பித்தான். யட்ச கானத்தில் தானே அருச்சுனனாக நடித்தான். அவனது புகழ் சுற்றிலுமுள்ள ஊர்களில் பரவியது. அவனைத் தங்கள் ஊர்களுக்கு அழைத்துச் சென்று இராமாயண பாரதக் கதைகளைக் கூறச்செய்து, பஜனைப் பாடல்களைப் பாடச்செய்து கேட்டு மகிழ்ந்தனர். இவ்வளவு புகழ் பெற்றும் தன் குலத்தொழிலாகிய மாடு மேய்த்தலையும் உழவையும் செய்து வந்தான்.

## திம்மப்பா கனகப்பா ஆனான்

திம்மப்பா ஒரு முறை நிலத்தை அகழ்ந்தபோது தங்க நாணயங்கள் நிறைந்த பல குடங்கள் கிடைத்தன. நாணயங்கள் அனைத்தையும் ஏழைஎளியவர்களுக்கும், கோயில்களைக் கட்டுவதற்கும், உணவிடல் போன்ற நல்லறங்களைச் செய்வதற்கும் வழங்கினான். மேலும் சில இடங்களை அகழ்ந்தபோது கிடைத்த தங்க நாணயங்களையும் அறத்திற்கே வழங்கினான். மக்கள் அவனைத் "தங்கமே தன்னைத் தேடி வந்தாலும் தான் அதனை விரும்பாது பிறர்க்கு அதனை வழங்கும் வள்ளல்" என்று போற்றினர். அவனைத் திம்மப்பா அல்லன் கனகப்பா என்று அழைத்து வாழ்த்தினர். அவன் இயற்பெயர் மறைந்து கனகா என்பதே அவன் பெயராயிற்று.

கனகாவின் பெரும் புகழைக் கேட்ட குடும்ப விரோதியாகிய மல்லநாயகா பொறாமையால் புழுங்கினான். கனகாவை வளரவிட்டால் அவன் தொல்லை ஆவான் என நினைத்தான். கனகாவைக் கொல்லத் திட்டமிட்டுத் தன் ஆட்களுடன் காகெநிலைக்கு வந்து வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டான். அமைதியை விரும்பியிருந்த கனகா கடும் கோபம் கொண்டான். தனியே அவர்களைக் கடுமையாகத் தாக்கினான். அப்போது மண்டையில் அடிபட்டு மயங்கி விழுந்தான். கனகா இறந்ததாக எண்ணிய மல்லநாயகாவின் ஆட்கள் ஓடிவிட்டனர். கனகாவைச் சார்ந்தவர்கள் செய்தியைக் கேட்டதும் ஓடிவந்து அவனை வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர். போதிய முதலுதவிகளைச் செய்ததும் கனகா கண் விழித்தான். தன் தாயையும் நண்பர்களையும் தேற்றினான். நடப்பனவெல்லாம் நாராயணன் செயல் என்பதை விளக்கும் நூற்றெட்டுப் பாடல்களை இயற்றினான். அவைகளை ஒன்றாக இணைத்து நூலாக்கி, அதற்கு "அரிபக்திசாரம்" என்று பெயர் வைத்தான்.

# கனகா படைத்தலைவன் ஆனான்

கனகாவைப் பெரும் பக்தன், அரிதாசன், கவிஞன், தலைவன், கடமை வீரன் என்றெல்லாம் மக்கள் போற்றத் தலைப்பட்டனர். கனகாவின் புகழ் பேரரசர் கிருட்டிண தேவராயராலும் அறியப்பட்டது. அவர் அவனைத் தமது படைத்தலைவனாக்க எண்ணினார். அந்த ஆண்டு விசயதசமி விழாவைக் காண வருமாறு முடங்கல் அனுப்பினார். அதனைக் கண்ட பச்சம்மா இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றதுபோல் மகிழ்ந்தாள். கனகா அரசரால் அனுப்பப்பட்ட யானைமேல் அமர்ந்து விசயதசமி விழாவைக் காண விசயநகர்க்குச் சென்றான்.

அங்குக் கோலாகலமாக நடைபெற்ற விசயதசமி விழாவைக் கண்டு களித்தான். பத்து நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்ற பிறகு பதினோராம் நாள் அரசர் பேரவையைக் கூட்டினார். அங்குக் கனகா பங்காபுரம் பகுதிக்குரிய படைத் தலைமையையும், அதற்கு அடையாளமாகிய உடைகளையும், இரத்தினப் பிடி அமைந்த வாளையும் அரசரிடமிருந்து பெற்றான். நான்கு நாட்கள் விசய நகரத்திலேயே தங்கிஅங்குள்ள கோயில்களுக்கெல்லாம் சென்றான். பாடத்திற்குத் திரும்பி வரும்போது கிருட்டிணதேவராயர் அரசவையில் கொலு வீற்றிருக்கும் சிறப்பைத் துவாரகையில் கிருட்டிண பரமாத்துமா வீற்றிருக்கும் சிறப்போடு ஒப்பிட்டு, "மோகன தரங்கிணி என்னும் நூலை இயற்ற வேண்டும் என்று எண்ணினான். ஆயினும் முதலில் படைத்தலைவன் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றிய பிறகு அந்நூலை இயற்றத் திட்டமிட்டான்.

## கனகநாயகாவின் ஆட்சிச் சிறப்பு :

படைத் தலைமை பெற்றதும் கனகா கனகநாயகா என்று அழைக்கப்பட்டான். தனது இருபத்தினான்காவது

வயதில் இப்பதவியைப் பெற்ற அவன் இரவுபகல் என்று பாராமல்நாட்டு மக்களின் நன்மைக்காக உழைத்தான். வேளாண்மைக்கு முதலிடம் கொடுத்தான். பழைய ஏரிகால்வாய்களைச் சீர்படுத்துவது, தேவையான இடங்களில் புதிய ஏரி கால்வாய்களை அமைப்பது, புதிய பாதைகளைப் போடுவது, கோயில்கள்கட்டுவது போன்ற நலம்தரும் பணிகளை இடைவிடாமல் செய்தான். தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளைத் தானே நேரில் சென்று பார்வையிட்டுத் தேவையான உதவிகளைப் புரிந்தான். திங்கள் கிழமைதோறும் ஒவ்வோர் ஊர் மக்களைச் சந்தித்து, அவர்களது குறைகளைக் கேட்டு, அவர்கள் கூறிய குறைகளை நீக்கினான். அரசுப்பணிகளில் ஓய்வின்றி உழைக்க வேண்டிய காரணத்தால் முன்பு போல இலக்கியப்பணி புரிவதற்குரிய நேரம் அவனுக்குக் கிடைக்கவில்லை. அவன் மக்களின் நன்மையைப் பெரியதாக எண்ணினான்.

## கனகநாயகாவின் திருமணம் :

இப்போது வயது முதிர்ந்த தாய் அவனைத் திருமணம் புரிந்துகொள்ளுமாறு கூறினாள். அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் தன் வாழ்நாளைக் கடவுள் பணிக்கே அர்ப்பணிக்கத் தீர்மானித்திருந்த கனகநாயகா திருமணம் செய்துகொள்ள மறுத்தான். தாய் விடாது வற்புறுத்தினாள். மேலும் அழத்தொடங்கினாள். தாயின் அழுகையைக் காண இயலாத கனகநாயகா திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தான். தாய்பச்சம்மா பங்காபுரத்திருந்த நற்பண்பு நிறைந்த உறவினர் வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்வித்தாள். திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பச்சம்மா தன் மருகிக்கு "இலக்குமி தேவி" என்னும் பெயரை இட்டாள்.

மல்லநாயகாவின் ஒரே மகள் இலக்கம்மா என்பவள் தந்தை செய்த தீமைகளுக்குக் கழுவாயாகக் ...வைத் திருமணம் செய்துகொள்ள நினைத்தாள். அவள் தந்தை ஒப்பவில்லை. அவள் வேறு

யாரையும் மணக்க இசையவில்லை. கனகநாயகாவின் திருமணச் செய்தியைக் கேள்விப்பட்டதும் துறவியானாள். நேரில் வந்து அவனிடம் தன்னைப் பற்றிய செய்திகளைக் கூறி விடைபெற்றுச் சென்றாள். அவனும் மனம் கலங்கினான். ஆயினும் குடும்பத்திலும், அரசுப் பணியிலும் ஆழ்ந்து ஈடுபட்ட அவன் நாளடைவில் அவளை மறந்து விட்டான்.

## மோகன தரங்கிணி :

அரசாங்கப் பணியில் ஓய்வின்றி உழைத்து வந்த கனகநாயகா தன் மனத்தில் உருவான மோகனதரங்கிணியை எழுதி முடிக்க எண்ணினான். எனவே தாய், மனைவி, சிறுகுழந்தையுடன் காஞ்சிலைக்குச் சென்று தங்கினான். தான் சிறுவயதில் யட்சகானத்தில் குதித்தாடி, பாடி அறவுரைகள் கூறிய இடத்திலேயே அமர்ந்து காப்பியத்தை எழுதத் தொடங்கினான்.) வைகறையில் எழுந்து நீராடிய பின் நாள்தோறும் செய்வதற்குரிய வழிபாடுகளை முடித்துக் கொண்டு, தனது வழிபடு மூர்த்தியை மனத்தில் இருத்திக்கொண்டு எழுதத் தொடங்கினான். அவன் மனைவியும் உடனிருந்து உதவிகளைப் புரிந்தாள்.

மிக எளிய இனிய பாடல்களால் காப்பியம் எழுதினான். 47 சந்திகளையும், 2305 பாடல்களையும் பெற்ற அக்காப்பியம் நிறைவு பெற்றது. அது வாணாசுரனின் மகளாகிய உஷா, கண்ணனின் பேரனாகிய அநிருத்திரன் ஆகியோரின் காதலையும், திருமணத்தையும் விளக்குகின்றது. காப்பியத்திற்கு உரிய எல்லா இலக்கணங்களும் அமையப் பெற்ற அது கன்னடர் போற்றும் இலக்கியச் செல்வமாகும். துவாரகையைப் பற்றிப் பாடும்போது விசயநகரத்தையும், கண்ணனைப் பற்றிப் பாடும்போது கிருட்டிணதேவராயரையும் மனத்தில் இருத்தியக் காப்பியத்தைக் கனகநாயகா எழுதியுள்ளார். இவ்வகையில்

அது நாட்டுப்பற்றும் தெய்வப்பற்றும் நிறைந்த நல்ல காப்பியமாகும்.

**மனைவியின் மறைவு :**

இறைவன் கனகநாயகாவை இல்வாழ்க்கையிலிருந்து விடுவித்துத் தனது தாசனாக்கிக் கொள்ள எண்ணினான் போலும். குடும்ப விளக்காகத் திகழ்ந்த இலக்குமி தேவியும், குழந்தை பிரேநாயகாவும் இறந்தனர். கனகநாயகா முதலில் மனம் கலங்கினாலும், உலகின் மாயையை உணர்ந்து மனத்தைத் தேற்றிக் கொண்டான். மிகவும் மனம் கலங்கிய தாயையும் தேற்றினான். பச்சம்மா இவனுக்கு மறுபடியும் திருமணம் செய்விக்க முயன்றாள். அவள் எவ்வளவு வற்புறுத்தியும் மறுத்துவிட்டான். அதே கவலையில் அவள் நோய் மிகுந்து படுத்த படுக்கை ஆனாள்.

**பகைவர் தொல்லை :**

கனகநாயகா தன் குடும்பத் தொல்லைகளை மறந்து தன் குடிமக்களின் நன்மைக்காக எப்போதும் உழைத்தான். அவனது இலக்கியப்படைப்பிற்காகவும், அறச் சிந்தனைக்காகவும் உண்டாகிய புகழைக் கண்டு பகைவர் மனம் புழுங்கினர். விசயநகரத்து அரசரிடம் சென்று கோள் மூட்டினர். அவர்களில் முதன்மையானவன் தனது பதவியை இழந்த மல்லநாயகா ஆவான். அவன் தீயவர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பல வழிகளில் தொல்லை தந்தான். கனகநாயகாவைக் கொலை செய்யவும் முயன்றான். மல்ல நாயகாவின் இந்த முயற்சி கனகநாயகா அரசுப்பதவியிலிருந்து விடுதலை பெற்று ஆண்டவன் அடிமையாக மாறுவதற்கு வழிவகுத்தது.

**திருமலை தெய்வம் கனவில் தோன்றல்**

இருபதாண்டுகள் பெரும் சிறப்போடு ஆண்ட கிருட்டிணதேவராயர் இயற்கை எய்தினார். அவர் மறைந்ததும்

விசயநகரப் பேரரசு ஆட்டம் காணத் தொடங்கியது. பிறர் பழி கூறுவோரின் சொற்களைக் கேட்கும் அரசரின் ஆட்சியில், கனகநாயகாவைப் போல் உண்மையாக உழைப்பவர்களுக்குத் தொல்லை உண்டாவது இயற்கையன்றோ? மனைவி மக்களின் மறைவைப் பற்றியும், வயது முதிர்ந்தவளாகிய தாயின் துன்பத்தைப் பற்றியும், பகைவர் தரும் தொல்லையைப் பற்றியும், வருந்திச் சிந்தித்தவாறு கனகநாயகா உறங்கினான். திருமலைத் தெய்வம் அவன் கனவில் தோன்றிக் "கனகா! தாசன் ஆவாய்" என்று கூறினார். "தாசன் ஆவேன்" என்று எழுந்த கனகாவிற்கு உறக்கம் கலைந்தது. பித்துக்கொண்டவனைப் போல் அலைந்து "உரையாடல் முற்றுப் பெறுமுன் மறைந்தாயே! திருமலேசா" என்று அலறினான்.

## கனகநாயகா கனகதாசன் ஆனான் :

அரசுப்பணியிலிருந்து எவ்வாறு விடுதலை பெற்றுத் தாசன் ஆவது என்று சிந்தித்துக்கொண்டு இருந்தபோது, வேறொரு படைத்தலைவனுடன் காகெறிலைக்கு அருகில் கடும்போர் புரிய நேர்ந்தது. போரில் எதிரிப்படை குதிரைவீரன் ஒருவன் இவனது தலையைத் தாக்கினான். கனகா இரத்தம் மிகுதியாக வெளிப்பட மயங்கி விழுந்தான். அவனைப் பாடத்திற்குத் தூக்கி வந்தனர். அவன் பிழைப்பதே கடினம் என்று எண்ணினர். இரண்டு நாட்களில் கனகா உணர்வு வரப்பெற்றான். மறுபடியும், திருமலைத் தெய்வம் அவன் கனவில் தோன்றி "இப்போதாவது என் தாசன் ஆவாய்" என்றார். நான் பிறந்த நாள் முதல் உனது தாசனாக இருக்கின்றேனே என்று கனகா கூறினான். அப்போது ஆண்டவன் அவனது உடல் முழுவதையும் தடவியதைப் போன்ற உணர்வைப் பெற்றான். உடனே கனகநாயகா கனகதாசன் ஆனான். ஆனந்த பரவசத்தால் கூத்தாடினான். "மனிதருக்குப் பணி செய்தது போதும்" என்னும் பொருள்தரும் "சாகுசாகு மனுஜ சேவெயு ரங்கய்யா" என்னும் கீர்த்தனையைப் பாடினான். (இக்கீர்த்தனையின் மொழிபெயர்ப்பு நம் தொகுதி

யில் 42-வது பாடலாக உள்ளது) அக்கீர்த்தனை கன்னட நாட்டில் புகழ் பெற்ற கீர்த்தனையாகும். பிறகு தாயிடம் விடை பெற்றுக்கொண்டு தன்னை ஆட்கொண்ட தெய்வத்தைக் காணத் திருப்பதி நோக்கிப் புறப்பட்டான்.

## திருப்பதிக்குச் செல்லல் :

இப்போது கனகதாசரின் மீது அதிகாரிக்கு உரிய உடுப்புக்கள் இல்லை. இடுப்பில் வேட்டியை உடுத்தியிருந்தார், கால்களில் மரக்கட்டைகளை அணிந்திருந்தார், ஒரு கையில் சுருதி வீணையையும், மற்றொருகையையில் தாளக் கட்டைகளையும் பிடித்திருந்தார். பாடத்திலிருந்து திருப்பதி நோக்கிச் சென்ற கனகதாசர் முதலில் குந்தூர்க்குச் சென்று சக்திதேவியை வணங்கினார். அடுத்துக் கூடலசங்கமம் சென்று சங்கமேசுவரனை வணங்கினார். அடுத்து ஹாவேரிக்குச் சென்று அங்குள்ள நரசிம்மசுவாமியை வணங்கினார். பிறகு காகெநிலை சென்று ஆதிகேசவனை வணங்கினார். காகெநிலையை அடுத்த கதரமண்டலம் சென்று அனுமனை வணங்கினார். இவ்வாறு பல தலங்களைத் தரிசித்தவாறே சென்று திருப்பதியை அடைந்தார். வழியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அவரை வணங்கி மகிழ்ந்தனர். அவர்களிடம், "நேற்று வரை நான் உங்களுக்கு உழைப்பவனாக இருந்தேன், இன்று முதல் இறைவனின் அடிமையாக இருப்பேன்" என்று இயம்பினார்.

## திருமலையில் கனகதாசர் :

இரவு நேரத்தில் திருப்பதியை அடைந்த கனகதாசர் இரவிலேயே மலை ஏறிச் செல்ல நினைத்தார். இரவிலேயே மலை ஏறிச்சென்ற கனகதாசர் வேங்கடநாதனின் கோபுர வாயிலில் படுத்து உறங்கினார். மிகவும் களைப்பாக இருந்ததால் அவர் எழுந்த போது சூரியன் உதித்திருந்தான். காலைக் கடன்கள் முடிந்ததும் நந்தவனத்திற்குச் சென்று "ரங்கதாசன்"என்னும் அடியாரைக் கண்டார். அவர் அரிசனக்

குலத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பொருட்படுத்தாமல் அவரை வணங்கி உரையாடினார். (சாதி வேறுபாடு இல்லைஎன்று கனகதாசரின் கொள்கை)

கோயிலுக்குச் சென்ற கனகதாசர் கருவறையில் நின்ற திருக்கோலத்தில் காட்சி தரும் இறைவனைக் கண்டதும் கைகளைத் தலைமீது குவித்து வணங்கினார். பிறகு தரையில் அமர்ந்து தியானத்தில் மூழ்கினார். அப்போது வேங்கடேசர் அவர் தலைமீது கையை வைத்து "மகனே! நீ இப்போது பாடத்திற்குச் சென்று விடு. பிறகு அடிக்கடி என்னைக் காணவா" என்று கூறியதுபோல் தோன்றியது. கண்ணீரைச் சிந்தியவாறு நிலத்தில் படிந்து வணங்கினார். நீண்ட நேரம் தியானத்தில் மூழ்கினார். அதன்பிறகு இறைவனின் ஆணைப்படியே பாடத்திற்குச் சென்றார். அவர் பாடத்தை அடையும்முன்பே அவர்தாய் இறையடியை அடைந்திருந்தார். கனகதாசர் தாயின் சமாதியின்மீது மலர்வைத்து "இவள் ஒரு தேவதை" என்று கூறி வணங்கினார்.

## பங்காபுரத்தில் தீ :

பாடத்து ஆதிகேசவனைக் கனகதாசர் வணங்கினார். அப்போது இறைவன் "காகெநிலைக்குச் செல்லலாம் வா" என்று கூறியதைப் போல் இருந்தது. அவர் விக்கிரகத்தைத் தோண்டி எடுத்துத் தன் தோளின்மீது வைத்துக்கொண்டு காகெநிலை நோக்கிச் சென்றார். நான்கு அல்லது ஐந்து ஆட்கள் சேர்ந்து, சுமக்கவேண்டிய விக்கிரகம் சுமை இன்றி இருந்தது. அவர் விக்கிரகத்தை எடுத்துச் செல்வதை அறிந்த ஊர் மக்கள்அவரைத் துரத்திச் சென்று தடுத்தனர். அப்போது பங்காபுரத்திலும், பாடத்திலும் தீ பற்றியதைப் போன்ற தோற்றம் தோன்றியது. மக்கள் விழுந்தடித்துக் கொண்டு திரும்பினர். சென்ற போது உண்மையில் தீ பற்றவில்லை என்று தெரிந்தது. பிறகு காகெநிலையில் ஆதிகேசவ

விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்தபோது பங்காபுரத்திலிருந்தும், அதைச் சுற்றியிருந்த ஊர்களிலிருந்தும் பல மக்கள் வந்து மகிழ்வோடு வணங்கினர். காகெநிலை மக்கள் அவர்களுக்கு உண்டி தந்து உபசரித்தனர்.

## சோலை மடத்திற்குச் சென்றார்

காகெநிலையில் சில நாட்கள் இன்பமாக வாழ்ந்த கனகதாசருக்குச் சமயத்தத்துவங்களை அறிய வேண்டும் என்னும் ஆர்வம் பிறந்தது. அவர் இளைஞராக இருக்கையில் இராமனுசரின் சீடராகிய தாத்தாசாரியாரிடம் பல தத்துவங்களை அறிந்திருந்தார். பிறகு படைத்தலைவராக இருந்தபோது கிருட்டிணதேவராயரின் குருவாக விளங்கிய வியாசராயரிடம் பலதத்துவங்களை அறிந்திருந்தார். இப்போது தொடர்ந்து தத்துவ விசாரணையில் ஈடுபட எண்ணி, வியாசராயர் தலைமைப் பீடத்தில் வீற்றிருக்கும் சோலை மடத்தில் சிலநாட்கள் தங்க எண்ணினார். கபிலநதியும் காவிரியும் ஒன்றாகக் கலக்கும் திருமக்கூடலிலுள்ள சோலை மடத்தின் வாயிலில் நின்றார்.

அவர் நின்றிருந்த கோலம் வாயிலில் இருந்தவர்களுக்கு எந்த மதிப்பையும் தரவில்லை. "நீ யார்? என்ன குலம்?" என வினவினர். அவர் மானிட இனம் முழுவதும் ஒரே குலம் என்றார். மடத்தைச் சார்ந்தவர்கள் குலம் யாதெனக் கூறினாலன்றி உள்ளே விடமாட்டோம் என்றனர். கனகதாசர் "நாவு குருபரு நம்ம தேவரோ பிரய்யா" என்னும் கீர்த்தனையைப் பாடினார். (இக்கீர்த்தனையின் மொழிபெயர்ப்பு நம் தொகுதியில் 152-வது பாடலாக உள்ளது) அதில் காகெநிலை ஆதிகேசவனைத் தியானிக்காதவரே இடையர் என்று பாடினார். மடத்தில் உள்ளோரைப் பார்த்துச் சிரித்தார்.

வாயிலில் வாதம் நடப்பதை மடத்தின் உள்ளே இருந்த வியாசராயர் அறிந்து வெளியே வந்தார். கனகதாசரைக்

கண்டதும் முகம் மலர்ந்தார். மடத்தைச் சார்ந்தவர்கள் அவருடன் வீண்வாதம் புரிந்தமை கண்டு வருந்தினார். அவரைக் கைபிடித்து உள்ளே அழைத்துச் சென்றார். கனக தாசர் வியாசராயரை வணங்கிக் குருவாகிய அவர் தமக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்று வேண்டினார். வியாசராயரும் அதற்குரிய மனப் பக்குவம் கனகதாசருக்கு இருப்பதாக இயம்பினார்.

அங்கே இருந்த அந்தணச் சீடர்களுக்கு "இடையர் குலத்தில் பிறந்தவனை மடத்தின் உள்ளே வர அனுமதித்ததோடு சீடராகவும் ஏற்றாரே" என்று தோன்றியது. அதனை அறிந்தவுடனே "இவர் கனகதாசன் என்னும் பெயர்பெற்ற பெரும் பக்தர், பெரிய கவி, வாதாடுவதில் வல்லவர், பரம வைணவர், பண்பின் பெட்டகம்" என்று வியாசராயர் விளம்பினார். கனகதாசரை வேறானவர் என்று எண்ணாதீர் என்று அறிவுறுத்தியதை மேல்நிலையில் உள்ள சீடர்கள் ஏற்றுக்கொண்டாலும், சாதாரணச் சீடர்களால் ஏற்க இயலவில்லை. அதனை அறிந்த கனகதாசர், "குருவே! நான் தொலைவில் அமர்ந்தவாறே தங்களது தத்துவபோதனைகளைக் கேட்பேன், வருந்தாதீர்" என்று கூறினார். கனகதாசரின் பெருமைகளை மற்றவர் அறிந்துகொள்ள வியாசராயர் சில விந்தைகளைச் செய்தார்.

## எங்கும் இருப்பவர் இறைவன்

ஒரு முறை பண்டிதர் ஒருவர் இறைவன் எங்கும் நிறைந்தவர் என்பதை விளக்கிப் பேசினார். பேச்சு முடிந்ததும் வியாசராயர் எல்லாருக்கும் ஒவ்வொரு வாழைப்பழம் கொடுத்து யாரும் காணாத இடத்தில் தின்று வருமாறு கூறினார். எல்லாரும் தின்றுவிட்டுத் திரும்பினர். கனகதாசர் மட்டும் வாழைப்பழத்தைத் தின்னாமல் இருந்தார். குரு காரணம்கேட்டபோது, "யாரும் காணாத இடமே இல்லை", எங்கும் இறைவன் இருந்து காண்கின்றார். எனவே நான் தின்னவில்லை" என்றார். கனகதாசரின் மனப்பக்குவத்தை

அறிந்த அங்கிருந்த அனைவரும் வியந்தனர்.

### இவனே இங்கு வாசுதேவன் :

மற்றொருநாள் வியாசராயர் அவைக்கு வரும்போதே கையை மூடிக் கொண்டு வந்தார். பீடத்தில் வந்து அமர்ந்ததும் "என் கைக்குள் இருப்பது என்ன என்று சரியாகக் கூறுபவர்க்கே முதலில் தீர்த்தம் தருவேன்" என்றார். அந்தப்பேற்றைப் பெற அனைவரும் முயன்றனர். யாரும் உரிய விடை தரவில்லை. கடைசியாகக் கனகதாசர் "ஈதனீக வாசுதேவா" எனத் தொடங்கும் கீர்த்தனையைப் பாடிக் கைக்குள் இருப்பது வாசுதேவ விக்கிரகம் என்பதைக் குறிப்பாகத் தெரிவித்தார். (இக் கீர்த்தனையின் மொழிபெயர்ப்பு நம் தொகுதியில் 75-வது பாடலாக உள்ளது.) குருவும் கையைத் திறந்து சாலிக்கிராம உருவம் இருப்பதைக் காண்பித்தார். அனைவரும் மகிழ்ந்தனர். புரந்தரதாசர் "கனகதாசனமேலே தயமாடிசலு வியாசா" எனத் தொடங்கும் கீர்த்தனையைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார்.

### நான் போனால் போகலாம் :

ஒரு நாள் அவையில் வியாசராயர் பின்வருமாறு வினவினார். "நீங்கள் அனைவரும் வேதசாத்திரங்களை நன்கு அறிந்துள்ளீர்கள் உங்களில் வைகுந்தத்திற்குச் செல்லும் தகுதி உடையவர் யார்?" இதற்கு எவ்வாறு விடை கூறுவது என்று பண்டிதர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். இவ்வினாவும் கனகதாசரின் பெருமையை அறிவுறுத்துவதாக இருக்கும் என்று ஐயுற்று மௌனமாயினர். சுவாமிகள் கனகதாசரைக் கேட்டபோது, "நான் போனால் போகலாம்" என்று பதில் கூறினார். அவையில் இருந்த பண்டிதர்கள் "சுவாமிகள் காட்டும் பரிவினால் இவர் நம்மை இவ்வாறு அவமதிக்கின்றார்" என்று கோபத்தோடு பேசத் தொடங்கினர். அப்போது வியாசர் புன்னகையுடன், "கனகா! உன் பதில் ஆணவத்தைக் காட்டுவதுபோல் உள்ளதே" என்று கேட்டார்.

கனகதாசர் "நான் என்னும் ஆணவம் அகன்றால் வைகுந்தம் செல்லலாம்" என்பதே என் கருத்து என்று விளக்கினார். இப்பதிலினால் அங்குள்ளவர்கள் சிறிது ஆறுதல் அடையினும், உள்மனத்தில் பொறாமைத்தீ அணையாமலே இருந்தது.

மேலும் இவ்வகையான சிலநிகழ்ச்சிகளுக்குப் பிறகு பண்டிதர்கள் கனகதாசரின் பெருமையை உணர்ந்தனர். தம் தவறுக்காகத் தலை குனிந்தனர். வியாசராயர் "தாங்கள் இனி அறிய வேண்டியது எதுவும் இல்லை. தாங்கள் இதுவரை எங்களுடன் தங்கித் தத்துவ விசாரணையில் ஈடுபட்டது எங்கள் நற்பேறாகும்.தாங்கள் கபிலையும் காவிரியும் சேரும் நரசிம்மமரி என்னும் தலத்திற்குச் சென்று அரியின் தொண்டினைப் புரிவீர்" என்றார். கனகதாசரும் அவரை வணங்கி விடைபெற்று அங்குச் சென்றார்.

**மரித்தலத்தில் :**

மரித்தலத்திற்கு வந்த கனகதாசர் அதன் இயற்கை வனப்பைப் பார்த்து மகிழ்ந்தார். நாட்காலையில் எழுந்து கபிலையும் காவிரியும் கலக்கும் சங்கமத் துறையில் நீராடினார். கோயிலுக்குச் சென்று திருவலகிடுதல், மாலை தொடுத்தல் போன்ற தொண்டுகளைச் செய்தார். மரித்தலத்து மூர்த்தியைத் தம் மனக் கோயிலிலும் இருத்திக்கொண்டு பல கீர்த்தனைகளை இயற்றினார். இவ்வாறு பலநாட்கள் தொண்டுசெய்து வரும்போது, திருமலைத் தெய்வம் கனவில்தோன்றி "கனகதாசா! வைகாசித் திங்களில் நடைபெறும் எனது திருக்கல்யாண விழாவைக் காண வா"என்றார். கனகரும் கடவுளின் ஆணைப்படித் திருப்பதி நோக்கிப் புறப்பட்டார்.

**திருவரங்கங்களில் தொண்டு :**

திருப்பதிக்குச் செல்லும்போது கனகதாசர் வழியிலுள்ள திருத்தலங்களை எல்லாம் தரிசித்தவாறு சென்றார். அவர்

மூன்று திருவரங்கங்களுக்கும் சென்று வழிபட்டமை குறிப்பிட வேண்டியதாகும். மேற்குத் திருவரங்கத்தில் பாம்பணையில் படுத்த அரங்கநாதனைக் கண்ட கனகர் பரவசத்தோடு பல கீர்த்தனைகளை அருளிச் செய்தார். அவைகளில் இங்கு ஏன் பள்ளி கொண்டாய் என்னும், "யாகெ நீ இல்லி பவடிசிதெ அரியே" என்று தொடங்கும் கிர்த்தனை எல்லாராலும் நன்கு அறியப்பட்டதாகும். (இதன் மொழிபெயர்ப்பு நம் தொகுதியில் 64-வது பாடலாக உள்ளது) இக் கீர்த்தனையை அருணாசலக் கவிராயரின் "ஏன் பள்ளி கொண்டீர் ஐயா" என்னும் கீர்த்தனையோடு ஒப்பிடலாம்.

அடுத்துச் சிவசமுத்திரத்திற்கு அருகிலுள்ள மத்திய அரங்கத்திற்குச் சென்று அங்குள்ள இறைவனையும் தரிசித்தார். பிறகு தென்னாட்டில் கோயில் என்று புகழ்ப்பெறும் தலமாகிய தெற்குத் திருவரங்கத்திற்கு வந்தார். அங்குப் பாம்பணையில் படுத்த பெருமாளை வணங்கினார். உன்னை நான் என்னவென்று கூறினேன்? அரங்கனே என்னைக் காக்க வேண்டும் என்னும் பொருள்தரும் "நின்ன நானேனெந்தெனோ ரங்கய்ய ரங்க, என்ன நீ காயபேகோ" எனத் தொடங்கும் கீர்த்தனையைப் பாடினார். (இதன் மொழி பெயர்ப்பு நம் தொகுதியில் 91-வது பாடலாக உள்ளது) இக்கீர்த்தனையில் இருபத்தியேழு சரணங்களை அமைத்து அரங்கநாதரின் தசாவதாரச் சிறப்புக்களை விளக்கியுள்ளார். தென்னாட்டுத் திருவரங்கத்தில் இத்தகைய நல்ல கீர்த்தனை ஒன்றை அருளியிருப்பது நாம் அறிந்து மகிழவேண்டிய செய்தியாகும்.

## திருப்பதியில் கனகதாசர்

திருக்கல்யாண விழாவிற்கு முதல் நாள் திருப்பதியின் பக்கத்திலுள்ள ஊர்க்குக் கனகதாசர் வந்து சேர்ந்தார். வேங்கடேசுவரர் தேவத்தானத்தின் தலைமை அதிகாரியான சின்னப்பனின் கனவில் தோன்றி," "நாளைக்குக் கல்யாண

விழாவைக் காணக் கனகதாசர் என்னும் பெரிய பக்தன் வருகின்றான். அவனை மிகுந்த மரியாதையுடன் அழைத்து வா" என்றார். சின்னப்பனும் பலரை உடன் அழைத்துக்கொண்டு மேளதாளங்களுடன் கனகரை எதிர்கொண்டழைக்க வந்தான்.

கனகதாசரும் கோவிந்தராசப் பட்டினத்திலிருந்து புறப்பட்டுக் கபில தீர்த்தத்தில் மூழ்கி, வழிபாடுகளை முடித்துக் கொண்டு மலையேறத் தொடங்கினார். சின்னப்பனுடன் குடை, சாமரம் முதலான விருதுகளுடன் வந்தவர்கள் காளிகோபுரம் வரை இறங்கிவிட்டனர். மேலே ஏறத் தொடங்கிய தாசரும் அதே நேரத்தில் அங்கு வந்தார். அவர் பார்வைக்குப் பிச்சைக்காரனைப் போன்று தோன்றுமாறு எளிய கோலத்தில் இருந்ததால் அவர்தான் தாசர் என்பதை யாரும் அறியவில்லை. வந்தவர்கள் அவரிடமே "கனதாசரைக் கண்டீரா?" என்று கேட்டனர். அவர், "கனகனை அறிவேன், அவர் ஒரு கிறுக்கன்" என்று கூறிவிட்டுப் படிகளில் தொடர்ந்து ஏறத் தொடங்கினார்.

மறுபடியும் அணுகி, "அவர் கிறுக்கராகவே இருக்கட்டும். எங்கு இருக்கின்றார் என்பதைக் கூறுங்கள்" என்று வேண்டினார். அவ்வர் "தாசர் முன்னால் இருப்பவர்க்குப் பின்னால் இருக்கின்றார்,பின்னால் இருப்பவர்க்கு முன்னால் இருக்கின்றார்" என்று விடைபகர்ந்து மேலே ஏறத் தொடங்கினார்.அவரைப் பித்தர் என்று எண்ணியவர்கள் கீழே தொடர்ந்து இறங்கி அடிவாரத்திற்குச் சென்றுவிட்டனர். மலையேறித் திருமலைக்கு வந்து உண்ணாது திருக்கோயில் பிரகாரத்தின் மூலையில் படுத்த கனகதாசர்" என்னைத் திருக்கல்யாணத்திற்கு அழைத்து உண்ணாது படுக்க வைத்தாயே" என்னும் பொருள்படும் "பந்தெவய்யா கோவிந்த செட்டி" எனத் தொடங்கும் கீர்த்தனையைப் பாடினார். (இதன் மொழி பெயர்ப்பு நம் தொகுதியில் 151-வது பாடலாக உள்ளது) இவ்வாறு கனகர் நிந்தாதுதியாகப் பாடியதும் ஒருவர் வந்து

கனகதாசருக்கு அறுசுவை உணவைத் தந்து உண்பித்து, பட்டாடையைப் போர்த்திவிட்டுச் சென்றார். அப்பட்டாடை வேங்கடேசுவரரின் மீதிருந்த பட்டாடையே ஆகும்.

கீழே சென்றவர்கள் நீண்ட நேரம் காத்திருந்து கனகதாசர் வரவில்லை என்று கருதித் திரும்பி வந்தனர். வந்தவர்கள் வேங்கடேசுவரரின் பட்டாடை அவர்மீது போர்த்தியிருப்பதைப் பார்த்தனர். எழுப்பி விசாரித்தபோது அவரே கனகதாசர் என்றும், அவர்மீது பட்டாடை போர்த்தியவர் வேங்கடேசுவரரே என்றும் அறிந்தனர். அறிந்ததும் சின்னப்பன் அவர் பாதத்தைப் பணிந்தான். மற்றவர்கள் தம்* தவறுக்காக மன்னிப்பு கேட்டனர். மறுநாள் நடந்த திருக்கல்யாண விழாவைக் கண்ட கனகதாசர் களிகொண்டார். தம்மை மறந்து குதித்தாடினார்.

## தேரை ஓடச் செய்தல் :

வேங்கடேசுவரரின் ஆணைவழியே சின்னப்பன் தன் வீட்டில் தாசரைத் தங்கச் செய்து உபசாரங்களைச் செய்தான். நாள்தோறும் சுவாமியைத் தரிசித்துவர ஏற்பாடுகள் செய்தான். தாசர் நாள்தோறும் கோயிலுக்குச் சென்று புதிய கீர்த்தனைகளை இயற்றிப் பாடினார். அக்கீர்த்தனைகளைக் கேட்கும் மக்கள் தம்மை மறந்து மகிழ்ந்தனர். பல நாட்கள் கடந்தபிறகு ஒருநாள் தேர்த் திருவிழா நடைபெற்றது.

போட்டி போட்டுக்கொண்டு மக்கள் தேரை இழுத்தவாறு இருந்தனர். திடீரென்று தேர் நின்றுவிட்டது. மக்கள் பல வழிகளில் முயன்றும் தேர் சிறிது கூட அசையவில்லை. கடைசியில் கனகதாசர் கைகுவித்துக் கடவுளைப் பார்த்து மக்களாகிய எங்கள்மீது என்ன கோபம் என்று கேட்டார். "விசயதசமி நாளில் வெற்றிச் செல்வனாகிய நீ வெற்றித் தேரில் ஏறித் திருமகளுடன் சேர்ந்து வா" என்னும் பொருள்படும் "விஜயதசமியல்லி விஜயரததல்லி கூது விஜயள சகிததி விஜயமாடு பாரோ" என்று பாடியவாறு தேரின் வடத்தைப் பற்றி இழுத்தார். உடனே தேர் நகரத்

தொடங்கியது. மக்கள் உடனே கனகரின் பாதத்தைப் பணிந்து மகிழ்ந்தனர்.

## நடுக்கம் நின்றது :

மற்றொரு நாள் அமைதியான இரவில் பக்தர்கள் எல்லாரும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று நிலம் கடகட என்று நடுங்கத் தொடங்கியது. மக்கள் அச்சம் மிகுந்து திசைதோறும் ஓடினர். கனகதாசர் உறுதியான மனத்துடன் எழுந்து அமர்ந்து கைகுவித்துப் பூமித்தாயே நடு இரவில் ஏன் நடுங்கச் செய்கின்றாய் என்னும் கருத்தில் "ஏகெ நடுகிதெ தாயே பூமி நடு ராத்திரியொளு" எனத் தொடங்கும் கீர்த்தனையைப் பாடினார். பாடியவாறே அஞ்சிய மக்களுக்கு ஆறுதல் கூறினார். விரைவில் நிலநடுக்கம் நின்று அமைதி நிலையை அடைந்தது.

## காகெநிலைக்குத் திரும்புதல்

பல ஆண்டுகள் திருப்பதியிலேயே தங்கியிருந்த கனகதாசருக்குக் காகெநிலை ஆதிகேசவனின் நினைவு வந்தது. வேங்கடேசுவரரிடம் விடைபெற்று நேராகக் காகெநிலைக்கு வந்தார். காகெநிலை மக்கள் மிகுந்த ஆரவாரத்துடன் அவரை எதிர்கொண்டு ஆதிகேசவன் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். தமது வழிபாடு மூர்த்தியைக் கண்டதும் கனகதாசர் புளகாங்கிதம் அடைந்தார். அவ்வூரிலேயே தங்கித் தேர்த்திருவிழாவைக் கண்டு களித்தார். பிறகு சுதரமண்டலம் சென்று அனுமனை வணங்கித் திரும்பினார். வயது முதிர்ந்ததால் அவரால் முன்பு போலப் பல தலங்களுக்குச் செல்ல இயலவில்லை. மக்கள் அவர் தங்குவதற்காகக் கோயிலுக்கு அருகில் மண்டபம் ஒன்றைக் கட்டித் தந்தனர். மண்டபத்தில் இருந்தவாறே கனகதாசர் பல கீர்த்தனைகளை இயற்றினார். அவைகளில் குறிப்பிடத்தக்கது அனுமனே வீமனாகவும் மாத்துவராகவும் அவதரித்தார் என்பதை விளக்கும் கீர்த்தனையாகும். இதன் மொழிபெயர்ப்பு

நம் தொகுதியில் 7-வது பாடலாக உள்ளது)

## மழை பொழிதல்

ஓரளவு வலிமை வந்ததும் பல ஊர்களுக்குச் செல்லத்தொடங்கினார். கோகர்ணம் சென்று அங்குள்ள மகாபலேசுவரரை வணங்கினார். சீர்சிக்குச் சென்று மாரியம்மன் பெயரில் கொடுக்கப்பட்டு வந்த பலிகளை நிறுத்தினார். அதன் பிறகு சந்திர குத்திக்கு வந்தார். அவ்வூர்க்கு அவர் படைத்தலைவராக இருக்கும்போது வந்துள்ளார். இப்போது தாசராக வந்தார்

அந்த ஆண்டில் அங்கு மழை பொழியவில்லை. அம்மனுக்கு விலங்குகளைப் பலியிட்டு நிர்வாண பூசை நடத்தினால் மழை பொழியும் என்று சோதிடன் கூறினான். அதை நம்பிய மக்கள் அப்பூசைக்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். அங்குச் சென்று கனகதாசர் பலியிடப்படுவதற்கு இருந்த ஆயிரக் கணக்கான ஆடு எருமை கோழிகளைக் கண்டார். அவைகளின் அலறலைக்கேட்டுக் கண்ணீர் சிந்தினார். மற்றொரு புறத்தில் பெண்களில் பலர் நிர்வாணமாகவும், வேப்பந்தழை உடுத்தும் நிற்பதைப் பார்த்தார். அநாகரிகத்தைக் கண்டு மனம் நொந்த கனகர் நேரே ஊர்த்தலைவனைக் காணச் சென்றார். ஊர்தலைவன் சோதிடன் சொற்படியே நிர்வாண பூசையும், பலியும் செய்வோம் என்று பிடிவாதமாகப் பகர்ந்தான். பசியால் வாடும் மக்களைக் காக்கவே இவ்வாறு செய்வதாகக் கூறினான்.

கனகதாசர் பின்வருமாறு உபதேசித்தார். உயிர்களைச் கொல்பவனும், காப்பவனும் மேலான இறைவனே. மழை பொழியாவிட்டால் விலங்குகள் என்ன தவறு செய்தன? அவைகளை ஏன்தேவதைகளுக்குப் பலிதந்து கொல்லவேண்டும்? அதனால் எவ்வாறு மழை வரும்? உயிர்வதை அற்ற எளிய வழிபாட்டையே இறைவன் ஏற்பான். அநாகரிகமான

முறையில் பெண்களை நிர்வாணமாக நிற்கச் செய்யலாமா? வேப்பந்தழையை உடுத்தச் செய்யலாமா? உயிர்களைப் பலியிட்டால் உங்கள் பாவம் மேலும் மிகும்அல்லவா? பரமான்மாவை அமைதியாகப் பிரார்த்திப்பதே துன்பத்தைத் தீர்க்கும் வழியாகும்.

இவ்வளவு அறிவுரைகளைக் கேட்ட பிறகும் கணி கூறியது பொய்யன்று என்று தலைவன் கூறினான். தன்னலம் பாராமல் பிறர்நலத்தை நாடி உண்மை உரைப்பவனே கணி ஆவான். நான் கணி கூறுவேன், அதனைநம்பு என்று கனகர் கூறினார். தமது வலது கையால் தம்பூராவை மீட்டி, இடது கையால் தாளம் தட்டியவாறு "கணியஹேள பந்தெ, நாராயணனல்ல தில்லவெந்து" என்று பாடத் தொடங்கினார். (இதன் மொழி பெயர்ப்பு72-வது பாடலாக உள்ளது) இக் கீர்த்தனையில் சந்திரகுத்தியில் நடைபெறும் நிர்வாண பூசையைக் கண்டிக்கும் பின்வரும் பாடல் நாம் அறியத்தக்கது.

"சுத்தணவர மாதுகேளி குத்திய எல்லம்ம கொளிது

பத்தாலெ தைவர முந்தெ பலிய நோடிரோ

பத்தெ பேவினடிகெயன்னு அர்த்தியிந்த உட்டுகொண்டு

முக்தி கொம்பெ வெம்ப அசக்தி பேடிரோ

இக்கீர்த்தனையைக் கேட்ட பிறகு தலைவனும் அவனைச் சார்ந்தவர்களும் மனம் திருந்தினர். மக்கள் அவரை வணங்கி மகிழ்ந்தனர். மக்கள் அவரை மழை பொழியச் செய்யுமாறு வேண்டினர். கனகர் தம்பட்டத்தைத் தம் கழுத்தில் கட்டிக்கொண்டு அதனை அடித்தவாறு இறைவனை வேண்டிப் பாடத் தொடங்கினார். கார்மேகங்கள் வானில் சூழ்ந்தன. மழைபொழிந்தது. மக்களின் வேண்டுகோள் நிறைவேறியது. மக்கள் அமைதி வழிபாட்டின் பெருமையை உணர்ந்து கனகதாசரை வணங்கினர். அவ்வூரில் சிலநாட்கள் தியானசமாதியில் இருந்தபிறகு அங்கிருந்து கிளம்பினார்.

**கனககிரிக்குச் செல்லல் :**

சந்திரகுத்தியிலிருந்து புறப்பட்ட கனகதாசர் வழியில் பலதலங்களைத் தரிசித்த பிறகு கதக் என்னும் தலத்திற்கு வந்தார். அங்குள்ள மக்கள் தங்கள் வீடுகளில் தங்குமாறு வேண்டியும் கோயில் பிரகாரத்திலேயே தங்கினார். தமக்கு வேண்டிய உணவைப் பிச்சை எடுத்தே உண்டார். அவர்க்கு ஒன்றரை நூற்றாண்டிற்கு முன்பு வாழ்ந்த நாராணப்பாவின் 'கதகின பாரதா' பற்றிய கதாகாலட்சேபத்தைக் கேட்டு மகிழ்ந்தார்.அங்குச் சிலநாட்கள் தங்கி நாடோறும் வீர நாராயணசுவாமியை வணங்கிய பிறகு பம்பாஎன்னும் தலத்திற்குச் சென்றார்.

பம்பா அல்லது விசயநகரம் அவர் முன்பு படைத்தலைவராக இருந்தபோது இருந்த நிலையில் இப்போது இல்லை. எந்த நகரத்து வீதிகளில் வாணிகர்களும், அரசு அதிகாரிகளும், படைவீரர்களும், யாத்திரிகர்களும் நிறைந்து இருந்தனரோ, அந்த வீதிகள் வெறுமையாக இருந்தன. அந்தப் பெரிய நகரம் பாழாகி இருப்பதைப் பார்த்து முற்றும் துறந்த ஞானியாகிய கனகருக்குக் கூட கண்களில் நீர் சுரந்தது. தமது மோகன தரங்கிணியில் விசயநகரத்தை மனத்தில்கொண்டே கண்ணனின் துவாரகை நகரைப் புனைந்துரைத்ததை நினைத்து வருந்தினார். இரண்டு மூன்று நாட்களில் வருத்தம் மெதுவாக மறைந்தது.

அதன் பிறகு விசயவிட்டலனின் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். பிறகு துங்கபத்திரா நதியில் நீராடிப் புரந்தர தாசர் மண்டபத்திற்குச் சென்று தங்கித் தம் நண்பராகிய புரந்தரதாசரை நினைவு கூர்ந்தார். பம்பா விருபாட்சன் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். உத்தான வீரபத்திரா, கோதண்டராமா முதலான தேவர்களையும் வணங்கிய பிறகு கனககிரி நோக்கிச் சென்றார்.

**கனககிரியில் :**

கண்பெற்றவர் கனககிரியைக் காணவேண்டும் என்னும் பழமொழி கன்னடத்தில் உண்டு. விசயநகரப் பேரரசர்கள் ஆட்சியில் அது சிறந்த நகரமாகப் பொலிந்திருந்தது. அவ்வூர்த் தெய்வமாகிய நரசிம்மசுவாமி நரசப்ப நாயகா என்பவனின் கனவில் தோன்றிக் கனகதாசரைச் சிறப்புடன் வரவேற்க வேண்டும் என்று ஆணையிட்டார். நரசப்ப நாயகா கனககிரித் தெருக்களில் தோரணங்கள் கட்டி அலங்கரித்தான். வீட்டு வாயல்களைக் கோலங்கள் அணிசெய்தன. மேள வாத்தியங்கள் முழங்க, நரசப்ப நாயகாவும் ஊர்மக்களும் ஊரின் தொடக்கத்தில் கனகதாசரை எதிர்கொண்டு அழைத்தனர். கனகரும் அவர்களது வரவேற்பை ஏற்றுக் கடவுளின் கருணையை எண்ணி மகிழ்ந்தார். அப்போது நரசிம்ம சுவாமியைப் புகழ்ந்து, "கண்டெநா தண்டத இண்டு இண்டு தைவ பிரசண்டறிவு, கண்ட உத்தண்ட நரசிம்மன கண்டெனய்யா" எனத் தொடங்கும் கீர்த்தனையைப் பாடினார். (இதன் மொழிபெயர்ப்புநம் தொகுதியில் 84-வது பாடலாக உள்ளது) அதைக் கேட்ட மக்கள் பக்தி வெள்ளத்தில் மூழ்கினர். மிகவும் களைப்பாக இருந்த கனகதாசரை நரசப்பநாயகா தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரித்தான்.

மறுநாள் அவ்வூரைச் சார்ந்த சிறந்த பக்தனாகிய அரிசனக் குலத்தவனாகிய "கனகமுனி"என்பவனின் வீட்டிற்குச் சென்றார். கண்டதும் அவனது பாதங்களைப் பணிந்தார். கனகமுனி கனகதாசரைத் தூக்கி நிறுத்தித் தழுவி மகிழ்ந்தான். சாதியால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை இவர்கள் நட்பு எல்லார்க்கும் உணர்த்தியது. தொடர்ந்து பலநாட்கள் கனககிரியில் தங்கினார். 97பாடல்களைக் கொண்ட "நரசிம்ம அத்தவா" என்னும் நூலை இயற்றினார். தேர்த்திருநாள் அன்று உணவு அடப்படுவதைக் கண்ட கனகர், "அடி கெய மாடபேகு அண்ணா"எனத் தொடங்கும் கீர்த்தனையை இயற்றி, எல்லார்க்கும் ஞானமாகிய உணவைச் சமைக்கும் முறையை

விளக்கினார். மேலும் சிலநாட்கள் அங்குத் தங்கிய பிறகு அங்கிருந்து புறப்பட்டார்.

## யானை அடங்கியது

கனககிரியிலிருந்து தெற்குத் திசையாகச் சென்ற கனகதாசர் காகெறிலைக்குச் சென்று அங்கு இரண்டு நாட்கள் தங்கினார். அங்கிருந்து நஞ்சன்கூடிற்குச் சென்றார். செல்லும்போது மரங்கள்அடர்ந்த காட்டின் வழியாகச் செல்லவேண்டியிருந்தது. நஞ்சன்கூடின் அருகே செல்லும்போது மக்கள் "தாசரே! தொடர்ந்து செல்லாதீர்!" என்று கூறித் தடுத்தனர். அந்தக் காட்டுப் பகுதியில் மதம்கொண்ட யானை ஒன்று மக்களை மிதித்துக் கொல்வதாகக் கூறினர். கனகதாசர் "யானை என்றால் கஜேந்திரன். அரி காலைப் பிடித்திழுத்த முதலையைக் கொன்று கஜேந்திரனைக் காத்தார். கஜேந்திரன் அரியின் பக்தன், நானும் அரியின் பக்தன், எனவே யானை என்னை ஒன்றும் செய்யாது என்று கூறிக் கஜேந்திர மோட்சம் என்ற கதையை விளக்கும் கீர்த்தனையைப் பாடினார்.

கனகதாசர் தொடர்ந்து அந்தக் காட்டு வழியே சென்றார். சிறிது தூரம் சென்றதும் யானை எதிரில் வந்தது. யானை அருகில் வந்ததும், "கஜேந்திரா! ஏன் மக்களைத் துன்புறுத்துகின்றாய்? அரியின் பக்தனான நீ இவ்வாறு செய்யலாமா?" என்று கேட்டார். யானை கனகரைத் துதிக்கையால் தூக்கிற்று. கனகரைத் தொடர்ந்து வந்து அதனைப் பார்த்த மக்கள் யானை கனகரைக் கொன்றுவிடும் என்று அஞ்சினர். ஆனால் கனகரைத் தூக்கிப் பிடரியின்மேல் வைத்துக்கொண்டு நஞ்சன்கூடு நோக்கிச் சென்றது. நஞ்சுண்டன் கோயில் வந்ததும் கனகர் யானை மீதிருந்து கீழே இறங்கினார். நஞ்சுண்டன்கோயில் யானையாக இருந்து நற்பணி புரியமாறு அதற்கு ஆணையிட்டார். யானையும் உடன்பட்டுத் தலையைஅசைத்தது. தங்களுக்குத் தொல்லைதந்த

யானை அமைதி ஆனதைக் கண்ட மக்கள் களிகொண்டு கனகரை வணங்கினர்.

**நளசரித்திரம் :**

நஞ்சன்கூடின் இயற்கை எழிலால் கவரப்பட்ட கனகதாசர் கபிலை நதிக்கரையில் இருந்த ஆசிரமம் ஒன்றில் தங்கினார். சிலநாட்கள் தங்கியபிறகு சென்னகேசவனைத் தரிசிக்கக் கருதிப் பேலூர்க்குச் சென்றார்.கோயில் பிரகாரத்தில் ஒரு பகுதியைத் தமது இருப்பிடம் ஆக்கிக்கொண்டார். அங்கு தான் அவர் புகழ்பெற்ற நூலாகிய "நளசரித்ரே" இயற்றினார். மகாபாரதம் ஆரணிய பருவத்தில் வரும் நளன்கதையைக் காப்பியமாகப் பாடியது, விசயநகரத்து அரசர்களின் அழிவை நினைத்ததே என்று எண்ணத் தோன்றுகின்றது. ஏதாவது ஒரு கெட்ட பழக்கத்திற்கு அடிமை ஆனவன், வேறு பல நற்பண்புகளைப் பெற்றிருப்பினும் அழிவான் என்னும் நீதியை விளக்கியுள்ளார். மாதரார் கற்பின் வலிமையையும் நன்கு போற்றியுள்ளார். இது புகழேந்தியாரின் நளவெண்பாவுடன் ஒப்பிட்டுக் காண வேண்டிய நூலாகும்.

**ராமதானிய சரிதம் :**

கனகதாசர் பேலூரில் தங்கி இருந்தபோது உடுப்பி சோதே மடத்தின் தலைவராகிய வாதிராஜ தீர்த்தர் அங்கு வந்தார். இருவரும் இணைந்து பல பாடல்களை இயற்றிப் பாடி மக்களை மகிழ்வித்தனர். கதாகாலட்சேபங்கள் செய்து நீதிகளைப் போதித்தனர். அப்போது "ராம தானிய சரித்ரே" என்னும் நூலைக் கனகர் இயற்றினார். அதில் கேழ்வரகு ராமதானியம் என்னும் பெயரைப் பெற்ற வரலாற்றை விளக்கியுள்ளார். இராமர் அதற்கு "ராகவ" என்று தன் பெயரையே வைத்ததாகவும், மக்கள் உச்சரிப்பில் அது "ராகி" என்று ஆனதாகவும் கூறியுள்ளார். அந்நூலில் அமைந்திருந்த நகைச்சுவை கதையைக் கேட்ட மக்களை மிகவும் மகிழ்வித்தது.

## சாதிச் சண்டையைத் தவிர்த்தல்

கனகதாசர் ஒருநாள் கோயிலில் சொற்பொழிவு செய்கின்றபோது, வெளியே கலவரம் நடக்கும் பெரிய ஆரவாரம் கேட்டது. விசாரித்தபோது அது சாதியில் உயர்வு தாழ்வு பற்றி மூண்ட சண்டை என்று தெரிந்தது. அதைக் கேட்ட கனகர் மனம் மறுகினார். சிவன் திருமால்பேதம் ஆசார அநாசாரபேதம், மேல்சாதி கீழ்ச்சாதி பேதம் ஆகியன சமூகத்தை அழிக்கும்நோய்கள் என்று பல்லாண்டுகளாக அறிவுறுத்தி வரும் கனகர் விரைந்து சண்டை நடக்கும் இடத்திற்குச் சென்று அமைதிப்படுத்தினார். அப்போது சாதியில் உயர்வுதாழ்வு இல்லை என்பதை விளக்கும் "குலகுலகுல வென்னுத் திகரு, குலயாவுது சத்ய சுகவுள்ள ஜனரிகெ" எனத்தொடங்கும் கீர்த்தனையைப் பாடி அதன் பொருளையும் விளக்கினார். (இதன் மொழிபெயர்ப்பு நம்தொகுதியில் 120-வது பாடலாக உள்ளது) கேட்ட மக்கள் அவரை மகிழ்ந்து வணங்கினர். அதில் வரும் "ஆத்மா யாவகுல, ஜீவ யாவ குல, தத்வேந்திரியகளகுல பேளிரண்ணா" என்னும் அடிகள் நினைவில் இருத்துதற்கு உரியன.

## உடுப்பிக்குச் செல்லல்:

பேலூரில் பல நாட்கள் தங்கிய பிறகு சென்னகேசவ சுவாமியிடமும், ஊர் மக்களிடமும் விடைபெற்றுப் புறப்பட்டார். பல நதிகளையும், மலைகளையும் கடந்தவாறு உடுப்பியை நோக்கிச் சென்றார். வழியில் மலைநாட்டு மக்களின் உபசரிப்புக்களை ஏற்று மகிழ்ந்தார். சகியாத்திரிமலையின் இயற்கை எழிலைக்கண்டு மகிழ்ந்தவாறு சென்ற கனகர் பரசுராம சேத்திரத்தை அடைந்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டார். பேலூரிலிருந்து புறப்பட்ட பன்னிரண்டாவது நாளில் தாம் போற்றி வணங்கும் கிருஷ்ணன் இருக்கும் உடுப்பியை அடைந்தார். ஆனால் அவரது எளிய கோலத்தைக் கண்ட கோயிலைச் சார்ந்தவர்கள் அவரை உள்ளே விட வில்லை. மேலான தத்துவ ஞானியும், பெரியகவியும்

ஆகிய கனகதாசருக்கே இந்நிலை என்றால் மற்றவர்களைப் பற்றி என்ன சொல்வது? மறுப்பு ஏதும் கூறாது கோயிலின் வெளிப்புறத்தில் ஒரு மூலையில் படுத்தார். அன்று அவர் வழக்கமாக உண்ணும் பிச்சை உணவையும் உண்ணவில்லை.

## கனவுக் காட்சி

நீண்ட தூரம் நடந்து வந்த களைப்பினால் அவர்க்குச் சிறிது காய்ச்சலும் கண்டிருந்தது. அவர் கிருஷ்ணன் நினைவாகவே படுத்திருந்ததால், ஆழ்ந்த உறக்கமும் வரவில்லை. அந் நிலைகண்டு வருந்திய கிருஷ்ணன் கனவில் அவர்க்குக் காட்சி தந்தார். பாலகிருஷ்ணனைப் பார்த்த கனகர் மிகவும் மகிழ்ந்தார். பாலகிருஷ்ணன் தாம் பசித்திருப்பதாகப் பகர்ந்து ஏதாவது தருமாறு வேண்டினார். கனகர் தம் உடையில் முடித்து வைத்திருந்த கோதுமை மாவைத் தந்தார். கிருஷ்ணன் அதைச் சுதாமன் தந்த அவலை உண்டதுபோல் மகிழ்ச்சியாக உண்டார். பிறகு, "உன் பசியைப் பாராட்டாது என் பசியைப் போக்கினாயே! மிக நன்றி. உன் பசியைப் போக்கிக்கொள்" என்று கூறி ஓர் அணிகலன் தந்தார். கிருஷ்ணன் தருவதை மறுப்பது எவ்வாறு என்று எண்ணிய கனகர் அதனைப் பெற்றார். கண் விழித்த கனகர்தம் கையில் அணிகலனைப் பார்த்தார். வைசியர் கடையில் 10 காசுக்கு அடகு வைத்துத் தம் உணவை உண்டார்.

## உண்மை வெளிப்பட்டது

காலையில் பூசை செய்வதற்காக அர்ச்சகர் வந்தார். வந்தவர் கடவுள் மீது அணிவித்திருந்த விலை உயர்ந்த அணிகலன் காணவில்லை என்பதை அறிந்தார். எங்கே பழி தம்மீது வருமோ என்று அஞ்சிய அவர், ஓடிச்சென்று பரியாய பீடத்திலிருந்து வாதி ராஜ சுவாமிகளிடம் அதனை அறிவித்தார். வாதிராஜர் உடனே சபையைக் கூட்டினார். நகரமக்கள் பலர் அதற்கு வந்திருந்தனர். வந்து அமர்ந்த

வ்யாதிராஜர் பிரகாரத்தில் தங்கியுள்ள கனகதாசரை அழைத்து வருமாறு கூறினார். அவைக்கு வந்த கனகர் வாதிராஜரை வணங்கினார்.

கனகதாசரைக் கண்டதும் வாதிராஜர் "கனகரே! நகையை என்ன செய்தீர்கள்?" என்று வினவினார். கேட்ட மக்களில் பலர் எளிய கோலத்தில் இருக்கும் இவர் இவ்வளவு பெரிய கள்வரா என்று எண்ணிஆரவாரம் செய்யத் தொடங்கினர். வாதிராஜர் "எளிய கோலத்தைக் கண்டு அவ்வாறு எண்ணாதீர்கள், இவர் பெரும் பக்தர்" என்று கூறி அவர்களை அடக்கினார். முதல்நாள் இரவு நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கனகதாசர் வாதிராஜருக்கு விளக்கினார். அவரிடமிருந்து அடகாக நகையைப் பெற்ற வணிகரும் கனகர் கூறியது உண்மை என்று உரைத்தார். வாதிராஜர் "இறைவன் தன் அடியாரின் பசியைத் தீர்க்கப் பெற்ற கடனைத் திருப்பித்தர வேண்டும் என்று கூறிப் பத்து காசை வணிகரிடம் கொடுத்து நகையைப் பெற்றார். இப்போது கனகரின் பெருமையை அறிந்த மக்கள் மகிழ்ந்தனர். அதன் பிறகு வாதிராஜரும் கனகரும் வியாசராய சுவாமிகளிடம் தாங்கள் இருந்த நாட்களைப் பற்றி உரையாடி உவந்தனர்.

உடுப்பியில் கனகதாசருடன் சிலநாட்கள் தங்கியிருந்த வாதிராஜர் தமது சோதே மடத்திற்குத் திரும்பிச் சென்றார். கனகர் உடுப்பியின் அருகிலிருக்கும் வட பாண்டேஷ்வரத்திற்குச் சென்று பரசுராமனைத் தரிசித்தார். அதன் பிறகு மாத்துவா சாரியார் அவதரித்த பாஜகத்தலத்திற்குச் சென்றுதிரும்பினார். தர்மஸ்தலத்திற்குச் சென்று மஞ்சுநாத சுவாமியையும், கொல்லூர்க்குச் சென்று மூகாம்பிகையும் தரிசித்தார். பிறகு பனவாசிக்குச் சென்று, அங்கு வரதா நதியில் நீராடி மதுகேசுவரனைத் தரிசித்தார். பிறகு ஆனேகல் சென்று தாரகேசுவரனைத் தரிசித்தார். ஆலூரு, ஓங்கணா, திளவள்ளி வழியாகக் காகெநிலைக்கு வந்தார்.

தமது வழிபடு தெய்வமாகிய காகெறிலை ஆதிகேசவனைப் பல நாட்களுக்குப் பிறகு பார்த்த கனகர் களிகொண்டார். பல நாட்களாகப் பார்க்க வராமையால் கோபமா என்று கேட்டார். தன் தவறுகளை மன்னிக்க வேண்டும் என்னும் பொருளில் "க்சமிசுவ தென்ன தப்புகள" என்னும் கீர்த்தனையைப் பாடினார். (இதன் மொழிபெயர்ப்பு நம் தொகுதியில் 61-வது பாடலாக உள்ளது) சிறிது நேரம் தியானத்தில் அமர்ந்து கண்விழித்தார். அப்போது அவர் எதிரில் நின்றிருந்த பெண்மணி அவரை வணங்கினாள். அம்மா, தாங்கள் யார் என்று கனகர் கேட்டார். என்னைத் தங்களுக்கு அடையாளம் புரியவில்லையா என்று அப்பெண்மணி கேட்டாள். பிறகு தான் மல்ல நாயகாவின்மகள் என்றும், தந்தை அவர்க்குத் தந்த தொல்லை களுக்குக் கழுவாயாகத் தான்அவரையே மணக்க விரும்பியதையும், பங்காபுரத்து இலக்குமியுடன்அவரது திருமணம் நடந்துவிட்டதால் தான் துறவியானதையும் பற்றிக் கூறினாள். ஐம்பது ஆண்டுகளுக்குப்பின்அவரை வணங்கும் பேறு இன்று பெற்றதாகப் பகர்ந்தாள். அவளது வரலாற்றைக் கேட்ட கனகரின் கண்கள் கலங்கின. தொடர்ந்து ஆதிகேசவனின்தொண்டை அமைதியாகச் செய்து முக்தி பெறுமாறு அவர் இலக்குமிக்கு வழிகாட்டினார்.

## உடுப்பிக்குச் செல்லல் :

அவர் காகெறிலையில் சிலநாட்கள் தங்கியிருந்தார். ஒரு நாள் இறைவனைப் பற்றிப் பாடல் - இயற்றிப் பாடியவாறு படுத்தார். கனவில் முத்துக் கிருஷ்ணன் தோன்றி "உடுப்பியில் நடைபெறும் எனது பரியாய விழாவைக் காண வா" என்று கூறினார். கடவுளின் கட்டளைப்படி நடக்க எண்ணிய கனகதாசர் உடுப்பியை நோக்கிச் செல்லத் தொடங்கினார். வயது முதிர்ச்சியால் நடக்க இயலாவிடினும் ஆண்டவன் கட்டளைப்படிச் சென்றவாறு இருந்தார். உடுப்பியைஅடைந்ததும் வாதிராஜர் காலத்தில் தமக்காகக் கட்டப்பட்ட கனகமண்டபத்தில் தங்கினார் ஆயினும்சில

மூர்க்கர்கள் அவரை அங்கிருந்து வெளியேற்றினர். அதுவும் கடவுளின் சித்தம் என்று எண்ணியகனகர் வெளிப்பகுதியின் ஒரு மூலையில் படுத்து இரவைக் கழித்தார்.

## பரியாய விழா

காலையில் பரியாய விழா கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பரியாய சுவாமிகள் தம்மை மறந்து விழாவில் ஈடுபட்டிருந்தார். மக்கள் வெள்ளம் பெருகி இருந்தது. பஞ்சமகா வாத்தியங்கள் முழங்கியவாறு இருந்தன. வேத மந்திரங்களும், தோத்திரப் பாடல்களும் ஓதப்பட்டன. இத்தகைய நேரத்தில் காவியாடை உடுத்திக் கிறுக்கனைப்போல்தோன்றிய கனகரை யாரும் கவனிக்கவில்லை. பரியாய விழாவைக் காண அவர் எடுத்த முயற்சிகள் வீணாயின. எப்படியும் காணவேண்டும் என்னும் வேகத்துடன் கருவறையின் பின்பாகத்திற்கு வந்தார். பரியாய விழாவைச் காண வா என்று என்னை நீயே அழைத்தபிறகு, இவ்வாறு சோதித்தல் நீதியோ என்று கேட்டார். அப்போது அவர் இப்போது கருநாடகத்தில் பிரபல கீர்த்தனையாக இருக்கும் "பாகிலனு தெரெது சேவேயனு கொடு அரியே" என்னும் பாடலைப் பாடினார். (இதன் மொழிபெயர்ப்பு நம் தொகுதியில் 46-வது பாடலாக உள்ளது)

## கனகரின் வாயில்

கனகதாசர் பாடும் போதே கிழக்கு நோக்கி நின்றிருந்த கிருஷ்ணன் மேற்கு முகமாகத் திரும்பினார். சுவர் இடிந்து வாயில் ஒன்றுதோன்றியது. "மகனே! கனகா! இங்கே பார்!" என்று கூறிக் கனகதாசருக்குக் காட்சி தந்தார். அப்போது உள்ளே பூசை செய்து கொண்டிருந்த பரியாய சுவாமிகள் கிருஷ்ணன் திசை திரும்பியதைக் கண்டதும் வியப்புற்றார். திடீரென்று மேற்குப் பகுதியில் வாயில் உண்டானதைப் பார்த்தவர் நடுங்கினார். விரைவில் கனகதாசருக்காக இந்தத்திருவிளையாடல் நடந்தது என்பதை அறிந்து மகிழ்ந்தனர்.

கனகரும் நன்றிப்பெருக்குடன் பாடி மகிழ்ந்துஆடினார். அந்த வாயிலுக்குக் கனகரின் வாயில் என்று பெயர் வந்தது. இன்றும் உடுப்பி செல்லும் மக்கள் அந்த வாயில் வழியாகவே முதலில் காணும் பழக்கத்தைக் கடைப்பிடிக் கின்றனர்.

## காகெநிலைக்குத் திரும்பல்

மேலும் சில நாட்கள் தங்கிய பிறகு, கனகதாசர் அதுதான் தாம் காண்கின்ற கடைசி முறை என்று கூறிக் கிருஷ்ணனிடமிருந்து பிரியா விடைபெற்றுக் காகெநிலைக்குத் திரும்பினார். திரும்பியவர் கோயிலிலேயே தங்கினார். செல்வர் ஒருவர் அருகில் வந்து "வயது முதிர்ந்த அவர் தம் வீட்டில் தங்கலாம் என்றும், அவருக்கு வேண்டிய பணிகளைத்தாம் செய்வதாகவும் கூறினார். ஆயினும் கனகதாசர் கோயிலில்தான் தங்குவேன் என்று பிடிவாதமாகக் கூறிமறுத்தார். அவர் வயது முதிர்ந்திருந்தாலும் முன்போலவே பணிகளைச் செய்து வந்தார். அவர் காகெநிலைக்குப் பக்கத்திலிருந்த கும்முரு கிராமத்துத்தோட்டத்திலிருந்து பூ கொய்து வருவது வழக்கம். அதற்குத் தாசரின்தோட்டம் என்னும் பெயர்வந்தது. அதற்கு அருகில் ஓடிய கால்வாயையும், கனகரின் கால்வாய்என்றே மக்கள் அழைத்தனர். கனகதாசர் தம் பூர்வாசிரமத்தில் தங்கியிருந்த ஊருக்கும் "தாசர கொப்பா" என்னும் பெயர் வைக்கப்பட்டது. கனகர் அதை மறுத்துக் கடவுளின் கொப்பா எனப் பெயர்வைக்குமாறு கூறினார். ஆயினும்பொதுமக்கள் அவர் மீதுள்ள பக்தியினால் "தாசரகொப்பா" என்றே இன்றும் அந்த ஊரைக் குறிப்பிட்டு வருகின்றனர்.

இனிமேல் தம்மால் எங்கும் செல்லஇயலாது என்பதை உணர்ந்த கனகதாசர் ஆதிகேசவன் கோயிலிலேயே திருப்பதி வேங்கடேஸ்வரர், பேலூர் சென்னகேசவர், கதரமண்டல அனும தேவர் ஆகியோரின் விக்கிரகங்களைப் பிரதிட்டை செய்தார். கனவில்காட்சி தந்த வேங்கடேஸ்வரரிடம் விரைந்து

தம்மைத் திருவடியில் சேர்த்துக் கொள்ளுமாறு விண்ணப்பித்தார்.

## திம்ம கேசவன் :

ஒரு நாள் கனகதாசர் கும்மூருக்குப் பிச்சையுணவு ஏற்கச் சென்றிருந்தார். தம் நியதிப்படி இரண்டு அடியார்களின் வீட்டில் உணவை ஏற்றார். அவ்வுணவைச் சுவாமிக்கு நைவேதனம் செய்து உண்டார். ஊருக்கு முன்பகுதியில் இருந்த மாமரத்தின் அடியில் படுத்துக்கொண்டு உறங்கினார். உறங்கும்போது திருப்பதி மூர்த்தியைத் தியானித்தவாறே உறக்கத்தில் ஆழ்ந்தார். சூரியன் மறைந்து இரவு வந்தும்கூட அவர் எழுவில்லை. இரவு இரண்டு நாழிகைக்குப் பிறகு யாரோ எழுப்பியதைப் போல் தோன்றியது. கண் விழித்தபோது ஒளிமயமான உருவம் இருந்தது. அவர் கண்விழித்ததும்அவ்வொளி செல்லத் தொடங்கியது.அவர் அதனைப் பின்தொடர்ந்து சென்றார்.அது கும்மூரு கிராமத்துக் குன்றின் உச்சிமேல் ஏறி நின்றது. அவரும் அங்குச் சென்று பார்த்தார். அங்கு அவர் கண்டது திருப்பதி வேங்கடேஸ்வரரின் அழகிய விக்கிரகம்.

"நீ எங்கு இருப்பினும் அங்குநான் வருவேன்" என்று திருமலேசர் கூறியிருந்தது அவர் நினைவிற்கு வந்தது. அவர் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினார். "நீ எங்கிருப்பாய் என்று தேட வேண்டா, அடியார் எங்கு உள்ளாரோ அங்குநீ இருப்பாய்" என்று பாடத் தொடங்கினார். குன்றின்மேல் கனகர் பாடுவதைக் கேட்ட மக்கள் கூட்டம் கூட்டமாகக் குன்றின்மேல் ஏறினர். விக்கிரகத்தைக் கண்டு வியந்தனர். கனகதாசர் வைகறைவரை பாடியவாறே இருந்தார். சிலநாட்களுக்குள் மக்கள் விக்கிரகத்தைச் சுற்றி ஒரு கோயிலைக் கட்டினர். கனகர் அந்த விக்கிரகத்திற்குத் திம்மகேவன் என்னும் பெயரை இட்டார். பொது மக்களும் அந்தப் பெயராலேயே இறைவனை அழைக்கத்தொடங்கினர்.

## சென்ன கேசவன் :

கனகதாசர் வயது முதிர்ந்து உடல் தளர்ந்தபோதிலும் தம் வேலைகளைத் தாமே செய்து வந்தார் அப்போது கூட அவர் தண்ணீரில்தான் குளித்தார். ஒரு நாள் குளிப்பதற்கு ஏரிக்குச் சென்றார். அவர் தம் வேட்டி துண்டுகளைக் கல்லில் துவைத்துக் கொண்டிருக்கையில் "தாசர்களில் சிறந்தவரே! நானும் வருகின்றேன்" என்று கூறுவது போல் கேட்டது. கரையேறித் தேடினார். கண்ணில் யாரும் படவில்லை. மறுபடியும் அதே வார்த்தைகள் வந்தன. அப்போது அவர் தாம் துணி துவைத்த கல்லின்அடியிலிருந்து அக்குரல் வருவதை அறிந்தார். கல்லைப் புரட்டிப் பார்த்தபோது கல்லின்அடியில் பேலூர் சென்ன கேசவனின் விக்கிரகம் இருந்தது. சிறிதுநேரம் ஒன்றிய மனத்துடன் அதனைப் பார்த்தார். அது தம்மைக் கண்ட மகிழ்ச்சியால் சிரிப்பதாக நினைத்தார். விக்கிரகத்தைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினார். காகெநிலைக்கு அருகில் இருந்த இங்களகொந்தி என்னும் கிராமத்திற்கு வரும்போது, அதுவரை மலரைப்போல் சுமையின்றி இருந்த விக்கிரகம் கனக்கத் தொடங்கியதை உணர்ந்தார். இறைவனுக்கு அங்கு இருக்க விருப்பம் என்பதை அறிந்த அவர் அந்த ஊரிலுள்ள குன்றிலேயே விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்தார். அவர் கருத்தை அறிந்த மக்கள் மகிழ்ச்சியுடன் விக்கிரகத்தைச் சுற்றிக் கோயில் கட்டினர்.

## இலக்குமி இறையடி அடைதல்:

இலக்குமிக்குத் தொண்டு நெறியைப் பின்பற்றுமாறு கனகதாசர் போதித்ததை நாம் அறிவோம். திலகவதியர் திருவதிகைத் திருக்கோயிலில் செய்து வந்த தொண்டுகளைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் "புலர்வதன்முன் திருவலகு பரிமாறி" என்று தொடங்கும்பாடலில்விளக்கியுள்ளார். அதே தொண்டுகளை இலக்குமியும் காகெநிலை ஆதிகேசவன் கோயிலில் செய்து வந்தார். திலகவதியார் கலிப்பகையார்க்குத்


தம்மை நிச்சயித்து விட்டதால், அவர் இறந்த பிறகு யாரையும் மணந்துகொள்ளாது இறைபணியில் ஈடுபட்டார். இலக்குமியும் கனகதாசரை நினைத்து அது நிறைவேறாததால், வேறு யாரையும் மணக்க மறுத்து இறைபணியில் ஈடுபட்டார். அவர் ஒரு நாள் கனகரின்காலில் வீழ்ந்ததும் உயிர் நீத்து இறையடி அடைந்தார். அவரது தொண்டின் சிறப்பினை நன்கு அறிந்திருந்த கனகர் "தெய்விகச் சக்தியுள்ள பெண்மணி" என்று பாராட்டினார்.

## கனகரும் இறையடி அடைதல்

அதன்பிறகு கனகதாசரின் உடல்நலம் குன்றத் தொடங்கியது. பட்டதெல்லாம் போதும் என்று நினைத்த அவர் தம்மையும் திருவடியில் சேர்த்துக்கொள்ளுமாறு நாள்தோறும் ஆதிகேசவனிடம் விண்ணப்பிக்கத் தொடங்கினார். அவரது வேண்டுகோளுக்கு உடன்பட்ட ஆதிகேசவன் சச்சிதானந்த உருவமாகிய தம்முடன் சேர்த்துக் கொண்டார். அவர் இறையடியை அடைந்தது கி.பி. 1606 - வது ஆண்டில்

தொண்ணூற்றெட்டு ஆண்டுகள் சிறப்புடன் வாழ்ந்த கனகதாசர் இறைவனுக்கும் பொதுமக்களுக்கும் பல நல்ல பணிகளைப் புரிந்தவர். கவியாகவும், பக்தராகவும், தத்துவ ஞானியாகவும், யோகியாகவும் வாழ்ந்தவர். அவர் பல நல்ல படிப்பினைகளைப் போதித்துள்ளார். அவைகளில் சிறப்பாகக் குறிக்கப்பட வேண்டியது சாதியால் உயர்வு தாழ்வு இல்லை என்பதாகும். அவர் தம் கீர்த்தனைகளில் கூறியுள்ள அறிவுரைகளின் வழி வாழ்ந்து உய்வோம்.

ooooo



பேராசிரியர் இரா. நடராசனார் 6-6-1936இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள பாண்டூரில் திரு.பி.வி. இராமநாத அய்யருக்கும் ஜானகி அம்மையாருக்கும் பிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சான்றோரிடம் கல்வி பயின்று எம்.ஏ., எம்.லிட்., பட்டங்களைப் பெற்றார். பண்டை இலக்கியங்களை இதயத்தில் இருத்தியிருக்கும் ஒரு பெருமகனார். கற்ற கல்வியை மற்றவர்க்கு அளிப்பதில் ஒளி வீசும் மண மலர். காய்தல் உவத்தல் இல்லாத ஆய்வாளர். பன்மொழிப் புலமை பெற்ற நயத்தகு நண்பர். மொழி பெயர்ப்புலகில் புதுப்பொலிவுடன் ஒளி வீசுபவர். ஐம்பதிற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் ஆராய்ச்சி நூல்களையும் (கன்னடத் தமிழ்க் கவிஞர்கள் - ஓர் ஒப்பீடு, மணிமேகலைக் காப்பிய மாந்தர், குவெம்புவின் சிறுகதைகள், Manimekalai, As an Epic) தமிழ் அன்னைக்குப் படைத்து அழகு கூட்டியவர். முத்தமிழ்ப் புலமை முறையாக உடையவர். இத்தரணியில் இவர்பணி நிலைத்து நிற்கட்டும்.

பேராசிரியர். ஆ. சுதாகர், B.Sc., M.A., M.Phil.,
Dip. in Yoga
(M.A., In Telugu/LLB)
ஒப்பாய்வாளர்,
தமிழ்த்துறை,
தங்கவயல் முதனிலைக்கல்லூரி,
கோலார் தங்கவயல் - 563120.